T.B. No

2-2-1927

ஸ்ரீ காஞ்சி மகிமை

C

Ox25:38.2112.K
N27
68193

உ

சுபம்.

ஸ்ரீ காமாக்ஷிதேவ்யை நம:

# ஸ்ரீகாஞ்சி மஹிமை.

OFFICE OF THE REGISTRAR
28 JUN 1927
MADRAS

கும்பகோணம்
ஸ்ரீகோமளாம்பா ப்ரஸ்ஸில்
அச்சிடப்பட்டது.

1927

OFFICE OF
2 JUN 192
MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## விகடசக்ர விநாயகர் ஸ்தோத்திரம்.

स्वकटच्युतमदाश्रितबंभर मकटकूजितनादितदिक्तटम् ।
निकटवासिनमेकरसाक्षिणो विकटचक्रविनायकमाश्रये ॥ १ ॥

मातामहमहाशैलं महस्तदपितामहम् ।
कारणं जगतां वन्दे कण्ठादुपरि वारणम् ॥ २ ॥

## ஆம்ரநாத ஸ்தோத்திரம்.

ऐश्वर्यं परमं सत्वमादिमध्यांतवर्जितम् ।
आधारं सर्वलोकानामनाधारमविक्रियम् ॥

अनन्तानन्दबोधाम्बुनिधिमद्भुतविक्रमम् ।
अम्बिकापतिमीशानमनिशं प्रणमाम्यहम् ॥ २ ॥

सुप्रसन्नं महादेव्या नित्यकल्याणसुन्दरम् ।
महाप्रलयपापघ्नं रसालेशमहं भजे ॥ ३ ॥

उमालिंगनसंक्रान्तकुचकङ्कणमुद्रितम् ।
लिंगमेकाम्रनाथस्य सैकतं समुपास्महे ॥ ४ ॥

## த்ரிபுர ஸுந்தரீ ஸ்தோத்ரம்.

इक्षुकोदण्डपुष्पेषु पाशाङ्कुशलसत्कराम् ।
उद्यत्सूर्यनिभां वन्दे महात्रिपुरसुन्दरीम् ॥ १ ॥

विश्वकारणनेत्राढ्यां महात्रिपुरसुन्दरीम् ।
बन्धकासुरसंहर्त्रीं कामाक्षीं तामहं भजे ॥ २ ॥

स्वर्णाङ्गीं रत्नभूषाढ्यां शुकहस्तां शुचिस्मिताम् ।
कांचीनिवासिनीं वन्दे कामाक्षीं कामितार्थदाम् ॥ ३ ॥

ஆம்ரவ்ருக்ஷ ஸ்தோத்திரம்.

शिवबीजसमुद्भूतं वेदशाखाभिरुज्ज्वलम् ।
मृकण्डुतनयाधारं रसालं तं नमाम्यहम् ॥

காமகோடி பீட ஸ்தோத்திரம்.

जगत्कारणकलाकारं नाभिस्थानं भुवः परम् ।
पदपद्मस्य कामाक्ष्याः महापीठमुपास्महे ॥

காமகோடி மஹாபில ஸ்தோத்திரம்.

गायत्रीमण्डपाधारं नाभिस्थानं भुवः परम् ।
पुरुषार्थप्रदं शम्भोर्बिलप्रान्तं नमाम्यहम् ॥

ஸர்வதீர்த்த ஸ்தோத்திரம்.

हररोमसमुद्भूतसर्वतीर्थसमन्वयात् ।
सर्वतीर्थाह्वयं वन्दे कंपायाः पुरितं सरः ॥

வேகவதி நதி ஸ்தோத்திரம்.

नमस्ते ब्रह्मपत्नि त्वां सरिद्रूपां सरस्वतीम् ।
सर्वपापप्रशमनीं वेगवत्यभिधान्विताम् ॥

---

உ

சுபம்.

ஸ்ரீ காமாக்ஷி மஹிமையின்

# ஸ்ரீ காஞ்சீ முகவுரை.

இப்புவியில் முப்பிறவியில் செய்யப்பட்ட கர்மாக்களால் பிரப்லையடைந்து பவமென்னும் பெரும்பிணியால் வருந்தும் மானிடர்களுக்குந் தமது திருமேனியின் தர்சனத்தையளித்துப் பிறவிப்பிணியையகற்றி என்றுமழிவில்லாச் சிறந்த மோக்ஷத்தைக் கொடுத்தருள் புரியவேண்டுமென இயற்கையில் விளங்கும் கருணையால் அவதரித்த ஸ்ரீ பராசக்தி திருமால் திங்கள் சடையோன் ஆனைவதனன், ஆறுவாகனன், ஷண்முகன் முதலான தேவர்களால் அலங்கரிக்கப்பட்ட க்ஷேத்திரங்கள் பலவிருப்பினும் அவற்றுள் புராணங்களாலும் பெரியோர்களாலும் மிகப்புண்ய க்ஷேத்திரங்களெனப்புகழக்கூடிய மஹிமை வாய்ந்தனவும் மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியவையுமான புண்யக்ஷேத்திரங்கள் சிலவேயாகும். அவைகளுக்குள் நம் தெக்ஷிணதேசமென்னும் மங்கையர் முகத்திற்குத் திலகம் போல் பிரகாசிக்கும் ஸ்ரீ காஞ்சிமாநகரத்தையறியாதார் சிலரேயாவர்.

இந்த அபிப்பிராயத்தையே—

अयोध्या मथुरा माया काशी काञ्ची अवन्तिका ।
पुरी द्वारवतीचैव सप्तैते मोक्षदायका: ॥

அயோத்தி மதுரை, மாயா, காசி, காஞ்சி, அவந்திகா, துவாரகை என்கிற இவ்வெழு நகரங்களும் தர்சனமாத்திரத்தால் பிராணிகளுக்கு மோக்ஷத்தைக் கொடுக்கின்றனவென்று ஸ்பஷ்டமாய்க் கூறப்பட்டிருக்கின்றது. இவைகளுக்குள்ளும்,

नारीषु रम्भा नगरीषु काञ्ची पुष्पेषु जाति: पुरुषेषु विष्णु: ।

என்று உலகிலுள்ள சிரேஷ்டமானவஸ்துக்களை நிரூபிக்குமிடத்தில் நகரங்களுக்குள் ஸ்ரீ காஞ்சிநகரத்தையே மிகவும் மேன்மை பொருந்தியதாகக் கொண்டாடுகிறார்கள். இந்நகரில் அநேக புண்யதீர்த்தங்களும் பல தேவதாஸந்நிதிகளும் விளங்குகின்றன. விண்ணவர்களில்பலர் இந்நகரத்திற்கு வந்து அவரவர்களுக்குப் பிரியமான ஈசுவர மூர்த்திகளையும் ஸ்ரீபராசக்தியாய்ப் பிரகாசிக்கும் ஸ்ரீகாமாக்ஷிதேவியையும் ஆராதித்துத் தங்களுக்கேற்பட்ட கஷ்டங்களைப்போக்கி உத்தமமான மோக்ஷத்தைப் பெற்றிருக்கிறார்கள். எவரவர்கள் எந்தெந்த தேவதாமூர்த்தியையுபாஸித்து எவ்வித பயனைப்பெற விரும்பினாலும் இந்த நகரையடைந்தால் சுலபமாய்ச் ஸாதிக்கக்கூடிய பற்பல தேவதாமூர்த்திகள் இங்கு விளங்குகின்றன.

பிறவியிலேயே ஊமையாக ஜனித்த ஒருவர் ஸ்ரீகாமாக்ஷிதேவியின் ஸந்நிதியையடைந்து அங்கு ஆலயத்தின் பிராகாரங்களிலுள்ள அசுத்தங்களைப்போக்கிச் சுத்தமாய் பாதுகாத்துக்கொண்டிருக்கும்போது அம்பாளுக்கு அவரிடம் கருணையேற்பட்டுத் தம் தாம்பூலரஸத்தை அந்த பக்தனுக்கு அனுக்கிரகித்ததின்பேரில் அவர் சிறந்த கவியாகி மூகபஞ்சசதி என்கிற காமாக்ஷிஸ்தோத்திரத்தை இயற்றிச் சகல வித்வான்களாலும் போற்றத்தக்கூடிய மகிமைபெற்றதும் இந்த க்ஷேத்திரத்தில் தான்.

இந்த க்ஷேத்திரத்தையடைந்து தம்மை ஆராதிக்கும் அடியார்களுக்கு அபீஷ்டமான வரன்களைச்சீக்கிரம் கொடுத்தும் அனுக்கிரகிப்பேன்என்பதை ஸ்பஷ்டமாய் ஸகலஜனங்களுக்கும் அறிவிக்க வேண்டியே திருமால் வரதராஜர் என்கிற திருநாமத்துடன் இந்தக்ஷேத்திரத்தை அலங்கரிக்கிறார்—

பின்னும் தர்மஸ்தாபனத்தின் பொருட்டுத் தரணியில் அவதரிக்க வேண்டுமென்று சதுர்முகன் முதலான தேவர்கள் பிரார்த்திக்குங்கால் அதற்கிணங்கி பூமியில் அவதரித்து ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யர் என்கிற திருநாமத்தால் விளங்கிய கைலாஸாதிபதியான ஸ்ரீபரமேசுவரன் இந்த க்ஷேத்திரத்தையே தமக்கு முக்கிய வாஸஸ்தானமாக அங்கீகரித்து அற்புதமான பல காரியங்களையும் இங்குதான் நடத்தி முடிவில் ஸ்வஸ்வரூபத்தில் ஐக்கியமடைந்திருக்கிறார்.

இதற்கு ஆதாரமான பிரமாணவசனங்கள் பலவிருப்பினும் அவற்றுள் அவசியமான சிலவற்றை இங்கு வெளியிடுகிறோம்.

நம் பரமாசார்யர் திக்விஜயம் செய்து ஸேது யாத்திரையும் பூர்த்தியான பிறகு காஞ்சீ நகரத்திற்கு வந்தார் என்பதற்கு ஆதாரம்.

ஸ்ரீகுருரத்னமாலையில்,

अथ कान्यकुमारसन्धिसेतुस्थलिलीवेङ्कटकाळहस्तियातुः ।
यमिनेतुरमुष्य काञ्चियात्रा शमिदानीं शमदं क्रियाद्विचित्रा ॥

ஸ்ரீஜகத்குருவானவர் ரிச்யசிருங்க ஆச்ரமத்திலிருந்து புறப்பட்ட பிறகு கன்யாகுமாரி, திருச்செந்தூர், ராமேசுவரம், சேஷாத்திரி, காளஹஸ்தி முதலான க்ஷேத்திரங்களை தர்சித்து ஸ்ரீகாஞ்சிபுரத்தை யுத்தேசித்துச் செய்த யாத்திரையானது நமக்கு ஆத்மாபரோக்ஷஸாக்ஷாத்கார சுகத்தைக் கொடுக்கட்டும்.

சங்கராப்புதயமென்கிற கிரந்தத்தில்—

चमत्करीं काञ्चिपुरीं गरीयसीमथ क्षितेरद्भुतकाञ्चिमैक्षत ।
असावशेषश्रुतिनीविरादरात् पुरारिदाराश्रयवे चिराय याम् ॥

மலமான சுருதிகளுக்கு இருப்பிடமான ஸ்ரீ பரமேசுவரன் வெகு காலமாய் யாதொரு காஞ்சிநகரத்தை ஆதரவுடன் பாதுகாக்கின்றாரோ அவ்விதமகிமை பெற்றதாயும் இவ்வுலகமாகிற நங்கைக்கு இடையில் விளங்கும் சிறந்த ஒட்டியாணமென்கிற ஆபரணம் போலிருப்பதுமான ஸ்ரீகாஞ்சீ நகரத்தை யதிசிரேஷ்டரான ஸ்ரீசங்கராசாரியர் பார்த்தார்—

கௌரீயசங்கரவிஜயத்தில்,

भूमिं प्रदक्षिणीकृत्य भूयः काञ्चिपुरीं गतः ।

ஸ்ரீஜகத்குரு பூமியைப் பிரதக்ஷிணம் செய்துகொண்டு மறுபடியும் காஞ்சீ நகரத்திற்கு வந்தார்.

வியாஸாசலீயத்தில்,

श्रीकालहस्तिपपदात्पुनराव्रजन्स काञ्चीपुरं पुरवरं मुनिराजगाम ।

ஸ்ரீமதாசார்யராகிற முனிபானவர் ஸ்ரீகாளஹஸ்தீசுவர க்ஷேத்திரத்திலிருந்தும் நகரங்களுக்குள் சிறந்ததான காஞ்சீபுரத்தையடைந்தார்.

இவ்விதம் நம் பரமாசார்யர் காஞ்சீநகரத்தையடைந்ததும் அங்கு மிகவும் தர்மிஷ்டனும் சோளதேசத்திற்கு அதிபதியாயும் ஆசார்யரைச்சரணாகதியடைந்து அவருடைய ஆக்ஞையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தவனுமான ராஜஸேனன் என்கிற அரசன் முகமாக பிராமண அக்கிரகாரம் கிராமதேவதைகளின் ஆலயம் இவைகளை நன்கு ஜீர்ணோத்தாரணம்செய்து புதுப்பித்தார்கள்

श्रितनिर्मलराजसेन चोलक्षितिपालोद्धृतविप्रदेवशालः ।
वरदस्य तथाम्रनायकस्याप्युरुवेश्मद्वयकृज्जयाय मे स्यात् ॥

ஸ்ரீமதாத்மபோதேந்திரஸரஸ்வதீ,

सेतुश्रीकालहस्त्यादियात्रां कृत्वा क्रमाद्गुरुः ।
काञ्चीपुरं समासाद्य राजसेनेन भूभृता ॥
वरदस्य तथाम्रनाथस्य कामाक्ष्याश्च तथालयान् ॥ उद्धृत ॥

ஸ்ரீதேத்திரியரான பரமாசார்யர் ஸேது, காளஹஸ்தி முதலான ஸ்தலங்களில் யாத்திரை செய்து கிரமமாகக்காஞ்சீபுரத்தையடைந்து ராஜஸேனன் என்கிற மன்னனால் ஸ்ரீ வரதராஜருக்கும் ஏகாம்பரநாதருக்கும் ஸ்ரீகாமாக்ஷி தேவிக்கும் உத்தமமான ஆலயங்களை நிர்மாணம் பண்ணும்படி செய்தார்—

सुरधाम च तत्र कारयित्वा परविद्याचरणानुसारि चित्रम् ।
माधवीयशङ्करविजये ॥

ஜகதாசார்யர்,

ஸ்ரீகாஞ்சிநகரத்தை ஸ்ரீசக்ராகாரமாக நிர்மாணம் செய்து அந்தச் சக்ரத்தில்பிந்து ஸ்தானமாக ஸ்ரீகாமகோடிபீடத்தை ஸ்தாபனம்செய்திருக்கிறார்கள். இன்றைக்கும் சிவ விஷ்ணுகுமாராதிஆலயங்களெல்லாம் இந்தப் பீடத்திற்கு அபிமுகமாகவே விளங்குகின்றன. எந்த தேவாலயத்தில் உத்ஸவம் நடந்தாலும் அந்தந்த ஸ்வாமிகளும் ஸ்ரீகாமகோடி பீடத்தை இன்றும் பிரதக்ஷிணம் செய்துவருகின்றன.

பின்னும் குருரத்னமாலையில்

प्रकृतिं च गुहाश्रयां महोग्रां स्वकृते चक्रवरे प्रवेश्ययोमे ।
अकृताश्रितसौम्यमूर्तिमार्यां सुकृतं नस्स चिनोतु शङ्करार्यः ॥

மிகவும் பயங்கரமாயும் குஹாவாஸினியுமான ஸ்ரீபராசக்தியை தம்மால் எதிரில் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீசக்ரரூபமான யந்திரத்தில் பிரவேசிக்கும்படி செய்து சாந்தமூர்த்தியையுடையவளாகவும் ஸகல ஜனங்களும் சுலபமாய் தர்சிக்கும்படியாகவும் எவர் செய்தாரோ அவ்வித மஹிமை பொருந்திய ஸ்ரீசங்கரரென்கிற மஹான் நமக்கு க்ஷேமத்தையளிக்கட்டும்.

இதினால்ஸ்ரீகாஞ்சியில் ஒருவரும் தர்சிக்கவியலாத மிகவும் உக்கிரகளையுடன் விளங்கிய ஸ்ரீகாமாக்ஷிதேவியின் சக்தியை ஆகர்ஷணம் செய்து அவளுக்கெதிர்முகமாக ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீசக்ரயந்தரத்தில் பிரதிஷ்டை செய்து சாந்தமூர்த்தியாக நம் ஆசார்யர் செய்திருக்கிறாரென்று ஸ்பஷ்டமாய் தெரிகின்றது.

மணிமஞ்சரிகிரந்தத்தில்,

तावत्कालमभेदवादिगुरुराट् शिष्यैरनेकैर्वृतः
काञ्चीं प्राप्य चकार तत्र विधिवच्छ्रीचक्रमुद्धारितम् ।
कामाक्षीं सुदृढीचकार जननीं चिद्रूपिणीं देवता-
मन्तेवासिजनस्य मुक्तिपदवीमादर्शयामास ताम् ॥

அத்வைதஸ்தாபனம் செய்துவந்த குருநாதர் அநேக சிஷ்யர்களுடன் காஞ்சியையடைந்து அங்கு ஸ்ரீசக்கிரத்தைப் பிரதிஷ்டை செய்து ஞானஸ்வரூபியாயும், லோகமாதாவாயும் பிரகாசிக்கும்ஸ்ரீகாமாக்ஷிதேவியை அதில் திடமாகஸ்தாபித்து சிஷ்யஜனங்களுக்கும் சிறந்த மோக்ஷமார்க்கத்தையுபதேசித்தார்கள்.

கோஷீயசங்கரவிஜயம்

इति निश्चित्य मनसा श्रीमान्शङ्करदेशिकः ।
श्रीचक्रं निर्ममे तत्र कामाक्ष्यास्सन्निधौ मुदा ॥

ஸ்ரீ சங்கர தேசிகாளவர் செய்யவேண்டிய கார்யத்தைத் தம் மனதில் நருவிதமாகத் நிர்மாணித்துக்கொண்டு ஸ்ரீ காமாக்ஷிதேவியினுடைய ஸந்நிதியில் ஸ்ரீ சக்ரப்பிரதிஷ்டை செய்தார்.

பிராசீன சங்கரவிஜயம்

आधाय सौम्यवपुषं प्रकृतिं महोग्रामावाह्य विग्रहतनूमनुचक्रराजम् ।
आह्लादिते च विषये विबुधेषु चास्मिन्नासादितेषु वशतां चरणौ वहत्सु ॥

மிகவும் உக்கிரமானபராசக்தியை ஸ்ரீசக்ரத்தில் ஆவாஹனம்செய்து சாந்த மூர்த்தியாகச்செய்தார். இதையறிந்த ஸகலபண்டிதர்களும் ஸந்தோஷமடைந்து ஸ்ரீ சங்காருருவுக்கு ஸ்வாதீனமாக ஆகி அவருக்குப் பாதஸேவனம் முதலிய சுசுரூஷைகளைச் செய்தார்கள்.

மேலும் நம் பரமாசார்யரால் ஸாரஸ்வதி விஜயமும் ஸர்வக்ஞபீடாரோஹணமும் ஸ்ரீ காஞ்சிக்ஷேத்ரத்தில் தான் செய்யப்பட்டது.

குருரத்னமாலை.

उपयात्सु बुधेषु सर्वदिग्भ्यः प्रदिशन्नाशु पराभवं च एभ्यः ।
विधृताखिलवित्पदश्च काञ्च्यामधृतार्तिस्स दिशेच्छ्रियं च कांचित् ॥

ஆசார்யார் ஸாரஸ்வதியை ஜயித்து ஸர்வக்ஞ பீடாரோகணம் செய்யும் ஸமயத்தில் பலதிக்குகளிலுமிருந்து அனேகம் பண்டிதர்கள் அருகையிகொண்டு இவர்களுடன் வாதத்திற்கு வந்தார்கள். அவர்களனைவரையும் அற்பம்கூட சிரமமின்றிலீலையாகவே வாதப்போரில் வென்று காஞ்சி க்ஷேத்திரத்தில் ஸர்வக்ஞபீடாரோஹணம் செய்த பரமாசார்யர் நமக்கு ஐசுவர்யத்தைக் கொடுக்கட்டும்—

वियासाचलीये द्वादशसर्गे ।

एवं निरुत्तरपदां स विधाय देवीं सर्वज्ञपीठमधिरुह्य मठे स्वकॢप्ते ।
सान्द्रा गिरामपि तथोपनतैश्च मिश्रैस्संभावितः कमपि कालमुवास काञ्च्याम् ॥

இவ்விதம் ஸாரஸ்வதிதேவியை வாதத்தில்மறுமொழிகூறமுடியாமல்ஜயித்து ஸர்வக்ஞபீடாரோஹணம்செய்து ஸ்ரீகாஞ்சியில் தம்மால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீசாரதாமடத்தில் வாக்குக்கு அதிதேவதையான பாரதியாலும் மற்று முள்ள பண்டிதர்களாலும் மரியாதை செய்யப்பட்டவராய்க்கொண்டு சில காலம் வாஸம் செய்தார்.

வியாஸாசலீயம்—

இவ்விதம் ஸ்ரீசங்காருரு ஸ்ரீகாஞ்சியில் ஸாரஸ்வதிவிஜயத்தையும் ஸர்வக்ஞபீடாரோஹணத்தையும் செய்து பிறகு அந்த க்ஷேத்திரத்திலேயே ஸ்ரீசாரதாமடத்தையும் காமகோடி பீடத்தையும் ஸ்தாபனம் செய்து தம்மால் கைலாசத்திலிருந்து கொண்டுவரப்பட்ட ஐந்து லிங்கங்களுக்குள்

யோகலிங்கத்தை ஆத்ம பூஜைக்காக வைத்துக்கொண்டு சிலகாலம் அங்கு வசித்துவந்தார்கள்.

ஸ்ரீபரமாசார்யார் கைலாஸத்திலிருந்து ஐந்து லிங்கங்கள் கொண்டுவந்ததற்குப் பிரமாணம்—

श्रीगुरुनवरत्नमालिकायाम् ॥

प्रतिपादितलिङ्गपञ्चकेऽमुं प्रणिपत्याशु तिरोहिते गिरीशे ।
विनिवृत्याशु स दिग्जयाय वृत्तः ॥

ஸ்ரீபரமேசுவரரானவர் தம்மால் கொடுக்கப்பட்ட ஸ்படிகமயமான ஐந்து சந்திரமௌளீச்வர லிங்கங்களையுடைய சங்கரகுருவை பூலோகத்திற்குத் திருப்பிவிட்டு மறைந்தபொழுது ஆசார்யரும் திரும்பிவந்து திக்விஜயத்திற்காக உபக்ரமம் செய்தார்.

இவ்விதம் கிரிசரால் அனுக்கிரகிக்கப்பட்ட லிங்கங்களின் பெயர்.

शिवरहस्ये नवमांशे षोडशाध्याये ॥

स योगभोगवरसिद्धिविमोक्षनाम लिङ्गार्चनाप्राप्तजयः स्वकाश्रमे ।
प्राप्तान्विजित्य ॥

சிவபெருமானிடமிருந்தும் பெற்ற யோக, வா. ஸித்தி, மோக்ஷம் என்று பெயர் வாய்ந்த லிங்கங்களின் அர்ச்சனத்தால் அடையப்பட்ட ஜயத்தை உடைய பரமாசார்யர் தம்முடைய ஆச்ரமத்தில் வந்து துர்வாதிகளை ஜயித்தார்-

ஸ்ரீ சாரதாமடம் காமகோடிபீடம் இவைகளை ஸ்தாபித்ததற்குப் பிரமாணம்.

श्री आनन्दगिरीय शङ्करविजये ॥

ग- तत्रैव निजावासयोग्यं मठमपि परिकल्प्य तत्र निजसिद्धान्तपद्धतिं प्रकटयितुमन्तेवासिनं सुरेश्वरमाहूय योगनामकलिङ्गं पूजयेति दत्वा त्वमत्र कामकोटिपीठमधिवसेति संस्थाप्य इति ॥

श्रीगुरुनवरत्नमालिकायाम् ।

समतिष्ठिपदाहिमाद्रिसेव्यं क्रमशो धर्मविचारणाय दिव्यम् ।
अधिकाञ्चि च शारदामठं योऽप्यधिकं नस्सुखमातनोतु सोऽयम् ॥२१॥

உலகில் தர்மாதர்மங்களை நன்கு வியவஸ்தை செய்யவேண்டியதின் பொருட்டு தேவதைகளால் ஸேவிக்கத் தகுந்ததாயும் ஸேது முதல் ஹிமாசலம் வரையிலுள்ள புண்யபூமியில் வஸிக்கும் சகல வர்ணாச்ரமிகளாலும் நமஸ்கரிக்கத்தகுந்ததுமான ஸ்ரீசாரதாமடத்தையும் ஸ்ரீகாமகோடி பீடத்தையும்

ஸ்ரீ காஞ்சீக்ஷேத்திரத்தில் ஸ்தாபித்தவர்களான ஸ்ரீபரமாசார்யாள் நமக்கு அதிகமான சிரேயஸ்ஸைக் கொடுக்கட்டும்.

பிராசீன சங்கரவிஜயத்தில்—

सर्वज्ञपीठमधिरुह्य ततस्तदग्रे मिश्रान्विजित्य सहसोपनतान्प्रयागात् ।
अध्यास्त काञ्चिमभिमण्डितकामकोटिपीठं मठं निजमवाप्य सशारदाख्याम्

ஸ்ரீசங்கரகுருவானவர் ஸகல வித்வான்களையும் ஜயித்து ஸர்வக்ஞபீடத்தில் ஆரோகணம் செய்து பிறகு ஸ்ரீகாஞ்சியிலேயே சாரதை என்று பெயர் வாய்ந்த தம் மடத்தையடைந்து ஸ்ரீ காமகோடி பீடத்தை அலங்காரம் செய்து வஸித்துவந்தார்—

निन्ये योगिसुरेश्वरोपरचितः श्रीकामकोट्याह्वये
लोकाचार्यपदे स्थितस्य दिवसान् सर्वज्ञपीठे सुखम् ।
ख्यातस्तत्र तदादितेन विजितां वाणीमनुस्मारयन्
श्रीमच्छङ्करदेशिकस्य जयति श्रीशारदाख्यो मठः ॥

யோகியாகிய சுரேசுவராசார்யரால் நன்குபசரிக்கப்பட்டவரும் லோகாசார்யர் என்னும் ஸ்தானத்திலிருப்பவருமான ஸ்ரீசங்கர குருவானவர் காமகோடி என்று பெயர்பெற்ற ஸர்வக்ஞபீடத்தில் இருந்துகொண்டுசுகமாகக் காலம் கழித்து வந்தார். ஸ்ரீஜகத்குருவால் ஜயிக்கப்பட்ட சாரதையின் பெயரால் ஸ்ரீசங்கரருக்கு சாரதா எனத் திருநாமம் பூண்ட ஒரு மடமும் காஞ்சியில் விளங்குகிறது.

பிருஹத்சங்கரவிஜயத்தில்—

अध्यास्त काञ्चिमभिमण्डितकामकोटिपीठे मठं निजमवाप्य सशारदाख्याम् ।

ஸ்ரீபரமாசார்யர் சாரதா என்று பெயர் பூண்ட தம்முடைய மடத்தையடைந்து ஜகத்திற்கு அலங்காரமாய் ஸ்ரீகாஞ்சியில் விளங்கும் காமகோடி பீடத்தில் வஸித்து வந்தார்.

ஆத்மபோதேந்திர ஸரஸ்வதி

विजित्य वाणीमतनुं परकायप्रवेशतः ।
ज्ञातेन स्मरतन्त्रेण तन्नाम्ना निर्मिते मठे ॥
सर्वज्ञैकसमध्यास्ये कामकोटीति संज्ञिते ।
पीठे स्थितः कतिपयानब्दान् शिष्यानपालयत् ॥

பரகாயப்பிரவேசத்தால் சாரதையை ஜயித்து அவளுடைய பெயரால் சாரதாமடம் என்று ஒரு மடத்தை நிர்மாணம்செய்து, அதில் ஸர்வக்ஞர்களாலாரதிக்கக்கூடிய காமகோடிஎன்கிற பீடத்தை ஸ்தாபனம்செய்து அதில் நம்ஆசார்யாள் வஸித்து வந்தார்கள்.

இவ்விதம் காஞ்சியில் வஸித்துக்கொண்டிருக்குங்கால், தம் அவதாரத்திற்கு வேண்டிய கார்யங்கள் பூராவும் முடிந்து ஆயுளின் பூர்த்தியும் ஆய்விட்டபடியால், மண்ணுலகைவிட்டுத் தமது வாஸஸ்தானமான கைலாஸத்தை யலங்கரிக்க வேண்டித் தம்மால் ஆராதிக்கப்பட்ட யோகலிங்கத்தைப் பூஜிப்பதற்கு, சீடர்களுக்குள் மிகச்சிறந்தவரான ஸர்வக்ஞ சரணர் என்று பிரஸித்திபெற்ற, ஆசார்யாளை முறைப்படி உபதேசித்து ஸ்தாபனம் செய்து நம் பரமாசார்யாள் ஸச்சிதானந்த ரூபமாய், ஸ்வயம் ஜோதிச் சுடராய் என்றுமழிவில்லாமல் விளங்கும் ஸ்வரூபத்தில். ஐக்கியமானார்கள் என்று பலபண்டித சிரோன்மணிகளாலும் நன்கு விளக்கிக் காட்டப் பட்டிருக்கின்றன.

அவையாவன வ்யாஸாசலீயத்தில்.

प्रागष्टमाद्विदितवेदसुदूढबाल्यं सर्वज्ञसंज्ञमथहं सितमात्मनैव ।
श्रीकामकोटिबिरुदे न्यदधात् स्वपीठे गुप्तं स्वशिष्यतिलकेन सुरेश्वरेण ॥
इत्थं स शङ्करगुरुः कृतकृत्यभावाद्भावान्प्रकाश्य निगमान्तगिरां निगूढान् ।
काञ्च्यां विमुच्य वपुराहृतमिच्छयैव स्वस्यैव धाम्नि परमे स्वयमेव लिल्ये ॥

ஸ்ரீ சங்கராசார்யாள் எட்டாவது வயதிற்குள் ஸகல கலைகளையும் கசடறக் கற்றவரும் பால்யப்பருவத்திலிருப்பவருமான, ஸர்வக்ஞரெனப் பெயர் வாய்ந்தவருக்கு விதிப்படி ஸந்நியாஸம் கொடுத்து அம்மகானை தம் சீடர்களுள் மிகச்சிறந்தவரான சுரேசுவராசார்யரால் நன்கு பாதுகாக்கப் பட்ட ஸ்ரீ காமகோடிஎனப் பிரஸித்திபெற்ற தம்மால் ஆராதிக்கப்பட்ட பீடத்தில் அமர்த்தினார்கள். இவ்விதம் நம்ஆசார்யாள், உபநிடதங்களுடைய ரகஸ்யமான கருத்துக்களை நன்குவெளியிட்டு ஷண்மத ஸ்தாபனம் செய்துவிட்டபடியால் செய்யவேண்டிய கார்யங்கள் செய்தாய்விட்டதெனக்கருதி இனியும்ரக்ஷிக்கவேண்டி சிறந்தசிஷ்யனையும் தம்ஸ்தானத்திலேற்படுத்தித் தமதிச்சையால் ஸ்வகரிக்கப்பட்ட பாஞ்சபௌதிகமான சரீரத்தை ஸ்ரீகாஞ்சீநகரத்தில் விட்டு விட்டு யாதொரு தோஷமுமின்றி கேவலம் சித்ஸ்வரூபமாய் விளங்கும் தம்ஸ்வரூபத்தில் தாமாகவே மறைந்தார்கள் —

ஆத்மபோதேந்திர ஸரஸ்வதி.

सुरेश्वरपरित्रातं बालं चिद्घनमासने ।
निवेश्य प्रविशद्धाम परमं स्वं जगद्गुरुः ॥

ஸுரேசுவரரால் ரக்ஷிக்கப்பட்டவரும் பால்யவயதிலிருப் பவருமான ஸர்வக்ஞசரணாசார்யாளை ஸ்ரீ ஜகத்குரு சங்கரபகவத்பாதாள் ஸ்ரீ காமகோடி பீடத்தைப் பூஜிப்பதற்காகத்தமது ஆஸனத்தில் ஸ்தாபித்து தம்முடைய உத்கிருஷ்டமான தேஜஸ்ஸையடைந்தார்கள் —

பிருகத் சங்கர விஜயே—

वाणीं विजित्य च नियद्विशदामदेहां सर्वज्ञपीठमधिरुह्य च तत्र कांच्याम् ।
विद्वद्वरार्चितपदो यमिसार्वभौमो देव्याः पुरः परतरे पुरुषे विलिल्ये ॥

யதிசிரேஷ்டரான நம் பரமாசார்யாள் காஞ்சியில் ஸரஸ்வதீவிஜயம்செய்து ஸர்வக்ஞபீடமேறி, பண்டிதோத்தமர்களால் பூஜிக்கப்பட்டவர்களாய்க் கொண்டு ஸ்ரீ காமாக்ஷி தேவியின் ஸந்நிதியில் மிகவும் சிறந்ததான பரஞ்சோதியில் மறைந்தார்—

சிவரஹஸ்யம் நவமாம்சத்தில்

तद्योगभोग - इत्यारभ्य - प्राज्ञान्विजित्यातरसाक्षतशास्त्रवादैः
मिश्रान् स कांच्यामथ सिद्धिमाप ॥

ஸ்ரீ சங்கர குருவானவர் தம்மிடம் வாதத்திற்கு வந்த வித்வான்களை சாஸ்திரவாதங்களால் வென்று முடிவில் ஸ்ரீ காஞ்சிநகரத்தில் பிரீபாவத்தை யடைந்தார்கள்—

गुरुनवरत्नमालायाम् ॥

परमान्तिकसत्सुरेश्वराद्यैः परमाद्वैतमतं स्फुटं प्रवेद्य ।
परिकांचिपुरं परे विलीनः परमायास्तु शिवाय मे गुरुर्नः ॥

யாதொரு ஸ்ரீலோககுருவானவர் ஸர்வக்ஞபீடமேறிய பிறகு தம் ஸமீபத்திலேயே காத்துக்கொண்டிருக்கும் அத்வைத தத்வத்தையறியவிருப்பங்கொண்ட சுரேசுவரர் முதலான சிஷ்யர்களுக்கு மிகவும் சிறந்ததான அத்வைதமதத்தை நன்கு வியக்தமாகப்போதித்து காஞ்சீநகரத்திலேயே ஸ்வஸ்வரூபத்தில் ஐக்கியத்தையடைந்தாரோ நம்முடைய குருவான அம்மஹான் உத்தமமான மங்களத்தைக்கொடுக்கட்டும்.

பிராசீனசங்கரவிஜயத்தில்—

कल्यब्देष्व शरेक्षणाध्वनयनैः (2625) सत्कामकोटिप्रथे
पीठे न्यस्य सुरेश्वरं समवितुं सर्वज्ञसंज्ञं मुनिम् ।
कामाक्ष्याः सविधे स जातु निविशन्नुन्मुक्तलोकस्पृहो
देहं स्वं व्यपहाय देहसुगमं धाम प्रपेदे परम् ॥

ஸ்ரீஜகத்குரு சங்கராசார்யாள் கலி 2625-ஆவது ஆண்டில் ஸ்ரீகாஞ்சியில் காமகோடி என்று பிரஸித்திபெற்ற பீடத்தில் மிகவும் சாந்தரான ஸர்வக்ஞர் என்கிற தம் சிஷ்யரை ஸ்தாபித்து அவரைப்பாதுகாக்க ஸுரேசுவராசார்யரையும் ஏற்படுத்தி ஸ்ரீ காமாக்ஷிதேவியினுடைய ஸந்நிதியில் சென்று இவ்வுலகவாஸத்தில் பிரீதியில்லாதவர்களாய்க்கொண்டு தம் சரீரத்தை

விட்டுவிட்டு மற்றுமுள்ள சரீரிகளால் அடையமுடியாத பரமபதத்தையடைந்தார்கள்.

மார்க்கண்டேய ஸம்ஹிதையில்—

श्रीकांच्यां कामकोटौ कलिमलशमनीं कल्पयित्वा सुरेशे
श्रीविद्याराजपीठार्चनमहितमहाराज्यसाम्राज्यलक्ष्मीम् ।
संवेश्यात्मीयशिष्ये सकलभुवनसंमोदहेतोर्महात्मा
चिद्रूपस्वानुभूतिं भजति भवमहाम्भोधिसन्तारणाय ॥

ஸ்ரீகாஞ்சியில் காமகோடிபீடத்தில் ஸ்ரீபரமாசார்யாள் தமதுமுக்கிய சிஷ்யரான ஸுரேசுவரரிடத்தில் ஸகலலோகங்களுக்கும் க்ஷேமமுண்டாகவேண்டி கலியினால் ஏற்படும்பாபங்களைப் போக்கும் திறமைபெற்ற ஸ்ரீ வித்யாராஜ பீடத்தின் அர்ச்சனையென்கிற மிகவும் பெரிதான ராஜ்யலக்ஷ்மியை ஸ்தாபித்து மஹாத்மாவான சங்கரர் பவமென்னும் பெரிதானகடலைத் தாண்டவேண்டி ஆத்மஸ்வரூபஸாக்ஷாத்காரத்தை அடைந்தார்—

ஆனந்தகிரிசங்கரவிஜயே 74ஆவது பிரகரணத்தில் —

कांचीनगरे मुक्तिस्थले कदाचिदुपविश्य स्थूलशरीरं सूक्ष्मेणान्तर्धा-
य चिद्रूपो भूत्वांगुष्ठमात्रपुरुषः तदुपरि परिपूर्णमखण्डानन्दं प्राप्य
सर्वव्यापकचैतन्यरूपेणाद्यापि तिष्ठति ।
स एव शङ्कराचार्यगुरुर्मुक्तिप्रदस्सताम् ॥

ஒரு ஸமயம் முக்திஸ்தலமான ஸ்ரீகாஞ்சிநகரத்தில் லோகாசார்யாள் தம் ஸ்தூலசரீரத்தை ஸூக்ஷ்மத்தில் லயத்தையடையும்படி செய்து ஞானஸ்வரூபமாகவும் அங்குஷ்டமாத்திரஸ்வரூபமாகவும் ஆகி பூர்ணமான ஆனந்தத்தைப்பெற்று எங்கும் நிறைந்த தேஜோரூபமாய் இப்பொழுதும் விளங்குகிறார்களோ அவ்வித மஹிமை வாய்ந்த ஸ்ரீசங்கராசார்யர்தான் ஸாதுக்களுக்கு முக்தியைக் கொடுப்பவர்.

இவ்விதமே சங்கராப்யுதயம், கௌரீயசங்கராசாரிய சரிதம், மணிமஞ்சரீபேதினி, வாஸநாதேஹஸ்துதி, ஆசார்யாஷ்டகம், மார்க்கண்டேய ஸம்ஹிதைகள், நைஷதகாவ்யம் முதலிய பல கிரந்தங்களிலும் விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கும் விஷயங்கள் அதிக விரிவாகுமென இங்கு நிரூபிக்கப்படவில்லை.

இதுவரையில் நிரூபிக்கப்பட்ட விஷயங்களால் ஸ்ரீ காஞ்சிநகரத்தின் மஹிமை நன்கு விளங்கும். தர்மஸ்தாபனார்த்தமாய் ஸ்ரீ சங்கர குருவென்ற திருநாமத்துடன் அவதரித்த ஸ்ரீ சந்திரசேகரர் கைலயங்கிரி முதற்கொண்டு ஸ்ரீராமசேதுபர்யந்தம் பாதசாரியாகப்பலக்ஷேத்திரங்களையுஞ்சுற்

சித்து அங்காங்குள்ளவிசேஷங்களையும்நன்கறிந்து பார்த்ததில்மற்றக்ஷேத்திரங்களில் அதிகமகிமை தோன்றாமல் காஞ்சிக்ஷேத்ரமே மிகவும் மஹிமை பொருந்தியது. முக்திஸ்தலம் இங்குதான் நாம்வஸிக்கவேண்டுமெனக்கருதி அங்கு ஈசவாதிகளால் செய்யக்கூடிய தேவாலயப்பிரதிஷ்டை ஸ்ரீசக்ரயந்த்ரஸ்தாபனம் ஸ்ரீகாமாக்ஷியின் கலாகர்ஷணம் ஸரஸ்வதீவிஜயம் ஸர்வக்ஞபீடாரோஹணம் ஸ்ரீசாரதாமடஸ்தாபனம் ஸ்ரீகாமகோடிபீடப்பிரதிஷ்டைமுதலான அற்புதமான பல காரியங்களைச்செய்து தம் அவதாரத்தால் செய்யவேண்டிய காரியங்கள் பூராவும் முடிந்தபிறகும் இந்த க்ஷேத்திரத்திலிருந்தே ஸ்வஸ்வரூபத்தையடையவேண்டுமென்று கருதி முடிவிலும் தம்மால் ஸ்ரீகாமகோடிபீடத்தில் ஆராதிக்கப்பட்ட ஸ்ரீத்ரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீசந்திரமௌளீச்வரயோகலிங்கத்தைப் பூஜிக்கவேண்டி தம் சிஷ்யரான ஸர்வக்ஞசதுரன் என்கிற ஆசார்யாளையும் விதிப்படி நியமனஞ் செய்து யோகமார்க்கத்தால் உண்மையான நிஜஸ்வரூபத்தையடைந்தார் என்றால் இதைக்காட்டிலும் வேறு அதிகம் கூறவேண்டிய மஹிமை என்ன இருக்கிறது. இவ்விதமஹிமை பெற்ற இந்தக் காஞ்சி க்ஷேத்திரத்திலுள்ள ஸகல தீர்த்தங்களையும் தேவதாலயங்களையும் புண்யதீர்த்தஸ்நானத்தாலும் தேவதைகளின் ஆராதனத்தாலும் ஸித்திபெற்ற மஹான்களுடைய அற்புதமான அநேக சரித்திரங்களையும் தற்காலத்திலுள்ள ஜனங்களும் சுலபமாயறிந்து உத்தமமான இந்தப்புண்யக்ஷேத்திரத்தையடைந்து தங்கள் தங்கள் சக்திக்கியன்றவாறு புண்யதீர்த்த ஸ்நானத்தாலும் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் முதலான தேவதைகளின் ஆராதனத்தாலும் இஷ்டஸித்தியைப் பெறவேண்டுமென்று இப்புத்தகத்தில் சகல விஷயங்களும் விரிவாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் எல்லாஜனங்களும் இப்புத்தகத்தை நன்குபடித்து விஷயங்களையறிந்து முடிந்தவரையில் அனுஷ்டித்து ஜன்மஸாபல்யத்தைப் பெறவேண்டுமாய் அனுக்கிரகிக்கவேண்டுமென்று ஸ்ரீ லோகமாதாவான ஸ்ரீகாமாக்ஷிதேவியைப் பிரார்த்திக்கிறோம்.

சுபமஸ்து.

இந்தக் காமகோடிபீடத்துக்கு வாயுமூலையில் எவ்வுலகத்தும் எச்சமயத்தும் தழைத்தோங்கி வளர்கின்ற வேதமே மாவிருக்ஷமாய்த் தளிர் பூங்கனிகளோடு நிழலைச்செய்ய அம்மூலத்தில் உருவருவனுமலை யுண்மையின்மை மற்றிருள் ஒளியின்றி நின்றிலங்கும் அகண்டஜோதியாய் விளங்குஞ் சத்தாமாத்திரமாய் உயிர்ப்பினையொடுக்கி விழித்துறங்கும் யோகியர் அயர்வியிலகக் கண்ணுறுக்கும் சுடரொளியாய் விளங்குஞ்சின்மாத்திரமாய் எனையோருள்ளத்துப் பெருவிரலளவையினுள்ளத்திற் பேணிநின்றுயிர் முழுவதும் ஆட்டும் விளக்கொளியாய் விளங்கும் ஆனந்தமாத்திரமாய்ப் பிரகாசிக்கும் அகண்டசச்சிதானந்தப் பிழம்பாய்த் தோன்றி பிரும்ம விஷ்ணு சுரேந்திரர்களால ஸேவிக்கப்பட்டு "மாயுமால் விடையேயொரு பாகனே, காயவின்மதன் பட்டது கம்பமே," என்றும், "கரவாடும் வன்னெஞ்சர்க்கரியானை இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே" என்றும், "ஆலந்தானுகந்தமுது செய்தானை, காலகாலனை கம்பனெம்மானைக் காணக்கண்ணடியேன் பெற்றவாறே" என்றும் சைவ சமயாசாரியர்களாகிய மூவர் முதலிகளால் ஓதப்பட்டனவாகிய பல தேவாரமாலைகளேற்று அவருள் திருஞானசம்பந்தசுவாமிகளுக்குத் தவங்கிடந்த திருமாலுக்குச் சிவசாரூப்யம் கொடுக்கு மாற்றலும் "மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சிமயானத்தான் வார்சடையானென்னினல்லா, னொப்புடையனல்லனொருவனல்லனோரூரனல்லனோருவமனில்லி. அப்படியுமந்நிறமவ்வண்ண மவனருளே கண்ணாகக்காணினலலால், இப்படியனிந்நிறத்தனிவ்வண்ணத்தனிவனிறைவனென்றெழுதிக் காட்டொணாதே" என்றதிருநாவுக்கரசு சுவாமிகளுக்கு எழுதிக் காட்டவல்ல சிவானுபவ விளைவும் "நெய்யும்பாலுந்தயிருங்கொண்டு நித்தம் பூஜை செய்யலுற்றார் கையிலொன்றுங் காணமில்லைக் கழலடிதொழுதுய்யினல்லால் ஐவர் கொண்டிக்காட்டவாடி யாழ்குழிப்பட்டழுந்துவேனுக்குய்யுமாறொன்றருளிச் செய்யீரோணகாந்தன்றளியுளீரே" என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குச் சிவபோக நுகர்தற் கேதுவாகியநெய் முதலிய திரவியங்களோடும் பொன்னுந்தந்தருளிய ஏகாம்பரநாதராலயம் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. அக்கினி மூலையில்

அவ்வேகம்பவாணர் சன்னிதியை நோக்கி நிற்கும் அத்திகிரிவாசராகிய வரதராஜப் பெருமாளாலயம் பிரகாசிக்கின்றது.

இங்ஙனம் மூவராலும் பிரகாசிக்கின்ற அந்தக்காஞ்சி க்ஷேத்திரப் பிரபாவம் வடமொழியில் ஸ்காந்த புராணம் சனற்குமாரசம்ஹிதை காளிகாகண்டத்தில் தீர்த்தமான்மியத்தில் கூறப்பட்டுள்ள ஐம்பத்தைந்து அத்தியாயமாகிய "பஞ்சாசத்" என்கிற நூலினும் சிவபுராணம், பிரும்மாண்ட புராணம் முதலிய பல புராணங்களினின்றும் சங்கிரகித்துள்ள நூறு அத்தியாயமாகிய "சதாத்யாயம்" என்னும் நூலினும் மார்க்கண்டேய புராணம் ஸ்ரீவித்யாகண்டத்தில் சிறந்தெடுத்துச் சொல்லப்பட்டுள்ள பதினொன்று அத்தியாயமாகிய காமாக்ஷி விலாஸம் என்கிற நூலினும் சொல்லப்பட்டுள்ளது. அம்மூன்றும் மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் என்பனவற்றைக் கூறுவனவாயினும் பஞ்சாசத் என்கிற நூல் காஞ்சியில் வீற்றிருக்கும் சிவமூர்த்திகளுடைய ஆதிக்கிய பிரபாவங்களையும், சதாத்தியாயமென்கிற நூல் ஸ்தலம் தீர்த்தமென்கிற இவ்விரண்டின் ஆதிக்கிய பிரபாவங்களையும் காமாக்ஷி விலாசமென்கிறநூல் காமாக்ஷி தேவியினுடைய பிரபாவத்தையும் விதந்து சிறப்பாக எடுத்துக் கூறுகின்றன. இவ்வுண்மை அந்நூல்களைக் கண்ணுறுங்கால் விளங்கும்.

வடமொழியிலுள்ள இம்மூன்று நூல்களுள் பஞ்சாசத் என்னும் நூல் திராவிடமகாபாஷ்ய கர்த்தராகிய ஸ்ரீசிவஞான யோகிகளாலும், சதாத்யாயம் என்னும் நூல் மேற்படி ஸ்ரீசிவஞானமுனிவரின் மாணாக்கராகிய கச்சியப்பமுனிவராலும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு காஞ்சிபுராணம் என வழங்கிவருகின்றது. தமிழில் வந்த அந்தக்காஞ்சி புராணத்தை யச்சிட்டவர்கள் நூலாசிரியராகிய இருவரும் வடமொழியாகிய முதனூல்களைக் கொண்டியற்றினார்களென்பதை யறிவதற்கிடனில்லாமற் போனமையாலும், இருவரும் ஆசிரியர் மாணாக்கராயிருந்தமையாலும். இருவரும் காஞ்சிமான்மியத்தையே சொன்னமையாலும். முதற்காண்டம் இரண்டாங்காண்டமெனப் பெயரிட்டு வெளியாக்கினர். அதனுண்மையை நோக்குங்கால் இரண்டும் தனித்தனிப் புராணங்களென்றே வெளியாகின்றன. ஆகவே, ஒருநூற் சம்பந்தத்தைக் காட்டும் திருவிளையாடற்புராணகாண்டங்களைப்போலஇக்காண்டங்களாக

சிதம்பர க்ஷேத்திரத்திற்குக் கோயிற்புராணம், சிதம்பர புராணம் எனவும், மதுரை க்ஷேத்திரத்திற்குத் திருவிளையாடற் புராணம், கடம்பவனப்புராணம் எனவும் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் ஒன்றற்கே ஒன்று இரண்டு பலவாகப் பல புராணங்களிருப்பதுபோலும் காஞ்சிக்ஷேத்திரத்திற்கும் முதற்காண்டம் இரண்டாங்காண்டமெனக் குறிக்கப்பட்டிருப்பதை இரண்டு புராணங்களாகக் கொள்வதே முறைமையாமென்றுணரக் கிடக்கின்றன.

பிறகு, காஞ்சிப்பிரபாவத்தை விளக்கிய மூன்று நூல்களுள் காமாக்ஷிதேவியினுடைய பிரபாவத்தை விளக்குவந்த காமாக்ஷி விலாஸம் என்கிற நூல் இதுவரையில் வெளிப்படாமலிருந்தமையால் அந்நூலை உரையளவையான் விளங்கத்தக்க ஏனைய இரண்டு நூல்களைப்போலல்லாமல் யாவர்க்கும் மிக எளிமையாய் விளங்கத்தக்க வசனநடையில் வெளியாக்குவதே மிகவும் நன்மையாமென்று எமக்கு வேண்டிய பலர் அபிப்பிராயப்பட்டமையான் அவ்வண்ணமே வெளியிடலாயிற்று.

வடமொழியினும் தென்மொழியினும் உள்ள காஞ்சிப் புராணங்களில் காஞ்சியிலுள்ள சிவமூர்த்திகள் இவரிவரென்பதும் தீர்த்தங்களிவையிவை யென்பதும் இவ்விவ்விடங்களிலிருக்கின்றன வென்பதும் பூசித்தோர் இவரிவர் என்பது ஒன்றுசேரக்கண்டு தெளிதல் அருமையாக விருக்கின்றமையானும் க்ஷேத்திரதரிசனத்தை விரும்பி வருவோர் புராணங்களைப்பார்ப்பதும் முன்கூறிய மூர்த்தி ஸ்தலம், தீர்த்தங்களிருக்குமிடங்களைக் காணப்பெறுவதும், ஆங்காங்கு செல்லும் மார்க்கங்களையறிந்து கொள்வதும், அருமையினும் அருமையாய்த் தரிசனம்செய்வதையிழந்து போகின்றமையானும் அந்தக்கஷ்டங்களெல்லாம் அன்பர்கட்கு நிவிர்த்தி செய்வித்தல் பெரியசிவபுண்ணியமெனக் கருதி இந்தக் காஞ்சிமஹிமை வெளியிடலாயிற்று.

உ.

திருச்சிற்றம்பலம்.

காஞ்சிக்ஷேத்திர மஞ்சரி.

# ஸ்ரீ ஏகாம்பரநாதர் ஆலயத்திலுள்ள மூர்த்திகள்.

## முதலாம் ஆவரணம்.

——(o)——

### ஏகாம்பர நாதர்.

காமாக்ஷி தேவியாரால் பூஜிக்கப்பட்டவர். தீர்த்தம், சிவகங்கை, கம்பாநதி, உமாபத்திரை, சீர்த்திமதி. விருக்ஷம், மா.

உலகமாதாவாகிய உமாதேவியார் தமக்குப்போக பூமியாகிய மந்தரமலையில் போகார்த்தமாய் வீற்றிருக்கின்ற சிவபெருமானோடு போகலீலாவிநோத இன்பரசக்கலை நுகர்ந்தபின்னர் பெருமானும் களித்திருக்கும் களிப்பை நோக்கி மீதூர்ந்த களிப்புடையாராய்,

மும்மைப்புவனங்களுஞ் செய்தவப் பேறு முற்றச்
அம்மைத்திரைநீருடை மேதினி தேற்ற மெய்தச்
செம்மைத்திசை யெட்டினுந் தென்றிசைமிக்கு வெல்ல
நம்மர்த்தொகை நூறிய வண்டமிழ் நாடு வாழ.

நலமன்னிய தண்டக நாடு செழித்து மல்கப்
பலரும் புகழ் காஞ்சி வளம்பதி மேன்மை சாலக்
குலவுஞ் சமயங்களோராறு மகிழ்ச்சிகூற
வுலகெங்கணும் வைதிக சைவ முயர்ந்து மன்ன.

எவ்வெத்தவத்துஞ் சிவபூசனையேற்ற மன்னப்
பௌவப் புனல் சூழ்படி மேலவர் தேறியுய்யத்
தெவ்வுத்தொழில் பூணு மறக்கடை தேயநல்கூ
ரெவ்வத்திற நீங்கியுயிர்ப் பயிரோங்குமோங்க.

முப்பான் முதலிட்ட விரண்டற முந்தழைப்ப
வெப்பாலுலகத்தொளி யாவையு மெம்பிரானார்
தப்பா விதியிநெறிச் சால்பென யாருங்காண
வப்பார் சடையாடித் தொண்டகன் களிப்ப.

ஓர் விளையாட்டை எண்ணிப் பின்புறத்தே சென்று தமது திருகொங்கைகளும் அழுத்தத்தழுவி இரண்டு கண்களையும் இரு கரங்களாலும் மூடி மறைத்தனர். மறைப்பவே உலகமெல்லாம் இருள் மூடியது. அது மூடவே ஆன்மாக்கள் அனைவரும் உயிருக்குறுதி பயப்பனவாகிய தவம், தானம், ஞானம், அர்ச்சனை முதலிய யாவும் இழந்தவர்களாய்ப் பதிதராயினர். ஆகவே பாவம் மேலிட்டு அம்மையாகிய உமாதேவியைப் பற்றியது. பற்றவும் அழகெல்லாம் திரண்ட திருமேனி கருத்து விளையாட்டொழிந்து வினையாய் முடிந்தது. முடியவே உமாதேவியார் திருவுளம் நடுங்கி இருகரங்களையும் எடுத்துப்பெருமானைப்பணித்து "யானுய்யும் வகையருள் செய்வாய்" என்று வேண்டினர். வேண்டவும் இறைவனார் தேவியை நோக்கி எமக்கும், நின்றனக்கும், நந்தம் அனைத்தடியவர்க்கும் சூரியனை இருளணுகாதது போல் பாவம் அணுகுவதில்லையாயினும் நாமிருக்கும் உலகிற்கு அமையப் பாயிருத்தலினால் அவ்வுலகினராகிய மக்கட்குரிய விதிவிலக்குகள் இத்தன்மைத்தென்பது பாவபுண்ணியம் இத்தன்மைத்தென்பதும் பரிகாரங்களாயுள்ளவை இவை என்பதும் நாம் காட்டினுலன்றி அவரறியவல்லரல்லராகலான் இப்பொழுது என்னால் விதிக்கப்படும் விதியைக்கொண்டு அவ்வழியே நடந்து இப்பழியைப் போக்கடித்துக் கொள்வாயென்று சிவார்ச்சனையையும், சிவத்தியானத்தையும், சிவஸ்தோத்திரத்தையும் சிவபஞ்சாக்ஷர ஜபத்தையும் சிவனடியார் வழிபாட்டையும் அனுக்கிரகம் செய்து இவையிற்றை நமக்கினிய காஞ்சி நகரின்கண் வந்து காமகோட்டத்தில் தவமும் முப்பத்திரண்டறமும் வழுவாது செய்துவந்து மாவடியின்கண் சிவார்ச்சனைமுதலிய ஐந்தையும் விடாதுசெய்து அன்று மந்தரமலையில் பின் புறந்தழுவி மணங்களித்தது போல் என்றும் பக்கத்திருந்து திருவேகம்பரைத் தழுவி இன்புற அப்பெருமானை ஏத்தி வழிபடப்பெற்றனர்.

# இரண்டாம் ஆவரணம்.

## * வெள்ளக்கம்பர் கள்ளக்கம்பர் நல்லகம்பர்.

சிவபெருமான் கச்சிமயானத்தின்கண் சைவவேள்வி செய்து முடித்தபின்னர் சிவசக்தி லலிதாதேவி என்னும் திருநாமம் கொண்டு வெளிப்பட்டு யாவும் படைக்கத்தொடங்கியபொழுது அவளது முக்கண்ணினும் தோன்றிய மும்மூர்த்திகளுள் பிரமனால் பூசிக்கப்பட்டவர் 'வெள்ளக்கம்பர்' திருமாலால் பூசிக்கப்பட்டவர் 'கள்ளக்கம்பர்' உருத்திரரால் பூசிக்கப்பட்டவர் 'நல்லகம்பர்' இம்மூவருள் ஏகாம்பரநாதருக்கு வலப்பக்கத்தில் வெள்ளக்கம்பர் இடப்பக்கத்தில் கள்ளக்கம்பர் ஈசானத்தில் நல்லகம்பர்.

தென்பக்கத்தில்—

### அகத்தீச்வரர்.

விந்தியமலையின் இறுமாப்பையடக்கத் தேவர்கள் வேண்டியவாறு காசியில் வசித்திருந்த அகஸ்தியமுனிவர் காஞ்சிக்கு வந்தபோது அக்காஞ்சி சான்றோரையுடைத்தாயிருக்கும் சிறப்பை நாடி இவ்விடத்தில் நாம் தேவர்கள் சொல்லியவண்ணம் வெளிப்படுத்தவெண்ணியிருக்கும் இனிமையுடைத்தாகிய தமிழை வெளியாக்கல்வேண்டும் என்று பூசித்தனர்.

தெ. மேற்பக்கத்தில்—

### அஷ்டோத்தரசதலிங்கம் (108)

† உமாதேவியார் பதரிகாச்ரமத்தில் சிவாக்ஞையால் போகதண்டம் முதலியவைகளோடு சிவார்ச்சனைக்காகத் தாம் பெற்று வந்த மணல் காஞ்சிக்கு வந்தபோது இலிங்கரூபமானவைகள். இந்த இலிங்கங்களுக்கு நிருருதியிலுள்ள விநாயகக்கடவுளும் வாயுதிக்கிலுள்ள முருகக்கடவுளும் காமாக்ஷிதேவியாரால் ஏகாம்பரநாதரைப் பூசிப்பதற்கு முன்னுகப் பூசிக்கப்பட்டவர்கள்.

---

* அவச்சயேகாம்பரநாதர், மோக்ஷைகாம்பரநாதர், பத்ரைகாம்பரநாதர் இந்நாமங்கள் வடமொழியிற் கண்டது.

† இந்தச் சரித்திரம் காஞ்சிமஹிமையில் 8-வது அத்தியாயம் ரசாலை சப்பிரபாவத்திலுள்ளது.

ஷடி வடபக்கத்தில்—

## மார்க்கண்டேச்வரர்.

மார்க்கண்டேய முனிவர் ஓர் காலத்தில் ஜலப்பிரளயம்வந்தபோது அதில் நீந்திவந்து ஓர் புகலிடங்காணாது மனம் வருந்திப் பார்க்கக் காஞ்சியிலுள்ள வேதஸ்வரூபமாகிய மா விருக்ஷம் வளர்ந்து ஜலப்பிரளயத்தின்மேல் தோன்றிற்று. அதுகண்டு அதனைப் பிடித்துக்கொண்டு காஞ்சியிலிழிந்து ஆம்பரமாகிய யாவையும் ஆம்பரநாதரையும் கண்டு களித்துப் பின்னர்த் தமது பெயரால் பூஜித்தனர்.

## மத்தளமாதவேச்வரர்.

பார்தவராகிய திருமால் தில்லையில் திருநடனங்கண்ட காலத்தில் நந்தியாதியர்போல் தானும் மத்தளம் முழக்கவேண்டும் என்று நடராஜப்பெருமானை வேண்ட அவர் “நீ வேண்டிய இதனைப் பெறவேண்டுவையாயின் காஞ்சியின்கண் சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து இவ்வரம்பெற்று இக்குவந்து மத்தளம் முழக்குவாய் என்று அருள அவ்வண்ணமே வந்து பூஜித்தனர்.

கீழ்ப்பக்கத்தில்—

## நிலாத்திங்கட்டுண்ட பெருமாள்.

இவர் பாற்கடலில் தோன்றிய விஷஜ்வாலையினால் சரீரம் தபிக்கப் பெற்றகாலத்தில் சிவாக்ஞையால் “நீ என் முன் இங்கிருக்கப் பெறுவையாயின் எனது ஜடையிலுள்ள சந்திரனுடைய நிலவானது உன்மேற்படும். அதுபடுமானால் இந்த வெப்பம் நீங்கும்” என்றருள அவ்வண்ணமே நின்றனர். இவ்விடம் திருமாலுக்குரிய திருப்பதிகளில் ஒன்று. இந்த முதலாம் ஆவரணத்தில் வடக்கில் கீர்த்திமதி என்னும் தீர்த்தம். இது ஏகாம்பரநாதருடைய பூஜைக்குரியது. அக்னிதிக்கில் மடைப்பள்ளியில் உமாபத்திரை என்னும் தீர்த்தம். இது காமாக்ஷி தேவியார் ஸ்நானம் செய்தற்குரியது. இவ்விரண்டும் கிணறுகள்.

---

## மூன்றும் ஆவரணம்.

மேற்பக்கம்,—நிருதிமூலையில் 108 இலிங்கத்தோடு கூடியுள்ள ஒரு சிவலிங்கம், வாயுமூலையில் 1000 இலிங்கத்தோடு கூடியுள்ள ஒரு சிவலிங்கம் இதன் மத்தியில் மணக்கோலநாதராகிய ஏகாம்பரநாதரும், மாவிருக்ஷமும், மாவடிகந்தப்பரும், ஏலவார் குழலியாரும் உள்ளார்.

கந்தப்பர் மாவடியின்கண் வேதஸ்வரூபமாகிய மாமரத்தின்கண் சித்தாந்தச் சுவையோடுகூடிப் பழுத்திருக்கும் வேதாந்தக் கனியை உண்பதற்கு வீற்றிருக்கின்றார். ‡ ஏலவார் குழலியார் கன்னிகையே அத்திருவுருவமாக வந்தவர்.

வடக்குப் பக்கம்—

### பிரளயபந்தினி.

இந்தச் சக்தி கம்பாநதியானது சிவபெருமானுடைய ஆணையால் வெள்ளமாய்வர அதனை ஏகாம்பரநாதனைப்பூஜிக்கின்ற காமாக்ஷிதேவியார் கண்டு தனது சேடியருள் ஒரு சக்தியையழைத்து "இவ்வெள்ளத்தைத் தடுப்பாய்" என்று கட்டளையிட அந்தச் சக்தி தான் வைத்திருந்த விச்வபக்ஷணம் என்னும் கபாலத்தில் அவ்வெள்ளத்தை அடக்கினவள்.

நடராஜமூர்த்தி தில்லையின்கண் திருமாலுக்கு மந்தனம் முழுக்கக் காஞ்சிக்குப்போகும்படி அருள்செய்தபொழுது திருமாலைப் பார்த்து "நாம் இத்தில்லையில் சித்ஸபையை மாத்திரம் சிதாகாசமாகக்கொண்டு நடனம் செய்கின்றோம். காஞ்சியில் அவ்வெல்லை முற்றும் பரவெளியாகக்கொண்டு ஏகாதாண்டவம் செய்கின்றோம், அந்தக் காக்ஷியை நீ அங்கு காணலாம்" என்று கட்டளையிட்டவண்ணம் ஏகாதாண்டவதரிசனம் கொடுத்தருளினவர்.

### கருந்தடங்கண்ணி.

இவ்வம்மை காமாக்ஷிதேவி கௌரியானபோது அவளது திருமேனியினின்று நீங்கிய கரியகோசம்.

---

‡ இது காஞ்சிமஹிமையில் காண்க.

## நான்காம் ஆவரணம்.

---

துவஜஸ்தம்பஸ்தானத்தில்—

### கச்சிமயானர்.

பூர்வத்தில் பந்தகாசுரன் என்னும் ஓரசுரன் திருமால்முதலிய யாவருள்ளும் கலந்து அவர்களுடைய வீரியங்களையுண்டுவரும் பொழுது அதனையறிந்துகொள்ளாத திருமால் முதலியோர் கைலாஸத்தில் சென்று பெருமானைப் பணிந்து "நாங்கள் இறக்க வேண்டிய காலம் வருவதற்கு முன்னரே இறந்துபோகும்படியான கதி எங்கட்கு வந்திருக்கின்றது. காரணம் அறியோம் என்று இரந்துகூறப் பெருமான் காரணங்கூறி யாவரையும் காஞ்சியில் சைவயாகத்துக்குரிய திரவியங்களாக வரச்செய்து தாம் உமாதேவியாருடன் யாககர்த்தாவாக எழுந்தருளியிருந்து யாகாக்னியை உண்டாக்கி அதில் யாகத்திரவியரூபமாயிருக்கின்ற தேவர்களையெல்லாம் இட்டுச்சுட்டெரித்தனர். எரிக்கவே அவருள்ளிருந்த பந்தகாசுரன் நாசமடைந்தனன். உலகமும் நாசமுற்றது அதனால் அவ்விடம் மயானமாயிற்று. அக்கச்சிமயானத்தில் யாகாக்னியாய் ஜ்வலித்துக்கொண்டிருந்த சிவபெருமான் லிங்க ரூபமாயினர். அக்காரணத்தால் கச்சிமயானேச்வரர் எனப்பெயர் பெற்றனர்.

வாலீச்வரர். (கச்சிமயானத்துக்குக் கீழ்பால்) தேவேந்திரன் மகனாகிய வாலி தன்னைப்போரில் யாவரெதிர்ப்பினும் அவரது பலத்தில் தனக்குப் பாதியும், தோல்வியில்லாத வெற்றியும் வர வேண்டும் என்று பூஜித்தனன். அச்சயம்புமூர்த்தி வாலியின் வால் தழும்பும் பெற்றுள்ளார்.

பைரவராலயம். (வாலீச்வரத்துக்குக் கீழ்பால்)

சிவகங்கை. சிவபெருமானுன் சைவயாகம் செய்யத்தொடங்கியபொழுது தமது வலக்கை விரல் நகங்களால் பறித்து ஓர் குண்டமாக்கி அதில் கங்கைபோல் வாமதேவமூர்த்தியை நெய்யாகப்பூரிக்கப்பெற்றதனால் சிவகங்கை எனப்பெயர்பெற்றது.

தென்பக்கத்தில்—

### விஷ்ணுவேச்வரர் ஸரஸ்வதீ மண்டபம்.

திருப்பாற்கடலிலிருந்து திருமால் தன் மனையாட்டி முதலாயினருடன் இல்லேயில் வந்து திருநடனங்காணத் தவம்புரியுங்கால்

தில்லைநாதன் திருக்காஞ்சியில் எம்மை வழிபட்டு வருவையாயின் இங்கு எமது நடனங்காணப் பெறுவாயென்று கட்டளையிட அவ் வண்ணமே வந்து பூஜித்தனர்.

இடபேஸ்வரர் (சிவகங்கைக்கு கீழ்பக்கத்தில்)

வைகுண்டத்தில் திருமால் தன்னிடத்தில் செருக்குற்ற கருடனையடக்குதற்பொருட்டு கைலைக்குச் சென்று கருடனை இடபதேவரிடத்தில் விட்டுவிட்டுத் தான் இறைவன் தரிசனார்த்தமாய் உள்ளே செல்லும்பொழுது இடபதேவருக்குக் குறிப்பால் தமதெண்ணத்தைத் தெரிவித்துச் செல்ல அவர் குறிப்பை இடபதேவர் அங்கீகரித்துத் தாம் உறங்குபவர் போலுறங்கி பெருமூச்செறிந்து அந்த மூச்சில் கருடனையலைத்தலைத்து வருத்தியிருப்ப அதனைச் சிவபெருமானறிந்து "ஏதுகாரணமின்றி இச்செயலைச் செய்தபடியினால் இது பெருங்குற்றம். இதனைக் காஞ்சியில் எம்மை வழிபட்டொழித்துக்கொண்டு இங்குவாக்கடவாய்" என்று கட்டளையிட அக்கட்டளைப்படியே இங்கு வந்து பூஜித்தனர்.

## ஐந்தாம் ஆவரணம்.

---

விகடசக்ரவிநாயகர் (ஆயிரக்கால் மண்டபத்தில்)

இவர் விஷ்வக்சேனனது விகடக் கூத்தைக்கண்டு திருமாலுக்குச் சக்ரதானம் செய்தவர்.

ஏகாம்பரநாதர் சன்னிதிவீதி. (கிழண்டைவாடை)

மாதலீச்வரர் ஸ்ரீராமருக்கு இந்திரன் தேர்ப்பாகனாக அனுப்பிய மாதலி என்பவன் பூஜித்தது.

மங்களேச்வரர் மங்கள தீர்த்தத்துக்கு மேற்பக்கம்.

காமாக்ஷிதேவியின் தோழியாகிய மங்களா என்பவள் பூஜித்தது.

கம்பாநதி.

இராமேச்வரர் (ஆதிசைவர்கள் அக்கிரகாரக்கோடி)

ஸ்ரீ ராமர் ராவணஸம்ஹாரம் செய்து சேதுவில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூஜித்தும் எஞ்சி நின்ற தோஷத்தைப்போக்

கடித்துக் கொள்ள அந்த ராமநாதராணையால் காஞ்சிக்கு மீண்டும் வந்து பூஜித்தனர்.

### மேலண்டைவாடை.

அநந்தபத்மநாபேச்வரர் லிங்கப்பன் தெருவில்.

வைகுண்ட நாதராகிய திருமால் ஓர் காலத்தில் கைலாசநாதரிடத்தில் போனபோது சிவனும் சிவையும் விளையாடுதமாய்ச் சூதாடும் கருவிகளைக்கொண்டு சூதாடிக்கொண்டிருப்ப அவ்வாட்டத்துக்குத் தான் நடுவாய் நின்று வெற்றிகொண்ட உமாதேவியாரது வெற்றியைக் கூறாமல் தோல்வியடைந்துபோன சிவனாதுபக்கமாய் அவருக்கு வெற்றிகூற "அண்ணனே நீபொய் கூறியுடன் உனுடைய வாயானது இரண்டாய்விட்டது. ஆகையால் பிளவுடைய நாவைப் படைத்துள்ள பாம்பாகப்போகக் கடவாய்" என்று சபிக்க அக்கணமே பாம்பாகி அனந்தனென்று பெயர் பெற்றுக் காஞ்சிக்கு வந்து அவ்வுருவம் நீங்கப் பூசித்தனர்.

பாண்டவதூதேச்வரர் (சன்னம்புக்காரத்தெருவில்)

கிருஷ்ணமூர்த்தி பிருகு முனிவர் சாபத்தால் தனக்கு வந்த பிறவித்துன்பத்தை எண்ணி இனிப்பிறவித்துன்பம் வாராவண்ணம் பிறவி எப்பொழுதும் இல்லாதவனாகிய சிவபெருமானைப் பூஜித்தல் வேண்டுமென்று பூஜித்தனர்.

ஜ்வரஹரேச்வரர் தேவர்கள் சிவபெருமானுடைய நிவேதியத்தை வேண்டி உண்டபின்னர் அதன் வெப்பத்தைத் தாங்க முடியாது ஜ்வரநோய் உண்டாய்விட அந்நோய் நீங்கித் தங்கட்குத் தணிவு உண்டாகுமாறு வந்து பூஜித்தனர்.

தான்தோன்றீச்வரர் உபமன்யு முனிவர் தமது பிதாவாகிய வியாக்கிரபாதருடைய உத்திரவின்படி தில்லையை விட்டுக் காஞ்சிக்குவந்து காமதேனுவின் பால்போல் இனியபாலுண்ண வேண்டிப் பூஜித்தனர்.

### சர்வதீர்த்தம்.

இலக்ஷ்மணேச்வரர், சீதேச்வரர், சுக்கிரீவேச்வரர், ஹநுமந்தேச்வரர் விபீஷணேச்வரர் இலக்ஷ்மணர் முதலியோர் ஸ்ரீ ராம

ருடன்வந்தபோது ராவணயுத்தத்தில் வந்ததோஷத்தை ராமர் சிவார்ச்சனைசெய்து பரிகரித்துக் கொண்டதுபோல் தங்களுக் குண்டாகிய தோஷங்களையும் போக்கிக் கொள்ளத்தனித்தனியே தங்கள் தங்கள் பெயரால் பூஜித்தனர்.

கங்காவரேச்வரர் கங்கைமுதலிய புண்ணியநதிகள் ஓர்காலத் தில் வந்து தங்களிடத்தில் படிந்துள்ள பாவங்களைப்போக்கிக்கொ ள்ளப்பூஜித்து இனிப்பாவங்கள் வந்து அணுகாதிருக்கவும் வந்து பூஜித்தன.

விச்வேச்வரர் காசியின்கண் வாழும் விச்வநாதர் காஞ்சியே இக்காசியினும் சிறந்த இனிமையானதென்று வந்து வாழ்ந்தனர். காமேச்வரர் சிவபெருமான் நெற்றித்தீப்பொறியால் அநங்கனாய்ப் போன மன்மதன் திருக்கல்யாணகாலத்தில் நினைக்கவந்தபோது அவன் இறைவனை வணங்கி "யான்யாவருக்கும் சந்தான விருத்தி யுண்டாதற்கேதுவாகிய காமத்தை விளைவிக்கவும், காமியார்த்த மால் பிறருக்கீவோரும் ஏற்போருமாகிய இருவருள்ளத்துமிரு ந்து கொடுப்பதற்கும் ஏற்பதற்குமான ஆசையை விளைவிக்கவும் என்னாணையை மூன்றுலகத்தாரும் கடவாதிருக்கவும் வேண்டும்' என்று வேண்டச் சிவபெருமான் "காஞ்சியிலளிப்போம்" என்று சொல்ல அவ்வண்ணமேவந்து பூஜித்தனன்.

தீர்த்தராஜேச்வரர் காமாக்ஷிதேவியார் பூஜைசெய்யுங்காலத் தில் சிவபெருமான் ஏவியதீர்த்தங்களெல்லாம் திரண்டு வேகமாய் வந்து பெருமானைக் காமாக்ஷிதேவியார் தழுவியிருத்தலைக்கண்டு வேகமடங்கித்தாமும் சிவார்ச்சனைசெய்ய ஆசைகொண்டு தீர்த்த ராஜனென்று பிரதிஷ்டைசெய்து பூஜித்தனர்.

வருணேச்வரர் தீர்த்தங்களெல்லாம் தீர்த்தராஜனென்று சிவ பெருமானைப் பூஜித்துப் பேறுபெற்றதை வருணன் கண்டு தான் தண்ணீருக்குத்தலைவனாக வேண்டுமென்று பூஜித்தனன்.

ஹிரண்யகசிபேச்வரர் ஹிரண்யாக்ஷேச்வரர், பிரக்லாதேச் வரர், மாவலீச்வரர், விரோசனேச்வரர், இவ்வைவரும் மனிதர்க ளாலும், மிருகங்களாலும், பறவைகளாலும், ஏனைய பிறவியுடைய வர்களாலும், ஆயுதவகைகளாலும் எந்தப் பொழுதிலும் இறவா திருக்க ஹிரண்யன் முதலிய ஐவராலும், பூஜிக்கப்பட்டவர்.

சந்திரேச்வரர் சந்திர புஷ்கரணியின் மேற்பால் சந்திரன், சூரியன் முதலிய எண்மர்களோடு தானும் ஓர் உருவமாயிருக்கப் பூஜித்தனன். சந்திர புஷ்கரணி என்கிற தீர்த்தமும் இவனால் உண்டாக்கப்பட்டது.

சர்வ தீர்த்தத்துக்கு மேற்கில் § சக்ர கோட்டத்தில் முப்புராரிக்கோட்டம், சுதர்மேச்வரர், சுசீலேச்வரர், சுபுத்தேச்வரர், திரிபுராதி தங்களுடைய முப்புரங்களைச் சிவபெருமான் எரித்த அப்பெருமானை "எங்கள் மூவருள் இருவர் உனது காவலாளிகளாகவும், ஒருவன் மத்தளம் முழக்கவுமாக அருள் செய்யவேண்டும்" என்று பிரார்த்திக்கத் திரிபுராரி காஞ்சியில் எம்மை அருச்சிப்பீராயின் அப்பணி கிடைக்கும்" என்ன அவ்வண்ணமே வந்து பூஜிக்கப்பெற்ற மும்மூர்த்திகள்,

பஞ்சிப்பேட்டை,

ஜலந்தரேச்வரர் (சர்வதீர்த்தத்துக்கு வாயு மூலையில்)

ஜலந்தரேச்வரன் ஆண்மையையும் வன்மையையும் எவ்வுலகும் ஆளவல்ல இறைமைத் தன்மையையும் வெல்லும் திறமையையும் சிவபெருமானால் பாணத்தையும் வேண்டிப் பூஜித்தனன்.

ஓணேச்வரர், காந்தேச்வரர்.

சர்வதீர்த்தத்துக்குத் தென்பாலுள்ளது

ஓணன் காந்தன் என்பவர் இரண்டசுரர்கள். இவ்விருவரும் வாணாசுரனுடைய சேனைத்தலைவராயிருந்து இவ்வுலகவாழ்வை வெறுத்துச் சிவபெருமானுடைய அன்பு வேண்டிப் பிறவித் துன்பத்தை யொழிக்கப் பூஜித்தனர். அவ்வாலயத்தருகிலுள்ள தீர்த்தம் அவர்களாலுண்டாக்கப்பட்டது.

செவந்தீச்வரர் வாயுதேவன் கந்தவாகனன் என்னும் பெயர் பெற செவ்வந்தி (சாமந்தி) மலர்களைக் கொண்டு பூஜித்தனன். அதனால் செவந்தீச்வரன் எனப் பெயர் பெற்றனர். இவ்விடத்தில் வைரவ மூர்த்தியினுடைய சூலாயுதத்தினால் உண்டாக்கப்பட்ட சூலதீர்த்தமென்று ஒரு தீர்த்தமுளது.

---

§ இது வெள்ளைக் குளமென வழங்குகின்றது.

நவக்கிரகேச்வரர் (பருத்திக்குளத்துக்குக் கீழ்பால்.)

சந்திரன் நீங்கலாக ஏனைய எண்மர்களும் ஏகத்திலே பெறுவதற்குத் தனித்தனி தங்கள் தங்கள்பெயரால் பூஜித்தனர். இவருள் சூரியமூர்த்தி தலைவராதலால் பருதி என்கிற தன் பெயரால் ஒரு தீர்த்தமுண்டாக்கினர். அது பருத்திக்குளமென வழங்கும்.

சுவர்ணலிங்கேச்வரர் (பொன்னேரியில்)

பிரமவிஷ்ணுக்களால் பூஜிக்கப்பட்டவர். சுயம்புமூர்த்தி. இந்த மூர்த்தியைத் தொடப்பெற்றவர் பொன்னிறத்தைப் பெறுவர். சிலாரூபமாக ஸ்பரிசவேதிகை என ஒன்றுளது. அதுவும் தொட்டவைப் பொன்னாக்கல் முதலிய மகிமைகளையுடையது.

¶ சக்கரதீர்த்தம் (வெள்ளைக்குளம் தென்பக்கம்.)

அபுனர்ப்பவேச்வரர் (பிறவாத்தானேச்வரர்.)

வாமதேவ முனிவரென்பவர் தாய்வயிற்றிருக்கும் பொழுதே பிறத்தற்கஞ்சி சிவபெருமானைத் தியானித்து "என்னையனே, எனக்கு இவ்வண்ணம் கருவிற் பட்டுழலும் பிறவித்துன்பத்தை ஒழித்தருளல் வேண்டும்" என்று பிரார்த்திக்கச் சிவபெருமான் இரக்கமுற்று அவ்விடத்திற்றானே தன்னைக்காணும் வண்ணம் செய்து "அப்பனே, நீ இப்போது யாதொரு துன்பமுமுறாது வெளிப்படுவாய். நீ பிறந்தவுடன் காஞ்சி க்ஷேத்திரத்தையடைந்து இனிப் பிறவா வண்ணம் என்னைப் பூஜை செய்வையாயின் நான் உன்னை இனிப்பிறவாவண்ணம் செய்கிறேன்" என்றருள அவ்வண்ணமே பூஜித்துப்பிறவாநெறியளித்த பெருமானென வாழ்த்தினர்.

முக்தீச்வரர் (பிறவாத்தானேச்வரருக்கு மேற்கு)

முன்சொன்ன வாமதேவமுனிவர் காஞ்சியைவிடாது வாசஞ்செய்து மரணமடையாது கைலைக்குச் சென்று அந்த கைலாஸநாதரிடத்தில் சிவலிங்கமொன்று கொடுத்தருளப் பெற்று மீண்டும் காஞ்சிக்கு வந்து அவ்விலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து முக்தீசனென்னும் திருநாமமிட்டுப் பூஜித்தனர். (இவ்விடத்தில்) ஞானதீர்த்தம்.

---

¶ இவ்விடம் கோனேரிக்குப்பம் கிராமம் என வழங்கும்.

இறவாத்தானேச்வரர் (சகாம்பரசைதாலயத்துக்குக் கிழக்கு)

மார்க்கண்டேய முனிவர் மரணபயம் தனக்குண்டாகாதிருக்தற்கும் என்றும் நித்தராய் வாழ்தற்கும் பூஜித்தனர்.

மஹாலிங்கம் (இறவாத்தானேச்வரருக்குக் கிழக்கு)

ஹரி பிரமர்கள் ஓர் பிரளயத்தில் தாம் பரமென்று மன்றாடி நிற்ப இருவர்க்கும் பரமாகிய பரமன் மகாலிங்கமாய்த் தோன்றி இருவரையும் அபரர்களாக்கப் பின்னர், இருவரும் முன்போல் உலகினர்க்குப் பரமாயிருப்பப் பூஜித்தனர்.

வீரட்டஹாஸேச்வரர். ஓர் சம்ஹாரகாலமாகிய இலிங்கவ பாஞ்சடர் உமாதேவியார்களான பிரமாதிய அட்டகாசத்துடன் ஆனந்த நடனம் செய்து புனருத்பவமாகிய உதயகாலத்தில் இலிங்க உருவமாயினர். அக்காரணத்தால் வீரட்டஹாஸேச்வரர் எனப்பெயர் பெற்றனர். அந்த இலிங்க மூர்த்தியை அநேக சித்தர்கள் பூஜித்து அற்புதமான சித்திகளைப்பெற்றனர். கொங்கண முனிவரென்பவர் இச்சிவலிங்கமூர்த்தியே இக்காஞ்சியில் ஸம்ஹார காலத்தில் எல்லாவுலகங்களையும் நீருகத்தன்னிடத்தில் ஒடுக்கிக்கொள்வது உண்மையாயின் யான் வைத்திருக்கும் இக்குளிகையினை நீருக்கி உட்கொள்ளல் வேண்டும் என்று சொல்லி அக்குளிகையினை அம்மூர்த்தியின் மேல் வைத்தனர். உடனே அது சாம்பராய் உள்ளே சென்றுவிட்டது. அது கண்ட முனிவர் அக்ஷோ வென்றதிசயித்து அவ்விடத்திற்றானேயிருந்து சர்வசித்தியும் தனக்குண்டாகப் பூஜித்தனர். இவ்விலிங்கமூர்த்தியை ஓர் காலத்தில் இலக்ஷ்மிதேவியானவள் நாராயணரைப் பார்த்து நீர் சிவபெருமானைப் போலும் பவளமேனியாயிருப்பீராயின் பொன்னிறமுடைய எனக்குக் களிப்பாகிருக்குமென்ன அவர் பச்சவண்ணப் பெருமான் என இங்கு வந்திருந்து பவளநிறம் பெறுவதற்குத் தன்னுடைய சக்கரத்தால் ஒருதீர்த்தமுண்டாக்கி நாடோறும் பதினாயிரம் தாமரை மலர்களால் பூஜித்துப் பவளநிறம் பெற்றனர்.

சக்கரதீர்த்தத்துக்குக் கிழக்கத்தில்

பஞ்சபாண்டவேச்வரர், தருமர் முதலியஐவரும் துரோபதை சகிதமாய் உரோமசர், முற்கலர், வியாஸர் முதலிய பல முனிவ

ருடன் தீர்த்தயாத்திரையாய்க் காஞ்சிக்கு வந்தபோது வீரட்டகாசலிங்கமூர்த்தியினுடைய பெருமைகளைக் கேட்டு அந்த மூர்த்தியை வழிபட்டு இவ்வெல்லை மிக்க மகிமையுடைத்தானதென்றெண்ணித் தனித்தனியே தங்கள் தங்கள் பெயரால் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூஜித்து அவரவர் வேண்டிய சித்திகளைப் பெற்றனர்.

அதனால் பஞ்சபாண்டவர் பூஜித்த ஐந்து லிங்கங்களேயல்லாமல் ஏனைய துரோபதை முதலியோரால் பூஜிக்கப்பட்ட லிங்கங்கள் பல அவ்விடத்திலிருக்கின்றன.

ஈசானேச்வரர் (பாண்டவேசத்துக்குக் கிழக்கு)

திக்பாலகரில் ஒருவராகிய ஈசானதேவர் ஈசானத்திக்குத் தலைவராயும் இந்திராதி எழுவருக்கும் தலைவராயும் இருத்தற்குப் பூஜித்தனர்.

சிப்பீசர். (கீழண்டைராஜவீதி)

வித்தியாதரரென்னும் வேதியரொருவர் சைவானுஷ்டானத்திற் சிறந்தவராய் குபேரன் மகளாகிய ரேகாவதி என்பவளைக் கலியாணம் செய்துகொண்டு காஞ்சியில் வாழுநாளில் ரேகாவதி என்பவள் சிவபக்தியில் சிறந்தவளாய் ஆயிரம் முத்தாரங்களைக் கொண்டு நாடோறும் அர்ச்சித்துவர சிவபெருமான் கருணைகூர்ந்து அங்குள்ள தீர்த்தத்தில் முத்துச் சிப்பிகள் தோன்றுமாறு அநுக்கிரகம் செய்ய அம்முத்தங்களைக்கொண்டு என்றும் அர்ச்சித்து வந்தனன்.

முத்துச்சிப்பிகள் தோன்றியபடியால் அத்தீர்த்தம் சிப்பி தீர்த்தமெனப் பெயர்பெற்றது.

கோனேரிக்குப்பம் (கம்மாளத் தெருவில்)

கங்கணேச்வரர், கடகேச்வரர் இவ்விரண்டு மூர்த்திகளும் உமாதேவியார் ஏகாம்பரநாதரைப் பூஜிப்பதற்காகக் கங்கணமும், நகைகளும் அணிந்துகொள்வதற்குத் தனித்தனியே பூஜித்தனர்.

¶ துவக்கௌசிகேச்வரர் (காமாக்ஷியம்மாள்கோயிலுக்கு ஈசானம்)

உமாதேவியார் திருக்கண் புதைத்த காலத்தில் தமக்குண்டாயிருந்த கருமேனியைக் காஞ்சியில் வந்து கழிக்க அது கௌசிகி என்னும் சக்தியாய்ப் பூஜித்த மூர்த்தியார்.

கண்ணேச்வரர் (ஷை.)

விஷஜ்வாலை வெம்பிப்போன மேனியைப்படைத்த திருமால் அவ்வெப்பு நீங்கப் பூஜித்தனர்.

மஹாகாளேச்வரர் (மஹாகாளர்கோயிலில்)

மஹாகாளனென்னும் ஓர் பாம்பு முக்தியடைய விருப்பம் கொண்டு சீகாளத்தியில் பூஜித்து வர அக்காளத்திநாதர் "காஞ்சியில் எம்மைப் பூஜித்தால் முக்திகொடுப்போம்" என்று சொல்ல வந்து பூஜித்தது.

மோகினீச்வரர் (கண்ணீசர்பக்கலில்)

திருமால் மோகினியுருவங்கொண்டு அசுரரை மயக்கியபாவம் நீங்கப் பூஜித்தனர்.

உருத்திரகோடீச்வரர் (மொட்டைக் கோபுரம்)

ஓர் கற்பத்தில் உருத்திராதிகாரத்திலிருந்த கோடி ருத்திரர்கள் முக்திபதம் விரும்பிப் பூஜித்தனர்.

அபிராமீச்வரர் (சங்குபாணி விநாயகருக்கு மேற்கு)

திருமால் மாவலியையடக்க வாமனவுருவம் கொள்ளவும், பின்னருலகையளக்கத் திரிவிக்கிரம வடிவம் கொள்ளவும் பூஜித்தனர், மாவலியை வெற்றிகொண்ட பின்னரும் வந்துவாமன தீர்த்தமென்று ஓர் தீர்த்தமுண்டாக்கிப் பூஜித்து ஆனந்தங் கொண்டு சிவபெருமானுக்குத் தாமெடுத்த உலகளந்த வுருவைக் காட்டி அவ்வுருவமாகவே நின்றனர்.

இராஜவீதி.

சேனாபதீச்வரர் (குமரகோட்டம்)

வள்ளிநாதர் ஸேனாநாதராய் எவர்க்கும் நாதராகிய சிவபெருமானது மொழியைக் கடந்ததற்குப் பரிகாரமாகப் பூஜித்தனர்.

---

¶ உடம்பாகிய சட்டை.

மகாசாலேச்வரர் (வாணியர் மண்டபத்தில்)

ஹரிஹர புத்திரராகிய சாஸ்தா பிறந்தவுடன் சிவபெருமானை நோக்கி "உனது திருவருள் பெறுவதற்குரிய தலைமைத் தன்மை எனக்கு வேண்டும்" என்று பிரார்த்திக்க "அது காஞ்சியில் பூஜித்துப் பெறுவாய்" என்று கட்டளையிட அதுபோல் வந்து பூஜிக்கப் பெற்ற பெருமானார்.

அபிராமீச்வரர் (வாணியர் மண்டபத்துக்கு அடுத்த சந்து)

தேவர்கள் வரத்திலும் வன்மையிலும் சிறந்த அசுரர்களிடத்தில் தங்களுக்கு வெற்றியுண்டானமை சிவபெருமானால் என்று உணராது தங்களால் என்றுணர்ந்து பெரும் போரில் தலைப்பட்டு நிற்க. இவர்களது வெற்றித்திறத்தை ஈசானராகியசிவபெருமான் துரும்பொன்று நாட்டி அவர்களது அகங்காரத்தை யொழித்தனர். அஃதொழிந்த பின்னர் உம்மையன்றி எங்களால் ஓரணுவும் அசைக்கமுடியாதென்று யாவரும் கூடிப்பூஜித்தனர்.

ஐராவதேச்வரர் (சச்சபேச்வரர் கோயிலுக்கு ஈசானம்.)

ஐராவதம் என்கிற யானை தேவேந்திரனைத்தாங்கிப்பெருமை பெறப் பூஜித்தது.

கச்சபேச்வரர் திருமால் பாற்கடலில் மந்தரமலையைத் தாங்கக் கச்சப (ஆமை) உருக்கொண்டு காத்த பின்னர் செருக்குற்று கடலைக் கலக்கியகாலத்தில் சிவபெருமான் அவ்வாமையின் செருக்கடக்கி ஓட்டை எடுத்து மதாணிப் பதக்கமாக மார்பிலணிந்து கொள்ளவே, பூர்வஞானம் பிறந்து சிவாபராதம் செய்துவிட்டோமென்றஞ்சி அவ்வபராதம் நீங்கப் பூஜித்தனராதலால் கச்சபேசரெனப் பெயர் பெற்றனர்.

இவரையே பிரமன் கலைமகளோடு வந்து சிருஷ்டித் தொழில் செய்யும் அநுக்கிரகம் பெறப் பூஜித்தனன்.

இஷ்டசித்தீச்வரர் (கச்சபேசருக்கு வடக்கில்)

அசுரகுருவாகிய சுக்கிராசாரி வச்சிரயாக்கையும் மிருதசஞ்சீவினியும் பெறப்பூஜித்தனன். இந்த சுக்கிராசாரியினுடைய ஆக்

லருபிறுல் ததீசமுனிவரும் வந்து பூஜித்து வஜ்ர சரீரத்தைப் பெற்றனர். தீர்த்தம் இஷ்டஸித்தி தீர்த்தம். இதனுடைய மகிமை இன்று எழுதமுடியாது. புராணத்திற்காணலாம். இத்தீர்த்தத்தின் வடக்கில் தருமசித்தீச்வரர். கிழக்கில் அர்த்தசித்தீச்வரர். தெற்கில் காமசித்தீச்வரர். மேற்கில் மோக்ஷசித்தீச்வரர்.

தீர்த்தத்துக்கு கீழ்ப்பக்கத்தில் துர்க்கை சாஸ்தா சூரியன் வைரவர் ஆகிய இந்நால்வர் நடுவில் விநாயகரிருக்கின்றனர். இவர் பஞ்சசந்தி விநாயகர் என்னும் பெயருடையார்.

ஹரிசாப பயஹேசர்வரர் (செல்லிக்காத் தெரு)

திருமால் தனக்குப் பிருகு முனிவரால் நேர்ந்த சாபத்துக்கு அஞ்சிச் சிவபெருமானது நிக்கிரகத்தாலும் அநுக்கிரகத்தாலும் போக்கிக்கொள்ள வந்து பூஜித்தனர்.

மதங்கேச்வரர் (செல்லிக்காத் தெருக்கோடி)

மதங்கமுனி என்பவரால் ஐம்புலன்களின் மதமடங்கப் பூஜிக்கப்பட்டவர்.

திரிகாலஞ்ஞானேச்வரர் முக்காலமும் அறிந்துகொள்ளவெண்ணிய பலஞானிகளால் பூஜிக்கப்பட்டவர்.

† சத்தியவிரதேச்வரர் (மதங்கேச்வரருக்குக் கிழக்கு)

சசி என்கிற இந்திரன் இந்திரபோகத்தை வெறுத்துச் சிவபோகத்தை விரும்பி முத்திபதம் வேண்டிப் பூஜித்தனன். இருக்கில் பெறுவதற்குப் புதனாலும் பூஜிக்கப்பட்டவர். தீர்த்தம்— இந்திர தீர்த்தம், இஃனாரதீர்த்தங்களில் புதவார தீர்த்தம். இந்த க்ஷேத்திரம் சத்திய விரதக்ஷேத்திரமெனவும் திருநெறிக்காரைக் காடு எனவும் பெயர் பெறும்.

சித்தீச்வரர் (குசத்தெரு)

சிவபராஞ்சுடர் காமாக்ஷி தேவியாரது ஸ்நான தீர்த்தமாகிய மஞ்சள் நீர் நதியில் ஆனந்தக் கூத்தாடிப் பின் சிவலிங்கமூர்த்தியாயினர். இவர் பல சித்திகள் வேண்டிய பலசித்தர்களால் பூஜிக்கப்பட்டனர்.

## ஆதிபதீச்வரர் (இராஜாங் பேட்டை)

சொன்ன வண்ணஞ் செய்த பெருமான் பிரமனுடைய யாகத்தை அழித்தற்கு க்ரோதத்தினில் வந்த வேகவதி நதியைக் காண்பதற்கு முடியாமல் தான் தீபம் போல் பிரகாசிப்பதற்காகப் பூஜித்த பெருமானார் அக்காரணத்தால் அப்பெருமான் விளக்கொளிப் பெருமானெனப் பெயர் பெற்றனர்.

## பணாதரேச்வரர் (ஆலடிப் பிள்ளையார் கோவில்)

கருடனுக்கஞ்சிய சர்ப்பசிரேஷ்டர்கள் சந்திரசேகரருக்கு நாம் ஆபரணங்களாக ஆவோமாயின் நம் கருடனைக்கண்டு 'என் கருடா சுகமா' என்று கேட்கலாமன்றோவென எண்ணிப் பூஜித்தனை.

காயாரோகணேச்வரர் பிரம்ம விஷ்ணுக்கள் ஒடுங்க வரும் காலங்களில் அவர்களைச் சிவபெருமான் தனது திருமேனியில் ஒடுக்கிக்கொண்டு இவ்விடத்தில் நடனம் செய்து வருகின்றவராதலால் காயாரோகரெனப் பெயர் பெற்றனர். இலக்ஷ்மியினாலும் தேவகுருவினாலும் பூஜிக்கப்பட்டவர்.

தீர்த்தம்—லக்ஷ்மி குண்டம் குருவாதீர்த்தம்.

## பிள்ளைபாளையம்.

## பச்சமேச்வரர் § (திருமேற்றளி)

திருமால் சிவசாரூபம் பெற்ற க்ஷேத்திரம்.

ஓதபுரீச்வரர் விஷ்ணுமூர்த்தி தானும் பாலவரைப் போலும் பிறந்திருத்தலுக்கு நாணமுற்றுத் தனது விஷ்ணுஸ்வரூபத்தை வெறுத்துப் பிறவாநெறியையளிக்கவல்ல சிவசாரூபத்தையுடைய வெண்ணனித் திருமேற்றளி என்னும் இவ்விடத்துக்குவந்து வைவஸ்வதமன்வந்தரத்தில் இருபத்தெட்டாவது கலியுகம் வரையில் தவம் செய்திருந்து ஸ்ரீஞானசம்பந்தப் பெருமானாரால் அச்சிவசாரூபத்தைப்பெற்று இலிங்கமூர்த்தியாயினர்.

ஓத்தீச்வரர் ஓதபுரீச்வரரை ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமானார் திருப்பதிகத்தாற்பாடும் பொழுது அப்பதிகத்தைத் தாமுங்கேட்க வேண்டுமென்னும் ஆசையினால் வந்த சிவபெருமான்.

நூற்றுப்பதினெட்டு இலிங்க மூர்த்தங்கள் சிவகணத்தலைவர்களாகிய ஆனந்த ருத்திரர் முதலாகச் சொல்லப்பட்ட 118 ருத்திரர்களால் பூஜிக்கப்பட்டவை.

நூறு இலிங்க மூர்த்தங்கள் அண்டங்களைக் காப்பவர்களாகிய கபாலீசன் முதலிய நூறுருத்திரர்களால் பூஜிக்கப்பட்டவை. அஷ்டவித்தியேச்வர லிங்க மூர்த்தங்கள் அனந்தர் முதலிய அஷ்ட வித்யேச்வரர்களால் பூஜிக்கப்பட்டவை.

மண்டலேச்வரலிங்க மூர்த்தங்கள் குரோதனர் முதலான மண்டலாதிபதிகளால் பூஜிக்கப்பட்டவை.

**2000** தக்ஷபுத்ர லிங்கமூர்த்தங்கள் (கைலாசநாதர் சந்நிதியும்) மோக்ஷம் விரும்பிய தக்ஷனுடைய பிள்ளைகளால் பூஜிக்கப்பட்டவை.

## மேலைப்பிள்ளைபாளையம்.

### வைரவீச்வரர் (சோணீச்வரர் கோவில்)

வைரவர் சிவநிந்தையையே செய்துகொண்டிருந்த பிரமனது ஐந்தாம் தலையை நகத்தினுற்கிள்ளி அதனைக் கபாலமாகவேந்தி அதில் திருமால் முதலியோருடைய ரக்தபிக்ஷையேற்றுக் காஞ்சிக்கு வந்து பூஜித்தனர். இவருடன் எண்ணப்பட்ட எண்மரும் பூஜித்த லிங்கங்கள் தனித்தனியே உள்ளன.

### விஷ்வக்ஸேனேச்வரர் (ஷை கோயிலுக்குத் தென்பால்)

விஷ்வக்ஸேனன் ஸர்வரூப மூர்த்தியின் சூலத்திலிருந்து தன்னைத் திருமால் மீட்பித்தனராதலால் அதற்குக் கைம்மாறாகத் தக்ஷயாகத்தில் திருமாலிழந்த சக்கரத்தைத்தான் வீரபத்திர மூர்த்தியிடம் பெற்றுக் கொடுக்கப் பூஜித்தனர்.

### தக்ஷேச்வரர் (கச்சியப்பன் தெருவு)

தக்ஷன் வீரபத்திர மூர்த்தியால் தலையற்றுப் பின்னர் மேஷத்தின் தலையைப்பெற்று அவ்வாட்டுக்குரிய ஒலிக்குறிப்போடு ஸ்ரீருத்திரத்தை உச்சரித்துப் போற்றிக் காஞ்சியில் வந்து பூஜித்துக் கணத்தலைமை எய்தினன்.

வன்மீகநாதேச்வரர் (பலபத்திரராமேசவரருக்கு மேற்கு)

இந்திரன் ஓர் காலத்தில் தேவர்களுக்கெல்லாம் புகழுண்டாக வேண்டுமென்று எண்ணிச்செய்த ஓர் யாகத்தில் புகழுண்டாக, அந்தப்புகழைத் திருமால் அடித்துக்கொண்டுபோய்த் தேவர்களை வஞ்சித்துத் தன்னுடையகோதண்டத்தை யூன்றி அதன் நுனியில் மோவாய்க்கட்டையை வைத்துக்கொண்டு ஊன்றி நிற்க இந்திரன் கண்டு இவரது தலை அற்றுப்போகும் வகையைத் தேடவேண்டுமென்றெண்ணி இவ்வன்மீகநாதரைப்பூஜித்தனன். இந்த க்ஷேத்திரம் சாலப்பாக்கம் கால்வாய்க்கு வடக்குக் கழனியிலுள்ளது.

கைலாசநாதேச்வரர் நாரதேச்வரர் (புக்தேரித் தெருக்கோடி.)

திருமால் பௌத்தாவதாரம் கொண்டு நாரதரோடு திரிபுரத்துக்குச் சென்று அங்குள்ளவர்களுக்குச் சிவபக்தியினம் உண்டாகும்வண்ணம்செய்து பின்னர் அம்மஹாபாபம்நீங்க நாரதரோடும் வந்து பூஜித்தனர்.

† அநேகபதேச்வரர் (கைலாசநாதருக்குஆக்கினேயம்)

விநாயகரால் பூஜிக்கப்பட்டவர்.

அகஸ்தீச்வரர் (உபநிஷத் பிரும்மசுவாமிகள் மடத்தில்)

அகஸ்திகர் ஏகாம்பரநாதர் ஆலயத்தில்தமதிஷ்டசித்தி பூர்த்தியாகும் வண்ணம் பூஜித்து வரும்பொழுது இவ்விடத்தைத் தம திருக்கையாகக் கொண்டிருந்தவராதலால் இவ்விடத்திலும் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூஜித்து வந்தனர். அக்காலத்தும் அவ்விடம் ஆச்சிரமமாயிருந்தபடியினால் இக்காலத்தும் துறவிகளுடைய ஆச்சிரமமாகவேயிருக்கின்றது.

வீராகவேசுவரர்(செங்கமடத்துக்கு அக்கினிதிக்கில் வில்நிலத்தில்)

ஸ்ரீராமர் இராவணனை வெற்றிகொள்ள அகஸ்திமுனிவரிடத்தில் சிவமந்திரோபதேசம் பெற்றுப் பாசுபத விரதம் பூண்டு பூஜித்தனர்.

கற்கீச்வரர் (வீராகவேச்வரருக்குத் தென்பக்கம்)

விஷ்ணுமூர்த்தி ஹயக்ரீவராய் அவதரித்த காலத்தில் பூஜித்தனர். தீர்த்தம் பிருத்சானுதீர்த்தம்.

பலபத்திராமேச்வரர் (பின்னேபாளையம்)

பலபத்திரர் பாரதயுத்தத்திற்கிருக்கும் மனமில்லாதவராய்த் தீர்த்த யாத்திரையாகப் போனபொழுது சாஸ்வதி தீரத்திலிருந்த முனிவர்களால் காஞ்சிக்ஷேத்திர மகிமை தெரிய வந்து உபமன்னிய முனிவரிடத்தில் சிவதீக்ஷை பெற்றுப் பூஜித்தனர். சாலைத்தெரு மேலண்டை வயலில்.

சகோதரதீர்த்தம் (ஒக்கப்பிறந்தான் குளம்)

மாண்டுகன்னீச்வரர் (டி. குளத்துக்குக் கீழ்பக்கம்)

மாண்டுகன்னி முனிவர் அம்மையில் தேவருலகில் அரம்பையரோடுவாழும் போகத்தை இம்மையில் இப்பிறப்பிற்றானே அவ்வரம்பையரோடு கூடி அனுபவிக்கவேண்டிப் பூஜித்தனர்.

வன்னீச்வரர் (டி. குளத்துக்குத் தென்கரையில்)

அக்கினிதேவன் தன்னுடைய மூன்று சகோதரரும் தேவர் கட்டிடும் அவிகளைத் தாங்கும் வன்மையற்று இறந்துபோகத் தானும் பயந்து சில நாள் சகோதர தீர்த்தத்தில் ஒளித்திருந்து தேவர்களால் வெளிப்பட்டு அவர்கள் வேண்டிக் கொண்டவண்ணம் அவியைத் தாங்கும் வல்லமையைப்பெற பூஜித்தனன்.

இவ்வக்கினி தேவன் தான் ஒளித்திருப்பதற்கு இக்குளத்தருகே வருணனைத் தன்னை யொருவருக்கும் காட்டக்கூடாதென்றும், எனக்கு நீ சகோதரனல்லவாவென்றும் பிரார்த்தித்து ஒளித்திருந்தனனாதலால், அக்குளம் சகோதர தீர்த்தமெனப் பெயர் பெற்றது.

சௌனகீச்வரர் சௌனக முனிவர் வேண்டிப் பூஜித்தனர்.

பாரசரேச்வரர் (ஆடிசன்பேட்டை)

பாராசரமுனிவர் தன்று பிதாவாகிய சக்தி என்பவரும் அவருடன் பிறந்த நூற்றுவரும் உதாசனென்னும் அசுரனால் கொல்

லப்பட்டோர்களென்று அறிந்து அசுரகுலத்தை நாசஞ்செய்ய வெண்ணிப் பூஜிக்கப்பெற்ற பெருமானார்.

முக்தீச்வரர் தம்பிரான் தோழரால் திருக்குறிப்புத்தொண்டர் தம் அடியார்க்கும் அடியேன் என்று போற்றப்பட்ட திருக்குறிப்புத் தொண்டருக்கு முக்தி கொடுத்தவர்.

கருடேச்வரர் (முக்தீச்வரருக்குப் பின்னே யுள்ளவர்)

கருடன் தன் தாய்க்கு சக்களத்தியினால் நேர்ந்த சிறையை மீட்பதற்காகப் பூஜித்தனர்.

மணிகண்டேச்வரர் தேவாசுரர்கள் தங்களால் சிவபெருமான் விஷமுண்ட அபராதம் நீங்கப் பூஜித்தனர்.

விஷகண்டேச்வரர் (ஷெ. மணிகண்டேசராலயத்துள்)

தேவர்கள் சிவபெருமான் தாங்கள் செய்த குற்றத்தை எண்ணாது அமிர்தம் அளித்த கருணையை காடிய பூஜித்தனர்.

பணாமணீசுவரர் (இவருக் ஷெ. ஆலயத்துள்)

வாசுகி தன்னிடத்திலுண்டாகிய விஷத்தைச் சிவபெருமான் புசித்தனரே என்று தனது முடியிலுள்ள மணிகளால் அர்ச்சித்தனன்.

புண்ணியகோடீச்வரர் (பெருமாள்கோயில் ஊரகமந்தார்பர் கோயில் சந்து)

வரதராஜமூர்த்தியினால் பூஜிக்கப்பட்டவர்.

பிரும்மேச்வரர் (புண்ணியகோடீசருக்குக்கிழக்கு)

காப்பதாகிய தொழில் ஒன்றேயுடைய திருமால் உலகத்தோடு தன்னையும் படைக்கப் பெற்றமை பொறாது தானியல்பாக உலகைப்படைப்பதுபோலும் அத்திருமாலையும் தானே படைக்க வேண்டுமென்று சிவபரஞ்சுடரைப் பிரார்த்திக்க அவர் "காஞ்சியில் பூஜை செய்வையாயின் தருவோம்" என்றுசொல்ல அவ்வண்ணமே வந்து பூஜித்தனர். இந்த க்ஷேத்திரம் சிவாத்தான

மேனவழங்கும், வேகவதி நதிக்குத் தென்பக்கம் தேனம் பாக்கம் என்னும் கிராமம்.

## தும்பவனம்.

ஜைகீஷவ்யேச்வரர். ஜைகீஷவ்ய முனிவர் யோகசித்தியின் பொருட்டு தும்பைமலரால் பூசித்தனர். பூஜை நிமித்தமாய்த் தும்பைச்செடியை வனமாக வைத்தனராதலால் தும்பவனமெனப் பெயர்பெற்றது.

வியாஸசாந்தாச்ரயர். வியாசமுனிவர் காசியில் நாராயணரே பரம்பொருளென்றுகூறிய அபராதம் நீங்கப்பூசித்தனர்.

ஸப்தஸ்தானேச்வரர் (எழுலிங்கமூர்த்திகள்)

சப்தரிஷிகளும் முக்திபதம் வேண்டித் தனித்தனியே தங்கள் தங்கள் பெயரால் பூசித்தனர்.

பார்க்கவேச்வரர். சுக்கிரர் அசுரர்களுக்கு வேண்டிய மாயவித்தைகளில் தான் வல்லவராய்ப் பிரகாசிக்கப் பூசித்தனர்.

அஷ்டபுஜேச்வரர். அஷ்டபுஜப்பெருமான் சக்கராசுரன் முதலிய வன்மர்களை ஏககாலத்தில் கொல்ல எட்டுக்கரங்கள் தனக்குண்டாகப் பூசித்தனர்.

நாரசிம்மேச்வரர். நரசிங்கப்பெருமான் ஹிரண்யகசிபுவைத் தான் கொல்லும் வல்லமையைப்பெறப் பூசித்தனர்.

சரபேச்வரர். நரசிங்கப்பெருமான் தனது நரசிங்கச் சட்டையைச் சிவபெருமான் சரபமாய் வந்து கிழித்தருளிய கருணையை நாடிப்பூசித்தனர்.

வேதகோடரேச்வரர் † திருமாகறல்.

வேதங்கள் ஓர்கால் சிவபெருமான் ஜகத்ஸம்ஹார ஜயப்பிரதாப நடனம் இத்திருமாசானின்கண் செய்யுங் காலத்தில் அப்பெருமானது திருப்பாதத்தில் சிலம்பாக விருந்து 'கலீல், கலீல்' என ஒலித்திருக்கப்பெற்று யாவராலும் போற்றப்பெற்ற புண்ணியத்தை நாடிப்பூசித்தன. செயாற்றுக்கு வடகரை.

### காதம்பரேச்வரர் (கடம்பர் கோயில்)

வேதங்கட்குக் காஞ்சியின்கண் ஏகாம்பரநாதர் "நாம் எவ்வெவ்விடத்தில் எவ்வெக்கோலங்கள் கொள்ளுகின்றோமோ அவ்வக்கோலங்கட்கேற்றவாறு உங்களைக் கொள்கின்றோம்" என்று அநுக்கிரகம் செய்தபடியே தாருகாவனத்தில் பிக்ஷாடனக்கோலங்கொண்ட காலத்தில் அவ்வேதங்களைக் கோவணமாகக்கொண்டனராதலால் வேதங்கள் அக்கருணையை நாடிப்பூஜித்தன; சேயாற்றுக்குத் தென்கரை.

### அத்யாபகேச்வரர் ,* திருவோத்தூர்.

வேதார்த்தவுண்மைகளை ஓர் காலத்தில் சைவவேதியராகிய சிவபரஞ்சுடர் தேவர்களுக்கும் வைதிக சைவாநுஷ்டானத்திற் சிறந்த மகருஷிகளுக்கும் அத்தியயன பூர்வகமாய் ஓதியருளினர். இந்த க்ஷேத்திரம் சேயாற்றுக்கு வடகரை. திருஞான சம்பந்தப் பெருமாள் ஆண்பனையைப் பெண்பனையாக்கிய க்ஷேத்திரம்.

### குரங்கணீச்வரர் * குரங்கணிமுட்டம்.

ஸ்கந்த பத்தினியாகிய வள்ளியம்மையின்மாதாவாகிய மானுருவுகொண்ட லக்ஷ்மியினாலும், சிவயோகியாய் வந்த விஷ்ணுமூர்த்தியினாலும், பிரமனாலும், இந்திரனாலும், நாரதமுனிவராலும் ஹனுமாராலும், சிக்ரோடமுனிவராலும் காக்கையாய்வந்த யமனாலும் பூஜிக்கப்பட்டவர். இயமனால் உண்டாக்கப்பட்ட யமதீர்த்தம் ஒன்றுண்டு.

வ்ருஷபேச்வரர் திரிபுரதகன காலத்தில் வ்ருஷபமாய்த் தாங்கிய திருமாலாலும், சுப்பிரமணியக்கடவுளாலும், நந்திதேவராலும், காளியினாலும், அனேக அசுரர்களாலும் பூஜிக்கப்பட்டவர்.

ஸ்ரீவத்பாகேச்வரர் (வ்ருஷபேச்வரருக்கு வாயுமூலையில்)

இலக்ஷ்மிநாதராகிய விஷ்ணுமூர்த்தியினால் பூஜிக்கப்பட்டவர்.

### தாளிவனேச்வரர் * (திருப்பனங்காடு)

அகஸ்தியரால் பூஜிக்கப்பட்டவர். தீர்த்தம் ஜடாகங்கை.

கிருபாநாதேச்வரர் புலஸ்தியரால் பூஜிக்கப்பட்டவர். இவ்விரண்டு லிங்கமூர்த்திகளும் ஒன்றாகவுள்ளன.

## திருப்பக்குழி.

### வராஹேச்வரர் (பெரியகாஞ்சிபுரத்துக்குமேற்கு)

வராக அவதாரங்கொண்ட திருமால் பூமியைப்பாயாய்ச் சுருட்டிக்கொண்டுபோன ஹிரண்யாக்ஷனைக்கொன்று பூமியை முன்போல் நிலைநிறுத்திப்பின்னர் இச்செயலைச் செய்பவல்ல கடவுளார் நம்மைப்போல் எவரிருக்கின்றனர் என்று இறுமாப்புடைத்தகாலத்தில் அச்செயலேயன்றி இவ்விறுமாப்புச்செயலையும் அடக்கவல்லோனாகிய யாவொருவனிருக்கின்றேன். என்னை மறந்தனைபோலுமென்று சிவபரஞ்சுடர் வேடுருக்கொண்டு வந்து திருமாலாகிய அவ்வராகத்தின் கொம்பைப்பிடுங்கி மார்பிலணிந்து கொள்ளவே செருக்கொழிந்து மனம் தெளிந்து "ஓ, ஈசனே, இதற்கு யான் செய்யும் கைம்மாறு யாது" என்று காஞ்சி எல்லையிலுள்ள திருப்பூக்குழியில் பூஜித்தனர். அச்சிவார்ச்சனைக்கு ஓர் குண்டமொன்றெடுத்து அதில் நீலோத்பலம் முதலிய நீர்ப்பூக்களை யுண்டாக்கி அதனைச்சிறப்பித்தனராதலால் அவ்வூர் திருப்பூக்குழி என பெயர்பெற்று திருப்பக்குழி என வழங்குகின்றது.

### சயம்புவேச்வரர் (ஷை வராஹேச்வரருக்குக்கிழக்கு)

ஜடாயுவானவன் உத்தமமாகிய மோக்ஷகதி வேண்டுமென்றெண்ணித்தன் பெயரால் சயம்புவேச்வரரைத் தன்பெயர் விளங்கச் ஜடாயுலிங்கம் என்று பிரதிஷ்டைசெய்து பூஜித்தனன். ஜடாயு தீர்த்தமென்று தீர்த்தமும் உண்டாக்கினன்.

வாணேச்வரர் வாணாசுரன் தனக்குண்டாகிய தீராத்தினவைச் சிவபரஞ்சுடரோடு மல்யுத்தம் செய்து போக்கிக் கொள்ள வெண்ணிக்கேட்ட குற்றம் நீங்கப் பூஜித்த பெருமானார்.

### அந்தகேச்வரர் (வராஹேச்வரருக்குக்கிழக்கு)

அந்தகாசுரன் திருமால் முதலிய தேவர்களையெல்லாம் எதிர்த்துப்போர் புரியும் காலத்தில் அவரெல்லாம் அவனோடு போர் செய்ய முடியாது பெண்வடிவம் கொண்டு எவ்விடங்கும் ஓடினர், அங்கங்கும் அவ்வந்தகன் விடாது பின்சென்று பல துன்பங்களைச் செய்யப் பின்னர் அவரெல்லாம் கைலாசத்திற்குப்போய் உமாதேவியாரது தோழியர்களாகிய சக்தி கூட்டங்களோடு கலந்து

அவர்களோடு கூடியிருந்தனர். அதுகண்ட அந்தகன் அவர்களோடு போர் செய்தற்குகூடாமல் சென்று சில நாட்கழித்து கைலாஸத்தில் போர் செய்யலுற்றனன் அவனது அகங்காரத்தைக் கைலாஸநாதர் கண்டு வைரவக்கடவுளையழைத்து "இவனையடக்கி வருவாய்" என்று கட்டளையிட அவர் அவனை அதிக சுலபமாய்ச் சூலத்திற்குத்தி மேல் நோக்கிப் பிடித்துக்கொண்டு கூத்தாடிக் கொண்டே காஞ்சிக்குவந்துற்ப அந்தகன் சூலாயுதத்திலிருந்த வண்ணம் ஸ்தோத்திரம்செய்து வேண்ட வைரவக்கடவுள் இரக்கமுற்றவராய் அவனைச் சூலாயுதத்தினின்றும் இறக்கி நல்லறிவு தோன்றுமாறு அநுக்கிரகம் செய்தனர். செய்யவே அவனும் சாத்தகுணமுடையவனாய் முக்தியை வேண்டிப் பூஜித்த பெருமானார்.

அம்பிகாவனேச்வரர் (அம்பி என்னும் கிராமம்)

காமாக்ஷிதேவியாரது தோழியருட்சிறந்த அம்பிகைமுதலிய தோழியர் தேவியாரது கட்டளையின்படி நந்தவனம் வைத்து அதில் தேவிமகிழும் வண்ணம் கோட்டினங்களிலும் கொடியினங்களிலும் நிலத்திலுண்டாகும் இனங்களிலும் நீரிலுண்டாகும் இனங்களிலும் உண்டாகும் மலரினங்களெல்லாம் எக்காலத்தும் உண்டாக வேண்டுமென்று பிரார்த்தித்து அம்மாநாயகியை வாழ்த்தி அந்நந்தவனத்தின்றே சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து அம்பிகாவனேச்வரரெனத் திருநாமமிட்டுப் பூஜித்தனர்.

(பெரியகாஞ்சிபுரத்திற்கு மேற்கு)

* பிரவாளேச்வரர் திருமாற்பேறு

பிருந்தை என்பவளைத் தன் மனைவியாகக் கொண்டு சுகித்து வாழவெண்ணி அவளது கணவனாகிய ஜலந்தராசுரன் அழிந்த நாளில் அவளைக்கூடிய திருமால் அவ்வசுரனைக்கொன்ற அரியசக்கராயுதத்தைச் சிவபரஞ்சுடரிடத்திற் பெறுதற்கு இந்த க்ஷேத்திரத்தில் வந்து இச்சிவலிங்கமூர்த்தியைக்கண்டு தரிசிக்கும்பொழுது சிவலிங்கமூர்த்தியின்கண் காமாக்ஷிதேவியார் தமது திருக்கரத்தாற் றடவிப் பவளம் போல் சிவந்து போன திருமேனியையும், நான்கு திக்குகளிலும் நான்கு திருமுகங்களையும் அம்முகங்கள்

---

* இக்குறியிட்ட க்ஷேத்திரங்கள் தேவாரம் பெற்றனவை

தோறும் ஆயிரமாக அருந்தவரெல்லாம் சின்றுபோற்றும் காக்ஷி யையும் இறைவன்காட்டி நிற்பத்திருமால் அத்திருக்கோலத்தைக் காணும்தோறும் அதிசயித்துக் கருணையை வியந்து இக்கமூர்த்தி தான் நாம் வேண்டியாங்களிக்கவல்லனென்றெண்ணி நாடோறும் ஆயிரம் மலர்கள் கொண்டர்ச்சித்து வந்தனர். பிராட்டியார் வருடச்சிவந்த பவள மேனியைக்காட்டியதால் பிரவாளேச்வரரென் னும் திருநாமம்வந்தது. ஈதன்றியும் சாதருபர், மணிகண்டர், தயாநிதியார், பவள மாலையார், வாட்டந்தவிர்த்தார், சாகிசனர் திருமாற்குப் பேறளித்தார் என்னும் நாமங்களையும் உடையார். ஆக இவருக்குரிய நாமங்கள் பிரவாளேச்வரர் முதலாக எட்டு. (பழூர் ஸ்டேஷனுக்குச் சமீபம்.)

பரசுராமேச்வரர் (திருமாற்பேற்றுக்குக்கிழக்கு)

ஜமதக்னி முனிவருக்குப்பிறந்த பரசுராமரென்னும் திருமால் கார்த்தவீரியனென்பவனால் தன் தாதை இறந்துபோனதைக்கண்டு மனம் புழுங்கி க்ஷத்திரிய வம்சத்தைநாசஞ்செய்யவெண்ணி அவ் வாற்றல் தனக்குண்டாகப் பூஜித்தனர்.

ரேணுகேச்வரர் (பரசுராமேச்வரருக்குத்தெற்கு)

'தந்தைசொன்மிக்க மந்திரமில்லை' என்னும் நீதியை எண் ணிய தன் மகனாகிய பரசுராமரால் கொல்லப்பட்ட இரேணுகை மீண்டும் தன் மகனாலேயே எழுப்பப்பட்ட பின்னர் மகளிர்கற்பு நிலையுடையாராயின் அவர் உலகினரால் தொழும் தெய்வமாவரென் னும் புகழை நாம் வெளியாக்கல் வேண்டுமென்றெண்ணி இங்கு வந்து தன் பெயரால் பூஜித்தனர்.

குருரேச்வரர் திருமாற்பேற்றுக்குத்தெற்கு. கூர்ம கிராமம்.

குருரென்னும் முனிவர் ஈசானலிங்கம், தற்புருஷலிங்கம், அகோரலிங்கம், வாமதேவலிங்கம் சத்தியோஜாதலிங்கம் என்னும் பஞ்சப்பிரம நாமங்களால் ஐந்து லிங்கங்களைப்பிரதிஷ்டைசெய்து சிறந்த மலர்களைக்கொண்டு ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தாலர்ச்சனை செய்து வந்து சிவசாயுஜ்யத்தைப் பெற்றனர்.

திருமாற்பேற்றுக்குச் சமீபத்தில் கோவிந்தபாடி என்னும் ஊர் க்ஷேத்திரமுண்டு. அவ்விடத்தில் கோவிந்தராகிய திருமாலும்

றும் ஸ்வேதர் முதல் லகுளர் முதலாகச் சொல்லப்பட்ட யோகா சார்யர்களுக்கும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி பரமாசாரியராய் எழுந்தருளியிருந்து வேத வேதாந்தங்களைப் பாடமுறையாகச்சொல்லியருளினர். அதனால் கோகித்தபாடி எனப் பெயர் பெற்றது. இவ்விடத்தில் தெய்வத்தன்மையுடையகிளியொன்றிருக்கின்றதென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இவ்விடத்தொட்டு ஏகாம்பரநாதாலயத்துக்குவடக்கிலுள்ள பருதிக்குளம் வரையில் மேற்சொன்ன யோகாசாரியரெல்லாம் தனித்தனியே சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூஜித்திருக்கின்றனர்.

காஞ்சி க்ஷேத்திரமஞ்சரி முற்றிற்று.

## இந்தக்ஷேத்திரத்தில் முக்கியமான சில அற்புதங்களுள.

அவை வருமாறு.

முக்திமண்டபம் மூன்று, அவற்றுள்ஒன்று சர்வதீர்த்தக்கரையிலிருக்கின்றது. ஒன்று முக்தீச்வரர்கோயிலிலிருக்கின்றது. ஒன்று துலுக்கர்களது சர்க்காராயிருக்கின்றது. இவையன்றி கங்கைகொண்டான் மண்டபத்துக்கு நிருதி மூலையில் ஓர் மண்டபமிருக்கின்றது. அதற்குப் பரமானந்த மண்டபமெனப்பெயர். அதுமுன் ஏகாம்பரநாதருக்கு வாகனமண்டபமாயிருந்தது, இப்பொழுது மசூதியாயிருக்கின்றது. இதுவுமன்றிச் சுப்பிரமணிய க்ஷேத்திரமாகிய குமரகோட்டத்திற்குத் தெற்கில் ஓர் தடாகமுண்டென்றும், அதில் ஆயிரம் இதழ்களோடு கூடிய ஓர் தாமரை மலருண்டென்றும், அதில் முருகக்கடவுள் பாலராய் விளையாடிக்கொண்டிருக்கின்றாரென்றும், அவரது ஆலயத்தில் சுவர்ணவிருக்ஷமிருப்பதென்றும், தெய்வத்தன்மையுள்ள மயிலொன்றிருப்பதென்றும், காமாக்ஷிதேவியாரது ஆலயத்தில் ஜண்பக விருக்ஷமிருப்பதென்றும், மாவடியில் கபோதப்பறவையும் காகணவாய்ப் பறவையும் இருப்பதென்றும், திருமாகறலில் மாடப்புறா விருப்பதென்றும், கோனேரிக்குப்பத்திலுள்ள சக்கரதீர்த்தத்தில் சக்கரவாளப்பக்ஷி யிருப்பதென்றும், இன்னுமிவை போன்ற பலவற்புதங்களிருப்பனவென்றும், இரட்டையருலா முதலிய பல நூல்களில் நன்றாய்க் கூறப்பட்டுள்ளன. கல்விமண்டபம் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் சரஸ்வதி மண்டபமென்றும் கணக்கர் மண்டபம் இரட்டை மண்டபமென்று வழங்கிவருகின்றன. கீழண்டை ராஜவீதியில் ஈசான்யத்தில் துலாபாரதான மண்டபம் என்று ஒன்றுளது.

காஞ்சிமஹிமையில் வரும் அம்சம் என்பதின் அளவு 160 அம்சம்கொண்டது 1 யோஜனை. ஒரு யோஜனைக்கு மைல் 10 ஒரு மைலுக்கு அம்சம் 16.

# ஸ்ரீ காஞ்சி மஹிமை.

## முதல் அத்தியாயம்.

### விஷய சூசனை.

[இந்த அத்தியாயம் பராசக்தி பலவிதமான ஸ்வரூபமாயும், யந்திரரூபமாயும், பிம்பரூபமாயும், வேறு பல ரூபமாயும் இருந்து தனது ஆதிக்கியத்தைக் காட்டுகின்கிற க்ஷேத்திரங்கள் பல உள. அவற்றுள் பராசக்தி அந்த பிலயந்திர பிம்பரூபமாயிருக்கின்ற மகிமையையும், சிவஸ்வரூபமாயிருக்கின்ற அற்புதக் காக்ஷியையும், விஷ்ணுஸ்வரூபமாயிருக்கின்ற மேன்மைக் காட்சியையும் விளக்குவது ஸ்ரீ காஞ்சீமாநகரம்; அதனால் ஸ்ரீ காஞ்சியம்பதி மேம்பாடுடையதாயிற்று என்பதையும், பராசக்தி சிவகாமேசுவராங்கஸ்தா, சிவஸ்வாதீனவல்லபா என்கிற நாமங்களை உடைத்தாயிருப்பதால் ஜோதிலிங்கசக்தி ஸ்வரூபிணியாயும், விஷ்ணுரூபிணி விஷ்ணுமாயா விலாஸினி என்கிற நாமங்களைப் பெற்றதாக இருப்பதால் வரதராஜமூர்த்தியாயும் இருக்கின்றது என்பதையும், ஜோதிலிங்க சக்தி ஸ்வரூபமாயிருக்கின்ற அக்ஷரம் முக்தான்மாக்கள் ஸர்வமந்திர ஸர்வக்ஞான ஸித்தியை அடையும் பொருட்டு என்பதையும், வரதராஜமூர்த்தியாயிருக்கின்ற அக்ஷரம் பெத்தான்மாக்கள் மாயாவிலாஸமாயிருக்கின்ற இஷ்டகாமிய போகஸித்திகளை அடையும் பொருட்டு என்பதையும் விளக்குவது.

இவைகளை அன்றி இவ்வத்தியாயம் காஞ்சிக்கு முதலாவரணத்தினெல்லையாக கிழக்கில் சமுத்திரம், தெற்கில் தக்ஷிணபிநாகினி, மேற்கில் சிலாஹ்ருதம், வடக்கில் சுவாமிபுஷ்கரணி என்பனவும், இரண்டாம் ஆவரணத்தினெல்லையாக கிழக்கில் மாவலிபுரம், தெற்கில் தேவகிரி, மேற்கில் விரிஞ்சிபுரம், வடக்கில் நாகலாபுரம் என்பனவும், மூன்றாம் ஆவரணத்தினெல்லையாக கிழக்கில் திரிவேணி சங்கமநகரம், தெற்கில் வியாக்கிரபுரம், மேற்கில் க்ஷீராப்தி நகரம், வடக்கில் நரிகங்காபுரம் என்பனவும் அமைந்துள்ளன எனவும்; மூன்றாவரணங்களையுடைத்து எனவும்; சத்தியவிரத க்ஷேத்திரம் முதலாக எண்ணப்பட்ட ஒன்பது நாமங்களையுடைத்து எனவும் கூறுவதுடன் பாலாற்றின் வரலாற்றையும், பராசக்தி மூன்றுவித ஸ்வரூபமானமையையும், அவ்வவற்றின் வரலாறுகளையும் விளக்குவது.]

# பீடத்திரய விவரணம்.

இப்பூமண்டலம் ஐம்பதுகோடி யோசனை விசாலமுள்ளது. இதனுள் தேவிசம்பந்தமான பீடங்கள் ஆறாயிரத்து நானூறு. அவற்றுள் அறுபத்துநான்கு பீடங்கள் சிறந்தன. அவற்றுள்ளும் ஐம்பத்தாறு பீடங்கள் சிறந்தன. அவற்றுள் முப்பத்தாறு பீடங்கள் சிறந்தன. அவற்றுள்ளும் பதினெட்டுப் பீடங்கள் சிறந்தன. அவற்றுள்ளும் மூன்று பீடங்கள் சிறந்தன.

அவையாவன:— காமராஜபீடம், ஜாலந்தரபீடம், ஒட்யாண பீடம்

இம்மூன்று பீடங்களையும் பூஜித்தவர்:— ஹயக்கிரீவர், பிருகு முனிவர், வியாசமுனிவர்.

இவருள் காமராஜபீடத்தில் வாக்பவ கூடத்தைப் பூஜித்தவர் ஹயக்கிரீவர். ஜாலந்தரபீடத்தில் மதனரூபமென்கிற மத்தியகூடத்தைப் பூஜித்தவர் பிருகு முனிவர். ஒட்யாணபீடத்தில் பராபீஜ ஸ்வரூபமான காமரூபத்தைப் பூஜித்தவர் வியாசமுனிவர். காமராஜபீடம் காஞ்சிநகரத்திலும், * ஜாலந்தரபீடம் ஜ்வாலாமுகி என்கிற க்ஷேத்திரத்திலும், ஒட்யாணபீடம் ஜகந்நாதமென்கிற க்ஷேத்திரத்திலும் உள்ளன.

## காஞ்சிமண்டலத்தினெல்லை.

### (முதலாம் ஆவரணம்.)

கங்காநதிக்குத் தென்பாகத்தில் இருநூறு யோஜனை தூரத்திற்கு மேலுள்ள சமுத்திர கட்டத்தின் § அக்கினி திக்கே கிழக்கெல்லை. அதற்கு நிருருதியில் ஏழரை யோஜனை தூரத்திலுள்ள தக்ஷிண பினாகினியே தெற்கெல்லை. அதற்கு வாயுவில் ஏழுயோஜனை தூரத்திலுள்ள ¶ சிலாஹ்ருதமே மேற்கெல்லை. அதற்கு

* ஜாலந்தரபீடமும் ஒட்யாண பீடமும் வடதிசையிலுள்ளன.

§ காஞ்சி நகரம் யந்திரரூபமாய் நிருமித்திருப்பதாகலான் கோணமாகிய அக்கினிதிக்கே கிழக்கெல்லையாக எடுக்கப்பட்டது.

¶ சிலை என்றால் கல், ஹ்ருதம் என்றால் மடு. ஆகலான் அதுகல்லாறு என வழங்கிவருகின்றது.

சான்யத்தில் எட்டு யோஜனை தூரத்திலுள்ள சுவாமி புஷ்கரணி யே வடக்கெல்லை.

## கிழக்கெல்லையாகிய சமுத்திர கட்டத்தின் மகிமை.

கிழக்கெல்லையாகவுள்ள சமுத்திரகட்டம் காஞ்சிப்பதிக்கெல்லை யாக அமைந்தமையாயினும்; சரஸ்வதிதேவி முன்னொருகாலத்தில் தனக்கு நேர்ந்த ஒரு ‡ தோஷத்தைநீமாற்றிக்கொள்ள நதி உரு வங்கொண்டு இக்கடலிற் சங்கமமாய்ப் பரிசுத்தமடைந்து, தனது கணவனோடு சேர்ந்து சமுத்திரராஜனைப்பார்த்து, “இத்தீர்த்தில் எவரெவர் எவ்வெக்காலங்களில் ஸ்நானம் செய்தபோதிலும், அவ ரெல்லாம் பரிசுத்தராய்ச் சிவபதமடைவர்” என்று வரமளித்தமை யாலும் இவ்வெல்லையாகிய சமுத்திரக் கட்டத்திற்கு ஸ்நானஞ் செய்யலாகாதென விலக்கப்பட்ட காலங்களில்லையாயின.

## தெற்கெல்லையாகிய தக்ஷிணபிநாகினியின் மகிமை.

முன்னொரு காலத்தில் அசுரகுருவாகிய பிருகுமுனிவர் சிவா னுக்கிரகத்தினால் பூமியிற்கிடந்திருந்த பிநாகம் என்னும் தனுசை எடுத்துத் தாங்கியபொழுது கங்கை நதிரூபமாய் பெருக்கெடுத் தோடியது. அதுகண்ட முனிவர் “இது பிநாகியிலுண்டான படியால் † பிநாகினி எனப்பெயர் பெற்று வழங்கக் கடவது” என் றும், “இதில் ஸ்நானஞ்செய்பவர்கள் புண்ணிய ஸ்வரூபிகளாய்ச் சிவலோகமடையக் கடவர்கள்” என்றும் வரமளித்தனர்.

## மேற்கெல்லையாகிய சிலாஹ்ருதத்தின் மகிமை.

முன்னொரு காலத்தில் அநுமார் அமிர்தம்போலும் பிழைப் பிக்கவல்ல ஓஷதிகளைப் பறித்தெடுத்து வரும்போது சிலாஹ்ருத தீர்த்தத்தில் அலம்பிப் பின்னர் லக்ஷ்மணரிடத்திற் கொண்டுபோய்க் கொடுத்தனர். அங்ஙனம் அலம்பிய காலத்தில் “இதில் எவர்கள் ஸ்நானம் செய்கின்றார்களோ அவர்கள் சித்தர்களாய் நெடுங்காலம் ஜீவித்திருந்து பின் தெய்வத்தன்மையையும், விஷ்ணு பதத்தையும் அடையக் கடவர்கள்” என்று வரமளிக்கப் பெற்றது.

---

‡ தோஷம் என்றதன் பொருளைக் காஞ்சிப்புராணத்தில் சிவாத்தான படலத்திற் காண்க.

† பிநாகினி என்னும் நதியானது பெண்ணையாறு எனவழங்குகின்றது.

## வடக்கெல்லையாகிய சுவாமி புஷ்கரணியின் மகிமை.

முன்னொருகாலத்தில் விஷ்ணுமூர்த்தி லக்ஷ்மிதேவியைக்கல்யாணஞ் செய்து கொள்ளவேண்டும் என்று விரும்பிச் சித்த வேட்கொண்டு திருப்பதி என வழங்கும் சேஷாசலத்தை வந்தடைந்த காலத்தில் தம்முடன் வந்த சீடர்களுடைய ஸ்நானபானநிமித்தம் ஒரு தடாகத்தை உண்டுபண்ணி அதில் விரஜாநதியைப் பிரதிஷ்டை செய்து தாமும் அந்த கல்யாணம் முடிந்த பின்னர் ஸ்நானஞ்செய்து ¶ சுவாமிபுஷ்கரணி என்று பெயரிட்டு "இதில் எவர்கள் ஸ்நானஞ் செய்கின்றார்களோ அவர்கள் இவ்வுலகில் எல்லாப் போகங்களையும் அனுபவித்துப் பின்னர் எனது லோகத்தை யடையக் கடவர்கள்" என்று வரமளித்தார்.

இந்நான்கெல்லைக்குட்பட்ட பிரதேசம் தொண்டைமானென்னும் அரசனால் நீதியோடு ஆளப்பட்டமையான் தொண்டைமண்டலம் எனப்பெயர் பெற்றது.

(இரண்டாம் ஆவரணம்.)

காஞ்சிக்குக் கிழக்கெல்லையாகிய சமுத்திரத்திற்கு ஒரு யோஜனை மேற்கில் மாவலிபுரம். அதற்கு ஐந்து யோஜனை நிருதியில் தேவகிபுரம். அதற்கு ஐந்து யோஜனை வாயுவில் விரிஞ்சிபுரம். அதற்கு ஐந்து யோஜனை ஈசானத்தில் நாகலாபுரம். அதற்கு ஐந்து யோஜனை ஆக்னேயத்தில் முற்கூறிய மாவலிபுரம்.

வரலாறு.

பூர்வத்தில் மஹாபலி சக்கிரவர்த்தி பரமசிவானுக்கிரகம் பெற்றுப் பெருஞ் செல்வமடைந்து அங்கு வாழ்ந்திருந்தனனாதலால் மாவலிபுரம் எனவும், உக்கிரசேனன் என்னும் அரசனும் பரமசிவாராதனை செய்து கன்னியாரத்னமாகிய தேவகி என்னும் பெண்ணைப் பெற்று அங்கு வாழ்ந்திருந்தனனாதலால் தேவகிபுரம் எனவும், அரம்பையும் பரமசிவாராதனை செய்து இந்திரனுக்கு ஊர்வசி முதலாயினாரைக் காட்டிலுந்தான் அதிகப் பிரியையாவதற்குத் தவஞ்செய்யப் பிரமன் சிருஷ்டிசெய்த புரமாதலால் விரிஞ்சிபுரம் எனவும், உலகங்களுக்கெல்லாம் நாசத்தைத் தரும்படியான விஷம் நாகத்தினின்றும் தோன்றியபொழுது அதனை மஹாதேவர் அஞ்சாது கையிலேற்ற இடம் ஆதலால் நாகலாபுரம் எனவும் முறையே அவை பெயர் பெற்றன.

¶ சுவாமி புஷ்கரணி என்பது திருப்பதிக்குக் கிழக்கிலுள்ளது.

இந்நான்கு புரங்களுக்குட்பட்ட பிரதேசம் ஏகாம்பரநாதர் பூஜார்த்தமாய்வந்த பார்வதிதேவியார் வீற்றிருந்து இயற்றிய தவத்தினால் பிரகாசமடைந்தமையால் தபோவனம் எனப்பெயர் பெற்றது.

இப்பொழுது சொல்லிய நான்கெல்லைக்குள் மாபலிபுரத்துக்கு 3 யோசனை மேற்கில் * திரிவேணி சங்கம நகரம்.

அதற்கு $1\frac{1}{4}$-யோசனை நிருருதியில் ¶ வியாக்கிரபுரவனம்.

அதற்கு $1\frac{1}{4}$-யோசனை வாயுவில் † க்ஷீராப்தி நகரம்.

அதற்கு $1\frac{1}{4}$-யோசனை ஈசான்யத்தில் ‡ நந்திகங்காபுரம்.

அதற்கு $1\frac{1}{4}$-யோசனை ஆக்னேயத்தில் முன்னர்க்கூறிய திரிவேணி சங்கமநகரம்.

விஷ்ணுமூர்த்தி தம்முடைய ஒரு பக்தனுக்குத் திருவேணி சங்கமத்தில் ஸ்நானஞ் செய்வதால் வரும்பலனை அடையும்படிச் செய்தனராதலால் திரிவேணிசங்கம நகரம் எனவும், வியாக்கிரபாதருக்கு நடராஜமூர்த்தி பூர்வத்தில் நிருத்த தரிசனத்தைக் காட்டினராதலால் வியாக்கிர புரவனம் எனவும், விஷ்ணுமூர்த்தி தம்முடைய ஒரு பக்தனுக்குத் திருப்பாற்கடலில் தாம் வீற்றிருக்குங்கோலத்தைக் காட்டினராதலால் க்ஷீராப்தி நகரம் எனவும், சிவபெருமானிடத்தில் அன்புள்ள ஒரு புலையன் தனது விளைநிலமெல்லாம் மழையின்றிப் பாழ்படக்கண்டு வருந்தி இருப்ப அதற்குச் சிவபெருமானார் இரங்கி நந்தி தேவரின் வாயின் வழியாகக் கங்கையை வரச்செய்து பயிரை வளர்த்துப் பின் அவனை அத் தீர்த்தத்தில் மூழ்கச் செய்து மோக்ஷமடையச் செய்தனராதலால் நந்திகங்காபுரம் எனவும் அவை முறையே பெயர் பெற்றன.

---

* திரிவேணி சங்கம நகரமென்பது திருமுக்கூடலென வழங்குகின்றது. அது சீவரமென வழங்கும் சிவபுரத்திலுளது.

¶ வியாக்கிர புரவனமென்பது திருப்புலிவனம் எனவழங்குகின்றது. இது உத்தரமேரூருக்குப் போகும் வழியிலுள்ளது.

† க்ஷீராப்தி நகரமென்பது திருப்பாற்கடலென வழங்குகின்றது.

‡ நந்திகங்கா புரமென்பது தக்கோலம் என வழங்குகின்றது.

இந்நான்கு நகரங்களுக்கு உட்பட்ட பிரதேசம். முன் பீமன் செய்த அசுவமேதத்திற்குச் சாலையாக அமைந்து விளங்கினமையால் பீமசாலை எனப்பெயர் பெற்றது.

இப்பொழுது சொல்லிய விஷ்ணு க்ஷேத்திரத்தில் திரிவேணி சங்கமத்திற்கு ஒரு யோசனை மேற்கில் பாஞ்சாலிகை என்னும் தூர்க்கை, அதற்கு 89 அம்சம் மேற்கில் கன்னிகேசர் என்னும் சிவபெருமானார், அதற்கு 50 அம்சம் உத்தரத்தில் சூரியபுஷ்கரணி தீரத்தில் ஸ்வேதாக்கியர் என்னும் விஷ்ணு மூர்த்தி, அதற்கு 17 அம்சம் கிழக்கில் சந்திரபுஷ்கரணிதீரத்தில் க்ஷேத்திராங்கி என்னும் தூர்க்கை, அதற்கு 51 அம்சத்தில் பாஞ்சாலிகை என்னும் தூர்க்கை என்று எண்ணப்பட்டவர் வீற்றிருக்கின்றனர்.

## க்ஷேத்திர நாமவிவரணம்.

காஞ்சி க்ஷேத்திரத்தைச் சத்தியவிரத க்ஷேத்திரம், பாஸ்கர க்ஷேத்திரம், தைஜஸ க்ஷேத்திரம், ஹரிஹர க்ஷேத்திரம், சத்திய க்ஷேத்திரம், மஹாபுண்ணியப்பிரத க்ஷேத்திரம், கைலாசம், வைகுண்டம், ஸ்ரீபுரம் என வரும் ஒன்பது நாமங்களால் சான்றோர்கள் புகழ்கின்றார்கள்.

## வரலாறு.

என்றும் சிவ சாந்நித்தியத்தை உண்டு பண்ணுகிறதாயும், மஹா சக்திப்பிரபாவத்துக்கு முதலிடமாயும், அந்த மஹா சக்தியின் பிரதான சக்திகளினுடைய வைபவங்கள் விளங்கத் தக்கதாயும், சக்தி ஸ்வரூபமாகிய விஷ்ணு சக்திக்கு அதிஷ்டானமாயும், நாசமற்றதாயும், சான்றோர்களால் சூழப்பட்டதாயும் இருப்பதால் சத்திய விரத க்ஷேத்திரம் எனவும்; சிரேஷ்டமான பக்ஷிகளாலும் ஆலயங்களாலும் சூழப்பட்டிருப்பதால் பாஸ்கர க்ஷேத்திரம் எனவும்; மஹாபிலம், மஹாவிருக்ஷம், புண்ணிய கோடி விமானம் என்னுமிவைகளை உடைத்தாயிருப்பதால் தைஜஸ க்ஷேத்திரம் எனவும்; சக்தி சிவாத்மகமாயிருப்பதால் ஹரிஹர க்ஷேத்திரம் எனவும்; விஷ்ணு என்றும், சக்தி என்றும், சகுண பாவனையால் இரண்டு ரூபமாகப் பாவிக்கப்பட்டும், மஹாமாயை என்று நிர்க்குண பாவனையால் ஒரு ரூபமாகப் பாவிக்கப்பட்டும்

விளங்குகின்ற ஆத்ம சிற்சக்தியாகிய மஹாதேவியே ஆகாச ரூபமாயுள்ள பிலசக்தி ரூபமாயும், ஸ்திரீ ரூபமாயுமுள்ள காமாக்ஷி சக்தியாயும், புருஷ ரூபமாயுள்ள வரதராஜ சக்தி ரூபமாயும் இருப்பதால சக்திக்ஷேத்திரம் எனவும்; அழிவில்லாததாயும் நிர்மலஸ்தானமாயும் புண்ணியாதிக்கிய முடையவர்கள் வாழ்வதற்கிடமாயும் இருப்பதால் கைலாசம் எனவும்; வைகுண்டம் எனவும்; ஸ்ரீ புரம் எனவும்; எல்லா விருக்ஷங்களும் தேவவிருக்ஷங்களாயும், கிணறு தடாகம் நதி முதலியவற்றிலுள்ள ஜலங்கள் கங்கா தீர்த்தமாயும், மானிடரெல்லாம் தேவர்களாயும், சிலைகளெல்லாம் சிவவிஷ்ணு ஸ்வரூபங்களாயும், நடப்போர்களுடைய பாத தூளிகளெல்லாம் பரிசுத்தத்தைச் செய்யத் தக்கவையாயும், வீசுகின்ற காற்றுப்பாவச்செயலை அடக்கும் அங்குசமாயும் இருப்பதன்றித் தேர்களும் சித்தர்களும் மோக்ஷாபேக்ஷையுள்ள சிரேஷ்டமான ரிஷிகளும் அந்த க்ஷேத்திரத்தில் தேஜோ ரூபமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருப்பதினாலும், இவ்வண்ணம் யாவும் எவரும் தெய்வரூபமாக இருக்கின்றபடியினாலும் புண்ணியப்பிரதக்ஷேத்திரம் எனவும் இது சொல்லப்படும்.

தொண்டைமண்டலத்தான் "சத்தியவிரத க்ஷேத்திரம்" முதலாகச் சொல்லப்பட்ட ஒன்பது நாமங்களை யுடைத்தாயிருக்கிற எல்லை எதுவோ அது காஞ்சி ஸ்தலம் என்று சொல்லப்படும்.

இந்த எல்லையின் நடுவில் ஸ்ரீ வித்தியாபரமேசுவரியினுடைய ஸ்தனகும்பத்தினின்றும் வெளிப்பட்டதாயும், சாசாகிதமாகிய ஞானத்தைக் கொடுக்கிற அமிர்தஸ்வரூபமாயும், தேகத்திற்கு வரும் நரைதிரை மூப்பாதி ரோகங்களைப் போக்கடிப்பதாயும், கிருதயுகத்தில் அமிர்தரூபமாயும், திரேதாயுகத்தில் பால் ரூபமாயும், துவாபரயுகத்தில் நெய் ரூபமாயும், கலியுகத்தில் ஜலரூபமாயும் இவ்வண்ணம் யுகங்கடோறும் செல்லுகின்ற மகிமையுடைத்தாயும், ஸ்நானஞ் செய்த மாத்திரத்தில் ஸகலபாவங்களையும் போக்கி முக்தியைக்கொடுப்பதாயும் உள்ளபாலாறென்று சொல்லுகின்றது.

## பாலாற்றின் வரலாறு.

பூர்வத்தில் பராசக்தியினுடைய பாலுண்டருளிய மகிமையினால் சர்வக்ஞராயும் பண்டிதோத்தமராயும் விளங்கும் சுப்பிரமணி

யர் ஒருகால் பிரமனை நோக்கி ஞானவித்யையாயபிரணவார்த்தத்தை
கேட்ட காலத்தில் அவன் சொல்ல முடியாது சிறையில் இடப்
பட்டனன். பின்னர் அப்பிரமன் தானும் அந்தப் பாசத்தினு
டைய க்ஷீரபானத்தை விரும்பி நந்திமலையில் தேவி தீர்த்தக்கரை
யில் தவம் புரியச் சிவபெருமானார் தோன்றினார். அவர்பால் ஸ்ரீ
வித்யை என்னும் மந்திரோபதேசம் பெற்று ஆறுவருடம் அத்
யுக்ரமான தவத்தோடு தேவித்தியானம் செய்து வரும்பொழுது
மஹாமாயா ஸ்வரூபிணியாயும் ஸ்ரீ வித்தியா பரமேசுவரியாயும்
லலிதாராஜராஜேசுவரியாயும் மஹா திரிபுரஸுந்தரியாயும் ஸ்ரீ சக்கர
புரஸாம்ராஜ்ஜியாயும் மஹா கைலாஸவாஸினியாயும் விளங்கும்
ஸ்ரீ மஹாதேவி, மகிழ்ந்தவளாய்த் தனது ஸ்தனமாகிய கும்பத்
தில் அவரவருக்கேற்ற ஞானங்கள் நிறைந்திருக்கும் அமிர்தகாய
கமாயும் ஜரை மரணங்களைப் போக்கடிக்கிறதாயும் இருக்கிற பாலா
கிய அமிர்தப் பிரவாகத்தைப் பிரமனுக்குப் பிரணவ ஞானோதய
முண்டாகும்பொருட்டு, அவனது சரீர முற்றும் நனையும்படிச் சொ
ரிந்தொழிய அவன் ஆனந்தபரவசமாய் அந்த ஞானப்பாலையுண்டு
உள்ளும் புறம்பும் நிறையப் பெற்றுத் திருப்தியடைந்தனன்.
பின்னர் அவன் உண்டு மிகுந்த அப்பால் வெள்ளமானது அவனது
முகமாகிய தாமரையினின்றும் வழிந்து நந்திமலையில் விழுந்து
அம்மலையினின்றும் நதிரூபமாய்ப் பூமியிற் பிரவேசித்துப் பெருக்
கெடுத்து வந்து தக்ஷிணத்திலிருக்கின்ற பாருகநதியையும், உத்த
ரத்திலிருக்கின்ற குண்டலி நதியையும், இவைகளோடு சமாகமி
ணம் விருத்தம் என்கிற நதிகளையும் தனக்கு இருபக்கத்திலும்
அங்கமாகக்கொண்டு அவைகளோடு சமமாகக் கலந்து காஞ்சிநக
ரத்திற் பிரவேசித்து ஒன்றாய் அவ்வழியே சென்று சமுத்திர சங்
கமாயிற்று. அந்த க்ஷீரபானத்தால் சகல கலாவல்லபமடைந்த
பிரமன் அந்நதியை நோக்கி “இதில் எவர்கள் ஸ்நானஞ் செய்
கின்றார்களோ அவர்கள் பூர்வஜ்ஞான முடையவர்களாயும் ஸர்வ
வித்யாபாரங்கதர்களாயும் மோக்ஷமடையக் கடவர்கள்” என்று
வரமளித்தனன்.

## மஹிமை.

முன்னொருகாலத்தில் அந்தணனொருவன் தன்னுடைய குல
தர்மங்களைக் கைவிட்டுப் பாவங்களையே செய்து மரணமடைந்த

யமதண்டனைக்குள்ளாய் மீளவும் பூவுலகத்தில் குண்டலினி என்னும் நதியில் தவளையாகப் பிறந்திருந்தனன். க்ஷீரநதி அக்குண்டலினியோடு கலந்து வருகின்றபோது அவன் ஒரு தண்ணீர்ப் பாம்பின் வாயிலகப்பட்டு இறக்குங்கால் பூர்வஞ்ஞானமுண்டாய் மோக்ஷமடைந்தனன்.

இப்படியே இந்த க்ஷீரநதியில் வசிக்கின்ற உயிர்களுடைய ஸ்பரிசத்தாலும், தீர்த்தஸ்பரிச முதலியவற்றாலும் முக்தியடைந்தவர்கள் இவ்வளவினரென்று கணிக்கக்கூடுமோ? கூடாது என்க.

## பராசக்தி மூன்றுவித ஸ்வரூபமானது.

முன்னொருகாலத்தில் பிரமன், தனது வம்சத்திற் பிறந்திறந்த அசுரர்களுக்கு மீளவும் பிராணனையும், அவர்கள் வேண்டும் வரங்களையும் தானே கொடுப்பதற்கு வேண்டிய சக்தியைப் பெறுதற் கெண்ணி ஸ்ரீபுர நகரமாகிய காஞ்சி க்ஷேத்திரத்தில் பரமாகீர்சமூலத்தில் வீற்றிருக்குங் காமாக்ஷியின் ஸந்நிதானத்தையடைந்து தேவியைத் தியானித்துத் தவஞ்செய்யத் தொடங்குங்கால், அத்தவத்துக்கு எவராலும் சிறிதும் இடையூறுவாராவண்ணம் விஷ்ணுமூர்த்தியினுடைய காதினின்றும் வெளிப்பட்ட மதுகைடபர் என்ற அசுரர்களைக் காவலாக வைத்துத் தான் தவம் செய்து வந்தனன்.

அசாகாதகியாகிய பராசக்தி பிரமனுக்குப் பின்பக்கத்தில் இடம் வலங்களிற் காவலிருக்கின்ற அவ்வசுரர்களைச் சங்கரிக்க எண்ணி, அவ்வசுரர்களுடைய நடுவில் தனது ஆச்சரியமாகிய மாயையினால் விஷ்ணுவடிவங்கொண்டு வந்து சக்கராயுதத்தினால் அவ்வசுரருடைய சிரங்களை அறுத்துத் தள்ளிப் பிலாகாசத்துக்கு ஆக்னேய திக்கிற்சென்று அங்கு நின்ற திருக்கோலமாய்த் தனது ஸ்வரூபமாகிய பிலத்தின் முகமாக நின்றனள்.

மதுகைடபர் சிரம் அறுபட்டு விழுகின்ற காலத்தில் பேரிரைச்சலிட அவ்வோசையைக் கேட்ட பிரமன் திடுக்கிட்டு அவ்வசுரரிடம் வேகமாய் வந்து அவர்களுடைய தலைகள் அறுபட்டு உதிரவெள்ளத்தில் செல்ல இரண்டு முண்டங்களும் துடிப்பதைக்

கண்டு 'ஆ! ஆ! இஃது என்ன ஆச்சரியம்' என்று அதிககோபங் கொண்டு 'இவர்களைக் கொன்றவன் யாவன்? அவனெங்கே'யென்று கண்களைச் சுழலவிட்டுத் திக்குகளைப் பார்க்கின்றபொழுது ஆக்னேயதிக்கில் சக்கரதாரியாய் விஷ்ணுரூபங்கொண்டு பயந்தோடுவதைப்போல் ஓடுகின்ற தேவியாகிய விஷ்ணுமூர்த்தியைக் கண்டு 'இவர்தாம் அவர்களைக் கொன்றிருக்கவேண்டும்' என்று எண்ணி நிச்சயித்து விரைவாகவோடி அவரைச் சமீபித்துக் கொல்ல உத்தேசித்துக் கோபங்கொண்டு பிரமாஸ்திரத்தைப் பிரயோகம் செய்யத் தொடங்கினன். அதைக் கண்ட தேவியாகிய விஷ்ணுமூர்த்தி "பிரமனே, நானு உன்னுடைய காவலாளிகளைக் கொல்லுவேன்? அவர்களைக் கொன்றவர் உருத்திரமூர்த்தியே. அவர் இப்பொழுது தான் போயினர். அவரை நீ பார்க்கவில்லையா? அவர் உன்னுடைய பின்புறத்திற்றான் ஓடுகின்றார். திரும்பிப்பாரும்; பாரும்" என்று தமது இரண்டு கரங்களையும் நீட்டினர். உடனே பிரமன் திரும்பிப் பார்த்தனன். அவன் திரும்பிப் பார்ப்பதற்கு முன் விஷ்ணுமூர்த்தியாய்க் கூறிய தேவியே அப்பிரமன் கண்ணுக்குத் தோன்ற உருத்திரமூர்த்தியாய் வாயுதிக்கை நோக்கிச் சென்றனர். அதனையறியாத பிரமன் தன்னெதிரில்நின்ற விஷ்ணுமூர்த்தியைப் பார்த்து "நீர் அவர்களைக் கொன்றதாக நானே அனுமானித்து வந்தேனேயன்றி நீர் 'கொன்றவரன்று'" என்று சொல்லிவிட்டு வாயுதிக்கைத் திரும்பிப் பார்த்தனன். அந்தத் திக்கில் காலகாலரூபியாயும், அதிபயங்கரராயும், அகோரரூபியாயும், சூலபாசபாணியாயும் இருக்கிற பைரவரூபியாய் ஓடுவதைக்கண்டு 'இவர்தாம் கொன்றிருக்கவேண்டும்' என்று எண்ணிக் கோபத்துடன் அவரைச் சமீபித்தனன். அங்கு உருத்திரமூர்த்தியாய்த் தோன்றிய தேவி அப் பிரமனைப் பார்த்து "பிரமனே, உனக்கு எதனால் கண் சிவந்திருக்கின்றது? உனக்கென்ன கோபம்?" என்று கேட்கப் பிரமன் ஒன்றுஞ் சொல்லாது நின்றனன். அப்பொழுது உருத்திரமூர்த்தியாகிய தேவி கோபித்தவன்போல் பாசுபதாஸ்திரத்தைத் தாங்கித் திவ்ய தேஜஸோடும் ஆகாயத்தில் பிரகாசித்து மறைந்து போயினள். அதுகண்ட பிரமன் ஆச்சரியமடைந்து 'உருத்திரமூர்த்திதான் கொன்றவர்' என்று சொன்ன விஷ்ணுமூர்த்தியைத் திரும்பிப் பார்த்தனன். அவரும் ஆகாயத்தில் மறைந்துபோயி

னர். அதுகண்ட பிரமன் 'நாம் அக்னிமூலையிற்கண்ட திருமாலை யுங்காண்கிலோம்; வாயுமூலையிற்கண்ட உருத்திரனையுங் காண்கி லோம்; இவ்விரண்டு உருவங்களையும் காட்டியது எதுவோ' என்று ஒன்றுந் தோன்றாது நடுக்குற்றுப் 'பிராணன் தப்பினும் போதும்' என்று தன்னுலகம் போய்ச் சேர்ந்தனன்.

அதுமுதல் இவை காஞ்சி நகரத்தில் வாயுமூலையிற் காட்டிய பெருமானது ஆம்ர (மா) விருக்ஷரூபமாய் எக்காலத்தும் அழி வில்லாமற்றோன்றி ஏகாம்பரம் எனவும், அதுபோலவே அந்த வாயுதிக்குக்கு நேராகிய அக்கினிதிக்கில் காட்டிய விஷ்ணுரூபமா னது பிரமன் அசுவமேதம் செய்யத்தொடங்கிய காலத்து அந்த யாகாக்கினியில் திவ்ய தேஜஸோடு தோன்றி வரதராஜமூர்த்தி எனவும், இந்த இரண்டு உருவங்களையும் காட்டியது யாதொரு சக்தியோ, அது அந்த இரண்டிடத்துக்கும் மத்தியிலுள்ள பிலா காச ஸ்தானத்திற்றோன்றிக் காமாக்ஷி தேவி எனவும் பிரகாசித்துக் கொண்டு விளங்குகின்றன.

முதல் அத்தியாயம் முற்றிற்று.

---

ஸ்ரீ காமாக்ஷி தேவ்யை நம:

## இரண்டாம் அத்தியாயம்.

விஷய சூசனை.

இந்த அத்தியாயம் வரதராஜருடைய க்ஷேத்திரத்தினெல்லை "ஷேத் திராங்கி என்னும் தூர்க்காலயம் முதல் நரசிம்மாலயம் வரையில்" எனவும், அவ்வெல்லைக்குள் முக்கியமான தூர்க்காலயம் நான்கு எனவும், சிவாலயம் மூன்று எனவும், விஷ்ணுவாலயம் எட்டு எனவும், முத்திரைகள் ஐந்து எனவும், தீர்த்தங்கள் நான்கு எனவும், இவற்றின் வரலாறுகள் இவை என வும் அறிவிப்பது.

## விஷ்ணு க்ஷேத்திர வரலாறு.

காஞ்சி க்ஷேத்திரத்தின்கண் பராசக்தியானவள் பிரமதேவன் காணும்படி அக்னிதிக்கில் வரதராஜமூர்த்தியாய் நின்றனளாதலால் அது விஷ்ணுக்ஷேத்திரம் எனவும், விஷ்ணுசாலை எனவும் பெயர் பெற்றது. இதற்குப் பெயர் ஐந்து. அவையாவன :—

1. ஹரி க்ஷேத்திரம். 2. புண்ணியகோடி க்ஷேத்திரம். 3. வைகுண்ட க்ஷேத்திரம். 4. ஹஸ்திசைல க்ஷேத்திரம். † 5. திரிஸ்ரோத க்ஷேத்திரம். என.

## இதன் எல்லை.

* சந்திரபுஷ்கரணி தீரத்தில் வீற்றிருக்கும் க்ஷேத்திராங்கி என்னும் அர்ச்சைக்கு 25 அம்சம் அக்னிதிக்கிலுள்ள
சத்தியநாதராலயமே கிழக்கெல்லை.

சத்தியநாதராலயத்துக்கு 25 அம்சம் தெற்கிலுள்ள
¶ பாஞ்சாலிகை ஆலயமே தெற்கெல்லை.

பாஞ்சாலிகை ஆலயத்துக்கு 32 அம்சம் மேற்கிலுள்ள
நரசிம்மராலயமே மேற்கெல்லை.

நரசிம்மாலயத்துக்கு 32 அம்சம் வடக்கிலுள்ள
§ க்ஷேத்திராங்கி ஆலயமே வடக்கெல்லை.

இந்த நான்கெல்லைக்கு உட்பட்ட பிரதேசமே விஷ்ணுசாலை எனப்படும்.

---

† சிவபெருமானால் தேவலோகத்தினின்றும் பெருகிய கங்கை மூன்று பிரிவாய்த் "திரிபதா" என்கிற பெயர்பெற்றுச் செல்வதுபோலும் காஞ்சியில் தேவியினால் சத்தியமலையினின்றும் பெருகிய க்ஷீரநதியானது பாகுநதி குண்டலினிநதி என்கிற இரண்டு நதிகளோடு கலந்து மூன்றாய் வருதலால் "திரிஸ்ரோதா" என்கிற பெயர்பெற்றது. பாகுநதி என்பது சேயாறு எனவும், குண்டலினி நதி என்பது வேகவதி எனவும் வழங்குகின்றன.

* சந்திரபுஷ்கரணி என்பது வெள்ளைக்குளம் என வழங்குகின்றது.

¶ இவ்வம்மை துரோபதை என வழங்கப்படுகின்றனள்.

§ இவ்வம்மை குதிரைப் பலிகொண்ட கோயிலாத்தாள் என வழங்கப்படுகின்றனள்.

இவ்வெல்லைக்குள் க்ஷேத்திராங்கிக்கு 32 அம்சம் ஆக்னேயத்திலுள்ளவர் || வலம்புரி விநாயகர்.

வலம்புரிவிநாயகரின் ஓரம்சம் கிழக்கிலுள்ளவர் சுப்பிரமணியக் கடவுள்.

## தூர்க்காலயம் 4.

மூற்கூறிய சுப்பிரமணியாலயத்துக்கு 2 அம்சம் தெற்கிலுள்ளது பாஞ்சாலிகை கோயில்.

பாஞ்சாலிகை ஆலயத்துக்கு 15 அம்சம் வாயுதிக்கிலுள்ளது க்ஷேத்திராங்கி கோயில்.

க்ஷேத்திராங்கி ஆலயத்துக்கு 10 அம்சம் தெற்கிலுள்ளது கம்புதாரணி கோயில்

கம்புதாரணி ஆலயத்துக்கு 48 அம்சம் அக்னிதிக்கிலுள்ளது ‡ பாஞும்பிகை கோயில்

## சிவாலயம் 3.

பாஞும்பிகை ஆலயத்துக்கு 4 அம்சம் தெற்கிலுள்ளது புண்ணியகோடீசர் ஆலயம் (1)

புண்ணியகோடீசர் ஆலயத்துக்கு 15 அம்சம் வாயுதிக்கிலுள்ளது மணிகண்டீசர் ஆலயம் (2)

மணிகண்டீசர் ஆலயத்துக்கு 10 அம்சம் வடக்கிலுள்ளது சத்தியநாதீசர் ஆலயம். (3)

## வ ர லா று.

ஸ்ரீராமன் வலம்புரி விநாயகரைத் தான் செய்யத்தொடங்கிய அசுவமேதத்திற்கு வரும் இடையூறுகளைப் போக்குவதற்கும், சுப்பிரமணியக் கடவுளைச் சாதகாசாரியாக இருத்தற்கும், பாஞ்சாலிகையைச் சுவாஸினி (சுமங்கலி) பூஜைக்கும், அசுவமேதத்துக்குக் கொண்டுவந்த குதிரையைக் களவிலும் கொண்டுபோன

---

|| வலம்புரி விநாயகரும் சுப்பிரமணியக்கடவுளும் வரதராஜர் கோயிலிலுள்ளவர்கள்.

‡ இவ்வம்மை கிராமரக்ஷணி எனவும், வேலாத்தாள் எனவும், வழங்கப்படுகின்றனள்.

அயாசனைப் பலிகொண்ட க்ஷேத்திராங்கியைப் பலி சொன்வதற்கும், விஷ்ணுமூர்த்தியைப் பூஜித்து அவரிடத்தில் சங்கினைப் பெற்ற கம்புதாரணியையும் பாணும்பிகையையும் யாகத்திற்குக் காவலாக விருத்தற்கும், புண்ணியகோடீசரை யாகாரம்பத்தில் பூஜிப்பதற்கும், மணிகண்டீசரையும் இந்திரன் தனக்கு வந்த யோனியன் என்னும் பெயர்போய் ஸஹஸ்ராக்ஷன் என்னும் பெயர் வரப்பூஜித்த சத்தியநாதீசரையும், அவுத்காதா(உபதேஷ்டா)க்களாகவிருந்து மந்திரங்களை எடுத்து உரக்க உச்சரிப்பதற்கும் அந்தந்த ஸ்தானங்களில் அமைத்துக் கொண்டனன்.

## விஷ்ணுவாலயம் 8.

சத்தியநாதீசருக்கு 12 அம்சம் தெற்கு திக்கிலுள்ளது
யதோக்தகாரிசந்நிதி (1)
யதோக்தகாரிசந்நிதிக்கு 5 அம்சம் அக்கினி திக்கிலுள்ளது
குகாநரசிம்மர் சந்நிதி (2)
குகாநரஸிம்மர் ஸந்நிதிக்கு 5 அம்சம் நிருதி திக்கிலுள்ளது
அஷ்டபுஜர்சந்நிதி (3)
அஷ்டபுஜர் சந்நிதிக்கு 5 அம்சம் வாயு திக்கிலுள்ளது
வித்யாகுண்டர் சந்நிதி (4)
வித்தியாகுண்டர் சந்நிதிக்கு 5 அம்சம் தெற்கிலுள்ளது
* நரசிம்மர் சந்நிதி (5)
நரசிம்மர் சந்நிதிக்கு 7 அம்சம் வடக்குதிக்கிலுள்ளது
தீபப்பிரகாசர் ஸந்நிதி (6)
தீபப்பிரகாச சந்நிதிக்கு 21 அம்சம் வடக்கு திக்கிலுள்ளது
வைகுண்டர் சந்நிதி (7)
வைகுண்டர் சந்நிதிக்கு 5 அம்சம் வடக்கிலுள்ளது
பவளவண்ணர் சந்நிதி. (8)

## வரலாறு.

'யதோக்தகாரிப்பெருமாள்' பிரமன் செய்யத்தொடங்கிய யாகத்தை அழிக்கவெண்ணி; 'வேகவதி' என்னும் நதிரூபமாய் வந்த

---

* இது நரசிங்கப் பெருமாள் என வழங்கும்

சாஸ்வதியின் கர்வத்தையடக்கும் பொருட்டு, கிர்வாணியாய்ச் சயனித்திருந்தவர். 'குகாநரசிம்மப் பெருமாள்' இந்திரன் சாபத்தால் † கஜேந்திரனுன காலத்தில் வரதராஜர் சந்நிதியில் வந்து தனது ஹிருதய குகையில் பூஜிக்கப்பட்டவர். 'அஷ்டபுஜப்பெருமாள்' மாயை என்னுங்காளியோடு போர் செய்து அவளைக் கீழே தள்ளிச் சிரசின்மேல் வீற்றிருப்பவர். 'வித்தியாகுண்டப் பெருமாள்' முன் சொன்ன சாஸ்வதியின் மானத்தைப் போக்க வந்த காலத்தில் அவளால் பூஜிக்கப்பட்டவர். 'நரசிம்மப் பெருமாள்' பூர்வத்தில் கபாலி என்பவனைக் கொன்று அவனால் விடப்பட்ட அஸ்திரங்களை விழுங்கி ஜீர்ணமாக்கிக்கொண்டவர். 'தீபப்பிரகாசப்பெருமாள்' பூர்வத்தில் மாயாலன்என்பவனை தீபம்போல் தமது கரத்திற்றூக்கினவர். 'வைகுண்டப் பெருமாள்' தன்மராஜனுக்கு வைகுண்ட தரிசனங்காட்டினவர். 'பவளவண்ணப் பெருமாள்' பூர்வத்தில் அசுரர்களுடைய ரத்தத்தைப் பானம் செய்தவர்.

## † முத்திரை 5.

முன்சொன்ன பவளவண்ணர் சந்நிதிக்கு 46 அம்சம், அக்னி திக்கில் வரதராஜப்பெருமாளிடம் (1)

வரதராஜப்பெருமாளுக்குப் பின்பக்கத்தில் 1 அம்சம்கிழக்கு திக்கில் இரண்டு பல்லிகளிடம் (2)

பல்லிகளுக்கு 2 அம்சம் கிழக்குதிக்கில் இருபத்து நான்கு படிகள் (3)

அப்படிகளுக்கு 1 அம்சம் மேற்குதிக்கில் இலக்ஷ்மிதேவி வீற்றிருக்கும் அர்த்தாசனம் (4)

இந்த அர்த்தாசனத்துக்குச் சமீபம் 1 அம்சம் ஈசானதிக்கில் புண்ணியகோடி விமானம் (5)

### வரலாறு.

'வரதராஜப்பெருமாளுக்குப் பூதேவியார் அளவிறந்த புஷ்பங்களைக் கொடுத்து அவரை விவாகஞ் செய்துகொண்டனர்.

† யானையான காலத்தில்

இரண்டு பல்லிகள்' பூர்வஜன்மத்தில் பிராம்மணர்களாயிருந்து சாபத்தால் பல்லிகளாயின; 'இருபத்துநான்குபடிகள்' வரதராஜர் சந்நிதிக்குப்போகும் வழியாக முன் தேவசில்பியால் நிர்மிக்கப்பட்டவை; 'அர்த்தாஸனம்' லக்ஷ்மிதேவியானவள் தன்னை வரதராஜமூர்த்தி விவாகஞ் செய்துகொள்ள வீற்றிருந்த இடம்; 'புண்ணியகோடி விமானம்' வரதராஜமூர்த்தி எழுந்தருளியிருப்பதற்கு இந்திரனால் அனுப்பப்பட்டது.

## தீர்த்தம் 4.

புண்ணியகோடி விமானத்துக்கு 2 அம்சம் ஈசானதிக்கில் அனந்தசரசு (1)

அனந்தசரசுக்கு 2 அம்சம் வாயுதிக்கில் பக்தோதயசரசு (2)

பக்தோதயசரசுக்கு 3 அம்சம் வடக்கு திக்கில் இந்திர தீர்த்தம் (3)

இந்திர தீர்த்தத்துக்கு 25 அம்சம் அக்னி திக்கில் பாஞ்சாலிகை தீர்த்தம் (4)

### வரலாறு.

'அனந்தஸரசில்' முன் ஆதிசேஷன் ஸ்நானஞ்செய்து பூமியைத் தாங்கும் வல்லமைத்தைப் பெற்றனன்; 'பக்தோதயசரசு' விஷ்ணு பக்தர்கள் ஸ்நானம் செய்தால் அவர்களுக்கு ஸர்வ பாபங்களையும் போக்குவது; 'இந்திர தீர்த்தத்தில்' இந்திரன் ஸ்நானஞ்செய்து ஆயிரம் கண் பெற்றனன்; 'பாஞ்சாலிகை தீர்த்தம்' காளிகாதேவியின் பொருட்டு விஷ்ணுமூர்த்தியினது சுதரிசனம் என்னும் சக்கரத்தினால் உண்டாக்கப்பட்டது.

ஆக விஷ்ணுக்ஷேத்திரமாகிய இவ்வெல்லையில் உள்ளவை விநாயகராலயம் 1. ஸ்கந்தராலயம் 1. துர்க்காலயம் 4. சிவாலயம் 3. விஷ்ணுவாலயம் 8. முத்திரை 5. தீர்த்தம் 4.

இந்த விஷ்ணுசாலையில் இவையெல்லாம் தேவிரிஷிகளுடைய ஆக்ஞையினால் எப்பொழுதும் காணப்பட்டுவருகின்றன. இதில் வசிப்போர்க்குவைகுண்டவாசபலமுண்டாமாதலால் இது பூலோக வைகுண்டம் எனப் பெயர்பெற்றது.

---

† அடையாளம்.

## தீர்த்தபலன்.

அனந்த தீர்த்தத்தில் திருமாலுக்குப் பிரீதியாகிய சனிவாரத்தில் ஸ்நானஞ் செய்வோருக்குக் காவேரியில் ஸ்நானம் செய்த பலனுண்டாகுமென்று ஆதிசேஷனும்; பக்தோதய தீர்த்தத்தில் ஏகாதசி திதியில் ஸ்நானம் செய்வோருக்குத் திருப்பாற்கடலில் ஸ்நானம்செய்த பலனுண்டாகுமென்று வரதராஜ மூர்த்தியும்; இந்திரதீர்த்தத்தில் புதவாரத்தில் ஸ்நானம் செய்வோர்க்கு யமுனாநதிஸ்நான பலமும், இந்திரபதமும்உண்டாகுமென்று இந்திரனும்; பாஞ்சாலிகா தீர்த்தத்தில் திருவோணம் கேட்டை ஆகிய நக்ஷத்திரங்களில் ஸ்நானம்செய்தால் விரஜாநதியில் ஸ்நானம் செய்த பலனும், சகல ஐசுவரியமுமுண்டாமென்று காளிகாதேவியும் வரங்கொடுத்தனர். இந்த விஷ்ணு க்ஷேத்திரமாகிய பூவைகுண்டத்தில் வசிப்பவர் விஷ்ணுபதத்தையடைவர் இதில் சந்தேகமில்லை.

## கர்க்கிரிவரலாறு.

சிந்துதீரத்தில் பாணகுண்டம் என்கிற கிராமத்தில் வசிஷ்ட கோத்ரக்ஞரும், ருக்வேதியருமான கர்க்கிரி என்னும் ஓர் அந்தணர் இருந்தனர். அவர் நித்யகர்மமான சந்தியாவந்தனாதிகளையும், பிதுர்க்கர்மாதிகளையும் கைவிட்டுப் பிறர் பொருளைக் கவர்வதிலும் பாரதாரகமனத்திலும், எப்பொழுதும் பிறர் போஜனத்தையே விரும்புவதிலும் ஏனைய பாபச்செயல்களைச் செய்வதிலும் மனமூக்கமுடையவராயும், சாமர்த்தியமுடையவராயுமிருந்தனர். அவர் சித்திரை மாதத்தில் மார்க்கத்திலுள்ள நெல்லிமரங்களிலேறி அக்கனிகளைப் பறித்துக்கொண்டிருக்கும் பொழுது காஞ்சிநகரத்தில் ஹரிக்ஷேத்திரவாசியாராகிய ஓரந்தணர் அம்மார்க்கமாக மிகுந்த தாகத்தோடு செல்லும்பொழுது அவருடைய தாகத்தைப் பார்த்து "ஓ பிராமணரே, நீர் தாகத்தோடு போவதாய்த் தெரிகின்றது; ஆகையால் நான் நெல்லிக்கனி தருகின்றேன்; அதைத் தின்பீராகில் தாகம் தீரும்" என்று கூறி ஒரு பிடியளவு நெல்லிக்கனியைத்தந்து "இதோ ஒரு தடாகமிருக்கின்றது" என்று தடாகத்தையும் சுட்டிக்காட்டித் தம்மூருக்குச் சென்றனர். நெல்லிக்கனியைப் பெற்ற அப்பிராமணர் அக்கனியை உண்டு தடாகத்தில் தண்ணீரையும் பருகித் தாகந்தணியப்பெற்று யாத்திரையாகச் சென்றனர்.

சில காலங்கழித்து நெல்லிக்கனி தந்த அந்தப் பிராமணர் மரணமடைய, அவரைக் காலதூதர்கள் சமீபித்துக்கொண்டு போவதற்கு நடுங்கினவர்களாய் "இவன் மஹாபாவி" என்று பேரொலியிட்டு 'என் செய்வோம்' என்றேங்கினவர்களாய்க் கால பாசத்தாற் கட்டித்தண்டத்தால் அடித்தடித்து யமலோகத்துக்குக் கொண்டுபோய் விட்டனர். அப்பொழுது விஷ்ணுதூதர்கள் வந்து யமதூதர்களைத் தண்டித்து "இவன் புண்ணியசாலி; இவனை நீங்கள் அடிக்கவும், பாசத்தாற் கட்டவுமாயிற்றோ? இது நன்றாயிருந்தது" என்று அவரைக் கட்டிய பாசத்தை அவிழ்த்துப் புஷ்பவிமானத்திலேற்றி உபசார மரியாதைகளோடும் பரமபதங் கொண்டுபோய் நாராயணரிடத்தில் விட்டனர்.

இச்செய்தியை இயமனறிந்து வைகுண்டத்துக்குப்போய் நாராயணமூர்த்தியைக்கண்டு "இந்தப் பிராமணன் என்ன புண்ணியம் செய்தனன்? இவன் செய்தவை எல்லாம் பாபமே. ஆகையால் எனது லோகத்தில்என்வசமாயிருக்கத்தக்கவன்" என்றுகூற நாராயணர் இயமனைப்பார்த்துக் "காஞ்சிக்ஷேத்திரத்தில் ஆக்னேய திக்கிலுள்ள பூலோக வைகுண்டத்தில் இந்தப்பிராமணன் ஒரு புண்ணியத்தைச் செய்திருக்கின்றனன். அஃது ஒன்று அனந்தமாய் அவன் செய்த பாவங்களையெல்லாம் போக்கி இந்தவைகுண்டத்துக்குவரும் புண்ணியசீலர்களுள் ஒருவனுக்கியது. அவன் செய்த புண்ணியம் என்னவெனில் முன்சொல்லிய எனது க்ஷேத்திரத்திலிருந்து யாத்திரையாக ஒரு பிராமணன் தாகத்தோடு செல்லும்பொழுது அவன் தாகம்தணிவதற்குத்தான்வைத்திருந்த நெல்லிக்கனியிற் சிலகொடுத்து ஒரு தடாகத்தையுங்காட்டினன். பின் அந்தப்பிராமணன் உண்டகனியும் பானம்செய்த நீரும் எனக்கே அர்ப்பணமாயின. ஏனென்றால் அந்த இடத்தில் வசிப்பவரெல்லாம் யானேயன்றி வேறில்லை. இனி நீவந்தவழியைப் பார்த்துக்கொண்டு ஏகலாம்" என்றுகூற, இயமன் பயந்து நாராயணனையும் அந்தப்பிராம்மணனையும் பலமுறையும் வணங்கி "என்னால் நேரிட்ட அபராதத்தைப் பொறுத்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்துக்கொண்டு தன்னுடைய உலகம்போய்ச் சேர்ந்தான்.

இரண்டாவது அத்தியாயம்
விஷ்ணுக்ஷேத்திர வரலாறு முடிவுபெற்றது.

ஸ்ரீ காமாக்ஷி தேவ்யை நம:

# மூன்றாவது அத்தியாயம்.

## விஷய சூசனை.

[இந்த அத்தியாயம் இலக்ஷ்மிதேவி சரஸ்வதி இவ்விருவரும் தங்கள் தங்களுக்கே பெருமையுடைத்தென்பதையும் நாட்டிக்கொள்ள இந்திரனை வினவ, அப்பொழுது சரஸ்வதியால் அவனுக்கு வந்த சாப உருவே வரத ராஜப்பெருமாள் வீற்றிருக்கின்ற அத்திகிரி எனவும்; அந்த அத்திகிரியில் நரசிம்மர் குகாநரசிம்மராய் வீற்றிருக்கக் காரணம் இது எனவும்; பெருமாள் சந்நிதிக்குப் பின்பக்கத்தில் இரண்டுபல்லிகள் இருக்குங்காரணம் இது எனவும் இவற்றின் வரலாறுகள் இவை எனவும் விளக்குவது.]

## அத்திகிரி வரலாறு.

புண்ணிய கோடிகள் வசிப்பதனால் புண்ணியகோடி எனப் பெயர் பெற்ற அத்திகிரியானது பாஞ்சாலிகை என்னும் தீர்த்தத்திற்கு 2 அம்ச தூரம் வாயு திக்கிலிருப்பது அவ்விஷ்ணுக்ஷேத்திரத்திற்கு அலங்காரமாகவுள்ள இந்தக்கிரி முன்னொரு காலத்தில் இந்திரன் சாபத்தாலடைந்த யானை உருவமாதலால் அத்திகிரி எனப்பெயர் பெற்றது.

சரஸ்வதிதேவி 'இவ்வுலகத்துக்கு வேண்டிய 64 வித்தைகளுக்கும் நாம் மூலகாரணியாயிருப்பதனால் நாமே சிறந்தவள்; நமக்குச் சமானமானவர் இங்கொருவருமில்லை' என்று ஒருவரையும் மதியாது இறுமாந்து உலாவிவந்தனள். இச்சரஸ்வதி தேவியைப் போலவே இலக்ஷ்மி தேவியும் 'உலகத்துக்கு வேண்டிய சகல பாக்கியங்களுக்கும் நாம் மூலகாரணியாயிருப்பதனால் நாமே சிறந்தவள். நமக்கு சமானமானவர் எவ்வுலகினுமில்லை.' என்று ஒருவரையும் மதிக்காது இறுமாந்துலாவிவந்தனள். இவ்விருவரும் ஒருகால் சந்தித்துக்கொள்ள அக்கால் அவருள் இலக்ஷ்மிதேவி சரஸ்வதி தேவியைப் பார்த்து "நீ இறுமாந்து வருகின்றனையே; உனக்கு என்ன பெருமை இருக்கின்றது? நீ என் முன் இப்படியும் வரலாமோ?" என்று கூறினள். அதுபோலவே சரஸ்வதி

தேவியும் இலக்ஷ்மிதேவியைப் பார்த்துக் கூறினள். பின் இருவருக்கும் பெருங்கலகம் விளைந்து சுவர்க்கலோகமடைந்து இந்திரனைப் பார்த்து "இந்திரனே, எங்களிருவருள் யார் சிறந்தவள்? நீ நியாய விரோதமின்றி நடுவு நிலைமையாய் நின்று கூறுவாய்" என்றனர். இந்திரன் சரஸ்வதி தேவியைப் பார்த்து "சகல கலா வல்லி, இலக்ஷ்மிதேவி மண்ணுலகத்தாருக்கும் விண்ணுலகத்தாருக்கும் சகலஸம்பத்தையும் கொடுக்கும் தெய்வமாயிருக்கின்றாள்; அன்றியும், விஷ்ணு மூர்த்திக்குப் பத்தினி; உனக்கு மாமி; உலகத்தாருக்குத் தாய்; ஆகையால், இச்செந்தாமரையாளே சிறந்தவள்" என்றனன். அது கேட்ட வெண்டாமரையாள் மிகவும் கோபங்கொண்டு "நீ நியாய விரோதமாய்க் கூறினமையால் நானிடும் சாபத்துக்கு உள்ளாவாய். உனது ஸம்பத்தை நிலை நிறுத்திக்கொள்வதற்கல்லவா இப்பொழுது இலக்ஷ்மியைச் சிறப்பாகக் கூறினை. நியாயமறியாத உன்னிடம் யான் வந்தது என் அறியாமையே" எனக் கூறித் தனது மனத்தில் "இவ்விந்திரன் மிக அகங்காரியாயும், துஷ்ட சித்தமுடையவனாயும், முழுமூடனாயும் இருக்கின்றான். இவனை இப்படியாக்கியது இவன் படைத்திருக்கும் தனகர்வமல்லவா?" என்றெண்ணி 'இவனை எவ்விதத்திலாவது நமது சாபத்திற்குள்ளாக்க வேண்டும்' என்றாலோசித்து இந்திரனை நோக்கி "ஓ, இந்திர, நீ பெற்றிருக்கும் ஐசுவரிய மதத்தினால் என்னைச்சிறந்தவள் என்று கூறுவதற்கு உனது நாவெழாமற்போயிற்றல்லவா. ஆனபடியால் நீ மதமுடைய யானையாகக்கடவாய்" என்று சபித்துப் போயினள்.

அதுகேட்ட இலக்ஷ்மிதேவி இந்திரனைப்பார்த்து "ஓ, இந்திர, உனக்கு இச்சாபம் தீரும் உபாயம் ஒன்றைக்கூறுகின்றேன். என்னஎனில் வரதராஜர் வீற்றிருக்கும் ஹரிக்ஷேத்திரத்தை அடையப் பெறுவையானால் இந்த யானைவடிவம் நீங்கும். நீ அந்த ஹரிக்ஷேத்திரத்தை அடைவதற்கு ஓர் உபாயத்தைக்கூறுகின்றேன். பூலோகத்தில் சிம்மாசலம்என்று ஒருபர்வதம் இருக்கின்றது. அப்பர்வதத்திற்குச்சமீபத்தில் தண்டகாரண்யம் என்றொரு ஆரண்யம் உள்ளது. அவ்வரண்யத்தில் விஷ்ணுபக்தனான பிரஹ்லாதன் என்பவன் ஒருவனிருக்கின்றான். அவனிடத்தில் நீ சென்று 32:எழுத்தோடு கூடிய நரசிம்மமந்திரத்தை உபதேசமுறையாகக் கேட்டு ஏகாக்கிரசித்தனாய்த் தியானம் செய்வையாயின் பூர்வக்

ஞானமும் வரதராஜ க்ஷேத்திரத்தை அடையும் புண்ணியமும் வன்மையும் பெற்று அந்த ஹரிக்ஷேத்திரத்தையடைந்து நரசிம்மமூர்த்தியினால் கஜவடிவம் நீங்கப் பெறுவாய்" என்று அனுக்கிரகம் செய்து சென்றனன். அவ்வாறே யானைவடிவமடைந்த இந்திரன் காஞ்சியில் ஹரிக்ஷேத்திரத்தையடைந்து நரசிம்மமூர்த்தியைத் தனது ஹ்ருதயத்தில் தியானம் செய்ய அவர் அவனது ஹ்ருதயத்தினின்றும் வெளிப்பட்டு அந்தக்கஜரூபத்தைத் தனது கைகளால் இரண்டாகப்பிளந்தனர். உடனே இந்திரன் சாபத்தினின்று நீங்கித் தனது உருவத்தைப் பெற்றுச் சென்றனன். நரசிம்மமூர்த்தி இந்திரனுடைய அந்தக்கஜ ரூபத்தைப் பர்வதமாக அநுக்கிரகம் செய்து கிழித்த ஹ்ருதயமாகிய விடத்தைக் குகையாகக் கொண்டு அதில் யோகிகளைப் போல் யோகாசனருடனாய் வீற்றிருந்ததனால் குஹா நரசிம்மர் எனப்பெயர் பெற்று விளங்குகின்றனர். வரதராஜமூர்த்தியும், அந்த யானை வடிவாகிய மலையின்மேல் வீற்றிருத்தலால் அத்திகிரிநாதர் என்று பெயர் பெற்றனர். அம்மலையும் அத்திகிரி எனப்பெயர் பெற்றது.

இந்திரன் குஹா நரசிம்மமூர்த்தியினால் சாபவிமோசனமுண்டாகிச் செல்லும் பொழுது அத்திகிரியினின்றும் இரண்டு சிறு பிள்ளைகள் வரக்கண்டனன், அவ்விருவரும் அதிசுந்தரமுடையவர்களாயும் வேதசாரமே பிழம்பாய்த் திரண்டிருப்பது போல பொலிவு பெற்றிருக்கும் திருமுகமண்டலம் உடையவர்களாயும் இருப்பதைப் பார்த்து அதிசயித்து அவர்களை நோக்கி "ஓ, சிறுவர்களே, நீங்கள் யாவர்? உங்களது ஆச்ரமம் எது? இவ்வழியாய் வரும் காரணம் என்னை? இம்மலையில் எப்பொழுது ஏறினீர்கள்? இவை எனக்குத் தெரிவியுங்கள்" என்றனன். "ஐயா, நாங்கள் பிருக்கிபோருடைய பிள்ளைகள். எங்கள் குலம் பிராமணகுலம், எங்களுக்குப் பெயர் ஹேமன், சுக்லன், எங்கள் சூத்திரம் வைகானச சூத்திரம், எங்கள் ஆச்ரமம் பிரமசரியாச்ரமம். எங்கள் ஆசாரியர் கௌதம முனிவர். யாங்கள் வியாகரண சூத்திரங்களிலும் மீமாம்ஸா சாஸ்திரங்களிலும் வல்லவர்கள். இதுவரையில் மரபு முதலியவற்றைக் கூறினோம்.

இனி வந்ததற்குக் காரணங் கூறுகின்றோம். கொங்கண தேசத்தில் எங்களாசாரியருடைய ஆச்ரமம். அவர் விஷ்ணுமூர்த்

தியின் பூஜை நிமித்தம் எங்களைப் பார்த்து தீர்த்தமும் சமித்தும் கொண்டுவரும்படி கட்டளையிட்டனர். யாங்கள் அவர் கட்டளைப்படி ஒரு சுத்தமான பாத்திரத்தில் தீர்த்தத்தை நிரப்பிப் பரிசுத்தமான இடத்தில் மூடாமல் வைத்து விட்டுச் சமித்துக்களுக்காக ஒரு மரத்தின் மேலேறிச் சமித்துக்களை யொடித்துக் கொண்டு கீழிறங்கித் தீர்த்தத்தையும் எடுத்துக்கொண்டு ஆச்ரமத்தையடைந்து ஆசிரியர் முன் தீர்த்தத்தை வைத்தோம். அப்பொழுது அத்தீர்த்தத்தினின்றும் ஒரு சிறிய பல்லி துள்ளி வெளியே விழுந்தது. நாங்கள் தீர்த்தத்தை மூடாமற்கொண்டு வந்து வைத்ததையும், அதினின்றும் பல்லி வெளியே குதித்ததையும் ஆசிரியர் கண்டு “அறிவிலிகளே, என்ன காரியம் செய்தீர்கள். நீங்கள் தீர்த்தத்தை மூடாமல் வைத்தபடியினாலல்லவா அதில் பல்லி விழுந்தது. இனி இத்தீர்த்தம் பூஜைக்காகாது. நீங்களும் பூஜைக்கு விக்கினம் செய்தவர்களானீர்கள்.” என்று கோபித்துப் ‘பல்லிகளாகப் போகக் கடவீர்கள்’ என்றும் சபித்தனர். “இந்திரனே, நாங்கள் அச்சாபத்தை பெற்றவர்களாய் வரதராஜர் வீற்றிருக்கின்ற இந்த மலையருகிலுள்ள விருக்ஷத்தில் பல்லிகளாய் வாழ்ந்திருந்தோம். உன்னுடைய கஜரூபத்தை நரஸிம்மமூர்த்தி பிளக்கின்ற காலத்தில் உனது துதிக்கையினால் நாங்கள் வாழ்ந்திருந்த மரத்தை முறித்தனை. அப்பொழுது இந்த அத்திகிரியினுடைய பின் பக்கத்தில் துள்ளிப் பாய்ந்தோம். உடனே சாபம் நீங்கப் பெற்றோம். இனிப்போய் வருகின்றோம்” என்று மீட்டும் சொல்ல, இந்திரன் மகிழ்ந்து அச்சிறுவர்களைக் கையினால் தடவிக் கொடுக்க அவர்கள் தங்களிடம் போய்ச் சேர்ந்தார்கள். பின் சாபம் நீங்கிய மகிமை விளங்கப் பொன்னினாலும் வெள்ளியினாலும் இரண்டு பல்லி உருவங்களை அமைத்து, மேலே பிரதிஷ்டை செய்து இவ்விடத்தில் இவ்விரண்டு பல்லிகளையும் கையினால் ஸ்பரிசித்து இவ்விடத்திற்றானே நின்று ‘எவர்கள் இந்த அத்திகிரியைத் தரிசனஞ் செய்கின்றார்களோ அவர்கள் ஏகாதசியில் அகோராத்திரம் ஹரிநாம சங்கீர்த்தனம் செய்ததையும் விரதபலனை யடையக்கடவர்கள்” என்று வரமளித்துச் சென்றனன். ஆகலான், ஹேமசுக்கிரர்களுடைய சாபம்நீங்குமாறுசெய்த அத்திகிரியைத் தெரிசிக்கப்பெற்றவர்களும்பரமபதத்தையடைவார்கள்.

## மஹிமை.

பூர்வத்தில் சரயு நதிக்கரையில் வசிக்கும் பாரத்துவாஜ குலத்தில் பிறந்த சுக்லவேதியனான கணு என்னும் பிராமணனொருவன் சகல சாஸ்திர சம்பன்னனாயும், தனுர் வித்தையில் சிறந்தவனாயும், பிராமணவேடத்தில் சிறிதும் குறையில்லாதவனாயும் இருந்தனன், அவன் பூர்வகர்மத்தால் பாவகர்மத்திலாசை யுடையவனாய் எப்பொழுதும் யாத்திரை செய்வதிலேயே மிகவிருப்பமுடையவன் போல் யாவருக்கும் புலப்படுத்தி யாத்திரார்த்தமாய்ச் செல்பவரோடு தானும் சென்று மலை, வனம், துர்க்கம் முதலியமறைவான இடங்களிற்போகுங்கால் தான்கற்றிருக்கும்வில்வித்தையினுடைய சாமர்த்தியத்தினால் ஒருவரையும் விடாது கொன்று, அவர்கள் பொருள்களைக் கொள்ளைகொண்டு தன்னிடஞ் சென்று மனைவி மக்களுடன் வாழ்ந்திருந்தனன். ஒரு நாள் இவன் முன் போல் யாத்திராவாசிகளைக் கொலை செய்கின்ற பொழுது அவர்களில் நைமிசாரண்யவாசியான ஒரு வீரனிருந்தனன். அவ்வீரன் இவ்வேதியன் செய்கையைக் கண்டு மனம் புழுங்கி அவனைப்பிடித்து இறுகக்கட்டி "நீ என் செய்கின்றாய்? இந்தக் கொலைத்தொழிற்கா இந்தப் பிராமண வேடம்?" என்று அவனை இகழ்ந்து கூறி "நீ கொலைத் தொழிற் பூண்டவனாயினும் பிராமண குலத்திற் பிறந்தவனாதலால் உன்னைக்கொலை செய்தல் பழுது" என்று கூறி ஒரு கத்தியையெடுத்து அவனது யக்ஞோபவீதத்தையும் சிகையையும் அறுத்துப் பின்னர் அவனைக்கட்டிய கட்டவிழ்த்து "இவ்வழியே ஓடிப் போவாய்; இனிஇவ்வழிஒருபொழுதும்திரும்பாதே" என்று அச்சுறுத்தி ஓட்டிவிட்டனன். அந்தப்பிராமணன் அவன் இறுக்கிய இறுக்கினால் சரீரம் புண்பட்டு ஓடிப்போவதற்கு முடியாமல் பையப்பைய நகர்ந்து தக்கோலம் என்கிற ஊரையடையும் பொழுது பூர்வபுண்ணியவசத்தால் இந்த அத்திகிரியைக் கண்டு மரணமடைந்தனன். அந்த அத்திகிரியினுடைய தரிசன விசேஷத்தால் விஷ்ணு தூதர்கள் வந்து அவனைத் திவ்யவிமானத்திலேற்றிக்கொண்டு விஷ்ணுலோகம் போய்ச் சேர்த்தார்கள்.

மூன்றாம் அத்தியாயம் அத்திகிரி வரலாறு முற்றிற்று.

ஸ்ரீ காமாக்ஷி தேவ்யை நம: —

# நான்காவது அத்தியாயம்.

——o——

## விஷயசூசனை.

——o——

[இந்த அத்தியாயம் அத்திகிரியில் திருமால் வரதராஜ மூர்த்தியாய் வருவதற்குக் காரணம் பிரமனுக்குச் சிருஷ்டித்தண்டம் கொடுத்தற்கு எனவும்; வேகவதி என்னும் நதி சிருஷ்டித்தண்டம் பெறுதற்குப் பிரமன் செய்யத்தொடங்கிய யாகத்தை அழித்தற்கு வந்த சரஸ்வதி தேவி எனவும்; அந்த நதியால் யாகத்துக்கு யாதொரு இடையூறும் வாராவண்ணம் வரத ராஜர் காத்தவகை இது எனவும்; இந்த அத்திகிரியில் வரதராஜப்பெருமாள் வைகுண்டம் முதலியவைகளைக் காட்டிலும் மிகப்பிரியமுடையரா யிருத்தற்குக் காரணம் இது எனவும் விளக்குவது.]

## வரதராஜமூர்த்தி வரலாறு,

சங்குசக்ர கதா தாரியாய், ச்யாமளவர்ணராய், ஸர்வாபரண பூஷிதராய், நீலமணிபோற் சுந்தரராய், செந்தாமரைக் கண்ணராய் ஸ்ரீவத்ஸராய், ஸ்ரீதராய், ஸ்ரீமானாய், பத்மாக்ஷராய். பத்மநாப ராய், இரத்னகர்ப்பராய், கிரீடகுண்டலதாரியாய்ச் சவ்யவாம பாகங்களில் ரமா பூமியாகிய மங்கையரிருவர் சாமரைகள் அசை க்கப் புண்ணியகோடி விமானத்தில் வீற்றிருந்து பிரமனுக்கும் தனது பக்த ஜனங்களுக்கும் சர்வாபீஷ்டங்களையும் கொடுக்கும் வரதராஜமூர்த்தி பிரமனுக்குச் சிருஷ்டி தண்டங்கொடுத்தவரலாற் றைக் கூறுகின்றேன்.

தாம் தாம் சிறந்தவராம் என்று வாதாடி முன்சென்ற சரஸ் வதி, இலக்ஷ்மி என்ற அவ்விருதேவியரும் அவ்வளவிலொழியாது மீளவுங் குரோதத்தையே மேற்கொண்டு பிரமனிடஞ்சென்று "எங்களிற் சிறந்தவள் யாவள்" என்று கேட்டனர். பிரமனும் இந்திரனைப்போலவே "இலக்ஷ்மியே சிறந்தவள்" என்று கூறி னன். அதுகேட்ட சரஸ்வதி கோபமடைந்து "இந்திரனைச் சபித்தோம்; இவர் கணவராயிருப்பதால் சபிக்கலாகாது" என்று எண்ணிப் பிரமதேவன் கையிலிருக்கும் விஷ்ணு மூர்த்தியினால் கொடுக்கப்பட்ட தனது அம்சமாகிய சிருஷ்டி தண்டத்தைப்

பிடுங்கித் தனது சரீரத்தில் ஒடுக்கிக்கொண்டு அவ்விடத்தில் இல்லாமற் சென்றனள்.

பிரமனுக்குப் பின் சிருஷ்டி செய்யும் வன்மையற்றுப் போகவே சர்வ சராசரங்களும் தோன்றுதல் இலவாயின. அதுகண்ட பிரமன், சித்தாகுலமடைந்து 'நம்முடைய பத்தினி என்ன செய்தாள்! நாம் வைத்திருந்த தண்டம் அவளுடைய அபசமாயிருந்தபடியினாலல்லவா அதனைப் பிடுங்கிக் கொண்டனள். ஆயினும்; அத்தண்டத்தைக் கொடுத்தவள் இவளல்லவே, விஷ்ணு மூர்த்தியல்லவா? நமக்குக் கொடுத்தவர், அதனை அவர்பாற் பெறுவோம்' என்றெண்ணி. 'இனி இந்தச் சரஸ்வதியால் நமக்காவதென்னை? அவளுடைய முகத்தையும் பார்க்கக்கூடாது' என்று குரோதம் கொண்டு இமயமலையையடைந்து விஷ்ணு மூர்த்தியை நோக்கித் தவம்செய்து வந்தனன்.

விஷ்ணுமூர்த்தி இவனது தவத்துக்கிரங்கிப் பிரசன்னராய்ப் "பிரமனே, யாது வேண்டித் தவம்செய்கின்றனை?" என்று வினவ, பிரமன் "என் தந்தையே, சிருஷ்டிநிமித்தம் உம்மால் கொடுக்கப்பட்ட தண்டத்தை வாணி தனது வன்மையால் அபகரித்துக் கொண்டனள். அதுமுதல் சிருஷ்டித்தொழில் நின்றுவிட்டது. இனி அத்தண்டமின்றி எவ்வாறு சிருஷ்டி செய்வேன்" என்றனன். திருமால் "நீ நூறு அசுவமேதயாகங்களை இளாவிருத்கண்டத்திற் செய்வையாயின் அத்தண்டம் கிடைக்கும். அங்கு நூறு யாகங்களைச் செய்ய முடியாததாயின், நூறு அசுவமேத பலனை ஓர் அசுவமேதம் செய்வதினாலேயே அடைவிக்கக்கூடிய ஒரு க்ஷேத்திரமிருக்கின்றது. அது ஸ்ரீ காஞ்சிபப்பதியாகும். அவ்விடத்திற்சென்று உத்தமோத்தமமாகிய அத்திகிரியின் முன் பிரதேசத்திலிருந்து ஓர் அசுவமேதம் செய்தால் இளாவிருத கண்டத்தில் நூறு அசுவமேதம் செய்த பலனுண்டாகும். இதில் சந்தேகமில்லை. ஆகையால் அசுவமேதம் நூறுவது ஒன்றுவது முன்குறித்த இடங்களிற் செய்வாயாகில் அந்த ஓமகுண்டத்தில் நான் வெளிப்பட்டுவந்து சிருஷ்டிதண்டம் தருகின்றேன். இதில் ஐயமில்லை. இனி இளாவிருதகண்டத்திலாவது காஞ்சியில் விஷ்ணு க்ஷேத்திரத்திலாவது செய்வாயாக. உன்னுடைய இஷ்டம்" என்று அனுக்கிரகம் செய்து மறைந்து போயினர்.

பிரமன் மகிழ்ந்து ஓர் அசுவமேதத்தையே செய்ய உத்தேசித்து அதிக விரைவாய் அத்திகிரியையடைந்தான்; அந்தகிரிக்கு மேற் பக்கத்தில் நரசிம்மருடைய சந்நிதியில் தேவசில்பியைக் கொண்டு விதிப்படி குண்டம் அமைத்தான், ஒருவருஷம் செய்யத்தக்க இந்தயாகம் நிர்விக்கினமாய் நிறைவேற வேண்டுமென்று விக்னேசுவரப் பிரார்த்தனை செய்து விதி முறையாக அந்தயாகத்துக்கு உரிய லக்ஷணம் அமைந்துள்ள அசுவத்தைக் கொண்டு வந்தான்; அபிஷேக அலங்காரங்கள் செய்து நீலமும் சுவர்ணமயமாயுமுள்ள வஸ்திரங்களால் அலங்கரித்தான், அதன் மத்தகத்தில் பொன் பட்டத்தைக்கட்டி நேத்திரபடம் தரித்து யதேச்சையாகப் போகும்படிச் செய்தான், யக்ஷகந்தர்வ ராக்ஷஸர்களால் யாதொரு தீங்கும் வாராவண்ணம் காத்து அதனை மீட்டுக்கொண்டு வரச் செய்தான், யாகசாலையிலுள்ள யூபஸ்தம்பத்தில் கட்டினான். அதன் காதில் "தத்சக்ஷுஷா" என்னும் மந்திரத்தினால் நேத்திர படத்தை அவிழ்த்துத் தன்னுடைய பீடத்தில் தர்ப்பத்தினியை ஆவாகித்துக்கொண்டு பின்னர்ச் சுப்பிரமணியக்கடவுளைச் சாதகராகவும், மணிகண்டேசுரை உத்காதாவாகவும், வருணனைச் சோமமாகவும், எமதர்மராஜனைச் சஸ்திரமாகவும், சாதான்ஹிகரைப் புரோகிதராகவும், இருஷிகள் முதலான தேவகந்தர்வ யக்ஷகின்னர அப்சர சித்த சாத்தியர்களை ஏனைய தொழில்களைச் செய்வோர்களாகவும், கறுத்பக்ஷர், க்ஷேத்திரபாலகர் யோகினியர் முதலியோரை யாகரக்ஷார்த்தமாகவும் அந்தந்த ஸ்தானங்களில் ஏற்படுத்திக்கொண்டு யாகம் செய்ய எத்தனித்தான், "ஷட்பாயவாம்சகை" என்பதாதி மந்திரங்களால் கலாஸ்தானங்களாகிய ஷடங்கங்களில் அந்த அந்த அங்கதேவதைகளைப் பூஜித்து வபைகளை எடுத்தான்; யாகாங்க தேவதைகளை உத்தேசித்து ஹோமம் செய்யத் தொடங்கினான்.

இச்செய்தியைச் சரஸ்வதிதேவி யறிந்து 'பத்னியுக்தமாகச் செய்ய வேண்டிய யாகத்தைப் பத்னியில்லாமலே செய்யத்துணிந்தது மிகநன்று, இவ்விதியை எங்குக்கண்டனர்! இதுதானோ இவர் விதி என்று பெயர் படைத்ததற்கு லக்ஷணம்! இது யாருடைய கற்பனையோ!' என்று பலவாறாக எண்ணி அடங்காதக் குரோதங் கொண்டு 'ஆ! ஆ! இவரை விட்டேனோ? யாகத்தை முடிக்கச்

செய்வேனா!! அப்படி முடிக்கச்செய்ய விடுவேனாயின் நானும் கலைமங்கை யாவேனா!'' என்று பல வீர மொழிகளைப்பேசி மஹா கோபம் கொண்டு தனது மாயையினால் அளவிடப்படாத அக்னி ரூபியாயிருக்கின்ற மாயா அநலனையுண்டாக்கிப் பிரமன் யாகசாலைக்கு ஏவினள். அதுகண்ட விஷ்ணுமூர்த்தி அவ்வநலனை ஒரு கையில் தீபம்போல் ஏந்திக்கொண்டு தீபப்பிரகாசராயினர். பின் காலாஸ்திரத்தைப் பிரயோகம் செய்ய அதனைச் சிம்மரூபமாய்ப் பக்ஷித்து நரசிம்மராயினர். அதன்பின் அநேக அசுரர்களை ஏவ, அவர்களைக்கொன்று உதிரபானம்செய்து செந்நிறமடைந்து பவள வண்ணராயினர். அதன்பின் ஏவிய காளியைத் தனது எட்டுத் திருக்கரங்களாலும் பிடித்திறுக்கிப் பூமியிலேதள்ளி அவள் சிரசின்மேல் அட்டகாசமாய் வீற்றிருந்து அஷ்டபுஜராயினர். பின்னர்ச் சரஸ்வதி தன்னால் விடப்பட்டதும், விடப்பட்டவரும் விஷ்ணுமூர்த்தியினால் பாழ்படக்கண்டு 'இனி நாமே செல்வோம், இந்த விஷ்ணு என் செய்வார்பார்ப்போம்' என்று எண்ணி முன் மஹாதேவியை வெருட்ட அதிவேகமாய்ப்பெரும் வெள்ளங் கொண்டுவந்த கம்பைநதியும், நந்திமலையினின்றும் பெருவெள்ளமாய்ப் பெருக்கெடுத்துச் சமுத்திர சங்கமமாவதற்குச் சென்ற க்ஷீர நதியும் இப்பொழுதொன்றாகத்திரண்டு வருவதென்றெண்ணுமாறு மஹாப்பிரளயத்தோடும் அதிக வேகமாய் யாகசாலையை நோக்கி வந்தனள். அதுகண்ட விஷ்ணுமூர்த்தி இவ்வெள்ளம் சாக்ஷாத் சரஸ்வதி என்றே அறிந்து இவளைச் சுலபமாய்வென்றுவிடவேண்டு மென்றெண்ணினவராய் அவ்வெள்ளம் வரும் வழியிடையில் நிர்வாணியாய்க் குறுக்கே நன்றாய்க் கைகால்களை விரித்துப்படுத்துக் கொண்டனர்.

அவ்வலங்கோலத்தை வெள்ளரூபமாய் வருகின்ற சரஸ்வதி கண்டு 'இப்படியும் செய்வாருண்டோ! இதுவா ஆண்பிள்ளைத்தனம்! இவர்தான் ஆண்பிள்ளைத் தன்மையை விட்டாலும் நாம் பெண்தன்மையை விடலாமா' என்று நாணம்கொண்டு அவ்வழிச் செல்லாது பிலத்தை யடைந்தனள்.

இச்செய்தியை யறிந்த பிரமன் மனமகிழ்ந்து விஷ்ணுமூர்த்தியினுடைய கருணையைப் பாராட்டித்தான் செய்துகொண்ட சங்கற்பப்படி ஒரு வருஷமும் நிறைவேறினமையால், பூர்ணாகுதி

செய்த யாகத்தைப் பூர்த்திசெய்ய வெண்ணினன்; யாகத்தில் ஹோமம் செய்துவந்த எல்லாத் திரவியங்களுடைய சேஷங்களையும், § யவாம்சங்களோடும், கவாம்சங்களோடும் சேர்த்து நெய்யோடு கூட்டிச் செருக்கில வைத்துச் சருவத்தை மேலே மூடிக் கிழக்கு முகமாக நின்று விஷ்ணுமூர்த்தியைத் தியானித்து மந்திரங்களை மனசால் உச்சரித்துப் பூர்ணாகுதி செய்தனன். உடனே அவ்வோமகுண்டத்தினின்றும் விஷ்ணுமூர்த்தி சிருஷ்டிதண்டத்தோடும் வெளிப்பட்டுச் சிருஷ்டிதண்டத்தைப்பிரமனுக்கு அநுக்கிரகம் செய்ய நின்றருளினர்.

அவர் நின்றருளியகாலம் சுவேதவராக கல்பம், ஐத்தாவது வைவஸ்வதமனு, கிருதயுகம், நரசிம்மாவதாரகாலம், யுவஹு வைகாசிமாதம் மேஷத்தில் சூரியனிருக்கிறகாலம், சுக்லபக்ஷ சதுர்த்தசி, ஹஸ்த நக்ஷத்திரம், சூரியோதய காலமாகிய இவை சேர்ந்த சுபதினமாகும் அக்காலத்தில் அவரது தரிசனத்தைக் கண்ட பிரமன் பூமியில் தண்டாகாரமாய் விழுந்து அஞ்சலிஹஸ்தனாய் நின்று சிருஷ்டி தண்டத்தை அவரால் கொடுத்தருளப் பெற்றுக் கொண்டு தேகபாவசனாய் ஒரு முகூர்த்தகாலம் நின்றனன். அதற்குள் இந்திரன் விசுவகர்மாவினால் அந்த அத்திகிரியில் இருபத்து நான்கு படிகளையும் அதன் மேல் ஒரு புண்ணிய விமானத்தையும் அமைத்து அதில் பல்லிகளுடைய முத்திரையும் தெரிய ஆலயத்தை உண்டாக்கினன். தேகபாவசமாய் நின்ற பிரமன் கண்களை விழித்துப்பார்க்க, அந்த வரதராஜமூர்த்தி புண்ணியகோடி விமானனுடனாய்க் காக்ஷிகொடுக்கக் கண்டு முன்போல் பரவசமுற்று வரதராஜருடைய ஸ்ரீபாதத்தில் தனது முடியைப் பொருந்தவைத்து ஆனந்தக் கடலில் மூழ்கிக் களித்தனன், தேவர்களும் முனிவர்களும் யாகாக்னியில் தோன்றிய உஷ்ண சாந்தியின் பொருட்டுநெய்யினால் ஒருமுகூர்த்தகாலம் திருமஞ்சனம் செய்து அறுசுவையோடுகூடிய மஹாநிவேதனத்தை நைவேத்தியம் செய்வித்துப் பின் பிராமணர்களைப் போஜனம் செய்வித்து அவர்களுக்கு வேண்டியவாறு ஆடையாபரண கந்த புஷ்ப தாம்பூலாதிகளெல்லாம் கொடுத்து மகிழ்வித்தனர். உற்சவத்தின்பொருட்டு

---

§ யவாம்சமாவது யாக நிவேதனத்துக்காக வைக்கும் அன்னம். கவாம்சமாவது குதிரையினிடத்திருந்து எடுக்கும் வபை.

விசுவகர்மா வரதராஜருடைய அநுக்கிரகத்தைப்பெற்ற கஜேந்திரனைப்போல ஓர் யானையைத்தந்தனன். இந்திரன் முத்துக்குடை தந்தனன். பிரமன் சுவர்ணமாகிய மகுடந்தந்தனன். இவ்வாறு யாவரும் யானை முதலியனவெல்லாம் தந்தபின்னர் அன்று மாலைக் காலத்தில் வரதராஜமூர்த்தி திவ்யாலங்காரத்தோடும் கஜாரூடராய் வீதியில் எழுந்தருளிவர உற்சவத்தை நடத்தி முன்போல் விமானத்தில் வீற்றிருக்கச் செய்து பின் 'அபீஷ்டவரதா; வரதா என்று ஸ்தோத்திரம் செய்து 'இந்தக் காஞ்சியில் பிரசன்னராயிருந்து பக்தர்களுக்கு அநுக்கிரகம் செய்து வரவேண்டும் என்று பிரார்த்தித்துக்கொண்டு விடை பெற்றுத் தங்கள் தங்கள் பதங்களுக்குச் சென்றனர். பிரமதேவன் வரதராஜருடைய நாபிஸ்தானத்தில் மாணிக்க ரூபமாய்ப் பதிந்து பிரகாசித்தனன்.

பின்னர் வரதராஜமூர்த்தி தனது பக்தனான பிரமனைப் பார்த்துத் தேவர்களுடைய வேண்டுகோளின்படி இக்காஞ்சி க்ஷேத்திரம் வைகுண்டத்தைப் பார்க்கிலும் அதிபாவனமாயிருப்பதால் எனக்கு அதிரம்யமாயிருக்கிறது. ஆகையால் இவ்விடத்தில் எனக்கு வருஷந்தோறும் சித்திரைமாசம் எனது ஜன்ம நக்ஷத்திரமாகிய திருவோண நக்ஷத்திரத்தில் நெய்யினால் சஹஸ்ரதாரையில் அபிஷேகமும் பூஜையும் உற்சவமும் பிராமண போஜனமும் செய்விக்கின்றவர்கள் எவர்களோ அவர்கள் என்னால் பெறக்கடவனவாகிய அபீஷ்டங்களைப் பெறக்கடவர்" என்று வரமளித்தனர்.

மகிமை.

யமுனாதீரத்தில் கோகுலக்ஷேத்திரத்தில் பாதராயண கோத்திரத்தில் யஜுர்வேதியான பானுவர்மன் என்னும் பிராமணன் யாத்திரை மூலமாய் இந்த அத்திகிரியையடைந்தனன். அன்று வரதராஜருக்குக் கிருதாபிஷேகமாக இருந்தமையால் அவ்வபிஷேக மஹோற்சவத்தைக்கண்டு களித்துப்புகழ்ந்து தன்னூரையடைந்து சிலகாலம் வாழ்ந்திருந்து மரணமடைந்தனன். அவனைத் தேவகணங்கள் கொண்டுபோய்ச் சுவர்க்க பட்டாபிஷேகஞ்செய்ய, அங்குச் சிலகாலம் வாழப்பெற்றுப் பின்னர் அவ்விடத்தினின்றும் விஷ்ணு கணங்களால் சூழப்பெற்று வைகுண்ட பதத்தையடைந்து வாழ்ந்திருந்தனன்.

நான்காவது அத்தியாயம் வரதராஜமூர்த்தி வரலாறு முற்றிற்று.

உ

ஸ்ரீ காமாக்ஷிதேவ்யை நம:

# ஐந்தாவது அத்தியாயம்.

## விஷய சூசிகை.

[ இந்த அத்தியாயம் வேகவதியாய்வந்த கலைமகளுக்குத் திருமாலால் உண்டான அவமானம் அவராலேயே நிவிர்த்தியானமையையும் நிவிர்த்தியான பின்னர் பிரமதேவனோடு முன்போல் கூடி மகிழ்ந்தமையையும் விளக்குவது. ]

## வேகவதியின் வரலாறு.

முன் சரஸ்வதி வரதராஜரால் அவமதிக்கப்பட்டு நாணங்கொண்டு கீழ்நோக்கிப் பிலத்தையடைந்தபின்னர் விஷ்ணுசாலையில் ஸ்ரீவரதராஜக்ஷேத்திரத்திற்கு மூன்று அம்சம் தெற்கில் வேகவதி என்கிற நதிரூபமாய்ச் செல்லத்தொடங்கினாள். அந்தக் கலைமகளுருவாகிய நதியானது உற்பத்தியான காலத்தில் பிரமலோகத்தினின்று நந்தி சைலத்தையடைந்து அதினின்றும் பாலாற்றில் அந்தர்க்கதமாய்க் கலந்து இருபதுயோசனைதூரம் வந்து ஹரி க்ஷேத்திரத்திற்கு மேற்கில் ஒன்றரையோஜனை தூரத்தில் அந்தப் பாலாற்றுக்கு வேறாகப் பிரிந்து மறுபடியும் அந்தவிஷ்ணுசாலைக்குக் கிழக்கில் மூன்றரை யோசனை தூரத்தில் முன்போல் பாலாற்றில்போய்க் கலந்து சமுத்திர சங்கமமாயிற்று. அது இந்தப் புண்ணியகோடி க்ஷேத்திரத்தில் பிரவேசித்துச் சென்றபடியால் புண்ணியகோடி எனவும் பெயர்பெற்றது.

வேகவதி புண்ணியகோடி எனப் பெயர்பெற்ற கலைமகளானவள் விஷ்ணுமூர்த்தியினால் தனக்குவந்த பரிபவம் நீங்கப்பெற்றுப் பேறுபெற்ற வரலாறு இனி வருமாறு.

நதிரூபமாய்ச் சென்ற சரஸ்வதி தேவியானவள் பின்னர் விஷ்ணுமூர்த்தியைத் தியானிக்க அவர் பிரசன்னராயினர். அவரை நோக்கி "ஓ, நாராயணரே, நான் நதி ரூபமாய் வரும்பொழுது நீர் நிர்வாணியாய் என் முன் எதிர்ப்பட்டீரல்லவா? அதனால் எனக்கு மானபங்கமும் பதிவிருதாபங்கமும் நேர்ந்தன. இதில் சந்தேகமில்லை. ஸ்திரீகளுக்கு இவ்விரண்டும் அங்கமும் லக்ஷணமும் அல்லவா? இவை பங்கப்படுமானால் இருந்தாலென்! இறந்தா

லென்! ஆகையால் எனக்கு அவ்விரண்டையும் தீர்க்க வேண்டும், தாவிடில் நான் பிராணனை விடுவேன்" என்றனள். அதுகேட்ட விஷ்ணுமூர்த்தி மனமிரங்கி "ஓ, சரஸ்வதி, நீ எனது அம்சம். பிரமன் கையிலுள்ள சிருஷ்டி தண்டம் உன்னுடைய அம்சமாக என்னால் உண்டாக்கப்பட்டது. இங்ஙனமிருக்க, இவற்றை மறந்து அத்தண்டத்தை உன்னுடைய சுதந்தரமாகப் பிடுங்கி உன்னிடத்தில் ஒடுக்கிக்கொண்டு அகங்காரத்தோடு வந்தனையன்றோ? அதனால் உன்னை மானபங்கம் செய்து இப்பிலத்தில ஒடுக்கிப்பிரமனுடைய யாகத்தையும் முடித்து அவனுக்கு வேறு சிருஷ்டி தண்டத்தையும் கொடுத்தேன். இப்பொழுது நீ அகங்காரத்தை விட்டு என்னைத் தியானித்து எனக்குக் கற்பு வரவேண்டுமென்று பிரார்த்திக்கின்றபடியால், யான் சொல்லும் உபாயத்தை மறுக்காது செய்; கற்புடையவளாவை" என்றனர். அதுகேட்ட சரஸ்வதி கற்பினையே பெண் பலமாக வெண்ணினளாகலின் அவர் மொழிக்கு இணங்கி "அவ்வுபாயத்தைக் கூறுவீராக" என்றனள்.

விஷ்ணுமூர்த்தி "ஓ சரஸ்வதி, நீ முன்போல் நதி உருவவாகவே வெளிப்பட்டு முன் வந்த வழியேசென்று க்ஷீரநதியோடு கலப்பையாயின் கற்பு நிலையழிந்த பாவம் போய்விடும். அந்நதியோடு சமுத்திர சங்கமமாவாய் சங்கமமாகிச் செல்லுகின்ற உன்னழகைப் பிரமன் கண்டு உன்னிடத்திற்கொண்டிருந்த குரோதம் நீங்கி மகிழ்ச்சி கொண்டு உன்னைக்காணச் சமுத்திர சங்கமஸ்தானத்தில் பிரசன்னமாவான். காஞ்சி க்ஷேத்திரத்திற்கு கிழக்கெல்லையாயுள்ள சமுத்திரகட்ட சங்கமத்தினாலும், பார்த்தாவினுடைய தரிசன விசேஷத்தினாலும் உனக்குச் சர்வதோஷமும் நிவர்த்தியாய்ப் பரிசுத்தத்தையடைவாய். பின்னர்ப் பிரமன் உனக்கு அர்த்தாசனம் (தன்னாசனத்திற்பாதி) கொடுத்துத் தழுவிக்கொள்ளுவான்" என்று அனுக்கிரகம் செய்து சென்றனர்.

சரஸ்வதிதேவி அவராணையின்படியே க்ஷீரநதியோடு கலந்து அதிவேகமாய்ச் சென்று சமுத்திரசங்கமமான பொழுது பிரமன் மகிழ்ந்து தேவியையழைத்து அர்த்தாசனம் கொடுத்துக் கலைமகள் மகிழக் கலியாணம் செய்துகொண்டு "ஹே, சரஸ்வதி நீ அதிவேகமாய் நதிவடிவம் கொண்டு வந்தபடியினால் இந்த நதி

வேகவதி என்று வழங்கக்கடவது. இதில் ஸ்நானம் செய்கின்றவர்களுடைய பாவம் அதிவேகமாய்ச் செல்லக்கடவது. அவர்களுக்குப் புண்ணியமும் அதுபோலும் வளரக்கடவது" என்று வரமளித்துக் கன்மகளோடு சத்தியலோகமடைந்து சிருஷ்டித் தொழிலைச் செய்து வந்தனன்,

### மகிமை.

சிறந்த கங்காதீரவாசியும் காச்யபகோத்திரஜனும் சாமவேதியுமான கௌமியநாதனென்னும் வேதப் பிராமணன் பாக்கியவந்தனும் வித்வானுமிருந்தும் பாதாரகமனனுமிருந்தனன். அப்பாவத்தினால் கிழத்தனம் வந்தகாலத்தில் குஷ்டம் முதலிய பல வியாதிகளினால் பீடிக்கப்பட்டு மனம் நொந்து இதற்கு விமோசனமும் உண்டாகுமோவென்று பெரியோர்களைப் பணிந்து கேட்டனன். அவர்கள் மனமிரங்கி, "ஓ, அந்தணனே, நீ வேகவதியில் ஸ்நானம் செய்தால் தீரும்" என்றனர். அப்படியே அவ்வந்தணன் வேகவதியையடைந்து மூன்று காலம் ஸ்நானம் செய்ய அவனைப்பற்றியிருந்த வியாதி எல்லாம் நீரப்பெற்று பரிசுத்தனாய்த் திட சரீரத்தோடும் தனது தேசம்போய்ச் சேர்ந்து தனதான்யாதி சகல சம்பத்துடன் வாழ்ந்திருந்து அந்தியத்தில் விஷ்ணுபதம் அடைந்தனன்.

ஐந்தாவது அத்தியாயம் வேகவதியின் வரலாறு முற்றிற்று.

---

உ

ஸ்ரீ காமாக்ஷி தேவ்யை நம:

## ஆறாவது அத்தியாயம்.

### விஷய சூசனை.

---

[இது, ஏகாம்பரநாதருடைய எல்லை காயாரோகணேசுவராலயம் முதல்சுவேதப்பெருமான் ஆலயம் வரையில் எனவும், அவ்வெல்லைக்குள் முக்கியமான துர்க்காலயம் நான்கு எனவும், சிவாலயம் எட்டு எனவும், விஷ்ணுவாலயம் எட்டு எனவும், முக்திஸ்தானங்கள் ஐந்து எனவும், தீர்த்தம் நான்கு எனவும், இவற்றின் வரலாறுகள் இவை எனவும் விளக்குவது.]

## சிவக்ஷேத்திரவரலாறு.

காஞ்சி க்ஷேத்திரத்தின்கண் வாயுதிக்கில் பராசக்தியானவள் மஹாருத்திர மூர்த்தியாய்ப் பிரமன் காணும் வண்ணம் காக்ஷி கொடுத்தருளினாராதலால் அது சிவக்ஷேத்திரம் எனவும், உருத்திரசாலை எனவும் பெயர் பெற்றது.

### இதற்குப் பெயர் ஐந்து.

அவையாவன:— 1. உருத்திரசாலை. † உருத்திரகோடி. 3. கைலாஸம். 4. ஏகாம்பரம். 5. மஹாஸ்மசானம் என்பவை.

### இதன் எல்லை.

சுவேதப் பெருமாளுக்கு 50 அம்சம் தெற்கிலுள்ள காயாரோகணேசுவராலயமே தெற்கெல்லை காயாரோகணேசுவராலயத்துக்கு 32 அம்சம் மேற்கிலுள்ள கன்னிகேசுவராலயமே மேற்கெல்லை. கன்னிகேசுவராலயத்துக்கு 25 அம்சம் வடக்கிலுள்ள கைலாசநாதராலயமே, வடக்கெல்லை. கைலாஸ நாதருக்கு 25 அம்சம் கிழக்கிலுள்ள சுவேதப்பெருமாளாலயமே கிழக்கெல்லை.

இந்நான்கெல்லைக்கு உட்பட்ட பிரதேசமே உருத்திரசாலை எனப்படும். இவ்வெல்லையில் ஒரு சிவலிங்கார்ச்சனை செய்தால் கோடிலிங்கார்ச்சனை செய்த பலனுண்டாகும். அதுவும் அன்றி அவ்வெல்லையில் ஒரு க்ஷணகாலமாவது அதில்அரையாவது வசிக்கப்பெற்றால் எல்லாப்பாவங்களும் ஒழிந்து போம்.

### இவ்வெல்லைக்குள்.

முன்சொன்ன காயாரோகணருக்கு 44 அம்சம் வடக்கிலுள்ளவர்
விகடசக்கர விநாயகர். (1)

விகடசக்கர விநாயகருக்கு 1 அம்சம் வடக்கிலுள்ளவர்
மாவடிக்கந்தப்பர். (2)

### துர்க்கை ஆலயம். 4.

மாவடிக் கந்தப்பருக்கு 1 அம்சம் கிழக்கு திக்கில்
பிரளயபந்தினி ஆலயம் (1)

பிரளயபந்தினிக்கு 10 அம்சம் தெற்கு திக்கில்
சம்பத்கரீசுவரி ஆலயம் (2)

---

† ருத்திரம் என்னும் பதத்துக்கு இலிங்கம் என்பது பொருளாகலானும் கோடி இலிங்க மூர்த்தம் அவ்விடத்திலுளவாதலானும் அப்பெயரெய்தியது.

சம்பத் கரீசுவரிக்கு 10 அம்சம் மேற்குதிக்கில்

ரேணுகாம்புஜவல்லி ஆலயம் (3)

ரேணுகாம்புஜவல்லிக்கு 25 அம்சம் தெற்குதிக்கில்

வீரவரேச்வரி ஆலயம் (4)

வரலாறு.

'பிரளயபத்தினி' என்னும் தூர்க்கை, கம்பாநதிப் பெருக்கைத் தேவியினது ஆக்ஞையினால் தடுத்துத் தனது கபாலத்தில் அடக்கினவள். § 'சம்பத்கரீச்வரி' என்னும் தூர்க்கை கஜாசுரன் என்பவனைக்கொன்று ரிஷிகளைக்காத்தவள்; 'ரேணுகாம்புஜவல்லி' என்னும் தூர்க்கை சம்புகன் என்னும் அந்தகப் பிராம்மணனுக்குக் கண் கொடுத்தவள், † வீரவரேச்வரி என்னும் தூர்க்கை வீரபத்திரமூர்த்தியினுடைய கோபத்தைத் தணிவித்தவள்.'

## சிவாலயம், 8.

முன்சொன்ன வீரவரேச்வரிக்கு 10 அம்சம் கிழக்கிலுள்ளவர்

காயாரோகணேச்வரர். (1)

காயாரோகணேச்வரருக்கு 36 அம்சம் வடக்கிலுள்ளவர்

சுரஹரீச்வரர். (2)

சுரஹரீச்வரருக்கு 10 அம்சம் நிருதியிலுள்ளவர்

அநேக பதேச்வரர். (3)

அநேகபதேச்வரருக்கு 1 அம்சம் வாயுவிலுள்ளவர்

கைலாஸநாதர். (4)

கைலாசநாதருக்கு 6 அம்சம் தெற்கிலுள்ளவர்

¶ பச்சிமேச்வரர் (5)

பச்சிமேச்வரருக்கு 24 அம்சம் ஈசானத்திலுள்ளவர்

* காசிவிச்வேச்வரர். (6)

காசிவிச்வேச்வரருக்கு 3 அம்சம் வடக்கிலுள்வர்

ஓணகாந்தீச்வரர். (7)

---

§ அரசாத்தம்மை கோயிலென வழங்கும்.

† வீரகாளியம்மைகோயிலெனவழங்கும். இதுபின்னைப்பாளயத்திலுள்ளது

¶ திருமேற்றளி எனவழங்கும் இதுவும்பின்னைப்பாளயத்திலுள்ளது.

* இவரது இடம் சர்வதீர்த்தக்கரையின் மேற்பக்கம்.

ஓணகாந்தீச்வரருக்கு 10 அம்சம் கிழக்கிலுள்ளவர்

†கச்சிமயானேச்வரர். (8)

வரலாறு

'காயாரோகணேச்வரர்' யயாதி ராஜனுக்குச் சரீரத்தோடு முக்திகொடுத்தவர். 'சரஹரீச்வரர்' தேவர்களுக்குவந்த மஹேச்வராபசாரத்தைப்போக்கியவர்—'அநேகபதேச்வரர்' விருத்திராசுரனைக்கொல்ல இந்திரனுக்கு வச்சிராயுதம் கொடுத்தவர். முற்கடவுளாகிய விநாயகமூர்த்தியினால் பூஜிக்கப்பட்டவர்—'கைலாசநாதர்' குண்டராஜனுக்குக் கைலாசபதவியைக்கொடுத்தவர்—'திருமேற்றளிநாதர்' வாலகில்யர்களுக்கு அபயம் கொடுத்து ரக்ஷித்தவர்; 'வித்வேச்வரர்' கங்காநதியின் பாவத்தைச் சர்வதீர்த்தத்தினால் போக்கியவர். ஓணகாந்தீச்வரர் ஓணன் என்பவனும்காந்தன் என்பவனும் வழிபட ஓணன் என்பவனுக்கு வாளாயுதத்தையும் காந்தன் என்பவனுக்குச் சூலாயுதத்தையும் கொடுத்தவர்—'கச்சிமயானேச்வரர்' பண்டாசுரனைச் சம்ஹரிக்கும் நிமித்தம் தமது சக்தியினால் உலகங்களை எல்லாம் சாம்பலாக்கினவர்.

## விஷ்ணு ஆலயம். 3.

முன்சொன்ன கச்சிமயானேச்வரருக்கு நிருதிதிக்கிலுள்ளது

பாண்டவப்பெருமாள் சந்நிதி. (1)

பாண்டவப்பெருமான் சந்நிதிக்கு ஈசானதிக்கிலுள்ளது

* சந்திரக்ரீவப்பெருமாள் சந்நிதி. (2)

சந்திரக்ரீவப்பெருமானுக்கு ஈசானதிக்கிலுள்ளது

சுவேதப்பெருமாள் சந்நிதி. (3)

வரலாறு.

'பாண்டவப்பெருமாள்' பாண்டவர்களுக்கு வெற்றியுண்டாகத் தூதுசென்றவர்—'சந்திரக்ரீவப்பெருமாள்' ஏகாம்பரநாதருடைய சடையிலுள்ள சந்திரகாந்தியைத் தமது கண்டத்தில் தாங்கப்பெற்றவர்—'சுவேதப்பெருமாள்' அந்தகாரன் என்னும் அசுரன் என்னும் இருளை விளைவிக்க அவ்விருளைச் சந்திரவர்ணமாய்ப் பிரகாசிக்கின்ற தம்மொளியால் போக்கினவர்.

---

† இவரது இடம் ஏகாம்பரர் கோயிலில்

* ஏகாம்பரநாதர் சந்நிதி முதற் பிரகாரம் ஈசானத்தில்.

## முத்திரை. ௫.

முன்சொன்ன சுவேதப் பெருமானுக்கு 1 அம்சம் நிருதியில்
கள்ளக்கம்பரிடம். (1)

கள்ளக்கம்பருக்கு 2 அம்சம் மேற்கில்
மார்க்கண்டேயரிருக்குமிடம். (2)

மார்க்கண்டேயரிருக்குமிடத்துக்கு 2 அம்சம் வடக்கில்
ஏலவார் குழலியாரிருக்குமிடம். (3)

ஏலவார்குழலியாரிருக்குமிடத்துக்கு 2 அம்சம் ஆக்னேயத்தில்
வெள்ளைக்கம்பரிருக்குமிடம். (4)

வெள்ளைக்கம்பரிருக்குமிடத்துக்கு 2 அம்சம் கிழக்கில்
வீரபைரவரிருக்குமிடம் (5)

### வரலாறு.

'கள்ளக்கம்பர்' ஏகாம்பரனார் கள்ளவடிவங்கொண்டு அன்பர்க்கருளியபின் இலிங்கரூபமானவர்; 'மார்க்கண்டேயர்' சிவாக்ஞையால் மார்க்கண்டேயரால் பூஜிக்கப்பட்டவர்; 'ஏலவார் குழலியார்' தேவசில்பியினால் நிர்மிக்கப்பட்டு ஏகாம்பரநாதரோடு சமாசனத்தில் சமமாய் வீற்றிருப்பவர். இவ்வம்பிகை கங்காதேவியினுடைய அம்சம்; 'வெள்ளைக்கம்பர்' காமாக்ஷிதேவியாரின் பொருட்டுச் சிவனுடைய நெற்றிக் கண்ணிற்றோன்றிய கங்கை பின்னர் லிங்கரூபமாய்த் திரண்டமூர்த்தம்; 'வீரபைரவர்' ஏகாம்பரநாதருடைய கட்டளையினால் கச்சிமயானத்தைக் காப்பவர்.

## தீர்த்தம். 4.

முன்சொன்ன வீரபைரவருக்கு 1 அம்சம் வாயுவில்
சிவகங்கை தீர்த்தம். (1)

சிவகங்கைதீர்த்தத்துக்கு 5 அம்சம் ஆக்னேயத்தில்
மங்களதீர்த்தம். (2)

மங்களதீர்த்தத்துக்கு 8 அம்சம் நிருருதியில்
சாஹமாதீர்த்தம். (3)

சாஹமாதீர்த்தத்துக்கு 9 அம்சம் வாயுவில் பாண்டவதீர்த்தம். (4)

### வரலாறு.

'சிவகங்கைதீர்த்தம்' பிரம்மாண்டத்தினின்றும் வெளிப்பட்டு வந்தது; சகல பாவங்களையும் போக்கடிப்பது. 'மங்களதீர்த்தம்'

அங்காரகனது அக்கினி ரூபத்தைப்போக்கியது. 'சாஹூதீர்த்தம்' தேவர்கட்குவந்த மஹேச்வர சாபத்தைப்போக்கியது. 'பாண்டவ தீர்த்தம்' பாண்டவதூதப் பெருமாளால் உண்டாக்கப்பட்டது.

தீர்த்தபலன்.

சிவகங்கையில் சோமவாரத்தில் ஸ்நானம் செய்வோருக்குக் கங்காநதியில் ஸ்நானம் செய்த பலனுண்டாகுமென்று உமாதேவியாராலும், 'மங்கள தீர்த்தத்தில்' மங்களவாரத்தில் ஸ்நானம் செய்தால் சரஸ்வதி நதியில் ஸ்நானம் செய்த பலனுண்டாகும் என்று அங்காரகனாலும், 'சாஹூதீர்த்தத்தில்' எந்த வாரத்திலாயினும் ஸ்நானம் செய்தால் கபிலா நதியில் ஸ்நானம் செய்த பலனுண்டாகும் என்று தேவர்களாலும், பாண்டவர் தீர்த்தத்தில் திருவாதிரை நக்ஷத்திரத்தில் ஸ்நானம் செய்தால் கிருஷ்ணா நதியில் ஸ்நானம் செய்த பலனுண்டாகும் என்று பாண்டவர்களாலும் வரங்கள் கொடுக்கப்பட்டன.

ஆக சிவக்ஷேத்திரமாகிய இவ்வெல்லையில் உள்ளன விநாயகாலயம் 1 ஸ்கந்தாலயம் 1 துர்க்கை ஆலயம் 4 சிவாலயம் 8 விஷ்ணுவாலயம் 3 முத்திரை 5 தீர்த்தம் 4 என்ற இவைகளாம்.

இந்த ருத்திரசாலையில் இவையெல்லாம் ஏகாம்பரநாதருடைய ஆக்ஞையினால் எப்பொழுதும் காணப்பட்டு வருகின்றன. இதில் வசிப்போருக்குக் கைலாசவாச பலனுண்டாகுமாதலால் இது பூலோக கைலாசமெனப்பெயர் பெற்றது.

மஹிமை.

கிருஷ்ணதீரத்தில் ஏலாபுரத்தில் ருக்வேதியும் கௌதமகோத்ரனுமான கௌசிகன் என்னும் பிராமணன் சத்கர்மஹீனனாய்த் துராசார சம்பன்னனாய்ப் பூமியில் நிக்ஷேபங்களைக் காண்பதற்கு எங்கும் உலாவி மார்க்கங்களில் யாத்திரையாய்ச் செல்லுகின்றலக்ஷணமுள்ள பாலர்களைத்தன்னிடத்திற்கழைத்துப்போய் அவர்களுக்கு வேண்டிய அன்னோதகங்களையும் திரவியங்களையும் கொடுத்துப் பாதுகாத்துவந்து ஆறேழு மாதமாவது ஒரு வருஷமாவது கடந்தபின் நிக்ஷேபம் காணும் இடங்களில்பலிகொடுத்து அத்திரவியங்களை எடுத்துக் கொள்வன். இவ்வாறு செய்துவரும்

நாளில் காஞ்சி க்ஷேத்திரத்திலிருந்து ஓர் அந்தணன் யாத்திரையாக மார்க்கத்தில் வரும்பொழுது அவனது தாகவேட்கையைக் கண்டு மனமிரக்க முடையவனாய் நீர்மோரைக் கொடுத்தனன். சிலநாட் கழிந்தபின்னர் அவன் மரணமடைய அவனை இயமன் பாசத்தாற்கட்டித் தனது உலகத்திற்குக் கொண்டு போயினன். சிவகணங்கள் அவனை மீட்டுக் கைலாசத்திற் சேர்த்தார்கள். இதன் காரணமறியாது இயமன் கைலாசம் சென்று சிவபெருமானாரை வணங்கி "இக்கொடுமையாளன் இங்கு வருவதற்குக் காரணம் என்னையோ" என்று வினவ, சிவபெருமானார் "ஓ, இயமனே, இவன் மகாபாதகனாயினும் ஒரு சிறு புண்ணியத்தால் பல பெரிய பாவங்களைப் போக்கவல்ல ருத்திரசாலையினின்றும் வந்த ஓர் பிராமணனுக்குத் தாகம் தணிவித்ததனால் இங்கு வரப்பெற்றனன். நீ செல்லக்கடவாய்" என்றுவிடை கொடுத்தனர்.

ஆறாவது அத்தியாயம் சிவக்ஷேத்திர வரலாறு முற்றிற்று

---

உ

ஸ்ரீ காமாக்ஷி தேவ்யை நம:

## ஏழாவது அத்தியாயம்.

### விஷயசூசனை.

---

[இது ஏகாம்பரநாதர் இடம் கொண்டிருக்கும் மாமரத்தினுடைய ஸ்வரூபம் இது எனவும், அதுவோர் பிரளயகாலத்தில் மார்க்கண்டேயருக்காக வளர்ந்து அவரைக் காத்துக் காஞ்சியில் வாழச் செய்தவிதம் இது எனவும், மாங்கனியினுடைய பெருமை இது எனவும் விளக்குவது.]

### ஆம்பிரவிருக்ஷப் பிரபாவம்.

சைவ முனிவர்களால் சூழப்பட்ட புண்ணியகரமான அநேக விருக்ஷங்கள் நெருங்கிய ஆரண்யத்தில் உருத்திரகோடிசாலையில் பாண்டவ தீர்த்தத்திற்கு 64 அம்சம் உத்தரத்தில் வேதம் மாவிருக்ஷரூபமாய் வளர்ந்தோங்கி நிற்கின்றது. அது சிவபீஜத்தினின்றும் தோன்றியதாயும், ஸ்ரீ காமாக்ஷிதேவியினால் ஏகாம்பரதரு என்கிற திவ்யநாமத்தால் துதிக்கப்பட்டதாயும், வேத சா

ஸைகலோகிலெகளாகவுள்ள புண்ணிய ஸ்வரூபமாயும், பதினொன்குலித் துக்கமே மல்லிகைக் கொடிகளாகப் படர்ந்திருப்பதாயும், ஜலப் பிரளயத்தில் மிதந்துவந்த மார்க்கண்டேய முனிவரைக் காத்ததாயும், புராணிகர்களால் புகழ்ந்துரைக்கப்பட்ட சிறப்புடையதாயும் விளங்குவது.

## மார்க்கண்டேயமுனிவரைக் காத்த வரலாறு.

ஒருக்கால் கைலாசத்தில் அதிவிசித்திரமாய் அலங்கரித்திருந்த அந்தப்புரத்தில் போகமூர்த்தியாய் உமாதேவியாரோடு அர்த்தாசனத்தில் வீற்றிருக்கும்பொழுது சிவபெருமானுக்கு மிகவும் பிரிய ரூபிணிகளாய் 64 கலைகளினின்றும் தோன்றிய சக்திகோடிகள் அகங்காரம் கொண்டவர்களாய்ச் சிவபெருமானைச் சமீபித்து, "எங்கள் நாயகரே, நீர் பார்வதிக்கு அர்த்தாசனம் கொடுத்திருப்பது போல எங்கட்கும் கொடுக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள்.

சிவபெருமான் அவர்களைப் பார்த்து "இவ்விடத்திலுள்ள புருஷரெல்லாம் என்னுடைய அம்சத்தில் தோன்றினவரே. ஸ்திரீகளெல்லாம் கௌரியம்சத்தில் தோன்றினவரே. ஆகையால் புருஷர்களுக்கு யான் தலைவன், பெண்களுக்கு கௌரி தலைவி. இம்முறையால் கௌரியை நோக்க நீங்களெல்லாரும் தாழ்ந்தவர்கள்; தாழ்ந்தவர்களாகிய உங்களுக்குயான் சமாசனம் கொடுக்கத்தக்கதன்று என்னோடு சமமாகச் சமாசனத்தில் இருக்கத் தக்கவள் பார்வதிதேவியே" என்றனர். அவ்வார்த்தையைக்கேட்ட சக்திகோடிகள் சிவபெருமானைப் பார்த்து "என்ன கூறினீர்? இது பக்ஷபாதமல்லவா? உம்மைப்போலும் இவ்வளவு மூழ்மோசமாகப் பேசினவரை யாங்கள் எங்கும் கண்டதில்லை. ஆ! ஆ!! யாங்களா கௌரியின் அம்சத்திற்றோன்றினவர்கள்? இந்தக் கௌரியல்லவா எங்கள் அம்சத்தில் தோன்றினவள்! இதனை அறியாதவர் போன்று எங்களுக்குச் சமமான ஆசனம் கொடுக்கமாட்டேன் என்றது அடாது. எங்கட்கே கொடுக்க வேண்டும். அன்றியும் இப்பார்வதிக்குப் பெண்களுக்கிருக்க வேண்டிய சாகசகுணம் முதலியன இருக்கின்றனவா? மன்மதனுடைய லீலையில் சிறந்தவளா? நாயகன் குறிப்பு முதலியவற்றை அறியும் நுண்ணறிவுடையவளா? கல்வியிற் மிகுந்தவளா?

உருவம் முதலாக எண்ணப்பட்ட ஆறுகுணங்களால் நிறைந்தவளா? அந்தோ! ஒன்றும் இல்லையே. இருக்குமாயின் எங்கட்கு அந்த மான்மியத்தைத்தெரிவியும்" என்று கூறிய வாய்மொழிகளைக் கேட்டு, அவர்கள் அகங்காரம் அடங்குமாறு ஒரு விளையாட்டாக அவர்கள் அணிந்திருந்த வஸ்திரங்கள் நழுகிப்போகும்படி செய்தனர். உடனே அச்சக்திகளெல்லாம் நிர்வாணிகளாய்ப் போகவே நாணமுற்றுப் பூமியில் தண்டாகாரமாகப்பணிந்தார்கள். அதனைப் பார்வதியார் கண்டு அச்சக்திகோடிகள் எழுந்திருந்து கழன்றுபோன ஆடைகளை எடுத்து உடுக்குமளவும் தமது நாயகருக்கு அந்நிர்வாணகோலம் தோன்றாதிருக்க அவருடைய நேத்திரங்களை ஒரு முகூர்த்தகாலம் மூடியிருந்தனர். அப்பொழுது சூரிய சந்திராக்னிகளுடைய பிரகாசம்போய் எங்கும் இருள் மயமாய் எல்லாவுயிர்களும் செயலற்று இருளுருவாகவேயிருந்தன. அக்காலத்தில் ஜலப்பிரளயமும் உண்டாயிற்று. அந்தக் கோரமாகிய வெள்ளத்தில் அழிவில்லாதவராகிய மார்க்கண்டேய முனிவர் எல்லாவுயிர்களும் முழுகுவதைப் பார்த்து அதிசயித்தார். 'இனி யாம் என் செய்யக் கடவோம்' என்று அந்தப் பிரளயத்தில் நீந்தி வருகின்றபொழுது, 'ஒருபற்றுமில்லாது இவ்வெள்ளத்தில்நீந்தி வருகின்ற நமக்குஓர் ஆதாரம் வேண்டும்' என்று இச்சைகொண்டார். சதாசிவ ஈசானருத்திர ஹரிப்பிரும்மாதி காரணரும், தேவியினுடைய திவ்ய திருமேனியில் ஆசையுள்ளவரும், நாசாதிதரும், மஹாதிரிபுரசுந்தரிக்கு நாயகரும், நிர்க்குணரூபமான காமேச்வரரைத் தியானம் செய்தார். "ஓ காமேசனே, எனக்கு ஆதாரத்தைக் கொடுக்கவேண்டுமென்று" பிரார்த்தித்துச்சிரமத்துடன் வரும்பொழுது, உருத்திராகாலையில் சித்ரூபராயும், யாவராலும் காணக்கூடாத தேஜோரூபராயும், இருக்கின்ற ஏகாம்பரநாதரானவர் கருணையுடையவராய் அவரை ரக்ஷிக்கும்பொருட்டுத் தம்முடைய ஸ்வரூபமாகவும், நான்கு வேதங்களையே நான்குகிளைகளாகவும், உடைய மா விருக்ஷத்தை ஒரு க்ஷணத்துக்குள் தளிர், பூ, கனி, இவைகளோடு பிரளய ஜலத்துக்குமேல் வளர்ந்தோங்கச் செய்தனர்.

அதுகண்டமுனிவர் 'இது நம் பெருமான் கருணையேயாம்' என்று அம் மா மரத்தின் மேலேறிப் பிரளய ஜலத்தைப் பார்த்து

ஆச்சரியமடைந்து தனக்கு ஆதாரவாய் நின்ற அவ்விருக்ஷத்தைச்
சிவஸ்வரூபமாகப்பாவித்து 'இது நம்மைப்பாதுகாக்கவந்தகருணை
வடிவ' என்று நிச்சயித்தார். அங்கிருந்தவண்ணமே அதன் மூலம
ளவும் ஜோதிஸ்வரூபமாகக்காணப்படும் துவாரத்தைக்கண்டு அவ்
வழியே நுழைந்து அங்கு ஒளிப்பிழம்பாய் விளங்கும் பெரிய நக
ரத்தைக்கண்டார்; "இதுவென்ன ஆச்சரியம்! இந்த லயகாலத்தி
லும் யாதொரு நாசமில்லாமல் ஜலமத்தியில் ஜோதிஸ்வரூபமாய்
விளங்குகின்றதே" என்று அதனடியில் இறங்கவும், அவ்விடத்தில்
சிவகுமாரரான ஷண்முகக்கடவுள் அம்மரத்தில் பழுத்திருக்கும்
கனிகளைப் புஜித்துக்கொண்டிருப்பதைப் பார்த்து மிகவும் ஆச்சரி
யம்கொண்டு வணங்கினார். "ஓ ஷண்முகக்கடவுளே, இந்த க்ஷேத்
திரத்தின் பெயர் என்னை? இந்த விருக்ஷம் எத்தன்மைத்து? தேவ
ரீர் இப்பழங்களைப் புஜித்துக்கொண்டு இங்கு வசிக்கும் காரணம்
என்னை? யாருடைய மகிமையினால் இந்த ஜலப்பிரளயத்திலும் இந்
நகரம் அழியாதிருக்கின்றது? இவையாவும் என்பால் கருணை கூர்
ந்து அருளிச்செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தனர். ஆறுமுகக்
கடவுள் "ஓ மார்க்கண்டேயனே, இது காஞ்சிக்ஷேத்திரம் என்று
சொல்லப்படும். இந்த க்ஷேத்திரத்தைப் பிரளயங்கள் உண்டா
குந்தோறும் மஹாதேவி தனது தேஜோமயமாகிய பிரகாசத்தினால்
அழிவுறாவண்ணம் காப்பாற்றிவருகின்றாளாதலால் இது பிரளய
ஜித்தெனப் பெயர்பெற்றது. அந்த விருக்ஷம் சாக்ஷாத் சங்கரரு
டைய ஸ்வரூபமாயுள்ளது. மஹாதிரிபுரசுந்தரிக்கு நாயகராகிய
காமேச்வரரே இந்த விருக்ஷபீஜமாய் உள்ளவர். அதனால்தான்
இங்கிருக்கும் எனது கடவுளுக்கு ஏகாம்பரர் எனத்திருநாமம். அ
வருடைய கருணை உன்னிடத்தில் இருந்தபடியால்தான் இந்த
வெள்ளத்தில் அந்த ஏகாம்பரம் உனக்கு ஆதாரவாயிற்று. இந்த
விருக்ஷத்தின் கனியை எவர்கள் பக்தியாகப் புஜிக்கின்றார்களோ
அவர்கள் வேதவித்யாகுருவாகின்றார்கள். ஆகையால், நான் இப்
பழத்தை நாடோறும் புஜித்துவருகின்றேன்" என்று அருள்செய்ய
மார்க்கண்டேயர் நமஸ்காரம் செய்து அம்மரத்தினடியில் தாமும்
இருந்து அதன் கனியை உண்டு 'இந்தக்கனியை எவனொருவன்
புஜிக்கின்றானோ அவன் கோடிலிங்கார்ச்சனைப்பலனை அடைவான்'
என்று வரம் கொடுத்து வாழ்ந்திருந்தனர்.

## மஹிமை.

துங்கபத்திராதீரத்தில் சிருங்கிசைலத்தில் வசிக்கின்ற கிரௌஞ்சன் என்னும் பிராமணன் நாடோறும் சிவபக்தசிரோமணிகளாகியபிராமணோத்தமர் பூஜிக்கும் சுவர்ணலிங்கங்களை அபகரித்தான், அதனை விற்று ஜீவனம் செய்துவந்தனன். அப்பாவத்தால் அவனுக்குப் பதினாறுபிள்ளைகள் அலிகளாய்ப் பிறந்தன. அவன் அப்பிள்ளைகளைப்பார்த்து மிகவும் துக்கித்து அவ்வலிரூபத்தை நிவர்த்திக்கப் புண்யக்ஷேத்திரங்கள்தோறும் சென்று தரிசித்துக்கொண்டுவருங்கால், இந்த ருத்திரசாலையையடைந்து மா விருக்ஷத்தைப் பார்த்தான், அதனடியில் ஒருக்ஷணகாலம்இருந்து தன்னிளைப்பை மாற்றிக்கொண்டு தன்னகரமடைந்தனன். மாவடியில்வாசம்செய்த புண்ணியவிசேஷத்தால் அப்பிள்ளைகள் புருஷரூபமடைந்தார்கள். அதனைப்பார்த்து 'இனி நம்முடையகுலம் விருத்தியடையும். இவ்வாறு விருத்தியடையச்செய்தது ருத்திரசாலை' என நிச்சயித்து ஆனந்தபரவசனாய் 'இளைப்பாறுவதற்குத் தங்கி இருந்த புண்ணியமே இவ்வளவு பெரும்பேற்றைத் தருமாயின் அந்த க்ஷேத்திரத்தில் எப்பொழுதும் வசிப்போமாயின் நமக்குவரும் பலனை என்னவென்று மதிப்போம்' என்று புளகாங்கிதங்கொண்டு அக்கணமே புறப்பட்டு காஞ்சி நகரத்திலுள்ள ருத்திரசாலையையடைந்தான்; அவ்விடத்தில் நாடோறும் செய்யும்படி விதித்திருக்கும் ஒழுக்கங்களில் தவறாது நடந்து சிவபூஜையில் சிறந்தவனாய் வாழ்ந்திருந்து தேகாந்தத்தில் சிவலோகமடைந்தனன்.

ஏழாவது அத்தியாயம் ஆம்பிரவிருக்ஷபிரபாவம் முற்றிற்று.

ஸ்ரீகாமாக்ஷிதேவ்யை நம:

# எட்டாவது அத்தியாயம்.

## விஷயசூசனை.

[இது ஏழாவது அத்தியாயத்தில் சொல்லிய மாவிருக்ஷமூலத்திலிருக்கும் ஜோதிலிங்கப்பெருமானது ஸ்வரூபம் இது என்பதையும், அந்த ஜோதிலிங்கப் பெருமானைத் தழுவுதற்கு உமாதேவியார் ஸ்ரீகைலாஸத்தைவிட்டு வந்தகாரணம் இது என்பதையும், கைலாஸத்தைவிட்ட அம்மையார் பதரிகாச்ரமத்தை வந்தடைந்தமையையும், அந்த ஆச்ரமத்திலுள்ள காத்தியாயனமாமுனிவர் அவ்வம்பிகைக்கு யோகதண்டம் முதலியவை கொடுத்தமையையும், அவைகளைப்பெற்றுக் காசிக்கு வந்தபின்னர் அங்கு யாவரையும் வருத்தியிருந்த துவாதசவருஷ க்ஷாமத்தைப் போக்கினமையையும், அதன் பின்னர்க் காஞ்சிக்கு வந்தபோது யோகதண்டம் முதலியன எல்லாம் சிவபூஜைக்குரிய சிவலிங்கமூர்த்தி முதலியனவாக மாறினமையையும், அதன்பின்னர் அம்மையார் காஞ்சியில் அரியதவமியற்றிவந்ததினால் சிவபெருமானார் கங்கையைக் கம்பாநதியாகப் பெருகிப்போகச் செய்தமையையும், அவ்வெள்ளத்தை உமாதேவியார் பிரணயபந்தனியைக் கொண்டு அடக்கினமையையும், மீளவும் சிவபெருமானார் பிரணயபந்தனியினுடைய கபாலத்தில் அடங்கியிருந்த வெள்ளத்தைப் பெருகிப்போகச் செய்தமையையும், அவ்வெள்ளத்தைக்கண்டு காமாக்ஷிதேவியார் ஏகாம்பரநாதரைத் தழுவினமையையும், தழுவியமாத்திரத்தில் காக்ஷிகொடுத்துத் திருமணம் செய்துகொண்டு யாவருக்கும் அனுக்கிரகம் செய்தமையையும் விளக்குவது.]

### ரசாலேசப் பிரபாவம்.

வேதஸ்வரூபமாகிய ஆம்பிரவிருக்ஷத்திற்கு கீழ்பால் அவ்விருக்ஷ மூலத்தில் சாக்ஷாத் சங்கரர் கதலிகுசுமம் (வாழைப்பூ) போல் ஒரு அஸ்தப்ரமாணம் ஜோதிஸ்வரூபராய் உமாலிங்கனத்தினால் குசகங்கண சோபிதராய் பிர்ம்மவிஷ்ணு ருத்திர மஹேச்வராகிய சதுர்மூர்த்திகளுக்கு மத்தியராயுள்ள சதாசிவானுக்கிரகமூர்த்தியாய், அகண்ட ஸச்சிதானந்த தேஜோமயராய், மான் மழு வரதாபய அஸ்தங்களால் பிரகாசிக்கின்றவராய், தவளமேனியராய், நித்திய கல்யாண சுந்தரராய், வியாக்கிரசர்மதரராய் கஜசர்மோத்தரீயராய், பஸ்மோத்தூளித விக்ரஹராய், திரிநேத்திரராய். சந்திரசேகரராய், சர்ப்பங்களாலும் கங்கையாலும், பிரகாசிக்கின்ற ஜடாமகுடதாரராய் சவ்யதக்ஷிணங்களில் உமாதேவியும் கங்காதே

ளிரும் நின்று வீசப்பட்ட சாமரைகளை உடையவராய், ருத்திரகோடீச்வரராய், ஏகாம்பர மூலத்தில் உள்ளவராய், ஸ்ரீகாமாக்ஷி தேவியார் துதிக்க மகாப்ரயளத்தைப் போக்கி, அவர் வேண்டியாங்கு பாணிக்கிரணம் செய்துகொண்டவராய் நித்திய கல்யாண சுந்தரராய் விளங்குகின்றார்.

உமாதேவியார் முன் சக்திகோடிகளுடைய மானத்தைப்பாதுகாத்தற் பொருட்டு சிவபெருமானுடைய நேத்திரங்களைப் புதைத்த ஒருமுகூர்த்த காலத்துக்குள் பிரளயகோரமாய்க் காணப்படும் ஸர்வஸம்கார காலத்தில் உலகமெல்லாம் அழிவுறுதல்போல் அழிந்துதிருஷ்டியாதிகள்மாறி உயிர்களியற்றவேண்டிய தருமங்களெல்லாம் ஒழிந்துபோன அக்காரணத்தால் பாவம் மேலிட்டு அப்பாவங்களெல்லாம் கருமை நிறங்கொண்டு தேவியாரது நித்தியசுந்தரமாகிய தேஜோரூபத்தைக் கருநிறமாக்கியது. அச்சமயத்தில் தேவியார் இறைவன் கண்ணைப் பொத்தியிருந்த கைகளை நீக்கித் தமது திருமேனி மாறுபட்டிருத்தலைப் பார்த்து நடுக்கமுற்றாள்; அதிசயித்து மனவருத்தமுற்று ' இதன் காரணம் யாதோ' என்று எண்ணினாள்; சிவபெருமானைப் பலமுறை பணிந்து ' ஹே, தேவ தேவ, மஹாதேவ, கருணாகர, சங்கர, ஸ்வர்ணம்போல் பிரகாசிக்கும் என்மேனி பாவரூபமான கருநிறமடைந்து பார்ப்பதற்குச் சகியாத கோரமாகக் காணப்படும் காரணம் என்னையோ' என்று வினவினர். சங்கரர் 'ஓ, தேவியே, இது கருமை நிறமன்று நீ என்னுடைய கண்களை மூடியதனால் வந்த உயிர்களின் பாவத்திரக்ஷிபாம்என்று கூறத்தேவிகேட்டு உள்ளம் நடுங்கி "ஹே தேவ தேவனே, ஜகந்நாதனே, சரணாகத வத்ஸலனே, கருணாநிதியே, யான் செய்த ஸர்வாபராதங்களையும் கிருபையினால் க்ஷமித்தல் வேண்டும்' என்று துதித்தாள். இதற்கு யான் செய்து கொள்ளத்தக்க பரிகாரமென்னை என்று கண்ணீரரும்பி மீளவும் கேட்டாள். சங்கரர் ' நீ விரைவாய்ப் பதரிகாச்ரமத்துக்குச்சென்று அங்கு ஒரு குழந்தை வடிவங்கொண்டிருப்பாயாக. அவ்விடத்தில் புத்திரப்பேறு வேண்டிய காத்தியாயன முனிவன் வருவான். அவன் உன்னைப் பார்த்தவுடன் புத்திரகாமம் தீர்ந்து மகிழ்ச்சியடைந்து ஞானதிருஷ்டியினால் உன் ஸ்வரூபத்தை அறிந்து தன் ஆச்ரமத்துக்குக் கொண்டுபோய் 8 வருஷம் உன்னைச் சீராட்டியும்

பூஜித்து வருவான். பின்னர் என் ஆக்ஞையினால் § யோகதண்டம், ஜபமாலை, தீபஸ்தம்பம், இரண்டு குடம், விசிறி, இரண்டு சாமரை, வித்யாதாரம், வியாக்ராசனம், புத்தகம், வறுத்த பயறு, கங்கைமணல், கங்காதீர்த்தம், குடை இவைகளைத் தருவான். அவைகளை நீ பெற்றுக்கொண்டு உடனே மழையின்றி வறுமை அடைந்திருக்கும் காசிக்குச் சென்று அன்னதானத்தால் அவ்வறுமையைப் போக்கி அன்னபூரணி என்று பெயர்பெற்று யாவரும் புகழப் பன்னிரண்டு வருஷம் அவ்விடத்திலிருந்து எத்திசையிலும் மிக்க தென்திசையை நோக்கிச் செல்லக் கடவாய். அப்படிச் செல்லும்பொழுது புலித்தோல் சோம விருத்தமாயும், குடம் ஆதார பீடமாகிய அதன் சூத்திரமாயும், மணல் இலிங்க ரூபமாயும், ருத்திராக்ஷமாலிகை பில்வமாலையாயும், குடை நாகாபரணமாயும், யோகதண்டம் திரிசூலமாயும், சாமரைகள் இரண்டு பெண்களாகவும், விசிறி வீணியாகவும், குடம் குடதீபமாயும், புத்தகம் காமதேனுவாயும், வித்யாதாரம் ஊசியாயும், வறுத்த பயறு முளையோடு கூடினதாயும், கங்கை பாலாயும் † எந்த இடத்தில் மாறுகின்றனவோ ¶ அந்த இடத்தைக் காஞ்சிக்ஷேத்திரம் என்

---

§ योगदण्डं साक्षमालां दीपाधारं घटद्वयम् ।
व्यजनं चामरद्वन्द्वं विद्याधारं च पुस्तकम् ॥
व्याघ्रासनं तप्तमुद्गं गङ्गासैकतमेव च ।
गङ्गातीर्थं च छत्रं च गृहीत्वाच मनोन्मनिम् ॥

இவற்றால் யோகதண்டம் முதலியன தந்தமை காண்க.

† यत्र व्याघ्रासनं सोमसूत्रं तत्सूत्रकं घटम् ।
सैकतं लिङ्गरूपं च जपाक्षा बिल्वमालिका ॥
नागभूषणकं छत्रं त्रिशूलं योगदण्डकम् ।
चामरं युवतीयुग्मं व्यजनं च सुरूपकम् ॥
घटदीपद्वयं वह्निरूपं धेनुश्च पुस्तकम् ।
विद्याधारं सूचिकां च तप्तमुद्गं च साङ्कुरम् ॥
गङ्गातीर्थं पयोरूपं भवेद्यत्र मनोन्मनि ।

இவற்றால் வியாக்ராஸனம் முதலியன மாறினமை காண்க.

¶ तत्काञ्चिनगरं विद्धि तत्र सोमसुभर्तृके ।
सूत्रे तत्सैकतं लिंगं बिल्वमालासमन्वितम् ॥

றதிவாயாக. சோம சூத்திரத்துடன் கூடிய அவ்விடத்தில் அவ்விலிங்கத்தை நாடோறும் க்ஷீரத்தால் அபிஷேகம்செய்து நாகாபரணத்தால் எழுந்தருளச் செய்து பில்வமாலையைச் சாத்தி முளைத்த பயறை நிவேதனம் செய்து தியானித்து, ‡ பக்கங்களில் இரண்டு ஸ்திரீகளைக் காவலாக வைத்து கோக்ஷீரத்தைப் பானம் செய்து கிளியைக் கையில் பிடித்துக்கொண்டு பஞ்சாக்னியை வளர்த்தி அதன் மத்தியில் ஊசியை நாட்டி அதன் முனையில் நின்று என்னைத் தியானித்துத் தவம் செய்து வருவாயாக. அப்பொழுது நான் உனக்குப் பிரத்யக்ஷமாகிக் கல்யாணம் செய்து கொள்ளுகிறேன், அக்கணமே நீ கருமை நிறம் நீங்கப் பெற்று ஸ்வர்ணரூபத்தை யடைவாய்" என்று கூறிய வாய்மொழிகளைக் கேட்டாள். பிரதக்ஷிண நமஸ்காரங்களைச் செய்து விடை பெற்று அவர் ஆணையின்படியே பதரிகாச்ரமத்திற் சென்று காத்தியாயன முனிவரை மகிழச்செய்து அவரால் யோகதண்டம் முதலியவை பெற்றுக் காசியை அடைந்தார். அன்னதானம் செய்து காசிராஜனுக்கு மோக்ஷமளித்து ஸ்ரீ காஞ்சியை அடையவேண்டும் என்றெண்ணி வரும்பொழுது யோகதண்டம் முதலியவை மாறினமை கண்டு ' இது தான் ஸ்ரீ காஞ்சி க்ஷேத்திரம் என்றுதெளிந்து, ஒவ்வொரு மா விருக்ஷத்தின் அடியிலும் பெருமானைத் தேடித் தேடிக் காணாமல், முடிவில் ஒரு மா விருக்ஷத்தின் அடியில் கைலாசத்தில் தமது நாயகரால் சொல்லப்பட்டவண்ணம் இருக்கக்கண்டு ஆனந்த பரவசத்தோடு ஆச்சரியமடைந்து பூஜித்து தவம் செய்துவந்தனர். அநேக நாட்ச் சென்றும் அவர் அருள்விரியாமையால் உக்கிரமான தவத்தைச் செய்துவரும் நாளில் ஒரு நாள் தீர்த்த யாத்திரையாய்

---

नागभूषणसंयुक्तं नित्यं क्षीराभिषेचितम् ।
मुद्गांकुरं च नैवेद्यं कृत्वा ध्यात्वा तु शांभवि ॥

இதனால் பூஜிக்கவேண்டிய முறைமை கூறினமை காண்க.

‡ पार्श्वयोर्वनिते स्थाप्य गोक्षीरैस्स ......... ।
करे धृत्वा शुकश्रेष्ठं पञ्चाग्नौ सूचिकोपरि ।
स्थित्वा मां ध्यायती भक्त्या तपः कुरु सुदुश्चरम् ॥

இவற்றால் தவம் செய்யும் முறைமை கூறப்படுகின்றது.

வருகின்ற நாரதமுனிவர் அவ்விடம் வந்தபொழுது கைகூடி சத்வத்தோடும் கூடியிருக்கின்ற கௌரியைப் பார்த்து, அவரைத் தவம் செய்யுங்காரணத்தைக் கேட்டு மிகவும் அன்புடையவராய், "ஹே அம்பிகே உனக்குக் காமேஸ்வராகிய பெருமானார் சீக்கிரத்தில் பிரத்யக்ஷமாகும் வண்ணம் ஓர் மந்திரத்தை உபதேசிக்கின்றேன் என்று பஞ்சபாண மந்திரத்தை உபதேசித்து விடைபெற்று தென் திசையை நோக்கிச் சென்றனர்.

அதன் பின்னர், அம்பிகை அம்மந்திரத்தைத் தம்முடைய ஜன்ம நக்ஷத்திரமாகிய பூர நக்ஷத்திரம் தொடங்கி ஆயுமாநகாலம் வரையில் விடாது ஜபித்துத் தவம் செய்து வர, அப்பஞ்சபாண மந்திரோச்சாரணையினாலுண்டாகிய அக்னி கைலாஸத்திற் பரவி வீசிற்று, அப்பொழுது சிவபெருமானார் இவ்வக்கினி ஜ்வாலை தேவியினால் செய்யப்பட்ட காமமந்திரத்தினாலுண்டாகிய அக்னியென்றும் இதையொருவராலும் தடுக்கமுடியாதென்றும் ஆலோசித்து அவரவர் வேண்டியாங்கு அருள் புரியும் காமாரியாகிய அப்பெருமானார் அம்மையார் வேண்டியவாறே பஞ்சபாண மந்திரங்கட்கு உட்பட்டுக் காமமேலிட்டவர் போன்று யோகினி கணங்களோடு கூடி லீலா விநோதம் புரிந்தும் அடங்கப் பெறாதவராய்ச் சற்றே திருவுளத்துட் பரிபவமுற்றுத் தமது திருமுடியில் வசிக்கும் கங்கையைப் பெருக்கி அவ்வெள்ளத்தில் மூழ்கிச் சிறிது சுகமுற்று மீளவும் அக்கங்கையைப் பார்த்து "உனது உருவமாகிய ஜலத்தில் மூழ்கியும் எனக்குண்டாகிய காமாக்கினி சிறிதேனும் தணியவில்லையாகலான் நீ பார்வதி தவம் புரியும் இடத்திற்கு மஹாப்ரளய ரூபிணியாய்ச் சென்று அவளது மந்திரஜபத்தைத் தடுப்பாய்" என்ன, உடனே கங்கையானவள் அப்பெருமானுடைய ரோமங்களிலிருக்கும் மூன்றரைகோடி தீர்த்தங்களையும் ஆகர்ஷித்துக்கொண்டு அத்தீர்த்தங்களுடன் கலந்து வியாபகராய் வரும் சிவபெருமானாரை ஹ்ருதயகமலத்திலிருத்தித் தியானம் செய்து மீளவும் சீதள ஸ்வரூபிணியாய் அதிவேகமாய்ப் பேரலைகளோடு நந்திசைலம் என்கிற மலையை அடைந்து அங்கிருந்து ஏகமுகமாய் மஹாதேவி தவம் புரியும் இடத்தை நோக்கி வந்தனள். அதனை உமாதேவியார் பார்த்து கம்பம் கம்பம் (பயம், பயம்) என நடுக்கமுற்று அப்ப்ரளயத்தைத் தடுக்க எண்ணித் தமது தோழியருள் ஒரு சக்தியைப் பார்த்து,

"ஹே தோழி, இவ்வெள்ளத்தைப் பார்த்தனையா? இதனைப் பார்க்கும் பொழுதே எனக்கு அதிக பயங்கரமாக இருக்கின்றது. இதனை நீ பந்தனை செய்வாய்" என்று ஏவ, அந்தக் காளி அவ்வெள்ளத்திற் கெதிரே நின்று தன் கையிலிருந்த விச்வ பக்ஷணம்என்னும் கபாலத்தில் அப்பெருவெள்ளத்தை வெளியே போகவிடாமல் அந்த க்ஷணமே உள்ளடக்கினள்.

பின்னர், அம்பிகை தனக்கு வந்த விக்கினத்தைப் போக்கிய அத்தோழியினிடத்தில் அதிகப் பிரீதியுடையவராய் "நீ மஹா பிரளய பந்தனி" என்று யாவராலும் புகழப்படுவாய்" என்று அருள் செய்தனர். பின்னர், காமேசர் கபாலத்தில் அடங்கி இருந்த வெள்ளத்தை ஆயிரமுகத்தோடு மகா பிரளயமாய் வெளியே வரச்செய்தனர். உமாதேவியார் கபாலத்தில் அடங்கியிருந்த வெள்ளம் பெருகி வருவதைக்கண்டு 'இது பிரளய பந்தனியினால் தடுக்க முடியாதது' என்று பயந்து தனது சகோதரராகிய விஷ்ணு மூர்த்தியை நினைக்க, அவர் உமாதேவியாருக்கு உண்டாகிய பயத்தைப் போக்கும் பொருட்டு பூமியில் பாதங்களும் ஆகாயத்தில் முடியுமாக இருக்கும் பேருருக்கொண்டு தனது கண்டத்தில் சந்திரகிரணம் விளங்க, அவ்வெள்ளத்தைத் தடுப்பார் போன்று நின்றனர். அவரைக்கண்ட உமாதேவியார் தமது நாயகராகிய சந்திரசேகரர் என நிச்சயித்து நடுக்கமுற்றபொழுது, சந்திரகண்ட விஷ்ணுமூர்த்தி கௌரியைப் பார்த்து, "யான் சந்திரசேகரனன்று; அவரருளால் சந்திரகலை கண்டத்தில் வீசப் பெற்று சந்திரகண்டன் என்று இங்கு வாழ்கின்ற உனது தமயன்" என்று தன்னைத் தெரிவித்து "ஓ, சங்கரி, இந்த வெள்ளம் வெள்ளமன்று. இது சாக்ஷாத் சங்கரருடைய ஸ்வரூபம், அவர் உன்னைச் சோதிக்கும் பொருட்டு இவ்வாறு வந்தனர். ஆகையால் நீ பக்தியுடன் அவரையே துணை என நம்பி உன்னால் பூஜிக்கப்பட்டு வரும் இந்தச் சைகதலிங்க மூர்த்தியைச் சரணமடைந்து ஆலிங்கனம் செய்துகொள்வையேயாயின் அக்கணமே கங்காதரராகிய சங்கரர் பிரசன்னராய்க் கருணை கூர்ந்து மகிழ்ந்து, பிரளயத்தை மாற்றிக் கலியாண சுந்தரராய் உன்னை விவாஹம் செய்து கொள்ளுவார். இது நிச்சயம் என்று கூறி ஏகாம்பரநாதருடைய எதிரில் முன்போல் தானிருக்கும் இடத்தில் சந்திரகண்டராய் நின்றனர்.

அந்த விஷ்ணுமூர்த்தி சென்றவுடன் வெள்ளம் பெருக்கெடுத்து வரத்தலைப்பட்டது. அதைக்கண்ட தேவியார் "இவ்வெள்ளம் எமது பெருமான்மேல் வருதற்கு ஐயமென்னையுள, இனி யான் என்செய்வேன்" என்று இலிங்கமூர்த்தியைப்பார்த்து "எம்பெருமானே, அன்பார்க்கெளியானே, அடியார் இடர் களையும் அண்ணலே, சிவனே, சிவனே, எனக்கு நீயே கதி" என்று திண்ணிய அன்புடன் தேகபாவசராய்த் தமது இருகரங்களாலும் மார்பிறுக ஆலிங்கனம் செய்து தழுவினர். எம்பெருமானும் பிராட்டியாரது மூலைத்தழும்பும் வளைத்தழும்பும் தமது திருமேனியில் அழுந்தப்பெறவே, அதுகாறும் அடங்கப்பெறாத பேராவா அடங்கப்பெற்று காமேசராய் அப்பிராட்டியார் தமது அர்த்தாசனத்திலிருக்க வீற்றிருந்தனர். அப்பொழுது உமாதேவியாரும் தாம் அடைந்திருந்த காளி வடிவம் நீங்கிக்கௌரிநிறம் பெற்றமையால் புதிய கலியாணத்தை விரும்பினர். சிவகணங்களும் ஏனைய ரிஷிகளும் அம்மையப்பருடைய பேரழகைக்கண்டு கலியாண கோலத்தைக் காணப்பேராசை கொண்டனர். இவர்கள் குறிப்பறிந்த பெருமான் விஷ்ணுமூர்த்தியை நோக்கி "நீ எங்களிருவருக்கும் கலியாண மஹோத்ஸவம் நடத்தக்கடவாயாக. நமது கௌரியும் கலியாண கோலத்தில் விருப்புடையவளாய் இருக்கின்றாள், முன்னர் அகஸ்திய முனிவருக்கும் 'இவ்விடத்தில் வருஷம்தோறும் கலியாண மஹோத்சவ தரிசனம் தருகின்றோம்' என்று வரம் கொடுத்திருக்கின்றோம். ஆகையால், கலியாணம் நடத்துவதற்கு வேண்டிய பிரயத்னங்களைச் செய்வாயாக" என்று கட்டளையிட்டனர்.

விஷ்ணுமூர்த்தி அக்கட்டளையை ஏற்றுப் பிரமனுதி தேவர்களைப்பார்த்து "ஓ, தேவர்களே, இந்தக் கலியாணத்தை முடிக்க வேண்டிய கடமைப் பாடுடையவர் நீங்களேயன்றி யான் என் செய்வேன்" என்று யாவர்க்கும் பிரியமான பலவார்த்தைகள் சொல்லி "நீங்கள் யாவரும் உம்முடைய உலகங்களிற் சென்று ஆடையாபரண கந்தமாலை முதலியன யாவும் அதிசீக்கிரமாகக் கொண்டுவந்து சேர்க்கவேண்டும்" என்று சொல்ல, 'யாவரும்

கைகொட்டிக் கூத்தாடி அவரவருந் தங்கள் தங்கள் பதங்களுக்குச் சென்று எல்லாத் திரவியங்களையும் கொண்டுவந்து நாடுநகர முதலியனவெல்லாம் அலங்கரித்துப் பெருமானுக்கும் பெருமாட்டிக்கும் கலியாண மகோற்சவம் என்று எங்கனும் பேரிகை முழக்கி துவஜாரோகணம் முதலியனவெல்லாம் வேதாகம விதிப்படி செய்வித்து ஒன்பது நாளும் செய்யவேண்டிய விழாவையும் முறையாக நடத்திப் பத்தாநாளாகிய உத்திரதினத்தில் ஏகாம்பர நாதரையும் காமாக்ஷி தேவியையும், விஷ்ணுமூர்த்தி லக்ஷ்மிதேவியோடும் "நானென்ன புண்ணியம் செய்தேன், நானென்னபாக்கியம் செய்தேன்" என்று ஸ்தோத்திரம் செய்து புகழ்ந்துகொண்டே அலங்காரம் செய்து கலியாணமண்டபத்தில் சகல வாத்தியங்களும் முழங்க வீற்றிருக்கச் செய்து இலக்ஷ்மிதேவியானவள் கநீரம் சொரிய விஷ்ணுமூர்த்தி ஏகாம்பரநாதருடைய திருவடி விளக்கிப் பட்டாடையால் ஒற்றிப் பாததீர்த்தம் உண்டு மனம் களித்து மதுபர்க்கத்தை மந்திரத்தை உச்சரித்துக் கொடுத்து பெருமான் திருகரத்தின்மேல் கௌரிதிருக்கரத்தை வைத்து மந்திர நீர்வார்த்துத் தத்தம் செய்யப் பெருமானார் காமாக்ஷியைப் பாணிக்கிரகணம் செய்தனர். பின்னர் பிரமதேவன் சங்கதுந்துமி முதலிய பல வாத்தியங்கள் சப்திக்கவும் வேதம் முதலியன கோஷிக்கவும் கற்பகமலர் முதலியன மாரியகப் பொழியவும் அந்த ஏகம்பவாணரைக் காமாக்ஷிதேவியாருடைய கண்டத்தில் மாங்கல்ய சூத்திரத்தைச் சாத்தியருளச் செய்தனன். அக்காலத்தில் தேவயக்ஷகின்னர கிம்புருஷ சித்த சாத்தியர் முதலிய யாவரும் "ஜய, ஜய," என்று முழக்கமிட்டுப் பலபலவாக ஸ்தோத்திரம் செய்து ஆனந்த பரவசமுற்றிருக்கும் சமயத்தில், திருமால் அந்தணர் முதலிய யாவருக்கும் பாயசான்ன வகைகளோடும் பக்ஷியவகைகளோடும் சமாராதனை நடத்தி அதன் பின்னர்க் கந்தம், புஷ்பமாலை, தாம்பூலம், தக்ஷிணை முதலியன அவரவர்க்குக் கொடுத்து மகிழ்ந்திருப்பத் தேவதச்சனாகிய விச்வகர்மா திரிபுரதகன காலத்தில் பெருமான் ஆரோகணித்த பூதம்போலும் சுவர்ணமயமான ரதமும், இந்திரன் ஸ்படிகத்தினால் செய்த வெள்ளிக்குடையும், பிரமதேவர் ஜடாமகுடம்போன்ற இரத்னமயமாகிய மகுடமும், ஏகாம்பரநாத

ருக்கு முன்னே கொண்டுவந்து வைத்து "எங்கள் செல்வமே, மனோன்மணியாகிய காமாக்ஷியுடன் இந்தக்கலியாண சுந்தர கோலத்தோடும் இவ்வர்திப்பொழுதில் இந்த ரதத்தில் ஆரோகணித்து எங்களால் கொடுக்கப்படும் முடியையும் திருமுடியில்சூடி இந்திரன் குடைபிடிக்க, பாசுபதர்களாய் விளங்கும் தேவசமூகங்களாகிய அடியார்களெல்லாம் பரமானந்த வெள்ளத்தில் மூழ்கப்பவனிவரவேண்டும்" என்று பிரார்த்தித்தனர். அவ்வண்ணமே வீதியில் பவனிவந்து ஆஸ்தான மண்டபத்தில் எழுந்தருளியிருந்து யாவரையும் பார்த்து "அன்பர்களே, ஆகாசகங்கையாகிய மந்தாகினி தீரத்திலுள்ள கைலாஸ பர்வதத்தில் ஸதாசிவமூர்த்தியாய் எவ்வண்ணம் பிரசித்தியாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறேனோ அவ்வண்ணம் இந்தக்காஞ்சி க்ஷேத்திரத்தில் கம்பாநதி தீரத்திலிராநின்ற மாவிருக்ஷத்தினடியில் காமாக்ஷிசமேதனாய் ஏகாம்பரநாதன் என்கிற நாமத்தோடு வீற்றிருந்து என்னைச் சரண்புகும் யாவருக்கும் தரிசனமாத்திரத்தில் சகல காம்யங்களும் தருவேன். நீங்களும் ஸ்ரீ கைலாஸத்தைக் காட்டிலும் இவ்விடத்தில் அதிகப் பிரீதியுடையவர்களாய் என்னுடைய சந்நிதானத்தில் வசித்துக் கொண்டு வருஷந்தோறும் வரும் பங்குனி உத்திரத்தில் இந்தக் கௌரி கலியாணத்தை யுத்தேசித்து மஹாபிஷேக சகிதமான மஹாபூஜையும் அலங்கார சகிதமான மஹோத்சவமும் அறுசுவையோடு கூடிய சிறந்த வுணவுகளால் பிராம்மண பூஜையும் செய்து வரவேண்டும்" என்று ஆக்ஞாபித்து அவ்விடத்தில் கல்யாணகோலத்துடன் வீற்றிருந்தனர்.

ஏகாம்பரநாதர் இவ்வண்ணம் அனுக்கிரகம் செய்தபின்னர் கலியாணகோலத்தோடிருக்கின்ற எட்டுவயதுள்ள கௌரியாகிய காமாக்ஷிதேவியானவள் தன்னுடைய நாயகராகிய சூதநாதரை ஸ்துதித்துப் பின்னர் பக்தானுக்கிரக இச்சையோடு அங்கிருந்த யாவரையும் பார்த்து மிகுந்த ப்ரீதியுடையவளாய்ப் "பங்குனி உத்திரதினத்தில்இவ்வாலயத்தில் எங்களிருவருக்கும் கலியாணத்தை பக்தியோடு எவர்கள் செய்விக்கின்றார்களோ அவர்கள் ஸகலாபீஷ்டங்களையும், கோடி கன்னிகாதான பலனையும் அடைவார்கள்" என்று தனது கருணை நிறைந்த திருக்கண்களால் அனுக்கிரகம் செய்து அந்த சூதநாதருடைய வாமபாகத்தில் வீற்றிருந்தனள்.

அதன் பின்னர் பாசுபதர்களாயிருந்தவரெல்லாம் ஆனந்தக் கடலில் மூழ்கினவர்களாய் ஒருவரையொருவர் பார்த்து ஸர்வசக்தியாய் விளங்குகின்ற மஹாசக்தியே இந்தக் காமாக்ஷிதேவியாயும் அந்த மஹாசக்தி நாதராகிய மஹாதேவரே இந்தச்சூதலிங்க நாதராயும் பிரகாசித்துக்கொண்டு கலியாணவரதர் என்றும் முக்திப் பிரதரென்றும் யாவராலும் புகழப்பெற்று விளங்குகின்றார் என்று போற்றிப் பரமசிவபதத்தை யடைந்தனர்.

மஹிமை.

காவேரிநதிக்கரையிலுள்ள திருப்பனங்காடு என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் யஜுர்வேதியாகிய சம்ப என்னும் ஓர் வேதியனிருந்தனன். அவன் காஞ்சி நகரத்தின் பெருமையையும் பங்குனி உத்திர மஹோற்சவ மகிமையையும் கேட்டுத் தான் தரிசிக்க வேண்டும் என்றெண்ணிக்காஞ்சி நகரத்தையடைந்து கலியாண மஹோற்சவத்தைக் கண்டுகளித்து "எம்பெருமானே, இவ்வைபவத்தை வருஷந்தோறும் யான்கண்டுகளித்து உய்யுமாறு அருள் செய்ய வேண்டும்" என்று பிரார்த்தித்துக்கொண்டு தன் தேசத்திற்குப்போய் பதினாயிரம் வருஷம் ஜீவித்திருந்து பின்னர் சிவகணங்கள் விமானம் கொண்டுவர ஸ்ரீ கைலங்கிரிக்குச் சென்று அங்கு சிவகணங்களுடன் வாழ்ந்திருந்தனன். பின்னர் ஆயிரந் தலைமுறை அவ்வேதியன் வம்சத்தில் வந்தவர்களெல்லாம் ஏகாம்பரநாதருடைய கலியாண வைபவத்தைக் குடும்பசமேதராய்வந்து தரிசித்துத் தங்கள் தேசம் செல்லும் நியதியில் தவறாதிருந்து முடிவில் ஒவ்வொருவரும் சிவகணங்களால் அழைக்கப்பட்டுச் சிவலோகம் சென்றனர்.

எட்டாவது அத்தியாயம் ரசாலேசப் பிரபாவம் முற்றிற்று.

உ

ஸ்ரீ காமாக்ஷி தேவ்யை நம:

## ஒன்பதாவது அத்தியாயம்.

### விஷயசூசனை.

[இது சர்வதீர்த்தமானது ஏகாம்பரநாதர் தம்முடைய காற் பெருவிரலால் உண்டாக்கப்பட்டது என்பதையும், இரண்டு முறை பெருகிவந்த கம்பையெவ்வளம் அதில் வீழ்ந்துள்ளது என்பதையும், அந்தச் சர்வதீர்த்தம் காமாக்ஷி தேவியினால் கட்டப்பட்டது என்பதையும், பின்னர் அத்தேவி தாம் செய்துவந்த முப்பத்திரண்டு அறங்களையும், கடத்திவாசக் கணபதியை ஸ்தாபித்தார் என்பதையும், சர்வதீர்த்த மகிமையினால் ஒரு பிராமணனுடைய, பிதுர்க்கள் நரகத்தினின்றும் கரையேறினார்கள என்பதையும், விளக்குவது.]

சர்வதீர்த்த ஸ்நானகாலத்தில் ஜபிக்கவேண்டிய ச்லோகங்கள்.

श्रीशैलस्याग्निदिग्भागे योजनेनैकविंशके ।
कावेरीकृष्णयोर्मध्ये तत्र गौरीतपोवने ॥
कम्पाया दक्षिणे कूले रुद्रशाला धरातले ॥१॥
एकाम्रनायकश्शम्भुः सदा तत्रैव वर्तते ।
उमालिङ्गनसंक्रान्तकुचकङ्कणमुद्रितः ॥२॥
लिङ्गमेकाम्रनाथस्य सैकतं समुपास्महे ।
योऽर्चयेत् रुद्रशालायां लिङ्गमेकं प्रयत्नतः ॥३॥
कोटिलिङ्गार्चनफलं शिवलोकं च गच्छति ।
यो वसेत् रुद्रशालायां क्षणार्धं वा तदर्धकम् ॥४॥
मुच्यते सर्वपापेभ्यः साक्षाद्भर्गो नराकृतिः ।
शिवबीजसमुद्भूतं वेदशाखाभिरुज्ज्वलम् ॥५॥
मृकण्डुतनयाधारं रसालं तं नमाम्यहम् ।
श्रीमदेकाम्रवृक्षस्य यो वसेन्मूलभूतले ॥६॥

गुणाहृत्या प्रभुस्तस्य कोटिलिङ्गार्चनं भवेत् ।
समस्तं महादेव्या नित्यकल्याणसुन्दरम् ॥७॥
महामकपपापघ्नं रसालेशमहं भजे ।
चूतेशाम्बिकयोः काञ्च्यां शिवाविर्भाववासरे ॥८॥
कल्याणं कुर्वतः कोटिकन्यादानफलं लभेत् ।
कोटिलिङ्गप्रतिष्ठायां यत्फलं शास्त्रवर्णितम् ॥९॥
तत्फलं लभते मर्त्यः सकृच्चूतेशसेवया ।
हररोपसमुद्भूत सर्वतीर्थसमन्वयात् ॥१०॥
कम्पया पूरितं वन्दे भाद्रं तत्सर्वतीर्थकम् ।
भाद्रया सर्वतीर्थेषु स्नानतो यत्फलं नृणाम् ॥११॥
सर्वतीर्थे सकृत् स्नानात् तत्फलं लभते नरः ।
य इत्थं प्रातरुत्थाय स्नानकाले पठेन्नरः ॥१२॥
श्लोकद्वादशमात्रेण श्लोकोक्तफलमाप्नुयात् ।
एतद्रहस्यमाख्यातं सर्वतीर्थप्रकाशकम् ॥१३॥
यः पठेच्छृणुयान्नित्यमिममध्यायमादरात् ।
सर्वतीर्थसरस्स्नानात् यत्फलं तत्फलं लभेत् ॥१४॥

மகாபுண்ணியகரமாயும், சகலபாவங்களையும், போக்கடிக்கிறதாயும் சகல தீர்த்தங்களும் தன்னிடத்தில் அடங்கியிருக்கப் பெற்றதாயுமுள்ள சர்வதீர்த்தமானது பூர்வத்தில் சிவபெருமான் தேவியை நீங்கியிருந்தகாலத்தில் தமக்குண்டாயிருந்த காமாக்னியானது பின்னர் அத்தேவி தழுவத்தணிந்து, வளைச்சுவடோடு முலைச்சுவடும் பிரகாசித்தவராய்ப் பிரீதியடைந்து, முன் தமது ஜடாமுடியினின்றும் பெருகச்செய்த வெள்ளத்தைக் கண்டு உமாதேவியார் பயமுற்றபடியினால் அந்த வெள்ளத்தையடக்கி அவரது பயத்தைப் போக்குதற்குத் தமது பாதத்தைப் பூமியிலூன்றியதால் உண்டாகியது எதுவோ அதுவே இத்தடாகமாகும்.

அதில் ஆயிரமுகமாகப் பெருக்கெடுத்துவந்த வெள்ளமானது நந்திமலை பாலாறு திருப்பாற்கடல் என்கிற இம்மூன்று ஸம்பந்தங்களையுடையதாயும், வராகபுரம், பசுபுரம், அம்பிகாபுரம் என்கிற இம்மூன்று புரங்களுடைய மார்க்கத்தையுடையதாயும், சூத (மா) மூலம், சிவமூலம் என்கிற க்ஷேத்திரபிரஸ்த சம்பந்தங்களையுடையதாயும் செல்லுகின்றபோது சமுத்திர காமினியாகச் சென்று க்ஷீரநதியோடு கூடிக்கலந்து நல்ல பெரு வெள்ளமாய்ப் பெருகி யாவர்கண்ணுக்கும், தோன்றுகிருக்கும் வண்ணம் பூமியில் அந்தர்வாகினி (கீழ்வழி) யாய் வந்து பாத்திரத்துள்ளிருந்து வீழும் ஜலம் போல் அதில் விழப்பெற்றதாயு முள்ளது அச்சர்வ தீர்த்தம்.

காமாக்ஷி தேவியைத் திருமணம் புணர்ந்த பின்னர் முன் தமது ரோம கூபத்தினின்றும் பெருகிய மூன்றரைக்கோடி தீர்த்த சமூகமாகிய வெள்ளமானது 'பிரளயபந்தனி' என்னும் துர்க்கையினுடைய கபாலத்தில் அடங்கியிருந்தபடியினால் அந்தக் கபால வெள்ளத்தையும் அதில் வீழ்ந்திருக்கச் செய்தனர்.

இவ்வண்ணம் சிவபெருமானார் சர்வதீர்த்தம் உண்டாக்கிய பின்னர் காமாக்ஷிதேவியைப்பார்த்து அத்தீர்த்தத்தைக் காட்டி "ஹே, தேவி! நீ என்னைப் பூஜித்துவந்த காலத்தில் உன்னைப் பயமுறுத்தி உன்னால் கம்பை என்று பெயர்பெற்ற நதியானது இத்தடாகத்தில் வந்து கலந்திருக்கிறது. § பிரளயபந்தனியினுடைய கபாலம் வற்றிப் போயிற்றென்று சொல்லியபோது அதனைத் தேவியார் கேட்டுப் புன்னகையரும்பி அத்தீர்த்தத்தின் மகிமை இத்தன்மைத்தென அறிந்து அதில் ஸ்நானம்செய்ய விருப்பமுடையவராய் அத்தீர்த்தத்தைப்படிமுறைகளாலும், மண்

---

§ உமாதேவியார் சிவபெருமானுர் தம்மைத் தழுவுவதற்கு முன் கங்கை பெருகி மூன்றரைக்கோடி தீர்த்தங்களோடும் கலந்துவந்து பிரளயபந்தனியினுடைய கபாலத்திலடங்கி அதினின்றும் ஆயிரமுகமாய்ப் பெருகிய பெருவெள்ளமும், திருமணம் புணர்ந்த பின்னர் பிரளயபந்தனியினுடைய கபாலத்திலடங்கியிருந்த வெள்ளமும் சர்வதீர்த்தத்தில் கலந்திருக்கிறதெனக் கொள்க. இரண்டுமுறையாய் வந்த வெள்ளத்திற்கும் கம்பை என்றே பெயர். இந்தக் கம்பையின் வரலாற்றை முன் சொன்ன எட்டாவது அத்தியாயத்திலும் இந்த ஒன்பதாவது அத்தியாயத்திலும் காண்க.

டப வரிசைகளாலும் அழகுபெறச் செய்து சங்கற்பம் கூறி ஸ்நானம் செய்து அத்தீர்த்தத்தினின்றும் எழுந்திருக்கும்பொழுது யௌவனமுடையவராயும், ஸௌந்தரியமுடையவராயும் பிரகாசிக்கின்ற மங்களஸ்வரூபமுடையவராயும் விளங்கினர்.

பின்னர்த் தமது உருவத்தைக்கண்டு மகிழ்ந்து அத்தீர்த்தக் கரையில் நின்று ருக், யஜுர், ஸாமவேதியர்களான அந்தணர்களுக்குக் கோதான ஹிரணியதானங்களும், சூரிய சந்திரருக்கும் வரையில் சாச்வதமான ஜீவனம் செய்யப் பூதான கிருகதானங்களும் செய்து, அவ்விடத்தினின்றும் புறப்பட்டுக் காமகோட்டத்தையடைந்து தருமசாலைகளை ஏற்படுத்தி மகா திரிபுரசுந்தரியாயும், ஆதிசக்தியாயும் இருக்கின்ற தேவியை ஆராதித்து மீண்டும் தருமசாலைக்குத் திரும்பிச் சிரேஷ்டமான முப்பத்திரண்டு தருமங்களையும் செய்து அத்தருமம் எக்காலமும் நடந்துவரவேண்டுமென்னும் எண்ணமுடையவராய் அக்ஷயபாத்திரம் காமதேனு கற்பக விருக்ஷம் சிந்தாமணி என்னும இவைகளைப் பிரதிஷ்டை செய்து, அவைகளைக்கொண்டு அம்முப்பத்திரண்டு தருமங்களையும் யுகங்கள்தோறும் அழிவின்றிச் சரிவர நடத்த அரசுரிமையின்றியமையாதாகலான் என்றும் அழிவில்லாதவராகிய கணபதியை அரசராக நியமித்து முடிசூட்டி அவரிடம் ஒப்புவித்து, பின்னர் காமகோடி பீடத்தில் வசிக்கும் திரிபுரசுந்தரியைப் பிரதக்ஷிணமாக வந்து வணங்கிப் போற்றி விடைபெற்றுக் காஞ்சி நகரத்துக் கதிபதியாயிராநின்ற கச்சபேச்வரமூர்த்தியிடம் சென்று அவரையும் விதிவத்தாய்ப்பூஜித்துப் பிரதக்ஷண நமஸ்காரம் செய்து விடைபெற்றுச் சர்வதீர்த்தத்துக்குப்போய் அந்தத் தீர்த்தத்தை மூன்று பிரதக்ஷணம் செய்து அத்தீர்த்தக்கரையினின்று தீர்த்த ஸ்நானத்தையுத்தேசித்து யாத்திரையாகச் சென்று 'சகல தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்தவர்களுக்கு என்ன பலனுண்டாகுமோ அந்தப்பலன் இந்தத்தீர்த்தத்தைத் தரிசித்த மாத்திரத்தில் உண்டாகும்' என்றும், 'விதித்திருக்கும் பலபுண்ணிய காலங்களில் பல புண்ணியதீர்த்தங்கடோறும் ஸ்நானம் செய்தால் யாதொரு பலன்களுண்டாகுமோ அந்தப்பலன்களை இதில் ஸ்நானம் செய்பவர் அடையப்பெறுவார்கள்' என்றும் வரம் கொடுத்துத் தமது நாயகரிடம் சென்று வணங்கி அவரது வாமபாகத்தையடைந்து நித்யகல்யாணியாய் விளங்கினர். அதுமுதற்கொண்டு

காஞ்சியில் யாத்திராவாசிகள் சர்வ தீர்த்தத்தைத் தரிசித்தும் ஸ்நானம் செய்தும் அவ்வப்பலன்களைப் பெற்றுவருகின்றனர்.

## மகிமை.

தாம்பிரபர்ணிதீரத்தில் அகஸ்திய கோத்திரத்தினும் ஸாம வேதியனுமாகிய சோமன் என்னும் ஓர் வேதியன் மதங்க (சண்டாள) குலத்தாளான அழகிற்சிறந்த ஒரு பெண்ணை மோகத்தால் சங்கமம் செய்து ஒரு பிள்ளையைப் பெற்றனன். பின்னர் இவ் வேதியனால் பிதுர்தேவதைகளை உத்தேசித்துச் செய்யப்பட்ட சிராத்தாதிகள் அனைத்தும் நிருபிரூபமாகப்போயின. சுவர்க்கத்திலுள்ள பிதுர்தேவதைகள் நரகமடைந்தனர். இவைகளையெல்லாம் அந்தப் பிராமணன் அறிந்து மிக்க வருத்தமுற்று தீர்த்த யாத்திரை செய்யப்புறப்பட்டு அங்கங்குள்ள தீர்த்தங்களில் ஸ்நானம் செய்துகொண்டு முடிவில் ருத்திரசாலையையடைந்து சர்வ தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தமாத்திரத்தில் அந்தப் பிராமணனுடைய பிதுர்க்களனைவரும் இப்புண்ணிய விசேஷத்தால் கோரமான நரகத்தினின்றும் நீங்கி சுவர்க்கமடைந்தனர். பின்னர் இவனால் செய்யப்பட்ட சிராத்தாதிகளைப் பிதுர்க்கள் திருப்தியுடையவர்களாய் ஆகாரமாகக்கொண்டார்கள்.

ஒன்பதாவது அத்தியாயம் சர்வதீர்த்தப் பிரபாவம் முற்றிற்று.

---

உ

ஸ்ரீ காமாக்ஷி தேவ்யை நம:

# பத்தாவது அத்தியாயம்.

## விஷயசூசனை.

---

[இதில் ஸ்ரீ காமாக்ஷிதேவியினுடைய எல்லை, க்ஷேத்திராங்கி என்னும் துர்க்காலயம் முதல் சவேதப் பெருமாள் ஆலயம் வரையில் ஆம் என்பதும் அவ்வெல்லைக்குள் முக்கியமான துர்க்காலயம் ஆறு என்பதும்; விஷ்ணுவாலயம் நான்கு என்பதும்; சிவாலயம் ஐந்து என்பதும்; தீர்த்தம் நான்கு என்பதும்; அந்தக்காமாக்ஷிதேவியினுடைய ஆலயத்துக்குள் அன்னபூரணியாலயம் சாஸ்தாவாலயம், அஞ்சனகாமாக்ஷி சந்நிதி, சந்தானஸ்தம்பம் என்பன உளவென்பதும்; இவற்றின் வரலாறுகள் இத்தன்மையவென்பதும் விளக்கப்பட்டுள்ளன.]

## காம கோட்டப் பிரபாவம்.

காஞ்சி க்ஷேத்திரத்தில் 'காமகோட்டம்' என்பது வாயு ஆக்னேய திக்குகளில் திருவுருவங்கொண்டு விளங்கும் சிவவிஷ்ணுஸ்வரூபங்கள் தாமேயாகிய பராசக்திக்கு இருப்பிடமாயும், சர்வான்மாக்களுக்கும் சர்வகாமங்களைக் கோடி கோடியாகக் கொடுத்தருளும் ஆற்றலுடையதாயும் விளங்குதலால் அந்தக்ஷேத்திரம் காமகோட்டம் எனப் பெயர்பெற்றது.

இதற்குப் பெயர் ஐந்து.

அவையாவன.

1 ஸ்ரீபுரம், 2 பத்மநாபகம், 3 ஜீவன்முக்திபுரம். 4 காமகோட்டம், 5 காமகோட்டி.

இதன் எல்லை

சவேதப்பெருமானுக்கு 17 அம்சம் கிழக்கிலுள்ள
க்ஷேத்திராங்கிஆலயமே கிழக்கெல்லை
க்ஷேத்திராங்கி ஆலயத்துக்கு 15 அம்சம் தெற்கிலுள்ள
அஸ்திசிம்மாலயமே தெற்கெல்லை
அஸ்திசிம்மாலயத்துக்கு 15 அம்சம் மேற்கிலுள்ள
காயாரோகண ஆலயமே மேற்கெல்லை
காயாரோகணத்துக்கு 13 அம்சம்வடக்கிலுள்ள
சவேதப்பெருமானாலயமே வடக்கெல்லை

இந்நான்கு எல்லைக்கு உட்பட்ட பிரதேசம் பஞ்சபாணநிகேதம் எனவும், காமகோட்டம் எனவும் பெயர் பெறும். இது உருத்திரசாலைக்கும், விஷ்ணுசாலைக்கும் மத்தியிலுள்ளது.

இவ்விடத்தில் எவர்கள் இஷ்டதேவதாமந்திரங்களை ஜபிக்கின்றார்களோ அவர்கள் அந்தமந்திரங்களில் வரும் அக்ஷரம் ஒன்றுக்குக்கோடி பலனையும், முக்தியையும், எவர்கள் காமங்களை விரும்புகிறார்களோ அவர்கள் அக்காமங்களையும் கோடியாக அடைவார்கள்.

இவ்வெல்லைக்குள்—

முன்சொன்ன க்ஷேத்திராங்கிக்கு 30-அம்சம் தெற்கில்
* சங்குபாணிவிநாயகர் 1

---

* இவர் உலகளந்தப் பெருமான் கோயிலுக்குத் தெற்கிலுள்ளவர். சப்பாணிப்பிள்ளையார் என வழங்கப்படுவர்.

சங்குபாணிவிநாயகருக்கு 6-அம்சம் மேற்கில்
குமரகோட்டப்பெருமான் 2

## வரலாறு.

தேவ சில்பியினால் காஞ்சிநகரத்தைப் பிரதிஷ்டை செய்ய ஆரம்பிக்கும் காலத்தில் வாஸ்துசாந்திசெய்து, சங்குப்பிரதிஷ்டை செய்யும் நிமித்தம் பூஜிக்கப்பட்டவர் 'சங்குபாணிவிநாயகர்.' பிரமதேவனைத் தாரகமந்திரம் வினவிச் சிறையிலடைத்துவிட்டுத் தாமே சிருஷ்டி செய்யும் கர்த்தராய் அக்கோலங்கொண்டவர் 'குமரகோட்டப்பெருமானார்'.

## துர்க்கை ஆலயம் 6.

குமரகோட்டத்துக்கு 24-அம்சம் தெற்கிலுள்ளவள்
* உக்கிரவாகினி 1

ருக்மிணிமைந்தனுக்கு 10-அம்சம் வடக்குத் திக்கி
லுள்ளவள் தாந்தோனி 2

தாந்தோனிக்கு 5-அம்சம் வடக்குத் திக்கிலுள்ளவள்
§ பஞ்சசந்திகை 3

பஞ்சசந்திகைக்கு 5-அம்சம் வாயுதிக்கிலுள்ளவள்
தீர்த்தமாலினி 4

தீர்த்தமாலினிக்கு 20-அம்சம் வடக்குத்திக்கிலுள்ளவள்
‖ ஹேமாசனை 5

பொன்னேரி அம்மைக்கு 21-அம்சம் தெற்கிலுள்ளவள்
‡ பீடவர்த்தினி 6

## வரலாறு.

'உக்கிரவாகினி' பிரமனாற் பூஜிக்கப்பட்டவள்; 'தாந்தோனி' சிவபெருமானைப் பூஜித்துத் தவூர்வித்தையில் மிகவும் பண்டிதை யானவள்; 'பஞ்சசந்திகை' தேவர்கள் தங்கட்கு நேர்ந்த விக்கினங்களைப் போக்கிக்கொள்ளுவதற்குவேண்டிய பலிகளைக் கொடுக்

---

* ருக்மிணிமைந்தன் என்றும், மதேவதை என்றும் வழங்கப்படுவள்

§ கச்சபேசுவராலயத்திலுள்ளவள்.

‖ பொன்னேரி அம்மை என வழங்குபவள்

‡ சாளியம்மை என வழங்குபவள்.

கும்பொழுது அவைகளையேற்று, அவர்கட்கு வேண்டிய ஹிதங்களைச்செய்து 'ஹிதகாரிணி' எனப்பெயர் பெற்றவள்; 'இர்த்தமாலினி' இவை என்னும் ஸ்திரீ தனக்கு உண்டாகிய கர்ப்பத்தைக் காக்கப் பூஜிக்கப்பட்டவள்; 'ஹேமாசனி' கோசக்ஷிசித்தனென்பவருக்கு விசேஷமான செல்வத்தைக்கொடுத்தவள்; 'பீடவர்த்தினி' திரிசிரனைச் சம்ஹரித்துக் காமகோட்டி பீடத்தைக் காத்தவள்.

## விஷ்ணுவாலயம் 4.

முன்னே சொன்ன பீடவர்த்தினிக்கு 6 அம்சம் வடக்கில்
§ தூர்வாவர்ணப்பெருமாள். 1

தூர்வாவர்ணப்பெருமானுக்கு 12 அம்சம் அக்கினியில்
¶ திரிவிக்கிரமப் பெருமாள் 2

உலகளந்தபெருமானுக்கு 4 அம்சம் வாயுவில்
மதுப்பெருமாள் 3

மதுப்பெருமானுக்கு 2 அம்சம் ஈசானத்தில்
காளாங்கபெருமாள் 4

## வரலாறு.

'தூர்வாவர்ணப் பெருமாள்' மன்மதனுடைய புத்திரனைப் பெறுவதற்கு லக்ஷ்மீதேவியினால் பூஜிக்கப்பட்டவர்; திரிவிக்கிரமப்பெருமாள்' பூவுலகத்தைத் தாங்கும் வல்லமையைப் பெறுதற்கு ஆதிசேஷனால் பூஜிக்கப்பட்டவர்; 'மதுப்பெருமாள்' ஒருகாலத்தில் காஞ்சிமண்டலத்தில் தேன்மாரி பொழிவித்தவர்; 'காளாங்கப்பெருமாள் ச ந் த ா னவிருத்தியுண்டாக மஹாகாளர் என்னும் சிவபெருமானைப் பூஜித்தவர்.

## சிவாலயம் 5.

முன்சொன்ன காளாங்கப்பெருமானுக்கு 1 அம்சம்
சமீபத்தில் மஹாகாளராலயம் 1

மஹாகாளராலயத்துக்கு 35 அம்சம் ஈசானத்தில்
பட்டாரகேசுவராலயம். 2

---

§ பச்சைவண்ணப் பெருமான்

¶ உலகளந்தப் பெருமான் என வழங்குபவர்.

பட்டாரகேசருக்கு 39 அம்சம் தெற்கில்

பணாதரேசராலயம் 3

பணாதரேசருக்கு 5 அம்சம் வடக்கில்

பணீசராலயம் 4

பணீசருக்கு 24 அம்சம் தெற்கில் † கச்சபேசராலயம் 5

வரலாறு

'மஹாகாளேசர்' முருகக்கடவுள் தனக்குப் பிள்ளையாக வர வேண்டுமென்று ஆதிசேஷனால் பூஜிக்கப்பட்டவர்; 'பட்டாரகேச்வரர்' ஜாகதாத்மா என்பவருக்குக் கவித்துவத்தைத் தந்தவர்; 'பணாதரேசர்' பூர்வத்தில் ஒரு பிரளயகாலத்தில் பனிரண்டுசூரியர்களால் நீலவர்ணத்தையடைந்த படங்களையுடைய சர்ப்பங்களுக்கு முக்தியைக் கொடுத்தவர்; 'பணீசர்' கத்ரு புத்திரர்களான சர்ப்பராஜாக்களைக் கருட பயத்தினின்றும் காத்தவர்; 'கச்சபேசர்' பிரமன், கச்சபமாய் (ஆமையாய்) வந்த திருமால், சரஸ்வதி, சூரியன், சாஸ்தா, சண்டிகை, சுப்பிரமண்ணியர், சனற்குமாரர் என்பவர்களால் பூஜிக்கப்பட்டவர்.

தீர்த்தம் 4

காமாக்ஷிதேவி ஆலயத்துக்குள் தேவிக்கு 1 அம்சம் மேற்கு திக்கில் பஞ்சதீர்த்தம் 1

பஞ்சதீர்த்தத்துக்கு 24 அம்சம் தெற்குதிக்கில்

காயாரோகணதீர்த்தம் 2

காயாரோகணதீர்த்தத்திற்கு 21 அம்சம் வடக்குதிக்கில்

‖ இஷ்டசித்தி தீர்த்தம் 3

இஷ்டசித்தி தீர்த்தத்துக்கு 15 அம்சம் வடக்குத்திக்கில்

¶ சக்கரதீர்த்தம் 4

வரலாறு.

'பஞ்சதீர்த்தம்' சதாசிவமூர்த்தியினது பஞ்சமுகத்தினின்றும் தோன்றியது; சிவபூதங்களிரண்டுக்கு முக்தியையும், பிருதிவி முதலிய பஞ்சபூதங்களுக்கு வேண்டிய சித்திகளையும் கொடுத்தது; 'காயாரோகணதீர்த்தம்' யயாதிமகாராஜனைச் சரீரத்தோடு சுவர்க்க

---

† பொன்னேரியம்மை கோயிலுக்கு எதிரிலுள்ளது

‖ இது கச்சபேசராலயத்திலுள்ளது

¶ சுவாயம்புவாயுள்ள இலிங்கமூர்த்தி

லோகம் போகச் செய்தது, 'இஷ்டசித்திதீர்த்தம்' சனற்குமார முனிவருக்குச் சாபத்தால் வந்த ஒட்டக சரீரத்தைப் போக்கியது; 'சக்கர தீர்த்தம்' கார்த்தவீரியனுக்குச் சாபசரீரத்தைப் போக்கி நிஜரூபம் கொடுத்தது.

## தீர்த்தபலன்.

'பஞ்சதீர்த்தத்தில் சுக்கிரவாரத்தில் ஸ்நானம் செய்வோருக்குக் கோதாவரியில் ஸ்நானம்செய்த பலனுண்டாகும்' என்று சதாசிவமூர்த்தியும்; 'காயாரோகண தீர்த்தத்தில் குருவாரத்தில் ஸ்நானம் செய்வோருக்குசிந்து நதியில் ஸ்நானம் செய்த பலனுண்டாகும்' என்று தௌம்ய முனிவரும்; 'இஷ்டசித்தி தீர்த்தத்தில் ஆதிவாரத்தில் ஸ்நானம் செய்வோருக்கு நர்மதையில் ஸ்நானம்செய்த பலனுண்டாகும் என்று சனற்குமார முனிவரும், 'சக்கர தீர்த்தத்தில் தேவி ஜன்ம நக்ஷத்திரத்திலும், பூர்வ பல்குனியிலும் ஸ்நானம் செய்வோருக்குக் கண்டகியில் ஸ்நானம்செய்த பலனுண்டாகும், என்று கார்த்தவீரியனும் வரங்கொடுத்தனர்.

ஆக, காமகோட்டமாகிய இவ்வெல்லையில் சங்குபாணி விநாயகாலயம் 1 குமாரகோட்டப் பெருமானாகிய முருகக்கடவுளாலயம் 1: துர்க்காலயம் 6; விஷ்ணுவாலயம்4; சிவாலயம்5; தீர்த்தம்4.

கச்சபேச்வராலயத்திற்கு 5 அம்சம் ஈசானத்திலுள்ள ஸ்ரீ காமாக்ஷிதேவியினுடைய ஆலயத்துள் அன்னபூரணிமுதல் சந்தானஸ்தம்பம்வரையில் சொல்லப்பட்டவை யெல்லாம் இருக்கும் இடங்கள் இனிவருமாறு.

காமாக்ஷிதேவி வீற்றிருக்கும் இடத்துக்கு நிருதியில்
அன்னபூரணி ஆலயம்.
அன்னபூரணி ஆலயத்துக்கு வாயுவில் சாஸ்தா ஆலயம்,
சாஸ்தாவாலயத்துக்கு ஈசானத்தில் அஞ்சன காமாக்ஷி.
அஞ்சன காமாக்ஷிக்குச் சமீபம்கிழக்கில் சந்தானஸ்தம்பம்

## வரலாறு.

'அன்னபூரணி, பூர்வத்தில் காசிக்ஷேத்திரத்தில் உண்டாகிய துவாதச வருஷக்ஷாமத்தை அன்னதானத்தால் போக்கினவள். இவ்வம்பிகையை அன்னவிர்த்தியை வேண்டினோர், அவாது ஆலயத்தில் தர்மத்துவாரம் என்று பெயர் பெற்றுள்ள முன்னேகாண

ப்படும் சிறிய த்வாரத்தை விட்டு அவாறு வலப்பக்கத்திலுள்ள சிறிய த்வாரத்தையடைந்து அந்தவிடத்தில் தமது கைகளை விரித்து மூன்று சாண் அளந்து மூன்று தடவையும் 'பவதிபிக்ஷாந்தேஹி' என்று பிரார்த்தித்து வேண்டுவாராயின், அவர் பசித்திருந்துவாழும் தாழ்வற்று பசித்துண்டுவாழும் பெருவாழ்வை வேண்டியவாறு பெறுவர். 'சாஸ்தா' சுப்பிரமணியக்கடவுளைப்போல் தேவியினுடைய திருமுலைப்பாலை அவ்விடத்திலுண்ணப்பெற்றனர். 'அஞ்சனகாமாக்ஷி' விஷ்ணுமூர்த்தியினுடைய சாபத்தால் வந்தவிருத்த ரூபத்தைக்காமாக்ஷிதேவியினுடைய கடாக்ஷத்தால்நீங்கப்பெற்று அம்மையைப்போல் சர்வானுக்கிரஹ மூர்த்தியாய்ச் சாந்துகாமாக்ஷி என்று வாழ்கின்றனள். 'சந்தானஸ்தம்பம்' ஸ்ரீ காமாக்ஷி தேவி அனுக்கிரகத்தால் வைவஸ்வதமநு மூன்று பிரதக்ஷணம் செய்து புத்திரனைப்பெறும் வரம்பெற்று அயோத்தியை யடைந்தனன்.

காமகோட்டமாகிய சக்திசாலையில் இவையெல்லாம் காமாக்ஷி தேவியினுடைய ஆக்ஞையினால் எப்பொழுதும் காணப்பட்டு வருகின்றன. இதில் வசிப்போர்க்குக் கைவல்யமாகிய முக்தி நகரவாச பலனுண்டாகும். ஆதலால் இது பூலோக ஸ்ரீபுரம் எனப் பெயர்பெற்றது.

## மஹிமை.

கங்காதீரத்தில் குண்டிவினி நகரத்தில் ஸ்ரீவத்ஸகோத்திரனும் ருக்வேதியுமான ஜகந்நாதனென்னும் ஓர் பிராமணன் வேதகிருத்தியங்களை யொழித்துத் துஷ்கிருத்தியங்களைக்கொண்டு பசு, அஜம், மச்சம் இவைகளைக் கொன்று வியாபாரம் நடத்தி அவைகளைத் தானும் கின்று வாழ்ந்து வருங்காலத்தில், யாத்திரார்த்தமாய்க் காஞ்சியிலிருந்து வந்த பிராமணனுக்குச் சிறிது பொருள் தந்தனன்.

அந்தக் காஞ்சிப் பிராமணன் அச்சிறிது பொருளைக்கொண்டு தனக்கு வேண்டிய ஆகாராதிகளைச் செய்துகொண்டு காசியையடைந்தனன். பின்னர் ஜகந்நாதன் விஷக்கடியாலிறக்க அவனை யமதூதர்கள் மிக்க கோபத்தோடு பாசத்தாற்கட்டி அக்கினிமயமாகிய தண்டங்களால் மோதி மண்டையைப் புளந்து அக்கினி

ஜ்வாலை வீசும் மார்க்கமாய் இயமனிடம் அதிவேகமாய்க் கொண்டு செல்லும்பொழுது தேவியாக்ஞைப்படி அவருடைய கணங்கள் அத் தூதர்களைக் கொன்று விமானத்திலேற்றித் தேவிசமீபத்திற் சேர்த்தனர். இயமன் இவைகளைக்கேட்டு அம்பிகையினிடத்திற் சென்று வணங்கி நரகவேதனையை அநுபவிக்கவேண்டிய இம்மஹாபாவியை அடியேன் வசம் ஒப்புவித்தல் முறைமை என்று பிரார்த்தித்தனன். அது கேட்டதேவி என் க்ஷேத்திரத்திலிருந்து யாத்திரையாகப் போன ஒரு பிராமணனுக்குச் சிறிது பொருளுதவினர். அது எனக்குப் பிரீதியாயிற்று. அதனால் சகல பாபங்களினின்றும் நீங்கினன். இனி இவ்வந்தணனை உன்வசம் ஒப்புவித்தல் அடாது என்று கூற இயமன் யான்கேட்ட பிழையைப் பொறுக்க வேண்டும் என்று பல முறையும் வணங்கித் தனது உலகம் போய்ச் சேர்ந்தனன்.

பத்தாவது அத்தியாயம் காமகோட்டப் பிரபாவம் முற்றிற்று.

---

உ

ஸ்ரீகாமாக்ஷி தேவ்யை நம:

## பதினொன்றாம் அத்தியாயம்.

### விஷயஸூசனை.

[இது ஸ்ரீ காமாக்ஷி தேவியினுடைய ஆலயத்துள் பராசக்தி வீற்றிருக்கும் மண்டபம் காயத்திரிமண்டபம் என்பதையும், அதற்கு ஆதாரமாயுள்ளது மஹாபிலம் என்பதையும் அந்த மஹாபிலத்துக்குரிய மஹிமையினால் வந்த நாம விவரணம் இவை என்பதையும், அவற்றுள் காமகோடி, காம கோஷ்டம், என்னும் இரண்டு நாமங்களுக்குள்ள விசேஷணங்கள் இவை என்பதையும், பின்னர் பந்தகாசுரனுடைய உபத்திரவம் இத்தன்மைத்தென்பதையும் அவ்வசுரனுடைய உபத்திரவத்துக்கு அஞ்சி அங்குவந்த தேவர்களுக்கு அந்த மஹாபிலத்தினுடைய பிரபாவம் விளக்கப்பட்ட விதம் இத்தன்மை என்பதையும், அந்தப்பில பிரதட்சண மஹிமை இத்தன்மை என்பதையும் விளக்குவது.]

### பிலாகாசப் பிரபாவம்.

பிலாகாசமானது இஷ்டசித்தி தீர்த்தத்திற்கு மூன்று அம்சம் ஈசானத்தில் ஸ்ரீ காமாக்ஷிதேவி வீற்றிருக்கும் ஆலயத்திலுள்ளது.

இந்த மஹாபிலம் எவ்வளவு விசாலமுள்ளதோ அவ்வளவு விசாலமாகக் காயத்திரி ஸ்வரூபமான மண்டபம் அதனைமறைத்து அதற்கு மறைவிடமாக இருக்கின்றது.

அந்த மண்டபத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கிற அந்தப் பிலமானது நாதபிந்து யுக்தமான பரமாகாசவடிவமாயிருப்பதால் 'நாதபிந்து சம்க்ஜிதம் பரமம் வ்யோமம்' என்றும், அந்தப் பரமாகாசம் பிரமத்துக்குச் சரீரமாயிருப்பதால் 'ஆகாச சரீரம்பிரும்மா' என்றும், அந்தப்பிரும்ம ஸ்வரூபமாகிய பரமசிவத்துக்கும் அதுவே சரீரமாயிருப்பதால் 'சம்புசரீரம்' என்றும், நிஷ்கள, ஸகல ஸ்வரூபமாயிருக்கிற பரமசிவத்தியானத்தால் அடையத்தக்க மோக்ஷத்தைப் பிரத்யக்ஷமாகக் கொடுப்பதால் 'பிரத்யக்ஷம் மோக்ஷிதம்பரம்' என்றும், ஞானவான்கட்கு சித்ஸ்வரூபத்தை விளக்குவதால் 'தேவசிந்ப': என்றும் உலகத்துக்கு காமவிலாசமாயிருப்பதால் 'ஜகத்காரகளர்காரம்' என்றும், பூமிக்கு நாபிஸ்தானமாயிருப்பதால் 'குண்டலினீபதம்' என்றும், பூமிக்கு மர்மஸ்தானமாயிருப்பதால் 'ஆதி பௌதிகமர்மாங்கம்' என்றும், சர்வகாமங்களுமிருப்பதற்கு ஓர் ககாமாயிருப்பதால் 'காமகாரம்' என்றும், எவ்வுலகத்தாராலும் கொண்டாடப்படும் பிரகாசமுடைத்தாயிருப்பதால் 'திவ்யம்' என்றும, பாவங்களைப் போக்கடிப்பதாயிருப்பதால் 'அகக்னம்' என்றும், சர்வசித்தியையும் கொடுப்பதாயிருப்பதால் 'சர்வசித்திதம்' என்றும், இந்திரிய காமங்களை யடக்குவதால் 'தபஸ்தானம்' என்றும் ஒருவராலுமறியக்கூடாத பரமாகஸ்யமாயிருப்பதால் 'குக்ஷ்மபிலம்' என்றும், திருமூர்த்திகள் சசசம்பந்தமான ஸ்வரூபங்கள் திக்குகள் உலகங்கள் மேரு கோரூபமாகிய பூமி ஆகிய இவைகட்கு ஒன்பது துளையோடு கூடிய மார்க்கமாயிருப்பதால் 'நவத்துவாரஸ்ய மார்க்கம்' என்றும், பூமிக்குக் காரணமாகிய யோனி ஸ்தானமாயிருப்பதால் 'பூயோனி'என்றும்;

இஷ்ட காமத்தை உத்தேசித்து யார் யார் எந்தெந்த விதமாகத் தருமங்களைச் செய்தபோதிலும் ஒரு தாம் செய்தபோதிலும் அந்தந்தத் தருமங்களை நல்ல தருமங்களாக்கி அவர்களுக்குஅந்தத் தருமம் ஒன்றுக்கு ஒரு பலனுகவல்லாமற் கோடி பலனைக் கொடுப்பதாயிருப்பதாலும், குபேரன் போல் சம்பத்துண்டாக

வேண்டுமென்ற திரவியத்தை விரும்புவோருக்கு அத்திரவியத்தைக் கோடியாகக் கொடுப்பதாயிருப்பதாலும், மோக்ஷமானது காமத்தின் கோடியில் (முடிவில்) இருப்பதால் அந்த மோக்ஷ இன்பத்தைக் கைவிட்டுக் காமத்தையே விரும்புவோருக்கு அந்தக் காமத்தைக் கோடியாகக் கொடுப்பதாயிருப்பதாலும், மோக்ஷமானது புருஷார்த்தத்தின் கோடியாக (முடிவாக) இருப்பதால் அந்தக்காம இன்பத்தைக் கைவிட்டு மோக்ஷத்தையே விரும்புவோர்க்கு அந்த மோக்ஷ இன்பத்தைக் கோடியாகக் கொடுப்பதாயிருப்பதாலும், இவ்வண்ணம் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கையும் தனித்தனியே விரும்புவோருக்கு அவ்வண்ணமே தனித்தனியாயும் அறம்பொருள் இன்பங்களை விரும்பாது மோக்ஷத்தை மாத்திரம் விரும்பும் மோக்ஷகாமிகளுக்கு அந்த மோக்ஷத்தோடு ஏனைய மூன்றையும் தர்மம் அர்த்தம் காமம் என்கிற மூன்றை மாத்திரம் விரும்புவோர்க்கு அவற்றையும் அவற்றோடு மோக்ஷ விருப்பத்தையும் கொடுப்பதாகவிருப்பதாலும், பரமசிவ மூர்த்தி நெற்றிக்கண்ணினால் தகிக்கப்பட்ட காமனைப் போலக் காமாக்ஷி தேவி தன்னுடைய நேத்திரத்தினின்றும் லீலாமாத்திரமாய்க் கோடி காமங்களை யுண்டாக்கியதாலும் 'காமகோடி' என்றும்;

வீட்டை அடைய விரும்புவோர்க்கு அறம், பொருள், இன்பங்களோடு அவர்கள் விரும்பிய வீட்டையும், அறம், பொருள், இன்பங்களை விரும்புவோர்க்கு அவற்றோடு அவர்விரும்பாத வீட்டையும் கொடுத்ததற்கு அந்நான்கும் அப்பிலத்தை யிடமாகக் கொண்டிருத்தலால் 'காமகோஷ்டம்' என்றும் சொல்லப்படும்.

சிவபெருமான் முன்னொரு காலத்தில் தாருகாவனத்தில் சென்று ருஷி பத்னிகளுடைய கற்பை அழித்த காலத்தில் அவர்கள் கணவர்களாகிய ருஷிகள் சிவத்துவேஷிகளாய் எவ்வுருவும் தன்னுருவமாகவேயுடைய சிவபரஞ்சுடரைப் பலவாறான நிந்தை மொழிகளால் இகழ்ந்து, பின்னர் அநாதி நித்யமாகிய அச்சிவ பரஞ்சுடரை அழிக்க எண்ணிப் புலி, பாம்பு, மான், கொக்கு முயல்கள் உடுக்கை, அக்னிமுதலியவைகளை ஏவியும், அவையெல்லாம் அவருக்கு அணிகலமாகவும், ஆடைமுதலியனவாகவும் ஆனமைகண்டு மனம்புழுங்கி 'இவனை இனி கண்டோரெல்லாம் நகைக்கும் வண்ணம் செய்யவேண்டும்' என்று துணிந்து மிகவும் ஆகக்

ளாக்கொண்டு 'அலியாய்ப்போக வேண்டும்' என்று சபித்துப் புலம்பிக் கொண்டிருந்தனர். சிவபெருமானார், '(பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளி சேர் விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகி) அநாதியே நின்றருளும் தமதியல் புணராது கர்ம பிரும்ம வாதிகளாய்க் கருமத்தையே கடவுளாக மேற்கொண்டிருக்கின்றனர்' என்று அவர்களது அறிவின் சிறுமையைத் திருவுளத்தெண்ணித் தாம் அவர்கள் கண்டு நாணமடையும் வண்ணம் சிறிதுபொழுது ஆனந்தக்கூத்தாடிக் கைலாஸத்துக்கு எழுந்தருளிப்பார்வதியாரோடு வீற்றிருந்தனர்.

இச்செய்தி இங்ஙனம் நிற்க பந்தகன் என்னும் இராக்ஷஸன் பிரமன் அனுக்கிரகத்தாற் சூரிய சந்திரர்களிருக்கும் அளவும் சிரஞ்சீவியாயிருக்கும் வரத்தைப் பெற்று இந்திராதி தேவர்களுக்கு வைரியாயும், சித்தர் முனிவர் முதலியோர்க்குப் பிராணகண்டகனாயும் உலவி எல்லா உலகங்களையும் வென்று, பின்னர்க் கைலாஸத்திற்குச் சென்றனன். ஓராதார்க்கு ஒளிக்கும் ஒளியானும் காவாடும் வன்னெஞ்சர்க்கு அரியானும் ஆகிய இறைவன் அவன் கண்ணுக்குத் தோன்றாமல் தமது கணங்களோடு மிருப்ப பந்தகாசுரன் தன் பரிவாரங்களோடு கைலையிலிருந்து எல்லாவுயிர்களையும் பிடித்துக்கொண்டு வாழ்நாளைக் கழித்து வந்தனன்.

இவனது உபத்திரவத்தைச் சகிக்க முடியாத தேவர்கள் கைலாசத்திற்கு வடக்கிலுள்ள கோமுகம் என்னும் திவ்ய க்ஷேத்திரத்திலிருக்கும் பிலத்துட் சென்று காஞ்சி க்ஷேத்திரத்தில் காமகோடியாகிய பிலத்தின் வழியாய் வெளியே வந்தனர். அப்பிலமூலத்தில் காமகோடீஸ்வரியாயும், மஹாதேவியாயும், திரிபுர சுந்தரியாயும் எழுந்தருளி விளங்கும் தேவியைத் தரிசித்து நமஸ்கரித்துத் தங்கள் தங்களுக்கு வேண்டியவைகளைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கும் பொழுது சிவபெருமானார் அப்பிலத்தின் மகிமையைத் தேவர்களுக்குத் தெரிவிக்க அப்பிலத்தினின்றும் வெளிவந்து கோடி சூரியப் பிரகாசமாய்த் திவ்ய ரூபத்தோடும் நின்று 'ஓ, தேவர்களே, கோரூபமாய் விளங்கும் பூமிக்குக் கோமுகக்ஷேத்திரம்முகம் என்றும், ஸ்ரீபுரம் சிரம் என்றும், இமாலயம், கண்டம் என்றும், கேதாரம் உதரம் என்றும், காசி பிருஷ்

டம் என்றும், கமலாலயம் அதற்கு மூலம்என்றும், காஞ்சி இடை என்றும் இக்காமகோடி பீடம் அதற்கு நடு என்றும், அதிலுள்ள பிலம் துவாரம்என்றும் சொல்லிவரும்பொழுது தேவர்கள் இறைவனை வணங்கித் தேவரீருடைய திருமேனி எக்காலத்தும் கண்டறியாத திவ்யதேஜஸ்ஸோடும் இப்பொழுது ஒளிவிட்டெரிகின்றதே இதன் காரணம் என்னையோ" வென்று வினவினர்.

பெருமானார் "ஓ தேவர்காள், யான் பூமி தேவிக்கு முகமாகிய கோமுகம் என்றும் க்ஷேத்திரத்தின் வழியாய்ப் பிரவேசித்துக் குண்டலினி மார்க்கமாய் இக்காமகோடி பிலத்துவாரத்தின் வழியாய் வெளிவந்தேனாதலால் இவ்வரியவுருவத்தோடும் விளங்குகின்றேன். சாதாரணமாய் உலகிலுள்ளவர்கள் பொன்னினால் ஒரு பசுவைப்போலும் உருவம் அமைத்து அதன் கர்ப்பத்தில் வசித்துப்பின் வெளிப்படுவாராயின் அவர்கள் பிரம தேஜஸைப் பெற்று விளங்குவாரென்றால் சிற்சக்தி ஸ்வரூபமாகிய இக்காமகோடி பிலத்தின் வழியாய் வெளிப்பட்டயான் இப்பேரொளியோடும்விளங்குவது ஓர் ஆச்சர்யமா! இப்பிலத்தின் பெருமையையான் என்னென்று கூறுவேன்! ஓ, தேவர்காள், எவனொருவன் இக்காமகோடி பீடத்தை நாடோறுமாவது, ஒரு வாரமாவது, ஒரு பக்ஷமாவது, ஒரு மாதமாவது, பிரதக்ஷணம் செய்கின்றானோ அவன் மஹாபாதகனாயினும் முக்தனாவான். பிரதக்ஷணம் செய்யும் ஒவ்வொரு அடிக்கு ஒவ்வொரு கோ கர்ப்பத்தினின்றும் பிறந்த பலனையடைவான். நாடோறும் பிரதக்ஷணம் செய்பவன் அடையும் பலன்கள் சொல்லி முடியுமா? பிரதக்ஷணம் செய்யாதவன் தேவனாயினும் அவன் கழுதைக்குச் சமமாவன்" என்று காமகோடி பிலத்தின் பெருமைகளை எடுத்துக் கூறி "நீங்கள் இப்பீடத்தை வலம் வருவீராயின் பந்தாசுரனால் நீங்களடைந்திருக்கும் துன்பத்தை நீங்கப் பெறுவீர்கள். அவனது துன்பம் நிவிர்த்தியாகுமளவும் இப்பிலத்தருகிலுள்ள ஜண்பக விருக்ஷத்தில் நீங்களனைவரும் கிளி வடிவங் கொண்டு வாழக்கடவீர்கள்" என்று வரம் தந்து போயினர். பின்னர் தேவர்களெல்லாம் சிவபெருமானார் அருளியவாறே அப்பிலத்தை நாடோறும் தவறாமல் பிரதக்ஷணஞ் செய்து கிளியுருவங்கொண்டு ஜண்பக விருக்ஷத்தில் பதினாயிரம் வருஷம் வசித்திருந்தனர்.

### மஹிமை.

நர்மதாதீரவாசியாகிய பலபத்திரன் என்னும் ஓர் அந்தணன் 'வஜ்ரேச்வரி' என்னும் தனது பத்னியை வெறுத்துத் திரஸ்கரித்துப் பரதாரவிருப்பங்கொண்டு அவர்கள்பால் தன்னிஷ்டப்படித் திரவியங்களை விரயப்படுத்திச் சுகித்துக் கொண்டிருந்தனன். விருத்ததசை வந்தகாலத்தில் சரீரத்தில் கருங்குஷ்டமும், ஆண்குறியிலும் பீஜத்திலும் இரணமும், உண்டாகி நாட்செல்லச் செல்ல ஆண்குறி க்ஷீணப்பட்டு இரணம் மேலிட்டு மிகவும் வருத்தமுறச் செய்ய, அவனைக் கண்ணுற்ற பெரியோர்கள் அநேக ஔஷதப் பிரயோகங்கள் செய்தும் நிவிர்த்திக்க முடியாமற்போயிற்று, அப்பெரியோர்கள் 'இது பாபத்தால்வந்த இரணமாதலால் ஔஷதங்களாற்போகாது. பாபபரிகாரத்தாற்போக்குவதே முறைமையாம்' என்றெண்ணிப் பொன்னாற் பசுவொன்று செய்து அதன் கர்ப்பத்தில் அவனை வசித்துவரச்செய்து அப்பொற்பசுவைப் பிராமணர்களுக்குத் தானம் செய்தனர். செய்தும் வியாதி நீங்குதலைக் காணாமல் வருந்திக்கொண்டிருக்கும் சமயத்தில் காஞ்சிகாமகோடி பீடத்தின் பிரதக்ஷிண மஹிமையைச் சில முதியோராற்கேட்டு அக்கணமே தனது மனைவியுடன் காஞ்சிப் பதியையடைந்து ஒரு மாதம் வரையில் நாடோறும் தவறாமல் பிலத்தை நூற்றெட்டுப் பிரதக்ஷிணம் செய்து வந்தனன். நாளுக்கு நாள் பிணி நீங்கப் பெற்றுச் சரீரகாந்தியையும் புத்திர பௌத்திராதி சம்பத்துக்களையும் அடைந்து புண்ணிய சீலனாய் வாழ்ந்திருந்து பின் தேவியினால் அனுப்பப்பட்ட விமானத்திலேறி அம்பிகையின் சரணாரவிந்தத்தில் கலந்தனன்.

பதினொன்றாம் அத்தியாயம் பிலாகாசப்பிரபாவம் முற்றிற்று.

---

உ

ஸ்ரீ திரிபுர சுந்தர்யை நம:

## பன்னிரண்டாம் அத்யாயம்.

மஹா த்ரிபுர சுந்தரி வர்ணனை.

(விஷய சூசனை)

---

[காமகோடி பீடத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ திரிபுர சுந்தரியினுடைய வர்ணனையையும், தேவர்களுடைய துன்ப நிவிர்த்தியின் பொருட்டுப்

பிலத்தினின்றும் தேவி வெளிப்பட்டு வந்து உலகினைப் பஸ்மீகரப்படுத்தித்திரிமூர்த்திகளையுண்டாக்கிப் பின் மறைந்து போனமையையும், பின்னர் அத்தேவி பந்தகாசுரப் பிரேதத்தோடு வெளிவந்தமையையும், வெளிவந்து தேவர்களுக்கு அப்பந்தகனைப் புதைத்துத் தனக்காலய முண்டாக்கித் தன்னைப் பிரதிஷ்டை செய்து தரிசிக்கும் விதத்தைச் சொன்னமையையும் அவர்கள் தன்னைத் தரிசித்த பின்னர் அவர்களுக்குத் தன் வரலாறெல்லாம் தெரிவிக்கின்றமையையும், தேவி சொன்னதுபோல் அத்தேவர்கள் பூஜித்தமையையும் நான்கு யுகங்களில் பராசக்தியைப் பூஜித்தார் இவரிவரென்பதையும் விளக்குவது.]

காம கோட்டமென்கிற விடத்தில் காயத்ரீ மண்டபத்தில் பிராகாசமாகிய பீடத்தில் காயத்திரியாகிய ஓங்கார கோணத்தில் பராசக்தி ஸ்வரூபிணியாகிய காமாக்ஷிதேவி எல்லாவுலகங்களையும் படைப்பதற்குக் காரணமாயுள்ள சகல வடிவங்கொண்டு பத்மாஸனியாய், சதுர்ப்புஜையாய், முக்கண்ணுடையளாய், மூல சக்தி, ஆதி சக்தி, ஆதிலக்ஷ்மி, ஆத்மசக்தி, பிரும்மவித்தை, என்கிற நாமங்களால் துதிக்கப் பட்டவளாய், தாமரை மலர்போன்ற காந்தியுடையவளாய், சந்திர சூடாமணியாகிய கிரீடம் தரித்துப் பாசம், அங்குசம், கோதண்டம் (கரும்புவில்) பஞ்சபாணம் என்கிற இவைகளைத் தரித்திருக்கின்ற திருக்கரங்களை யுடையவளாய், இரு செவியிலும் சூரியசந்திரர்கள் காதோலையாய் ஒளிவீச, சிவந்த பட்டாடை புனைந்து திவ்யாபரணங்களால் அலங்கரிக்கப் பட்டு, ஸகல ஸௌபாக்கியங்களையும் நாவல்ல மாங்கல்யம் கண்டத்தில் விளங்கத் தாமரை முதலிய மலர்மாலைகள் அசைந்தாட ராஜராஜேச்வரியாய், ஸ்ரீவித்யாபரமேச்வரியாய், திரு மூர்த்திகளால் ஆராதிக்கப்பட்டவளாய் காமேசரால் விரும்பப்பட்ட தேவியாய் சிவசங்கரருக்கு ஆத்மஸ்வரூபிணியாய், அச்சங்கரரால் விரும்பப்பட்டவளாய்ச் சகல கலாரூபிணியாய்ச் சர்வதந்திர ஸ்வரூபிணியாய் சகலப் பிரபஞ்சரூபிணியாய், சர்வப்பிராணி ஸ்வரூபிணியாய் சக்கர ரூபிணியாய், ஸ்ரீகாஞ்சி நகரத்திற்கு ஈசையாய், அவ்விடத்தில் சரண்புகுவோர்க்கு சகலாபீஷ்டங்களையும் தரும் பிரதானியாய், இலக்ஷ்மி, ஸரஸ்வதி, என்னும் இருவரும் இடம்வலம் என்னும் இரண்டு பக்கங்களினின்று வீசப்பட்ட சாமரங்களை யுடையவளாய், சதாசிவாதி மூர்த்திகளுக்கும். கௌரியாதி சக்திகளுக்கும் காரணியாய், காமகோடி என்றும், திவ்ய

மங்களரூபிணியாகிய காமாக்ஷி என்றும், சூதலிங்ககாரணி என்றும் சூதபீஜ அர்த்தரூபிணி என்றும் சிவனுருக்கதிகை என்றும், சிவாங்கத்திலிருப்பவளென்றும், சிவமூர்த்தி என்றும், சிவத்தைக் கொடுப்பவளென்றும், மஹாகாமேசுவரருக்கு மஹிஷி என்றும் மஹா த்ரிபுரசுந்தரி என்றும் சொல்லப்படும் திருநாமங்களால் பிரசித்தி பெற்று ஸ்ரீ சக்கரநாயகியாய் வீற்றிருக்கின்றனள்.

அங்ஙனம் வீற்றிருக்கின்ற தேவியை சிவாக்ஞையால் கிளிரூபமாய் ஜண்பக விருக்ஷத்தில் வசிக்கின்ற தேவர்கள் ஹிருதய கமலத்தில் தியானம் செய்து, பந்தகாசுரனை நாசப்படுத்தவேண்டித் தவம்புரிந்து வந்தனர். அம்பிகை அவர்களது தவத்துக்கு இரங்கித் தயையுடையவளாய்ப் பிரளயகாலாக்கினி ஸ்வரூபிணியாய் மிக்க கோபத்தோடும் பிலத்தினின்றும் வெளிப்பட்டு எல்லாவுலகங்களையும் பஸ்மீகரப்படுத்தி, பஸ்மீகரப்படுத்திய அவ்வெளியில் நிர்க்குணையாகிய தேவியானவள் சகுணமாகிய திருவுருவங்கொண்டு காயத்திரி மண்டப மத்தியில் தானொருத்தியாகவேயிருந்து தனது வாமநேத்திரத்தில் விஷ்ணுவையும் தக்ஷிண நேத்திரத்தில் பிரமனையும், பாலநேத்திரத்தில் உருத்திர மூர்த்தியையும் சிசுரூபமாக உண்டாக்கிப் பிரமனுக்குச் சிருஷ்டி வித்யாத்மகமாகிய பாலையும், விஷ்ணுவுக்கு ஸ்திதி வித்யாத்மகமாகிய பாலையும். உருத்திர மூர்த்திக்கு லயவித்யாத்மகமாகிய பாலையும், ஊட்டி மறைந்தனள்.

திரிமூர்த்திகளும் பாலுண்டவளவில் யௌவன ரூபமடைந்து உலகம் சூன்யமாயிருப்பதைப் பார்த்து ஆச்சரியமடைந்து சொப்பனத்திற்காணும் பொருள் மறைதல் போல் போயிற்றே என்று ஒருவருக்கொருவர் பேசிப் பயமடைந்தவர்களாய்ப் பின்னர் ஆலோசித்துத் தாம் செய்யத்தகுந்த தொழில்களை எண்ணிப் பிரமன் முன்னிருந்த வண்ணம் ஸ்தாவர ஜங்கமமாகிய உலகத்தைப் படைக்கவும், விஷ்ணுருத்திரர்கள் காத்தல் அழித்தலாகிய தொழில்களைச் செய்யவும் ஆரம்பித்தகாலத்தில் பந்தகாசுரனோடு உலகம் விருத்தியடைந்தது.

ஜண்பக விருக்ஷத்தில் கிளிரூபமாயிருந்த தேவர்கள் ஒரு ஜாமத்துக்குள் தேவி திரிபுர மூர்த்திகளைப் படைத்து உலகத்தை

சிருஷ்டிப்பித்த அதிசயத்தை ஒருவர்க்கொருவர் பேசி இன்னும் என்ன அதிசயம் விளையுமோ வென்றெதிர் பார்த்திருந்தனர். அவர்கள் அங்ஙனமிருக்க, திரிபுரசுந்தரியாகிய அம்பிகை திரிமூர்த்திகளைப் படைத்த பின்னாளாகிய மறு நாளிரவில் ஸ்ரீ கைலாஸத்தில் பந்தகாசுரன் நித்திரை செய்வதைப்பார்த்துக் கோபங் கொண்டவளாய் ஒரு பாதத்தை அவனது கண்டத்திலும் மற்றொருபாதத்தை அவன் மார்பிலும் வைத்து பதினெட்டாயுதங்களோடுகூடிய பதினெண்புஜங்களையுடைய பைரவரூபிணியாய் அவனது சிகையைப் பலமாய்ப்பிடித்துக் கொண்டு சக்ராதி ஆயுதங்களால் அவனது புத்திர, பௌத்திர, பந்து, மித்திர பரிவாரங்கள் இருக்கும் இடங்களில் க்ஷணத்துக்குள் சென்று அவரவர்களை அந்தந்த க்ஷணமே கொன்று சூரியோதயகாலத்தில் ஐந்து வயதுடைய கன்னிகையாய்க் காமகோடி பீடமாகிய பிலத்துவாரத்தை வந்தடைந்தனள்.

அப்போது அங்கிருந்த தேவர்கள் கன்னிகை உருவமாகி வந்த அம்பிகையினது திருக்கரத்தில் பர்வதாகிருதியாயிருக்கின்ற பந்தகாசுரனுடைய சிகை சிக்குண்டிருக்கும் கோரத்தைக்! கண்டு பயந்து பின் மரணமடைந்தானெனத் தெளிந்து, சகல லக்ஷணத்தோடும் கூடிய அதிசுந்தரமாகிய திருமேனியுடையவளாயும் சர்வாபரணங்களால் அலங்கரிக்கப் பட்டவளாயும் நெருப்பிலிட்ட பொன் போல் ஒளிவிடும் திவ்யமாகிய பீதாம்பரம் தரித்தவளாய்க்காணப்படும் கன்னிகையைக்கண்டு துந்துபி, சங்கம், பேரிகை, படகம், காகளம், புள்ளாங்குழல், தாளம், வீணை, மத்தளம் முதலிய பல தேவவாத்தியங்களை முழக்கித் தாமரை, மல்லிகை, முல்லை பாரிஜாதம், ஜண்பகம் முதலிய திவ்யமலர்களையும் கஸ்தூரி முதலிய சுகந்தங்கள் கலந்த சந்தனக்குழம்பையும் மழை போல் வாரியிறைத்து, "உனக்கு ஜயமுண்டாகுக, மங்களமுண்டாகுக," என்று போற்றிப் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் பல செய்து "ஹே, கல்யாணி, ஹே, தேவி, நீ யார்? எங்கிருந்து வருகின்றாய் ? இந்தப் பந்தகனானவன் உன்னால் ஏன் கொல்லப்பட்டான்? எவ்விதமாகக் கொல்லப்பட்டான்? இவன் இறந்தது மிக ஆச்சரியம் ! பிரமனாதியாகச் சொல்லப்பட்ட நாங்கள் அனைவரும் இவனால்

பிடிக்கப்பட்டிருந்தோம். இது நிற்க, எந்தக் காரணத்தினால் பிலத்தினின்றும் தோன்றிய அக்கினியினால் எல்லாவுலகங்களும் கொளுத்தப்பட்டன? இவை யாவும் சொல்லவேண்டும்" என்று கேட்க தேவி "இக்காரணங்களைப் பின்னர்க் கூறுகின்றேன்" என்று பிலத்தை விட்டு வெளியே வந்து நின்று "நீங்கள் இப்பொழுது இவ்விடத்தில் ஓர் பள்ளம் தோண்டி அதில் பிரேத ரூபமாயிருக்கின்ற இப்பந்தகளைப் புதைத்து ஜயஸ்தம்பம் நாட்டி அவ்விடத்தினின்றும் பிலாகாசத்துக்குப் போக ஓர் துவாரம் அமைத்து, அதற்கருகான தெற்கில் பிலத்தின் வெளி எவ்வளவு இருக்கின்றதோ அவ்வளவும் வேதங்களையே நாற்சதுரங்களாக அமைத்து, அதில் காயத்திரியினுடைய வர்ணங்களையே இருபத்து நான்கு கால்களாக நாட்டி, வியாக்ருதியாகிற மூன்று அக்ஷரங்களைமூன்று கண்டங்களாகச் செய்து, காயத்திரி மண்டபமென்றுபெயரிட்டு, அம்மண்டபத்துள் பிரணவத்தை மாணிக்கமயமான சிம்ஹாஸனமாக அமைத்து, அப்பீடத்தின் மேல் கன்னியா ரூபமாக இருக்கின்ற என்னைப் போல் ஒரு பிம்பப்பிரதிஷ்டைசெய்து ஷடாதாரங்களில் காணப்படும் ஷட்தரிசன ஸ்வரூபிணியாயும், நவாவரண மத்தியில் இருப்பவளாயும், பிலத்துக்கு அதிபதியாயிருக்கிற பாசக்தியை ஷடாம்நாயமென்கிற மந்திர முறையால் அந்தரியாக முறையின்படி அர்ச்சித்துப் பின் ஆவாஹித்துப் பால் தயிர் தேன் இளநீர் முதலிய பல அபிஷேகத் திரவியங்களால் அபிஷேகித்துச் செந்நிறமுள்ள புஷ்பங்களாலும் அக்ஷதைகளாலும் தூபதீப நைவேத்திய ஆர்த்தி ஜபமென்கிற பஞ்சோபசாரங்களால் விதிப்படி ஆராதித்து, சுகந்த சம்பந்தமாயுள்ள சகல திரவியங்களால் லேபனம் செய்து, பிலத்துவாரத்தில் கொடுக்க வேண்டிய பலிகளும் கொடுத்து, கதவை மூடிவிட்டு வெளியேயிருந்து சூரியோதயமாகுமளவும் மௌனமாயிருந்து என்னைத் தியானித்து ஸ்ரீ வித்தியா மந்திரத்தை ஜபித்து ஜபசமர்ப்பணை செய்து உதயமானவுடன் கதவைத் திறந்து என்னைத் தரிசனம் செய்யுங்கள். அப்பொழுது நீங்கள் கேட்ட கேள்விகளுக்கு விடை கூறுகின்றேன். அதுவரையில் என்னை யொன்றும் கேட்க வேண்டாம்" என்றனள்.

அதுகேட்ட தேவர்கள் வணங்கித் தேவி கட்டளையிட்ட வண்ணம் பந்தகளைப் புதைத்து வெற்றிக் கொடியாகத் துவஜ

ஸ்தம்பத்தை நாட்டி காயத்திரி மண்டபப் பிரதிஷ்டையும், அதன் பின் செய்யவேண்டிய பூஜையையும் அர்த்தராத்திரியில் செய்து கதவை மூடி அருணோதயம் வரையில் மந்திரத்தை ஜபித்திருந்து, பின் அருணோதய காலத்தில் ஆசாரத்தோடு கூடினவர்களாய்க் கதவைத் திறந்து பார்க்கும் பொழுது தாங்கள் பிரதிஷ்டை செய்திருந்த விக்கிரகத்தைக் காணாமல் ராஜராஜேச்வரியாகிய திரிபுர சுந்தரி நிஜரூபத்தோடும் ஆவிர்ப்பவித்திருப்பதைக் கண்டனர்.

அந்த ஆவிர்ப்பாவ காலமாவது சாவித்திரி கல்பம் சுவாயம்பு மனுவினுடைய தாமசகாலம்' கிருதயுக ஆரம்பம் விஷ்ணு யோகினிபுருவங்கொண்ட சமயம் ஸ்ரீ முகவருஷம் சூரியன் கும்பத்திலிருக்கின்ற பால்குனமென்கிற பங்குனி மாஸம் கிருஷ்ணபக்ஷம் பிரதமைதிதி பூரட்டாதி நக்ஷத்திரத்தின் மத்தியகாலம் ஐந்தாம் ஜாமம் சுக்கிரவாரம் உதயகாலம்.

அந்தச் சுபதினத்தில் காணப்பட்ட ராஜராஜேச்வரியை தரிசித்து, இதுவென்ன ஆச்சரியமென்று தேவியினுடைய சரித்திரம் மிகவற்புதமென்றும், "ஹே, ஜயதேவி, ஜகன்மாத: திரிபுர சுந்தரி," என்றும் ஸ்தோத்திரம் செய்து நமஸ்கரித்து, "நாங்கள் பிரதிஷ்டை செய்து பூஜித்த அம்பிகை எங்கே? பந்தகாசுரனைக் கொன்று அவனைக்கொண்டுவந்து பிலத்தருகே நின்ற கன்னியா ரூபமெங்கே? அந்த இரண்டு ஸ்வரூபங்களையும் காணோம். இப்பொழுது உன்னைத் தான் காண்கிறோம். நீ யாரோ அறியோம்? எங்களுக்கு அந்தக் காரணங்களைக் கிருபையோடு சொல்லவேண்டுமென்று பிரார்த்திக்க, திரிபுரசுந்தரி "ஓ தேவர்களே, நான் அந்தக்காரணங்களைச் சொல்லுகிறேன். சாவதானமாய்க் கேளுங்கள்" என்று சொல்லத் தொடங்கினள்.

"ஓ, தேவர்களே உங்களுடைய ஹிதத்தின் பொருட்டுப் பிரளய காலாக்கினி ஸ்வரூபமாய் அர்த்த ராத்திரியில் இந்தப் பிலத்தினின்றும் வெளிப்பட்டுச் சர்வஜகத்தையும் பஸ்மீகரம் செய்து ககார, அகார மகார ஸ்வரூபிகளென்று சொல்லப்பட்ட பிரும்ம விஷ்ணு உருத்திரர்களைச் சிருஷ்டியாதி தொழில்களை யுத்தேசித்து என்னுடைய மூன்று கண்களினின்றும் உண்டாக்கி, திரிபுரசுந்தரியாகிய நான் காமாக்ஷி என்கிற பெயர் பெற்றேன்.

அந்தத் திரிமூர்த்திகளும் தங்கட்குரிய தொழில்களைச் செய்ய உத்தேசித்துப் பிரமன் சிருஷ்டி செய்த பொழுது, உங்கள் பகைவனாகிய பந்தகாசுரன் முன்போல் தோன்றினான். அதைக் கண்ட நான் பைரவ ரூபங்கொண்டு, அந்தப் பந்தகனைக் கொன்று அவனது பந்துமித்திரர்களையும் நாசம் செய்து பிரேதமாய்ப் போன பந்தகனைச் சிகை பிடித்து இழுத்துக்கொண்டு கண்டார் பயப்படத்தக்க என்னுடைய பைரவ ரூபத்தை மாற்றிக் கன்னியா ரூபம் கொண்டு மஹாபிலத்தினின்றும் வெளிப்பட்டு நீங்கள் காணுமாறு வந்தேன். வந்த என் கையில் பந்தகன் பிரேதமாயிருந்தும் நீங்கள் கண்டு பயந்தபடியால் அந்தப்பய நிவர்த்தியின் பொருட்டும், பயநிவர்த்தி செய்வதில் வெற்றியுடையவள் யான் என்பதும் யாவரும் அறியும் பொருட்டும் அவனைப் புதைத்து ஜயஸ்தம்பம் நாட்டும்படி உங்கட்குக் கட்டளையிட்டேன். நீங்கள் என்னைப் புகழ்ந்து ஸ்தோத்திரம் செய்து அன்பு பாராட்டிய படியால் இந்தப் பிலத்தைக் காயத்திரி மண்டபத்தில் மறைத்து ஓம்கார சிம்மாசனம் அமைத்து, அதில் என்னைப் பிரதிஷ்டை செய்யுங்கள் என்று விதித்தேன். அது போலவே நீங்கள் செய்தபடியால் நீங்கள் அனைவரும் ஆச்சரியானந்த சாகரத்தில் மூழ்கும்நிமித்தமும் உங்கள் இஷ்டார்த்த சித்தியின் பொருட்டும், சித்ஸ்வரூபமாகியபிலாகாசத்துள்ளே வசிக்கின்ற திரிபுரசுந்தரியாகிய நான் அதை விட்டு நீங்கள் பிரதிஷ்டைசெய்த பிம்பத்தில் இப்பொழுது பிரகாசிக்கின்றேன்.

இனி நான் இந்தத் திவ்யமாகிய மண்டபத்தில் நீங்காது எப்பொழுதும் இருப்பேன். இந்த இடம் தான் மேலானது இது தான் எனக்கிடம். இது தான் அழிவில்லாதது. எக்காலத்தும் அழிவில்லாத காரணத்தால் இது பிரளயஜித்தெனப் பெயர் பெற்றிருக்கின்றது என்று திரிபுரசுந்தரியாகிய தேவி சொன்னதைத் தேவர்கள் கேட்டு, நமஸ்காரம் செய்து ஆராதித்து அத்தேவிக்குப் பிலம் உள்ளிடமாயிருப்பதால் அந்தப் பிலத்துவாரத்திற்கும் நீராஜனம் முதலிய உபசாரங்கள் செய்து பின்னர் அத்தேவியை அந்தணர்களுடைய ஹிருதயத்திலிருப்பவளாகத் தியானித்து, அநேக விதமான பக்ஷியவகைகளோடுகூடிய அறுசுவை யுணவுகளையுண்ணும்படிச் செய்தலாகிய சமாராதனை செய்து,

அவர்களுக்கெல்லாம் நல்ல சுகந்தமாகிய சந்தனம், புஷ்பமாலை, வஸ்திரங்கள், ஆபரணங்கள் முதலான இவைகளெல்லாம் இரண்டு பங்காகக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிப்பித்து, யாவும் தேவிக்கே அர்ப்பணம் என்று சொல்லி, ஸ்தோத்திர வகைகளால் அம்பிகையைத் திருப்தி செய்வித்தனர்.

அதன் பின்னர் சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்ற பரமேச்வரிக்குப் பட்டாபிஷேக உத்ஸவம் செய்யவேண்டுமென்றெண்ணித் தேவசிற்பி பல்லக்கையும், பிரமன் முத்துக் கொடையையும், விஷ்ணு விருத்தாகாரமாயுள்ள நவரத்ன மகுடமும், ருத்திர மூர்த்தி ஸ்ரீசக்ரமென்னும் பதக்கமும்கொடுக்க, தேவர்கள் அலங்காரம்செய்து அன்று மாலைக்காலம் மஹோற்சவமாய் எழுந்தருளிவரச் செய்து, முன் போல் பீடத்தில் அம்பிகையை ஸ்தாபனம் செய்து, “ஹே, தேவி, இக்காஞ்சியில் ஸான்னித்தியமாயிருக்க வேண்டும்” என்று பிரார்த்திக்க அம்பிகை நான் க்ஷீரசமுத்திரத்திலிருக்கும் ஸ்ரீபுரத்தில் எவ்வாறு சாமர்த்திய ரூபிணியாய், சக்தி என்கிற பெயருடையவளாய் இருக்கின்றேனோ அவ்வாறே இவ்விடத்தில் காமாக்ஷி என்னும் பெயருடன் சந்தானாதி வரங்களைத் தருபவளாய் வசித்திருக்கின்றேன். ஆகையால் நீங்கள் என்னை நாடோறும் தரிசித்து வாருங்கள். ஸ்ரீபுரத்தைக் காட்டிலும் இது அதிகம் என்று யாவருக்கும் ஆக்ஞை செய்ய உருத்திரர் முதலிய யாவரும் மிகவும் சந்தோஷித்தவர்களாய் ஸ்தோத்திர நமஸ்காராதிகள் செய்து, எவர் அம்பிகை யுற்பத்தியான தினத்தில் பூஜிக்கின்றார்களோ அவர்கள் கோடி யக்ஞபலத்தையடைவார்களென்று அனுக்கிரகித்து மறைந்து போயினர்.

பின்னர் உருத்திர மூர்த்தி துர்வாசராய் அனேக சீடர்களுடன் கூடி, உள்ளே பிரவேசித்து விசுவாமித்திரர், கௌதமர், காசியபர், அத்திரி, பாரத்துவாஜர், அகஸ்தியர் முதலானவர்களையும் அவர்களுடைய புத்திரர்களையும், பஸ்மமும், பவளத்தினாற்செய்த மேருவோடு கூடிய ஸ்வர்ண ருத்திராக்ஷமும், ஸௌபாக்கியமான குங்குமமும் தேவி ஆக்ஞையினால் தரித்துக் கொள்ளும்படிச் செய்துப் பிரம்மகல்பபரியந்தம் சிந்தாமணி என்கிற தந்திரப்படி அம்பிகையைப் பூஜித்து வரும்படி ஆக்ஞாபித்து “நான் இக்கிருதயுகத்தில் துர்வாஸமகரிஷியையும், திரேதாயுகத்தில் பரசுராமனையும்

துவாபரயுகத்தில் தௌம்யாசாரியரையும், கலியுகத்தில் மூகாசாரியரையும் அதிஷ்டித்து முறையே கிருதயுகத்தில் இரண்டாயிரமும், திரேதாயுகத்தில் ஆயிரத்து ஐநூறும், துவாபரயுகத்தில் ஆயிரமும் கலியுகத்தில் ஐநூறுமாக ஸ்தோத்திரம் செய்து காமாக்ஷி ஸ்தவமென்கிறதாக உலகில் வழங்கச் செய்வேன்" என்று கூறி பின் தம்மை அந்த மகரிஷிகளெல்லாம் துர்வாசரென்றறியும்படிச் செய்து "என்னை நீங்கள் ஆசாரியராகப் பூஜித்து நீங்களனைவரும் எனக்குச் சிடர்களாக இருத்தல் வேண்டும்" என்றுகட்டளையிட்டு, தேவியை ஆத்மார்த்தமாகப் பூஜிக்கும் நிமித்தம் பிம்ப ரூபமாகவே அங்கிருந்தனர். தேவியும் அவருடைய பூஜையை ஏற்றுக்கொண்டிருக்கும் நிமித்தம் அவரெதிரில் வீற்றிருக்கின்றனள்.

மஹிமை.

கோதாவரிதீரத்தில் ஜமதக்னி குலத்துதித்த கிருஷ்ணவேதியான ஜயதேவரென்னும் பிராம்மணன் பஞ்சவடிதீரத்தில் அநேக நாள் வாசஞ் செய்துவருநாளில் ஊழ்வகையால் வந்த வறுமையால் மிகவும் பீடிக்கப்பட்டு பூர்வபுண்ணியப் பிரேரபணையால் யாத்திரைகள் செய்துவரத்தொடங்கி அனேக க்ஷேத்திரயாத்திரைகள் செய்து கடைசியில் காமகோடி க்ஷேத்திரத்தையடைந்து அம்பிகையினுடைய தரிசனவிசேஷத்தால் வறுமைநீங்கப்பெற்று மீண்டும் தன் தேசத்தைப் போய்ச் சேர்ந்து சகல சம்பத்துடன் வாழ்ந்திருந்தனன்.

பன்னிரண்டாம் அத்தியாயம் பந்தகாசுரவதை முற்றிற்று.

உ

ஸ்ரீதிரிபுரசுந்தர்யை நம:

## பதின்மூன்றாம் அத்தியாயம்.

பூதபந்து வரலாறு.

(விஷய சூசனை.)

[பந்தகாசுரனைப் புதைக்கத் தொடங்கிய பொழுது அந்தப்பள்ளத்தில் தவஞ் செய்திருந்த அசுரனைத் திருமால் கொல்லத் தொடங்கிய

காலத்தில் அசுரக்கூட்டங்கள் பெருவெள்ளமாகத் தோன்ற அவைகளை யொழிப்பதற்கு இரண்டு சிவபூதங்கள் தோன்றி அவைகளை யொழித்துத் திருமாலோடு போர் செய்து தோல்வியடைந்து போகத் திருமால் நின்றார், இருந்தார், கிடந்தார் என்கிற மூன்று வித கோலங்கொண்டமையும், மூன்றுவித கோலங்கொண்ட திருமால் சிவ பூதங்களை ஹிம்சித்தது சிவாபராதம் என்றெண்ணி அது நீங்குதற்குச் சிவபெருமானைத் தியானிக்க அவரனுக்கிரகத்தால் பஞ்சதீர்த்தமுண்டாய் அவபராதத்தைப் போக்கினமையும்பின்னர் அவ்விரண்டு பூதங்களை அத்தீர்த்தத்துக்குக் காவலாகநியமித்து அவைகளுக்கு ஆகார திருப்திகளுண்டாக்கித் திருமாலையும் அவ்விடத்தில் ஓர் திருப்பதியாகக் கொண்டிருக்கச் செய்தமையும் விளக்குவது.]

காம்கோட்டமாகிய மஹாபிலத்தில் வீற்றிருக்கும் திரிபுரசுந்தரியாகிய தேவிக்கு மிகவும் சமீபஸ்தானமாகிய மேற்கில் திருமால் மூன்று விதமான திருக்கோலமாய் விற்றிருக்கின்றனர்.

பூர்வத்தில் திரிபுரசுந்தரியாகியதேவி தேவர்களுடைய ஹிதத்தையுத்தேசித்துக்கொன்ற பந்தகனைப் புதைப்பதற்குஓர்பள்ளம் தோண்டவேண்டும் என்று தன்னுடைய கால்பெருவிரலால் தன்னைக் கண்டு ஸ்தோத்திரம் செய்த தேவர்களுக்கு இடம் காட்டிய காலத்தில் அத்தேவர்கள் அவ்விடத்தில் பள்ளம் தோண்டுங்கால் மல்லகன் என்னும் அசுரன் எங்கும் தவாக்கினி வீச அதியுக்கிரமாகத் தவம் செய்வதைப் பார்த்து ஓடினர். அப்பொழுது அத்தேவர்களுக்குள் தீராகிய விஷ்ணு மூர்த்தியானவர் அவன் தவம் செய்கின்றான் என்பதை எண்ணாமல் அவனைக்கொல்லும்பொழுது அவ்வசுரனுடைய சரீரத்தினின்றும் வெளிப்பட்ட ஒவ்வொரு ரக்த பிந்துவினின்றும் அனேக அசுரர்கள் ஒரு க்ஷணத்துக்குள் தோன்றிப் பெருங் கூட்டமாய்ப் போர்க்கெழுந்தனர்.

அது கண்ட விஷ்ணுமூர்த்தியானவர் சிறிதும் இளைக்காதவராய் அந்தக் கூட்டங்களோடு போர் செய்து வரும்பொழுது அவைகள் மாளாது சிதறுகின்ற ரக்தத் துளிகளினின்றும் விருத்தியாய் வருதலைப் பார்த்து உருத்திர மூர்த்தியைத் தியானிக்க அக்கணமே அவர் அங்கு எழுந்தருளித் தம்முடைய ஜடையை விரித்துப் பூமியில் தட்டி ஆண்பெண்ணாகிய இரண்டு பூதங்களை யுண்டாக்கி மேன்மேல் அசுரவிருத்திகளாகாவண்ணம் சிதறுகின்ற ரக்த பிந்துக்களை எல்லாம் உண்டுவாக் கட்டளையிட்டுப் போயினர்.

அதுபோலவே, அப்பூதங்கள் அந்தரக்த பிந்துக்களை விடாமல் உண்டுவரவே அவ்வசுரக் கூட்டங்கள் தோன்றுதொழிந்தன. அவைகள் ஒழியவே அவர்களுடைய உதிரபானம் செய்துவந்த பூதங்கள் இரண்டும் வெறிகொண்டு மதிமயங்கி அசுரத்தன்மையடைந்து விஷ்ணுமூர்த்தியோடு போர் செய்யத் தொடங்கின. அதுகண்ட அவர் இதுவும் ஆச்சரியம் தான் என்றெண்ணி அப்பூதங்களைப்பிடித்துக் கீழேதள்ளித் தாம்மிகவும் திடமுள்ளவராய் அவைகளின்மீது காலைவைத்து அழுத்தி நின்றனர். அப்பூதங்கள் இரண்டும் அவ்விஷ்ணுவைக் கீழேதள்ளி மேலேநின்றன. விஷ்ணுமூர்த்தி அது கண்டு உக்கிரங்கொண்டு அவைகளை மீண்டும் கீழே தள்ளி அவைகள் எழுந்திரா வண்ணம் மிகவும் பலங்கொண்டு தொடைகளின்மீது உட்கார்ந்தனர். பின்னர், அப்பூதங்கள் விஷ்ணுவைக் கீழே தள்ளி விட்டு மேலுலகம் போகத்தலைப்பட்டன. விஷ்ணு மூர்த்தி அவைகளைக் கீழே தள்ளிக் கால்களால் மிதித்து மேலேபடுத்துக்கொண்டனர்.

பின்னர், அவை மதம்ஒழியப்பெற்று சுவபாவகுணமடைந்து விஷ்ணுவைப்பார்த்து "ஓ திருமாலே, நாங்கள் செய்தகுற்றத்தை மன்னிக்கவேண்டும்" என்று பிரார்த்திக்க அவைகளை விஷ்ணுமூர்த்திபார்த்து "நீங்கள் ராக்ஷஸர்களுடைய உதிரபானம் செய்தபடியால் மதம் மேலிட்டு வெறிகொண்டு சுவபாவ அறிவும்கெட்டு என்னோடு போர் செய்யத் தலைப்பட்டீர்கள். யானும் உங்களுக்கு உண்டாகிய மதத்தைப் போக்க உங்களைக் கீழே தள்ளி நின்றும் இருந்தும் கிடப்பவனாயினேன். நீங்கள் என்னோடு போர் செய்ய வந்ததும் குற்றமே, சிவபெருமானார் ஜடையில் வந்த உங்களை நான் பங்கப்படுத்தியதும் குற்றமே" என்று தயையோடு சொல்லிவிட்டுத் திரியம்பகராயும், உமாநாதராயும், சங்கரராயும், பஞ்சானனராயும் இருக்கின்ற சதாசிவ மூர்த்தியைத் தியானிக்க அவர் பிரத்யக்ஷமாய்த் தனது ஜடைமுடியிலுள்ள லோகபாவனியாகிய ஜான்னவியை ஐந்து ஜடை முடியினின்றும் பெருகிவரக் கட்டளையிட்டனர்.

அக்கங்கா தேவியும் ஜடைமுடியினின்றும் மகாப்பிரவாகமாய்ப் பெருக்கெடுத்து நதி ரூபமாய் வந்து காம கோட்டத்தில் ஐந்து முகமாய் விழுந்தனள். விழவே சிவபெருமானார் விஷ்ணுவை

நோக்கி "இப்பூதங்கள் இதில் ஸ்நானம் செய்யுமாயின் என்னாணையைக் கடந்து உன்னோடு போர்செய்த பாவத்தினின்றும் விடுபடும்" என்று கட்டளையிட, விஷ்ணுமூர்த்தி "என் பொருட்டுத் தேவரீர் உண்டாக்கிய இப்பூதங்களை யான் துவைத்தும் அடித்தும் பலவாறான அபராதங்கள் இழைத்தேனாதலால் அச்சிவாபராதம் நீங்குமாறு எனக்கும் அனுக்கிரகம் செய்யவேண்டும்" என்று பிரார்த்திக்க அவரையும் அதில் மூழ்கிவரச் செய்து அத்தீர்த்தத்தின் மகிமையைக் கூறத்தொடங்கினார். "ஹே, விஷ்ணுவே இத்தீர்த்தம் எனது பஞ்சமுகத்தினின்றும் தோன்றினமையான் இது பஞ்சதீர்த்தமெனப்பெயர் பெறுக. இத்தீர்த்தத்தில் எவனொருவன் ஸ்நானம்செய்கின்றானோ அவன் எல்லாப்பாவங்களினின்றும் நீங்கி முக்தியடையக்கடவன். பொன் திருடினவன் ஆக்னேய திக்கிலும், சுராபானன் தக்ஷிணத்திலும், பரதாரகமனன் மேற்கிலும், பிரும்மஹத்தி புரிந்தவன் உத்திரத்திலும், இவர்கள் சினேகிதன் பூதங்கள் மத்தியிலும் ஸ்நானம் செய்வார்களாயின் அவர்கள் அவ்வப்பாதகங்களினின்றும் விடுபட்டவர்களாய்ச் சர்வகாமங்களையும் குறைவின்றியடையப் பெறுவர். இதிற் சந்தேகமில்லை.

நீ ஆண் பெண்ணாகிய இந்த இரண்டு பூதங்களையும் இத்தீர்த்தத்தைக் காப்பவைகளாக ஈசான திக்குக்கும் அக்னி திக்குக்கும் நடுவில் பிரதிஷ்டை செய்து, அவைகட்கு ஸ்ரீ காமாக்ஷி தேவியினுடைய அபிஷேக தீர்த்தக் கிரகணத்தால் திருப்தியுண்டாகும் வண்ணம் நியமித்து அப்பூதங்களின் மத்தியபாகத்தின் மேலிடத்தில்மூன் பூதங்களுக்காக நின்றும் இருந்தும் கிடந்தும் இருந்தது போல் மூன்று பேத ரூபங்களாகவே இருந்து உனக்கெதிரில் என்னை இலிங்க ரூபமாகப் பிரதிஷ்டைசெய்து அருச்சித்து யாவர்களுக்கும் நீ தர்மார்த்த காமமோக்ஷங்களைக் கொடுக்கின்றனவனாகவிருக்கக்கடவாய். நான்உன்னிடத்தில் பிரீதியுடையவனாகிறேன்" என்று கட்டளையிட அவ்வாறே அம்பிகையும் கட்டளையிட்டனள். விஷ்ணுமூர்த்தி இவருடைய கட்டளைப்படியே பூதங்களைப் பிரதிஷ்டை செய்து அவைகளின் மத்தியிலுள்ள விடத்தைத் தன்னிடமாகக்கொண்டு மூன்று லிங்கங்களைப் பிரதிஷ்டை செய்து, அன்போடு வழிபட்டுப் பின் தேவர்களையும் ரிஷிகளையும் பார்த்து இந்த இரண்டு பூதங்கட்கும் பிரீதியாக வருஷம்தோறும் பூதங்

களின் மத்தியிலுள்ள என்னுடைய ஸவ்யஸ்தானத்திலிருக்கும் சிகரத்தின்மேல் நின்று கர்ப்பிணியான ஒருதாஸியானவள் பஞ்சதீர்த்தத்தில் வீழ்ந்துவருவாளாயின் கர்ப்பத்திலிருந்தசிசுவானது பிழைத்துக் கரையேறும், அவள் விண்ணுலகம்போய் மறுஜன்மத்தில் பிராம்மணஜன்மத்தையடைவாள். இதைக் காணப்பெற்றவர்களுக்குப் பிரதிபந்தகபாபமும், பூதப்பிரேதபிசாசம் முதலான கிரகதோஷங்களும் நசித்துவிடும் என்று அனுக்கிரகம் செய்தனர். இப்பூதங்களுடைய மத்தியஸ்தானத்தின் மஹிமையைக் கேட்ட யாவரும் நமஸ்கரித்து அத்தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து விஷ்ணுவினால் கொடுக்கப்பட்ட வரங்களைப் பெற்றுத் தங்களிடம்போய்ச் சேர்ந்தனர். ஆகையால் யாரொருவர் இதில் ஸ்நானம்செய்து விஷ்ணுமூர்த்தங்களையும் பூதங்களையும் தரிசனம் செய்கின்றார்களோ அவர்கள் ச்வேதத்வீபத்திலும் திருப்பாற்கடலிலும் வைகுண்டத்திலும் விஷ்ணுஸேவை செய்தவர்கள் அடையும் பலனை அடையப்பெறுவர்.

### மஹிமை.

கிருஷ்ணாநதிதீரத்தில் ராமாபுரியில் கிரீந்திரர் என்பவர் ஐந்து பெண்களைக் கலியாணம் செய்துகொண்டும் புத்திரப்பேறின்றி காமகோடியையடைந்து பஞ்சதீர்த்தத்தில் ஸ்நானம்செய்து திரிபுர சுந்தரியையும் பூதபந்த ஜனார்த்தனராகிய விஷ்ணுவையும் தரிசித்து அந்த விஷ்ணு ஸன்னிதானத்திலிருந்து அவரைத் தியானம் செய்திருக்கின்றபொழுது மதுவை (தேனை) க் கொடுத்தனர். அதனால் அவர் பாவம் நீங்கினவராய் நூறு பிள்ளைகளைப்பெற்றுச் சுகமாய் வாழ்ந்திருந்தனர். இவ்வண்ணம் பேறுபெற்றவர்கள் பலர்.

பதின்மூன்றாம் அத்தியாயம் பூதபந்து வரலாறு முற்றிற்று.

---

உ

ஸ்ரீதிரிபுரசுந்தர்யை நம:

## பதினைன்காம் அத்தியாயம்.

(விஷய சூசனை.)

[ஸ்ரீ ஏகாம்பரநாதருக்கு வல்லபையாயிருந்த காமாக்ஷிதேவி பிரமாவினுடைய வேண்டுகோளால் சுவர்ணவிக்கிரகமாய் நியமிக்கப்பட்ட காரணத்தையும், அந்த அம்பிகையினுடைய சௌந்தரியங்களையும், இந்தக் காஞ்சிக்ஷேத்திரத்தில் சிவக்ஷேத்திரங்கள்தோறும் தேவி இல்லாமைக்குக் காரணத்தையும், சிவபெருமானாது நெற்றிக்கண்ணால் எரிந்துபோன மன்மதன் காமாக்ஷிதேவியினிடத்தில் வரம்பெற்றுக் கோடி மன்மதர்களாய் வரப்பெற்று ருத்திரகோடிகளை வெற்றிகொண்டமையும் மன்மதகோடியர் உண்டானகாலத்தில் பூமண்டலத்திலுள்ள ஸகல சிவக்ஷேத்திரங்களிலும் சக்திஸ்வரூபமாகிய அம்பிகை உருவங்களெல்லாம் மறைந்துபோகப் பின் பிரமனால் பிரதிஷ்டையான காரணத்தையும், பிரமனைநோக்கி சுவர்ண காமாக்ஷிக்கும் ஏகாம்பரநாதருக்கும் திருக்கலியாணம் நடத்தவேண்டிய விதி முறைகளையும், பராசக்தியையும் தபஸ் காமாக்ஷியையும் சுவர்ணகாமாக்ஷியையும் ருத்திரயாமளதந்திரப்படிச்செய்யவேண்டியபூஜையினுடைய பேதமுறைகளைச் சொன்னமையும், பிரமன் தனக்கு ஸ்ரீசக்கரஸ்தானத்தை மிதித்ததனாலுண்டாகிய கண் குருட்டைப் போக்கிக்கொண்ட விதத்தையும், பின்னர் பராசக்தியைப் பூஜித்தவர் வரலாற்றையும் விளக்குவது.]

### சுவர்ணகாமாக்ஷி வர்ணனை.

காமகோட்டம் என்கிற காமாக்ஷிதேவியினுடைய ஆலயத்துள்ளிருக்கும் பஞ்சதீர்த்தம் என்னும் தீர்த்தத்துக்குக் கிழக்கில் திருக்கோயில்கொண்டிருக்கும் பராசக்தியினுடைய நெற்றிக்கண்ணினின்றும் சுவர்ணச் சாயையாக ஒரு ஜோதிஸ்வரூபமானது தோன்றியது. அத்திருவுருவம் இரண்டு நேத்திரமும், இரண்டு புஜமும், சாமளநிறமும், கிளிதாங்கியிருக்கும்வலக்கரமும் தொங்கவிட்டிருக்கும் இடக்கரமும், திரிபங்கியும் குஞ்சிதமாய் நிற்கும் வலப்பாதமும், தனுராகாரமாய் (வில்போலும்) சிறிது வளைந்து தோன்றும் திருமேனியும் அன்றலர்ந்த தாமரைபோன்ற திருக்கண்களும், பொன்போலும் நிறமுள்ள மஞ்சளாடையும், இரத்னகுண்டலம் முதலிய ஆபரணவகைகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய கோலமும் உடையது.

இவ்வண்ணம் விளங்கும் ஜோதிஸ்வரூபத்தைக் கண்ட பிரும்மா அக்கோலத்தைப்போலும் சுவர்ணத்தால் ஓர் விக்கிரகம் செய்தனர். அந்தப் பிம்பத்தில் மனோன்மணியாயும் சூதலிங்க நாயகியாயுமிருக்கிற பராசக்தியானவள் சான்னித்தியங்கொண்டு பிரசன்னையாயினள்.

வரலாறு

பூர்வத்தில் சிவபெருமானாருடைய நெற்றித் தீப்பொறியால் அனங்கனாய்ப்போன மன்மதன் முன்போல் அங்கம்பெறவேண்டுமென்கிற விருப்பத்தினால் காமகோட்டத்தையடைந்து திரிபுரசுந்தரியாகிய அம்பிகையை வணங்கி ஹ்ருதயகமலத்தில் தியானித்துப் பூஜைசெய்து மிகவும் உக்கிரமான தவத்தையும் செய்து வந்தனன். திரிபுரசுந்தரியாகிய அம்பிகை பிரத்தியக்ஷமாய் வர அவரது கடாக்ஷவீக்ஷணமாத்திரத்தில் மன்மதன் மனோஹரமாகிய திவ்யதேகத்தைப்பெற்றுப் பக்தியோடு பிரதக்ஷிணநமஸ்கார ஸ்தோத்திரத் தியானாதிகள் செய்து தேவியைப் பார்த்து "யான் உனது கடாக்ஷவீக்ஷண்யத்தினால் சரீரமுடையவனாயினேன். இனிச்சரீரம் பெற்றதற்குரிய பிரயோஜனத்தை யான் அடையும் வண்ணம் தேவரீர் அனுக்கிரகம் செய்யவேண்டும். அது என்னையெனின் சிவபெருமானார் மேல் முன் பார்வதியாருடைய கலியாணத்தை உத்தேசித்து நான் விட்ட பாணங்கள் அவலமாய்ப் போனபடியால் இப்பொழுது அந்தப் பாணங்களை நான் அவர் மேல் பிரயோகம் செய்யவும், செய்யுங்காலத்தில் எனது சரீரத்துக்கு நாசம்வருமாயின் இப்பொழுது கொடுத்ததுபோல்மீண்டும் சரீரம் கொடுக்கவும், அந்தச் சரீரம் நரை திரை மூப்பின்றி அழிவில்லாமல் வாழவும், நான் விடும் பாணங்களாலேயே சிவனார் மோகிதராய்த் தேவி எங்கே எங்கே என்று தேடவும், அப்பொழுது தேவரீர் இடங்கொடாமல் என்னை அவர் வேண்டும்படியாகவும், பின்னர் என்னுடைய வேண்டுகோளால் அவருக்குக் காமசாந்தி உண்டாகும் வகையைத் தேவரீர் சொல்லவும் வேண்டும்" என்று பிரார்த்தித்தனன்.

அம்பிகை மன்மதனைப் பார்த்து "ஓ மன்மத, நீ வேண்டியபடியே வரம்தந்தேன். யான் சிவனாருடைய பக்ஷமாயிராமல் மௌனியாய் உன் பக்ஷமாகவே இருந்து உனக்கு வேண்டியவற்றைச் செய்கிறேன். இனி நீ சிவனாரிடத்திற் சென்று செய்ய

வேண்டியவற்றைச் செய்வாய்" என்று கட்டளையிட, அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு நமஸ்கரித்து விடைபெற்று ஸ்ரீகைலாஸத்தை விரைவில் அடைந்து சிவசந்நிதானத்தை நோக்கி கரும்பைச் சிந்தும் பாணங்களையெடுத்துக் கரும்புவில்லிற் பூட்டி விடுத்தனன். அப்பாணங்களைக்கண்ட மஹாதேவர் அநங்கன் என்று உணர்ந்து இவன் பராசக்தியினுடைய அநுக்கிரஹம்பெற்று அவளுடைய பிரேரபணையால் வந்தானென்று மகிழ்ந்து தேவியார் தேகஹீனனுக்குக் கூறிய லீலானுக்கிரகத்துக்குத் தானும் உடன்பட்டவராய் அந்த லீலையைச்செய்யவெண்ணி நெற்றிக்கண்ணைத் திறந்து பார்த்தனர். அந்த நேத்திராக்கினி முன்போல் அவனை எரிக்காமல் அவனது முடியில் இரத்னம்போல் பிரகாசித்தது; அதனைக்கண்டு ஆலாயுதத்தை எரித்தனர், அது அவனதுவெற்றிக் கொடிபோல் நின்றது; பின்னர் பாசுபதாஸ்திரத்தைப் பிரயோகம் செய்தனர், அது அவனது கண்டத்தில் வெற்றி மலர் மாலையாய் விழுந்தது. அதுகண்ட சிவபெருமானார் நமது சக்தியானவள் இந்த மன்மதனை ரக்ஷிக்கவேண்டும் என்று எண்ணியிருக்கிறாளாதலால் நாம் விட்ட நேத்திராக்கினி முதலியவற்றில் கலந்து சுடாமலும், உபத்திரவிக்காமலும், கொல்லாமலும் போயினள். "இப்பொழுது நம்மை அவன் எண்ணியபடியாட்டுவிக்க அவனிடத்தில் கலந்திருக்கின்றாளாதலால் அவன் சுத்திரமான உருவமுடையவனும், நாசமடையாதவனும், சுகமுடையவனும் காணப்படுகின்றான். சக்தியின்வழி நாம் யாவும் செய்வதேயன்றி அவள்வேறுபட வழி நாம் யாது செய்யவரும்! ஆகலான் இனி அவளெண்ணத்துக்கு மாறாக நாம் யாது செய்தபோதினும் அது வீணாகும்" என்று எண்ணி மன்மதன் வழியாய் நின்று இயற்றும் காமசக்திக்கு உள்ளானவராய்க் காமம் உடையார்போன்று அந்த க்ஷணத்தில்தானே சிங்காதனத்தை விட்டிழிந்து அந்தப்புரம் சென்று கதவையடைத்துவிட்டு உள்ளே சென்று தேவியைப் பார்க்க அவள் அங்கு இல்லாமையைக் கண்டனர்.

தேவியங்கு இல்லாமைக்குக் காரணம் என்னையெனின், காஞ்சீபுராதீசையானத் திரிபுராம்பிகை கைலாஸம் முதலிய ஸ்தலங்கள் தோறும் இருக்கின்ற தனது அம்சமான கௌரி அம்சமாயிரா நின்ற சக்திகளையெல்லாம் ஆகரிஷித்துக்கொண்டு காமாக்ஷி என்கிற ஏகசக்திஸ்வரூபமாக வீற்றிருந்தனளாதலால் ஸ்ரீ கைலாஸத்தில் சிவபெருமானாருக்குத் தேவி காணாமற்போயினர்.

பின்னர் பெருமானார் கைலாசத்தைவிட்டுத் தமது நிலயமாகிய க்ஷேத்திரங்கள்தோறும் சென்று தேவியைப் பார்க்க எங்கும் இல்லாமையைக்கண்டதும் தேவிக்கு ராஜஸ்தானமாகிய காஞ்சி காமகோடி பீடத்திலும் இல்லாதிருப்பளோ என்று காஞ்சிக்கு வந்து காமாக்ஷிதேவி அங்கு கௌரியாயிருத்தலைக் கண்டு அதிசயமுற்று இவள் சாக்ஷாத் கௌரியென்று நினைத்துத் தமக்குண்டாயிருக்கும் சக்தி காமம் தணியுமாறு சமீபித்தனர். மகா சிருங்காரமோகினி வடிவுடையவளாயும், தவரூபியாயும், அரிய தவத்தைச் செய்பவளாயும் இருக்கின்ற கௌரி பெருமான் சமீபித்துவருதலைக்கண்டு பிணக்குடையாள்போன்று அவரைப் பார்த்து "நீ யார்? காமாதுரனாயிருக்கின்றாய்? இங்கே நீ யாது காரணமாய் வந்தனை? நீ சங்கரனோ?" என்று கேட்க, காம சக்திக்கு ஐக்கியபாய்க் காமலீலையை விரும்பியிருக்கின்ற பெருமானார் "ஹே, கௌரி, நீ எனக்கு மனோன்மணியாகிய பத்னியல்லவா? நீ எனக்கு இஷ்டமான க்ஷேத்திரங்களை எல்லாம் விட்டு இவ்விடத்தில் பிரும்ம விஷ்ணுருத்திரர்கட்குக் காரணமான ஆதிசக்தி பீடத்தில் மாத்திரம் வந்திருக்கிற காரணம் என்னை? எனது குடும்பினியாயும், பிரியையாயும், எனது ஹிதமான காமங்களுக்கெல்லாம் சமனையாயும் இருக்கின்ற நீ இப்பொழுது என்னிடத்தில் கோபங் கொண்டிருக்கிறவள் போல வருத்துகின்ற காரணமென்னை? இவைகட்குக் காரணம் கூறி உன்னாலுண்டாகிய என்னாசையைத் தணிவிப்பாய்" என்று கூற, திரிபுராம்பிகை சிவபெருமானைப் பார்த்து "உமக்கிப்போது உண்டாக்கிய காமத்தைத் தணிவிக்கும் கௌரி நான் அன்று, காமசாந்திக்கு என்னை வேண்டுவதை விட்டு மன்மதனை வேண்டுவீராயின் அந்தக்காமசாந்தி அவன் செய்து வைப்பான்" என்றபொழுது பெருமானார் தேவி மன்மதனுக்குஉபகாரார்த்தமாயிருக்கும்மாறுக்கருணையைநினைந்து அவள் கருணையை மறுப்பவர் போன்று "மன்மதன்பால் யான் செல்லேன்" என்று அம்பிகையினுடைய திருக்கரத்தைப் பற்றச் செல்லும்பொழுது அவ்வம்பிகை கோடி மன்மதர்களைத் தனது கடாக்ஷ வீக்ஷணத்தால்உண்டாக்கிப் பெருமான் மேல் ஏவினள். அவர்கள் அச்சிவபெருமானைச் சூழ்ந்து போர் செய்யத் தொடங்கும்பொழுது அவர் ஒரு க்ஷணத்துக்குள் கோடி உருத்திரர்களையுண்டாக்கி அவர்கள் மேல் தூண்டினர். அவர்கள் அந்தக்

கோடி மன்மதர்களையும் பஸ்மீகரப் படுத்தினார்கள். அதுகண்ட தேவி முன் மன்மதன் இந்தப் போரில் 'நான் மடிய வருமாயின் என்னை மீட்டும் படைக்கவேண்டும்.' என்று வேண்டிய வார்த்தை எண்ணி மறுபடியும் கோடி மன்மதர்களைப் படைத்தனள். பெருமானும் மீண்டும் கோடி உருத்திரர்களைப் படைத்தனர். இவ்வண்ணம் பெருமானும் பெருமாட்டியும் உருத்திர கோடிகளையும், மன்மத கோடிகளையும் படைத்து இருவருக்கும் போர் மூட்டித்தாமிருவரும் சாக்ஷியாக விருந்தனர். பின்னர் அவ்விரு கோடியரும் அளவிடற்கரிய போர்புரியும்போது தேவியினுடைய லீலா சங்கற்பத்தால் மன்மதகோடிகள் உருத்திர கோடிகளை வென்றனர். அதுகண்ட மன்மதன் ஸந்தோஷித்தவனாய்த் தனது பஞ்சபாணங்களையும் உருத்திராதிபர் மேல் பிரயோகம் செய்யவெண்ணினன். அவனது எண்ணத்தையும், அவனெண்ணத்தை முடிக்க வெண்ணியிருக்கும் தேவியினுடைய திருவுள்ளத்தையும் பெருமான் அறிந்தவராய் இருவரெண்ணம்போல் இசைவாராயினர்.

ஆகவேமன்மதன் தானெண்ணியபடியே தாமரை, அசோகம், மா, மல்லிகை, நீலோற்பலம் என்னும்ஐவகை மலர்களையும் முறையாக எவினன். அம்மலர்களைப் பெருமான் அழிக்கவெண்ணுமல் அங்கீகரிக்க வெண்ணித் தாமரையைத் தமக்கு ஆசனமாயும் அசோகையைத் தமது மேனிக்கு அழகு செய்வதாகவும, மாந்தளிரை பீதாம்பரமாகவும், மல்லிகையை மாலையாகவும், நீலோற்பலத்தை நெற்றிக்கண்ணுக்குக் குளிர்ச்சி செய்வதாகவும்கொண்டு வீற்றிருக்க, மன்மதன் "அன்று தாருகாவனத்தில் உம்மை வணங்காத முனிவர்களின் பத்தினிகளிடத்துப் பலிபாத்திரம் ஏந்திச் சென்ற பொழுது நீர்பெற்றது என்னை? இன்று அப்பலி ஏற்று அம்பிகைபாற் செல்வீராயின் நீர் வேண்டியவற்றைப் பெறலாமன்றோ?" என்று சொல்லவும் பெருமான் மகிழ்ந்து "அது யான் இப்பொழுது செய்யத்தக்கதே நன்று கூறினாய்." என்று அந்த க்ஷணமே மன்மதனுடன் அம்பிகைபால் பலியேற்கச்சென்றனர். அவ்வாறு கோலத்தைத் திரிபுராம்பிகை பார்த்து மன்மதன் அபீஷ்டம் நிறைவேறிற்று என்று திருவுள்ளம் மகிழ்ந்து "பெருமானே, மன்மதனை யுத்தேசித்துச் செய்த நம்மிருவர் லீலைகளும் முடிந்தன. இனித் தேவரீர் கௌரியோடு கூடிக் காம

சாந்தியுடையவாயிருக்கலாம்." என்று சொல்லித் தம்மாலுண்டாக்கப்பட்ட மன்மதர்களையும் அங்கம் பெற்ற மன்மதனையும் தம்முடைய காமகோடி பீடத்துக்கு நேராக ஆகாயத்தில் நக்ஷத்திர ரூபமாக வசிக்கச் செய்து பராசக்தி ஸ்வரூபத்தில் மறைந்தனள் பெருமாளும் ஒட்டியான பீடத்தில் காமரூபத்தைப் போய்ச் சேர்ந்தனர்.

மன்மதர்கள் நக்ஷத்திர ரூபமாய்ஆகாயத்தில் அவ்விடத்தில் வசிக்கின்றார்கள். ஆதலால் சூரியன் முதலிய நவக்கிரகங்களும் அந்த மன்மத மண்டலத்துக்கு நேராக வரும்பொழுது அவ்வழியாய்ப் போகாமல் பிரதக்ஷணமாய்ப் போகின்றனர். அக்காரணத்தால் காஞ்சி மண்டலம் திசைமயக்குடையதென்றும் அம்பிகையினால் உண்டாக்கப்பட்ட மன்மதர்களால் உருத்திரகோடிகள் ஜயிக்கப்பட்டார்களாதலால் ருத்திரஜித் க்ஷேத்திரமென்றும் சொல்லப்பட்டது.

இந்தச் செய்திகள் இங்ஙனமிருக்க, ஓர் காலத்தில் பிரம்மதேவன் பூலோகத்திலுள்ள ஸ்ரீ கைலாஸம் முதலிய சிவக்ஷேத்திரங்களைத் தரிசிக்கவெண்ணித் தன்னுலகைவிட்டுப் பூவுலகை வந்தடைந்து கைலாசம் முதலிய சிவ க்ஷேத்திரங்களைத் தரிசிக்கும்பொழுது அம்பிகை ஓரிடத்தும் இல்லாமையைக்கண்டு இதுவென்ன காரணம் என்று தனது ஞானதிருஷ்டியால் எண்ணிப் பார்க்க இது காமாக்ஷிதேவி செய்த லீலை என்று ஒருவாறு உணர்ந்து அந்த க்ஷணமே காஞ்சி மண்டலத்துக்கு வந்து சிவக்ஷேத்திரங்கள் தோறும் சிவ பெருமான் சான்னித்தியமாயிருப்பது போல் அம்பிகையும் சான்னித்தியமாய் இருந்து காக்ஷிகொடுக்கவேண்டுமென்று திரிபுராம்பிகையைப் பிரார்த்தித்து வந்தித்துப் பலவாறாகத் துதித்து வழிபட்டு. ஹ்ருதய கமலத்தில் அம்பிகையைத் தியானித்துப்பன்னிரண்டு வருஷம் தவம் செய்துவந்தனள். இராஜராஜேச்வரி பிரமன்பால் கருணையுடையவராய்ப் பிரசன்னையாய் "ஓ, பிரமனே நாம் மன்மதன் வேண்டியவாறே அனுக்கிரகஞ் செய்த அனுக்கிரகத்தைப் பரிபாலிக்கும் பொருட்டுச் சிவபெருமானுக்குப் போக சக்தி உருவம் காணாமலிருக்கச் சிவாலயங்கள்தோறும் கௌரியை இல்லாமற் செய்தோம்.

நீ தரிசிக்க வேண்டுமாயின் எல்லா க்ஷேத்திரங்கள்தோறும் நீயேசென்று கௌரி பிரதிஷ்டைசெய்து சிவதரிசனத்தோடு அம்பிகை தரிசனமும் செய்து மகிழக்கடவாய்" என்று அனுக்கிரகம் செய்தனர்.

பிரமன் தேவியின் திருவாக்கைக் கேட்டுத் திருவடியில் வீழ்ந்து வணங்கி "ஓ ஜகன்மாதாவே, இப்பொழுது இந்தக்ஷேத்திரத்தில் சிவாலயங்கள்தோறும் கௌரியாகிய அம்பிகையைத் தரிசித்தாலல்லவோ ஏனையக்ஷேத்திரங்களுக்கும்போய் அம்பிகையைப் பிரதிஷ்டை செய்து நான் தரிசித்தல்வேண்டும். இங்கு தரிசிக்கும் வகை எப்படி" யென்று விண்ணப்பம் செய்யத் தேவி "இந்த க்ஷேத்திரத்தில் முன்னர் உருத்திர கோடிகட்கும் மன்மத கோடிகட்கும் நேர்ந்த யுத்தத்தில் அவர் இங்குள்ள சூதவிருக்ஷத் தடியில் கௌரி சகிதமாய்ச் சிவபெருமானார் ஒட்டியாண பீடத்தில் சென்றனராதலால் ஜோதிலிங்க ஸ்வரூபராய் வெளிப்படுவர். அப்பொழுது உனக்குக் கௌரியானவள் சூதலிங்க சகிதமாகக் காணப்படுவாள்." என்றனர். அதுகேட்ட பிரமன் "ஹே, அம்பிகே, வருஷம்தோறும் இந்த க்ஷேத்தில் சூத நாதருக்குத் திருக்கல்யாண மஹோற்சவம் நடத்தவேண்டுமே. அதனை எந்த உபாயத்தினால் நடத்துவது? என்றுவிண்ணப்பம் செய்ய மஹாதேவி ஒரு முகூர்த்தகாலம் ஒன்றும் சொல்லாது மௌனமாயிருந்து பின் சொல்லத் தொடங்கினார்.

"ஓ, வாக்பதியே, இந்த க்ஷேத்திரத்திலுள்ள சிவாலயங்கள் தோறும் இருக்கத்தக்க சக்திகளெல்லாம் என்னிடத்திற் கலந்திருக்கிறபடியால் அச்சக்திகளெல்லாம் ஒரு சக்தியாய் ஒருருவாகி ஏகாம்பிகை என்னும் நாமத்துடன் எனது நெற்றிக்கண்ணினின்றும் ஒரு க்ஷணத்துக்குள் சித்ஜோதி ஸ்வரூபமாய்த் தோன்றப் போகின்றாள். அந்த அம்பிகை பூர்வத்தில் ஏகாம்பர நாதனை ஏகாக்ர சித்தத்தோடும் தியானிக்கவேண்டிய பாவனையால் அதி லாவண்ய சௌந்தரியத்துடன் தபோரூபியாய்த் தவம் செய்து பின்னர் நாயகனைக் கலந்து நித்யகல்யாணியாய் விளங்கினவள். ஆதலால் நீ என்னிடத்திற்றோன்றும் அந்த ஜோதிஸ்வரூபமாகிய அம்பிகைபோலும் சுவர்ணத்தினால் செய்து என்னுடைய இந்த ஆலயத்தில் ஸ்திரமானவிடத்தில் ஸ்திரமாகஸ்தாபித்து விவாக

காலங்கள்தோறும் அந்த ஏகாம்பரநாதருக்கு அந்த அம்பிகையை விவாஹஞ்செய்துவருவாய். அந்த அம்பிகையைப் போலவே விக்கிரஹங்கள் நிர்மாணஞ்செய்து அவைகளில் அந்த ஏகாம்பிகையை ஆவாஹித்து இங்குள்ள சிவாலயங்கள்தோறும் மூலலிங்க சக்திகளாக அமைத்துச் சிவதரிசனத்தோடு அம்பிகையையும் தரிசித்து மகிழ்வாய். அந்த விக்கிரஹ ரூபமாயிருக்கின்ற அம்பிகைகளன்றி வேறு மூலசக்திகள் இந்த க்ஷேத்திரத்தில் பிரதிஷ்டைசெய்தல்கூடாது.

"ஓ கமலாசனனே, சுவர்ணகாமாக்ஷியை ஏகாம்பரநாதருக்குக் கலியாணம் செய்தல் வேண்டுமென்று சொன்னேனல்லவா! அந்த முறைமையைக்கேட்பாய். ஏகாம்பரநாதருடைய கலியாணதினத்தில் இந்த ஆலயத்திலிருக்கும் சுவர்ணாம்பிகையை ஏகாம்பரநாதருடைய ஆலயத்தில் எழுந்தருளச்செய்து விதிமுறையாக இருவருக்கும் கலியாணம் நடத்தி மறுநாள் சாயங்காலம் உற்சவகோலமாய் வீதியில் வலமாக வரச்செய்யும்போது கலியாணகோலத்துடன் விளங்கும் சுவர்ணாம்பிகையை என்னுடைய ஆலயத்தில் எழுந்தருளச்செய்துவிட்டு! அதன்பின்னர் கலியாணமூர்த்தியாகிய ஏகாம்பரநாதரை அவருடைய ஆலயத்தில் எழுந்தருளச்செய்தல்வேண்டும். பின்னர் சுவர்ணகாமாக்ஷிதேவிக்கு அவருடைய ஸ்தானமாகிய திருவஸ்தானத்தில் இரண்டுநாள் பூஜை முதலியவைகள் நடவாமற்போனபடியால் அதனுடைய பரிஹாரவிதிதமாயுள்ள சாந்தியை உத்தேசித்து வைதிகதந்திரானுசாரமாய்ச் சிட்டர்களோடுகூடியிருக்கும் துர்வாஸமஹருஷி முகமாகஸஹஸ்ரகலசாபிஷேகம் முதலிய பூஜோபசாரங்களைவிசேஷமாகச்செய்து அதன்பின்னர் நித்தியபூஜையை நடத்தி உனக்குவேண்டியமனோரதங்களைப்பெறுவாயாக. அதுபோலவே வருஷம்தோறும் உற்சவம்நடந்துவரும்படியான மார்க்கத்தையும் தேடிவைத்துப் பின்னர் உனது உலகத்தையடைவாய்" என்று அனுக்கிரஹஞ்செய்து பராசக்தி ஸ்வரூபத்தில் ஐக்கியமாய்த் தம்பிடத்தில் ஐக்கியமாயிருந்த சகல க்ஷேத்திரவாஸினிகளாகிய ஸர்வசக்திகளாயும் அந்தந்த க்ஷேத்திரங்களிலும் எழுந்தருளியிருந்து யாவருக்கும் காக்ஷிகொடுக்கும் வண்ணம் செய்தனர். அதுபோலவே அந்தச் சக்திகளெல்லாம் அந்தந்த மூலபிம்பங்களில் கலந்து பிரகாசித்தன.

## சுவர்ணகாமாக்ஷி ஆவிர்ப்பாவம்.

கௌரியாகிய அம்பிகைக்குச் செய்யவேண்டிய கலியாணச் சடங்கு முதலியவற்றைப் பிரமதேவனுக்குத் திரிபுராம்பிகை கூறியபின்னர் அவருடைய நெற்றியினின்றும் சித்ஸ்வரூபிணியாய்க் கௌரீ என்னும் அம்பிகை ஜோதிஸ்வரூபமாய்ப் பிரசன்னையாயினள். அவ்வம்பிகையைப் பிரமதேவன் கண்டு அதிசயித்துப் போற்றி வணங்கி அந்த க்ஷணத்திற்றானே திரிபுராம்பிகை ஆக்ஞைசெய்தவண்ணம் சுவர்ணத்தினால் அந்த அம்பிகையைப் போலவே விக்கிரஹம் நிர்மாணம் செய்தனன்.

## திருவுருவம்.

அன்றலர்ந்த தாமரைமலர்போன்ற இரண்டுகண்களையுடைத்தாயும், இரண்டு புஜங்களையுடைத்தாயும், அவற்றுள் வலது திருக்கரம் கிளியைத் தாங்கியிருப்பதாயும் இடது திருக்கரம் தொங்கவிட்டிருப்பதாயும் உதாம் திரிபங்கி (மூன்று மடி) யோடு கூடினதாயும் தென்பாரிசம் வில்போலும் சாயலுடைத்தாயும் இடையணிணியதாயும் ஏனைய உறுப்புக்களெல்லாம் தத்தமக்குரிய ஆபரணவகைகளால் பிரகாசிப்பனவாயும் பீதாம்பரதரையாயும் விளங்கச்செய்தனன். இந்தக் கோலமாகத்தான் திரிபுராம்பிகையினுடைய நெற்றிக் கண்ணினின்றும் தோன்றிய கௌரி என்னும் அம்பிகையினுடைய கோலமும் விளங்கிற்றென்று அறிதல் வேண்டும்.

## ஆவிர்ப்பவித்தகாலம்.

சுவேதவாராஹகல்பம், ஏழாவதாகிய உச்சியம் என்கிற மன்வந்தரம்; தாமசகாலம்; கிருதயுகம்; ஹயக்ரீவர் அவதாரகாலம்; ஸ்ரீமுகவருஷம் சூரியன் துலாத்தில்இருக்கும் சமயம்; கார்த்திகை மாதம்; கிருஷ்ணபக்ஷம்; தசமிதிதி; சுக்கிரவார உதயம்; பூர்வபல்குனி நக்ஷத்திரம்; மத்தியபாதம் சூரியோதயகாலம் இந்தச் சுபதினத்தில் பராசக்தியினுடைய நெற்றிக் கண்ணினின்றும் கௌரி தோன்றினள்.

## பிரதிஷ்டை செய்த வரலாறு.

பிரமன் தனக்குக் காக்ஷிகொடுத்த அம்பிகையைப்போலவே சுவர்ணத்தினால் விக்கிரஹம்செய்து அமைத்தபின்னர் அந்த விக்

ஸிரஹமூர்த்தியைப் பிலத்துக்குத் தென்பக்கத்தில் த்ருவஸ்தானம் (நிலையாயுள்ளவிடம்) என்று ஒரு பெயரிட்டு அந்த இடத்தில் பிரதிஷ்டைசெய்து, பிரதிஷ்டைசெய்த அந்த மாதமாகிய ஐப்பசி மாதந்தொடங்கி அந்த மாதத்துக்கு ஆருவதுமாதமாகியபங்குனி மாதம் வரையில் விசேஷ விபாசபூர்வகமாய் மஹாபிஷேக நைவேத்திய பூஜோபசாரங்களை விசேஷமாகச் செய்துவந்து ஏகாம்பரநாதருடைய கலியாணதினத்தில் ஞதநாதருடைய ஆலயத்தில்எழுந்தருளச்செய்து இந்த அம்பிகைக்கும் அந்த ஏகாம்பரநாதருக்கும் வேதாகமோக்த விதிமுறையாக் விவாகம் நடத்தி மறுநாள் கலியாணகோலத்துடன் உற்சவம் நடத்தி ஏகாம்பரநாதரை அவருடைய ஆலயத்தில் எழுந்தருளும்படியாக அவருடைய பரிவாரங்களுடன் அவரை அனுப்புவித்து சுவர்ண காமாக்ஷியை அவருடைய ஆலயமாகிய த்ருவாலயத்தில் எழுந்தருளச் செய்து முன் சொல்லியவாறு சாந்தி அபிஷேகாதி உபசாராதிகளை நடத்திப் பின்னர் ஓர் தாமரை மலரை எடுத்து அம்பிகையைத் தியானித்து ஆகாயத்தில் விட்டெறிந்தனர். அந்த மலர் ஆகாயத்தில் பட்டவுடன் சந்திரனுடைய அம்சமாக ஒரு சக்கரவர்த்தி வெளிப்பட்டு வந்தனன். அவனிடத்தில் அந்தப் பிரமதேவன் தான் செய்த கலியாண மகோத்சவம் வருடந்தோறும் நடத்தி வரும் வண்ணம் நாசமில்லாததாகிய 'தன்பாத்திரம்' ஒன்றைக் கொடுத்து "நீ இந்த உற்சவத்தை நடத்தி வரவேண்டுமென்று ஆக்ஞை செய்து ஆகாச பூபாலன் என்கிற நாமத்துடன் இந்த நகரத்தில் வாழக்கடவாய்" என்று ஆசிர்வதித்து அவ்வரசனை அங்கிருக்கச் செய்து ஸ்ரீ காஞ்சி மண்டலத்திலும் பூமண்டலத்திலுமுள்ள சிவாலயங்கள்தோறும் சென்று அங்கங்கும் அம்பிகைகளைப் பிரதிஷ்டை செய்து சிவபெருமானோடு அம்பிகைகளையும் தரிசனம் செய்து மகிழ்ந்து தன்னுலகம் போய்ச் சேர்ந்தனன்.

இனிப்பிரமனுக்கு அந்தகத்வம் வர அதற்குக் கலைமகள் கூறிய பரிகாரவியல் வருமாறு:—

பிரமதேவன் சத்தியலோகம் போய்ச் சேர்ந்தவுடன் இரு கண்களும் ஒளி மழுங்கிப்போய் அந்தகனாயினன். அதனால் அவன் மனவருத்தமுற்றிருக்கும்பொழுது கலைமகள் "ஞானநாய

சனே, உமக்கு நேத்திர பங்கம் வந்ததற்குக்காரணம் கூறுகி றேன் கேளும். என்னவெனின், காஞ்சிக்ஷேத்திரத்தில் காமகோடி பீடத்தில் காயத்திரி மண்டபத்துக்கு அடியில் எதுவரையில்பிலா காசமோ அதுவரையில் குண்டலினிக்கிரகம் என்கிற நாமத்தால் பூர்வத்தில் சிவபெருமானால் நிர்மிக்கப்பட்டுள்ளது. அந்தவிட த்தை நீர் காலால் மிதித்து வந்தமையால் அந்தகத்வம் வந்தது. இனி நீர் முன்போலவே அவ்விடத்துக்குப்போய் ஸ்ரீ சக்கர பூஜையைச் செய்வீராயின் நிவர்த்தியாய் விடும். இல்லாவிடின் இந்தக் கண் குருடு ஒரு நாளும் நீங்காது. இதிற் சந்தேகமில்லை" என்று கலைமகள் சொல்லியபொழுது பிரமன் "இந்த விதி உன க்கு எப்படித் தெரியவந்தது" என்று கேட்டனன்.

கலைமகள் "ஓ, சிருஷ்டிக்கர்த்தரே, சிவபெருமான் ஸ்ரீசக்கரப் பிரதிஷ்டை செய்யும் பொழுது இந்த ஸ்ரீ சக்கர பூஜையை ருத்தி ரயாமளம் என்னும் தேவிதந்திரத்திற் சொல்லியிருக்கும் முறை யாகப் பூஜிக்கவேண்டும் என்று இந்த விடத்தை மிதிப்பவர் கண் குருடாய்ப்போவார்கள் என்றும் அதற்குப்பரிகாரம் மீளவும் வந்து பூஜித்தால்தான் என்றும் கூறியிருக்கின்றனர். ஆதலான் நீரும் போய்ச்செய்யும் என்று சொல்லப் பிரமதேவன் மகிழ்ந்த வனாய் அந்தக் கலைமகளுடன் காமகோட்டத்தையடைந்து ஸ்ரீசக் கர பூஜைசெய்து அந்தகத்வம் நீங்கப் பெற்றுச் சுவர்ணகாமாக்ஷி யைக்கண்ணுறக்கண்டு களிப்படைந்தான். எவனொருவன் காமகோடி பீடஸ்தானத்தில் காலைவைப்பதனால் உண்டாகும் பாவத்தையடை கின்றானோ அவன் இந்தச் சுவர்ணகாமாக்ஷிதேவியைத் தரிசனஞ் செய்த மாத்திரத்தில் அந்தப் பாவத்தினின்றும் நீங்குவான். அந் தத்தரிசனம் கிட்டாமற் போகுமாயின் ஸ்ரீ சக்கரபூஜையை ருத் திரயாமள தந்திரத்தில் கூறியுள்ளபடிச் செய்வானாயின் அந்தப் பாபத்தினின்றும் நீங்குவான்" என்று வரங்கொடுத்துத் தன்னு லகம்போய்ச் சேர்ந்தனள்.

இனிப்பிரமதேவன் தன்னுத்தம தேவியாகப் பூஜித்த சர்வா நுக்கிரக மூர்த்தியாய் விளங்கும் சுவர்ணாம்பிகைக்கும், திருவா தேவியாகிய தபஸ் காமாக்ஷிக்கும், பராசக்தியாகிய திரிபுராம் பிகைக்கும் காரணப்பெயர்களாயுள்ள பஞ்சநாம விவரணம் வருமாறு:—

## தேவிபஞ்சநாம விவரணம்.

சுவர்ணசக்தி, சகஹஸ்ரை, ஏகலிங்க வல்லபை, காமாக்ஷி தேவி, தர்மதேவி, இவ்வைந்துநாமங்களும் சுவர்ணகாமாக்ஷிதேவியினுடைய நாமங்களாகும்.

தபஸ்வினி, கனச்யாமா, (நல்ல பச்சைநிறமுள்ளவள்) சர்வசைலாலயேச்வரி, காமாக்ஷி, காளி, இவ்வைந்துநாமங்களுந்தபஸ்காமாக்ஷி தேவியினுடைய நாமங்களாகும்.

திரிபுரை, ராஜராஜேச்வரி, மஹாகாமேசவல்லபை, காமாக்ஷி காமகோடி இவ்வைந்து நாமங்களும் திரிபுராம்பிகையாகிய பராசக்தியினுடைய நாமங்களாகும்.

இதனால் பராசக்தியானவள் மூன்றுவிதமான கோலத்துடன் ஸ்ரீ காமகோடி பீடமாகிய ஆலயத்தில் வீற்றிருக்கின்றாள் என்றறிதல் வேண்டும்.

இனி அந்தப் பராசக்தியாகிய திரிபுராம்பிகையினுடைய ஆத்மநாதராகிய ஜோதிஸ்வரூபரான ஏகலிங்கநாதருக்கும் அவர் அம்சமாகிய தழுவக்குழைந்த பெருமானுக்கும் காரணப்பெயர்களாகவுள்ள நாமவிவரணம் வருமாறு:—

## சிவபேத பஞ்சநாம விவரணம்.

ஏகஜ்யோதி, நிர்க்குணாத்மா, சிவனார், காமேச்வரர், ஏகாம்பரநாதர் இவ்வைந்து நாமங்களும் ஏகலிங்கப்பெருமானுடைய நாமங்களாகும்.

இரசாலலிங்கம், உருத்திரகோடி, சதாசிவனார், சகுணர், ஏகாம்பரநாதர் இவ்வைந்து நாமங்களும் தழுவக்குழைந்த பெருமானுடைய காரணப் பெயர்களாகும்.

இனித்தேவியினுடைய அர்த்தாம்சமாகிய வரதராஜருடைய காரணப் பெயர்கள் வருமாறு:—

## விஷ்ணுபஞ்சநாம விவரணம்.

யக்ஞோத்பவர், புண்ணியகோடி, கஜேந்திரவரதர், தேவராஜர், அபீஷ்டவரதர் என்பனவாம்.

காஞ்சிக்ஷேத்திரத்தில் பராசக்தியானவள் சக்திசம்பந்தத்தால் மூன்றுவிதமான சக்தியாகவும் சிவசம்பந்தத்தால் இரண்டுவித சிவலிங்க ஸ்வரூபமாகவும் விஷ்ணு சம்பந்தத்தால் † ஒருவிதமான விஷ்ணுஸ்வரூபமாகவும் ஆக ஆறுவிதமாகத் தன்னுடைய லீலா விநோதத்தால் வீற்றிருக்கின்றனள்.

## இனிச்சிவசக்தி ஐக்கிய பூஜாவிதியின் வரலாறு.

லலிதா தேவியானவள் சிவசக்தி ஐக்கிய ரூபிணியாதலால் அந்தத்தேவியை நிர்க்குணபரமான சிவபாவனையாகவும் சகுணபரமான சக்திபாவனையாகவும் தியானித்து சிவசக்தியாத்மகமாக அர்ச்சித்தல் வேண்டும். இவ்வண்ணம் பூஜிப்பதே மேலான சாஸ்திரங்களுடைய சம்மதமும், அந்த லலிதாம்பிகைக்கு எப்பொழுதும் பிரியமாயுள்ளதுமாகும். இவ்வுண்மையறிந்து பூஜிப்பவர் மங்களத்தைப் பெறுவர். இவ்வுண்மையையறியாது சிவசக்திகளைப் பேதபாவனை பண்ணி அந்த லலிதாம்பிகையினிடத்தில் சிவஐக்கிய பாவனையை யொழித்து சக்திபாவனைமாத்திரம் கொண்டு பூஜிப்பவர் அமங்கலத்தைப் பெறுவர்.

தவக்கோலமுடைய ஸ்ரீ காமாக்ஷிதேவியும் சிவசக்தி ஐக்கிய பாவமாயிருக்கின்ற லலிதாதேவியுமாகிய திரிபுராம்பிகையினுடைய சகுண ஸ்வரூபமாதலால் அத்தேவியைச் சிவசக்தி ஐக்கிய ஸ்வரூபமாகவே பூஜித்தல் வேண்டும். அவ்வண்ணம் பூஜிப்பதே அந்தத் தேவிக்கும் பிரியம். அதனையறிந்து அவ்வம்பிகையை அவ்வண்ணமாகத் தியானித்துப் பூஜிப்பவர் தாங்கள் வேண்டும் இஷ்ட சித்திகளைப் பெறுவர்.

இதனால் லலிதாதேவியாகிய திரிபுராம்பிகையையும், அவளிடத்தில் தோன்றிய தபஸ்காமாக்ஷியையும் சிவசக்தி ஐக்கியபாவனையாகவே தியானித்துப் பூஜித்தல் வேண்டும். என்றும் அங்ஙனம் பூஜிப்போர் சர்வ மங்களத்தையும் சகலமான இஷ்ட சித்திகளையும் பெறுவரென்றும் தெரிவித்தவாறாயிற்று.

பிரமதேவனால் நிர்மிக்கப்பட்ட மூன்றாவது திருவுருவமான கௌரியாகிய சுவர்ணகாமாக்ஷிதேவி ஏகாம்பர நாதருடைய பத்தினியாய்த் தனித்து அவரது வாமபாகத்தில் உடனிருக்கப்பெற்ற

† வரதராஜர் சக்திஸ்வரூபமென்பது முதலத்தியாயத்தில் காண்க.

வாதலால் இவ்வம்பிகையைச் சிவத்தோடு ஐக்கியமாகவும்; அந்தச் சிவரூபத்தை இந்தச் சக்தியோடு ஐக்கியமாகவும் பாவித்து இருவரையும் ஒன்ருகப் பூஜைசெய்தல் கூடாது. முன்னர் ஏகாம்பரநாதரையும் அதன்பின்னர் அம்பிகையையும் அர்ச்சித்தல்வேண்டும். இவ்வுண்மையுணராது கௌரியினிடத்தில் சங்கருடைய பாவனையும், சங்கரிடத்தில்கௌரிபாவனையும் செய்து பூஜிப்பவர் ஜன்மங்கள் தோறும் நரகத்தையனுபவிப்பவராவர். இருவரையும் தனித்தனி அந்தந்தப் பாவனையாகவே செய்பவர் மங்களப் பிரதத்தையடைவர்.

இதனுல் சுவர்ணகாமாக்ஷியாகிய கௌரியைச் சிவஐக்கியமாகப் பாவித்துப் பூஜைசெய்யாது தனியாகச்சக்தி பாவனைமாத்திரம் செய்து பூஜித்தல் வேண்டுமென்றும், அங்ஙனம் பூஜிப்பவர் மங்களத்தையடைவாரென்றும், ஐக்கியபாவனையாற் பூஜிப்பவர் நரகமடைவாரென்றும் தெரிவித்தவாருயிற்று.

இனி இரண்டு சக்திகளை ஒருவிதமாகவும் ஒரு சக்தியை மற்றொருவிதமாகவும் பூஜித்ததற்குக் காரணம் வருமாறு.

பூஜையாகிய ஆராதனை, நிர்க்குணபரமான ஆராதனை சகுணபரமான ஆராதனை என இருவகை. நிர்க்குணுராதனை சிரேஷ்டமெனவும் சகுணுராதனை கௌணமெனவும் சொல்லப்படும். நிர்க்குணமாயுள்ளது சிவமாதலால் அந்தச் சிவபரமாயுள்ள சக்தியைச் சிவசக்தி ஐக்கிய மாயாராதித்தல் நிர்க்குண ஆராதனை எனவும், சகுணமாயுள்ளது சக்தியாதலால் அச்சக்தி பரமாயுள்ள சக்தியை யாராதித்தல் சகுண ஆராதனை எனவும் சொல்லப்படும். எங்ஙனமெனின், லலிதாதேவியாகிய திரிபுராம்பிகை நிர்க்குண ஸ்வரூபமாயுள்ள ஜோதிலிங்கத்தோடு ஐக்கியமாயிருப்பவளாதலாலும் தபஸ்காமாக்ஷியானவள் நிர்க்குண ஜோதிலிங்க ஐக்கியமாயுள்ள அந்தத்திரிபுராம்பிகையினுடைய நெற்றியில் தோன்றினவளாதலாலும் அவ்விருசக்திகளும் நிர்க்குண ஜோதிலிங்க பரமாயுள்ளவர்கள். அவ்விரண்டு சக்திகளையும் சிவசக்தி ஐக்கியபாவனையாகிய நிர்க்குண ஆராதனையால் பூஜித்தல் வேண்டும். சுவர்ணகாமாக்ஷி விவாக உத்ஸவத்திற்கு அருகமாக லலிதாதேவியாகிய நிர்க்குண சக்தியினின்றும் தோன்றிய சகுணரூபியாகிய தபஸ்காமா

க்ஷியே சுவர்ணகாமாக்ஷியாக வந்தனளாதலால் அந்தக் காமாக்ஷியைச் சகுண ஆராதனையால் பூஜித்தல் வேண்டும்.

இதனால் காஞ்சிகாமகோடி பீடத்துக்கு ஈசையாய் வீற்றிருக்கும் தேவியார் இருவினைப் பட்டுழலும் ஆன்மகோடிகள் வேண்டும் போகங்களைக் கொடுத்து அவர்கட்கு அவ்விருவினையொப்பு வருவித்ததற்குப் போகமூர்த்தியாகிய சுவர்ணகாமாக்ஷியாகியும் இருவினையொப்புவாய்ந்த ஆன்மாக்கள் வேண்டும் தவநெறிகளைக் கொடுத்து அவர்கட்கு மலபரிபாகம்வருவித்ததற்கு யோகமூர்த்தியாகிய தபஸ்காமாக்ஷியாகியும், மலபரி பாகம்வந்த ஆன்மாக்கள் வேண்டும் மெய்ஞ்ஞான முறைகளைக்கொடுத்து அவர்கட்குச் சத்திநிபாதம் வருவித்தற்கு ஞானமூர்த்தியாகிய லலிதாதேவியாகிய திரிபுராம்பிகையாகியும் இவ்வண்ணம் ஆன்மாகட்கு உண்டாக வேண்டிய இருவினை யொப்புமலபரிபாகம் சத்திநிபாதம் என்னும் மூன்றும் சிருஷ்டிக்கப்பட்டுள்ள எல்லாவான்மாக்கட்கும் ஏககாலத்தில் உண்டாவதன்றாகலான்; இருவினை யொப்புவருவதற் கேதுவான ஆன்மாக்கள் சிலவாயும், மலபரிபாகம் வருவதற்கேதுவான ஆன்மாக்கள் சிலவாயும் சத்திநிபாதம் வருவதற்கேதுவான ஆன்மாக்கள் சிலவாயுமிருப்பன ஆகவே எவ்வவ்வான்மாக்கள் எவ்வக்காலங்களின் எவ்வவற்றை வேண்டுகின்றார்களோ அவ்வவற்றை அவ்வவர்களுக்கு அருளிக்கொண்டேவரப்போக மூர்த்தியாயும் யோகமூர்த்தியாயும், ஞானமூர்த்தியாயும் விளங்குகின்றாளென்றும் இந்த மூன்றனுள் யோகமும், ஞானமும் ஒன்றுக்கொன்று சம்பந்தமாய் நிற்பனவாகலானும், போகம் இவற்றின் வேறாய் நிற்பதாகலானும், இம்மூன்றும் நிற்கும் முறைபோலவே யோகப் பிரதமாகிய தபஸ்காமாக்ஷியும் ஞானப்பிரதமாகிய திரிபுராம்பிகையும் ஒரு சம்பந்தமாயுள்ளாரென்றும், போகப் பிரதமாகிய சுவர்ணகாமாக்ஷி வேறாய்த்தனித்து நிற்பவளென்றும், இதுபோலவே சிவமும் யோகஞானபரமான சக்திகளிடத்தில் வேறாகாமற்கலந்தும்போக பரமான சக்தியினிடத்தில் கலவாது வேறாயும் இருப்பதென்றும் உணர்த்தி அக்காரணத்தால் யோகஞான சக்திகளைச் சிவசக்தி ஐக்கியபரமான நிர்க்குண வாராதனையால் பூஜித்தல் வேண்டுமென்றும், போகசக்தியைச் சிவசக்திபேதபரமான சகுணவாராதனையால் பூஜித்தல் வேண்டுமென்றும் விதித்ததெனக் கொள்க.

ஆகையால் வேதவித்துக்களாயுள்ளவர் போகயோக ஞானப் பிரதமான மூவிதசக்தி பிம்பங்களையும் இதுகாறும் கூறிவந்த முறைப்படி அந்தந்தப் பேதமாகவே பூஜிப்பார்களேயல்லாமல் எல்லாம் ஒரு சக்திதானென்று எல்லாப் பிம்பங்களையும் நிர்க்குணபரமான ஆராதனையாலாவது, சகுணபரமான ஆராதனையாலாவது செய்யார்.

இதுவுமன்றி பிம்பபேதம்போலவே யந்திர பேதங்களும் உண்டு. ஆகலான் இவைகளை அந்தந்தப் பிம்பங்களுக்கும் யந்திரங்களுக்கும் உரிமையாய் விதித்திருக்கும் மந்திரபேதங்களையும் தந்திரபேதங்களையும் நன்குணர்ந்து பூஜைகளையாவது உற்சவங்களையாவது செய்தல் வேண்டும். அங்ஙனம் செய்வாராயின் அவை அவர்களுக்கு மங்களத்தையே செய்யும்.

யந்திர பேதங்களையும் தந்திர பேதங்களையும் அறிந்து செய்ய வேண்டுமென்பது என்னையெனின், பராசக்தியானவள் காஞ்சி க்ஷேத்திரத்தில் மூன்றுவிதமான சக்தி பேதமாகவும், இரண்டு விதமான சிவபேதமாகவும், ஒரு விதமான விஷ்ணுபேதமாகவும் காணப்படும் ஆறுவிதமான பிம்பபேதங்களில் ஆறுவிதமானபேதங்களாகவே கலந்திருக்கின்றாளாதலால் அர்ச்சனை செய்யுங்கால் அந்தப் பேதங்களையறிந்து மந்திரதந்திரங்களைச் செய்யவேண்டுமென்று விதித்ததென்க.

ஆறுவிதமாவன:—திரிபுராம்பிகையில் ஜோதி ஸ்வரூபமாயிருக்கின்ற பூர்ணசக்தி ஸ்வரூபமாகவும், தபோரூபிணியாகிய காமாக்ஷியினிடத்தில் கலாரூபமாகவும், கல்யாண கௌரியினிடத்தில் கல்யாண கோலத்துக்குரிய அங்கஸ்வரூபிணியாகவும், நிர்க்குண ஆதிஜோதிலிங்கத்தில் நிர்க்குணையாய் நிர்க்குண சிவஸ்வரூபிணியாகவும், தழுவக்குழைந்த பெருமானுப்வந்த சகுணலிங்கத்தில் சகுணையாய்ச் சகுண ஸ்வரூபிணியாகவும் பிம்பசக்திவடிவத்தினுடைய அர்த்தாம்ச ஸ்வரூபமாயிருக்கின்ற வரதராஜ மூர்த்தியினிடத்தில் புருஷரூபமாகவும் பராசக்தியானவள் விளங்குகின்றாள்.

இந்த ஆறுவிதமான மூர்த்தி பேதங்களினிடத்தில் ஆறுவிதமான அம்சங்களாக விருக்கும் பூர்ணாம்சமான பராசக்தி வீற்றிருக்கும் காமராஜபீடமாகிய காமகோடி பீடத்தை எவன் தரிசிக்

காமற்போகின்றானோ அவன் வியர்த்தனாய் நரகாச்ரயனாகின்றான். எவன் தரிசிக்கின்றானோ அவன் தன்யனாய் ஜீவன் முக்தனாகின்றான். இதிற்சந்தேகமில்லை.

மந்திரதந்திர பேதங்களையறிந்து மூர்த்திபேதங்களை ஆராதனை செய்ய அசக்தனாகிற பக்ஷத்தில் கௌளாகமத்தில் சொல்லியபடி திரிகோணாகாரமாயிருக்கிற ஸ்ரீ சக்கரத்தில் பூர்வகோணத்தினுடைய அக்ரத்தில்குருபரமகுரு,பரமேஷ்டிகுரு,பராத்பரகுரு என்கிற மஹான்களாகிய ஆசார்யர்களைப்பாவித்துப் பூஜைசெய்தும்காமேச்வரிகூடத்தில் ஸ்ரீவித்தையைநினைத்துஅஷ்டோத்தர ஸஹஸ்ரநாமம் முதலிய அர்ச்சனை பேதங்களால் அர்ச்சனைகளைச்செய்தும் வாக்பவகூடத்தில் ஸ்ரீவித்தியா மந்திரத்தை ஜபித்தலையும் செய்வானாயின் அவன் அர்த்தத்தர்ம நெறிகளால் அன்னபானாதிகளுக்கு யாதொரு குறைவின்றிச் சந்தோஷ சித்தனாய் வாழ்வான். இந்த விதமாய் ஸ்ரீ சக்கர பூஜையும் செய்யக்கூடாதவன் அந்தரங்க பக்தியுடன் ஸ்ரீ காமாக்ஷிதேவியினுடைய சரணகமலங்களைத் தியானம் செய்யக்கடவன்.

இங்ஙனம் சொல்லிவந்த முறைமையில் ஒருவன் ஜன்மமெடுத்து மரணமடைவதற்குள் யாதானும் ஒருமுறையில் ஸ்ரீ காஞ்சியில் காமகோடி பீடத்தில் தேவியை வழிபடல் வேண்டும். வழிபடுவானாயின் அவனுக்குப்புனர் ஜன்மமும் மரணாவஸ்தையும் உண்டாகா. அவ்வழிபாடில்லாதவன் ஒரு பிரமகல்பம் பரியந்தம் கிரிமியாகவே பிறப்பான். ஆகலான் ஜனத்திற்சிறந்த அரசன் முதலாயினர் ஸ்ரீவித்யையினுடைய அர்ச்சனையை அவசியம்செய்தல் வேண்டும். அங்ஙனம் செய்வோர்க்கு வேண்டியவை கொடுக்க ஸ்ரீ காமாக்ஷி தேவியானவள் காஞ்சிக்ஷேத்திரத்தில் காமகோடி பீடத்தில் பிரசன்னையாயிருக்கிறாள்.

பூர்வத்தில் மஹாலக்ஷ்மி, ஹயக்ரீவ முனிவர், மநுச்சக்கரவர்த்தி, தசரதசக்கரவர்த்தி, துண்டீரமகாராஜன், காந்தார மஹாராஜன், சோமமஹாராஜன், உருத்திரா அனந்தன் முதலாயினோர் தேவியினுடைய பூஜை அர்ச்சனை ஜபங்களைக் கர்த்தவ்யமாகக் கொண்டு செய்திருக்கின்றனர்.

## ஆராதனை செய்தவர் வரலாறு இலக்ஷ்மி.

பூர்வம் அமிர்தம் கடைந்தகாலத்தில் வெண்ணிறமாயிருந்த விஷ்ணுமூர்த்தி விஷமுண்டானபின்னர் நீலநிறமுடையவராயினர். அப்பொழுது அவர் மார்பிலிருந்த இலக்ஷ்மிதேவி அவருடைய கருமை நிறத்தைப் பார்த்தும் பொன்னிறமாயிருக்கின்ற எனக்குக்கருமை நிறமடைந்திருக்கின்ற நீர் இனிப்பிரியமாக மாட்டீர் என்று பரிகாசமாகச் சொல்ல அவர் கோபம் கொண்டவராய் "ஹே, இலக்ஷ்மி, நீ மிக அழகியோ? சிகப்பியோ? இனி நான் வெறுக்கத்தக்க கருப்பியாயும் கிழவியாயும் போகக்கடவாய்" என்று சபிக்க லக்ஷ்மி அந்தச்சாபமேற்றவளாய்க் காஞ்சியில் காமகோடி பீடத்தையடைந்து மஹாலக்ஷ்மியாகிய மஹாதேவிக்கு எதிராகவந்து பணிந்து நின்றனள். அந்த லக்ஷ்மியைத் தேவி பார்த்து "உனக்கு இந்த நிறமும் கிழத்தனமும் எங்கிருந்து வந்தது? நீ விஷ்ணுவினுடைய ஹ்ருதயத்திலிருந்து பூஜிக்கப் பட்டதுபோல் இனி எனக்கு அங்கமாயிருக்கிற இந்தக்காயத்ரி மண்டபத்தில் வலது பக்கத்தில் சாந்நித்தியமாயிருந்து பக்தாபீஷ்டப் பிரதாயினியாகவிருப்பாய் அன்றியும் எனக்குப் பிரியையாயிருக்கிற உன்னை யாரொருவர் பாதம் முதல் உச்சி வரையில் தொட்டும் தியானித்தும், தரிசித்தும் செல்கின்றார்களோ அவர்களுக்கு நீர் அஷ்டைச்வரியமும் கொடுத்துவருவாய்" என்று ஆக்ஞை செய்ய அந்த ஆக்ஞையைப் பெற்று எப்பொழுதும் அவ்விடத்திலேயே இருப்பவளாக அந்த லக்ஷ்மிதேவியாயினள்.

## ஹயக்கிரீவர்.

பூர்வத்தில் ஹயக்கிரீவ முனிவர் விஷ்ணுரூபத்தையடைய வேண்டிக் காமகோட்டத்தையடைந்து காமாக்ஷிதேவியைப் பூஜித்து ஹ்ருதயத்தில் தியானித்துத் தவம் புரிந்து வந்தனர். அந்தச் சமயத்தில் பதுமநாபனென்னும் ராக்ஷசன் அங்குவர அவன் அவரைக் குதிரை என்று நினைத்துத்தனக்கு வாகனமாகக் கொள்ளவெண்ணிப் பாதாலத்துக்குக் கொண்டுபோயினர். அவனை அம்பிகை கொன்று அவர் வேண்டியவண்ணம் விஷ்ணு முகத்தைக்கொடுத்தனள். பின்னர் ஹயக்கிரீவர் பாதாளத்திலிருந்த ராக்ஷஸர்களை எல்லாம் கொன்று சுக்கிராசாரியாரால் சிக்ஷிக்கப்

பட்டிருந்த குறைவுபடாத அபிஷேகஜலத்தைத் [illegible] உடனே காமகோட்டத்துக்கு வந்து திரிபுராம்பிகைக்கு அபிஷேகஞ்செய்து ஆராதித்து அம்பிகைக்குத் தக்ஷிணபாகத்தில் இருந்துவிட்டனர்.

## மநுசக்ரவர்த்தி.

பூர்வத்தில் எட்டாவதாகிய மநு, சூரியபகவானால் கொடுக்கப்பட்ட பூவுலகைப்பெற்று அரசபுரிவதற்கு அறியவேண்டுவனவாகிய புண்ணிய பாவங்களை முன்னர் நன்குணரவேண்டுமென்றெண்ணி இராஜ்யத்தைச் சுமந்திரனென்கிற மந்திரியினிடத்தில் ஒப்புவித்து வசிஷ்ட முனிவரிடத்தில் விடைபெற்று, காமகோட்டத்தையடைந்து அங்கிருந்த துர்வாச முனிவரிடத்தில் தேவி மந்திரோபதேசம் பெற்று அந்த மந்திர முறைப்படியே தேவியை அடைய ஆராதனமும் தியானமும் செய்தலாகிய அரிய தவத்தை இயற்றிவந்தனன். ஒரு நாள் காமாக்ஷிதேவி கலைமகளுருவங்கொண்டு ஓர் கும்பத்தில் உலகாணித் தீர்த்தமாகிய பஞ்சதீர்த்தத்தை நிறைத்து அந்த மநுவுக்கெதிரில் பிரசன்னையாய் அந்தத் தீர்த்தத்தை அவன் சிரசின்மேல் அபிஷேகம்செய்து சகல கலைகளும் உணரும் வண்ணம் அநுக்கிரகம் செய்து அந்தர்த்தானமாயினார். பின்னர் மநுச்சக்கரவர்த்தி கலைமகளுக்குச் சமானமாகச் சர்வசாஸ்திரபாரங்கதனாய்த் தன்னகரம் போய்ச் சேர்ந்து நீதி வழியே செங்கோல் செலுத்தி வாழ்ந்திருந்தனன்.

## தசரதசக்கரவர்த்தி.

தசரத சக்கரவர்த்தியானவர் புத்திரப்பேறு வேண்டி வசிஷ்டருடைய ஆக்ஞையின் பிரகாரம் தீர்த்த யாத்திரையை விதிமுறையாக நடத்திக் காமகோடி பீடத்துக்கு வந்து திரிபுராம்பிகையைத் தரிசித்துப் போற்றி வணங்கிப் பூஜித்து வந்தனன். ஓர் நாள் ஆகாசவாணியானவள் "ஓ, அரசனே உனக்கு இன்னும் ஒரு வருஷத்தில் நன்மக்கட்பேறுண்டாகும்." என்றுகூற அதனை அரசன் கேட்டு மகிழ்ந்து தன் நகரம் போய்ச் சேர்ந்து மக்கட்பேறு பெற்றனன்.

## துண்டீரமகாராஜன்,

பூர்வத்தில் பிரமதேவனால் ஆகாயத்தினின்றும் சந்திராம்ச மாகவருவித்த 'ஆகாயபூபதி' யானவன் தருமத்துக்காக நியமித்தி ருந்த திரவியங்களையபகரித்துக் கொண்டு புத்தமதத்திற் புகுந்து தெய்வபக்தியிழந்து போயினன், அந்தப் பாவத்தால் புத்திரப் பேறற்றவனாயினன்.

பின்னர் பூர்வபுண்ணிய விசேஷத்தால் கோரக்ஷ சித்தரை யடையப்பெற்று வேதபாஹ்யமாகிய புத்த தருமங்களைக் கை விட்டு வேதத்துக்கு அந்தரங்கமாகிய தருமங்களையுபதேசம் செய்யப்பெற்றுப் பின்னர் புத்தர்கூட்டங்களையும் அவர்களுக்குக் குருக்கண்மாரா யுள்ளவர்களையும் தனது நாட்டிவிராவண்ணம் ஓட்டி நீதி வழியே செங்கோல் செலுத்தி அம்பிகையின் மந்தி ரோபதேசமும் பெற்றுக் காஞ்சிமண்டலத்திலுள்ள சகல க்ஷேத் திரங்களையும் ஜீர்ணோத்தாரணம் செய்து தேவியினிடத்தில் மிகு ந்த அன்பும் ஆராதனையும் உடையவனாய் அந்தத்தேவிபரமாகவே தனது வாழ்நாளைச்செலுத்தி அந்தத்தேவியினுடைய சகலதர்மங் களையும் மிகச்சிறப்பாக நடத்தி வந்தனன். மஹாதேவியாகிய காமாக்ஷிதேவியானவள் அந்த அரசனுடைய தர்மபரிபாலனத் துக்கு மகிழ்ந்தவளாய்த் தனது மூத்த பிள்ளையாகிய கணேச மூர்த்தியைப் பார்த்து "எனது அன்பனாகிய ஆகாசபூபதி அபுத் திரவான் என்கிற வசையைப்பெற்றுள்ளானாகையால் அவ்வசை நீங்குமாறு நீ அவனுக்குப் புத்திரனாகப்போ" என்று கட்டளை யிட கணேசமூர்த்தி "யான் உலகில் யாவராலும் பிள்ளையார் பிள் ளையார் என்றே துதிக்கப்பட்டவனாயுள்ளேன். அப்பேறையுடை யவனாயிருக்கின்ற யான் உனக்கன்பனாயிருக்கின்ற அவனிடத் துப் பிள்ளையாய்ப் போயிருத்தல் அடாதா? யான் போகின்றேன்" என்று விடைபெற்று அவன்பால் வந்து "ஓ, அரசனே, ஸ்ரீகா மாக்ஷி தேவியினுடைய கிருபையினால் நான் உனக்குப்புத்திரனாக விருக்க வந்துள்ளேன்" என்று சொல்ல, அரசன் அம்மதுர மொ ழியைக்கேட்டு அடங்காப்பேரின்ப முற்றுத் தன் மனையாள்பால் நடந்த செய்தியைக் கூற அவள் என்றவனினும் பெரிது உவந்து அணைத்து மார்போடணைக்கும்பொழுது கணேசப் பெருமான் அன்று பிறந்த பிள்ளை போலாயினர். அரசன் அக்குழந்தைக்

ருக் செய்யவேண்டிய சடங்குகள் அனைத்தும் செய்யவெண்ணி
அன்றுமுதலாக நடத்திவந்த பன்னிரண்டாம் நாள் ஜாதகன்மாதி
நடத்தவேண்டித் தம்பதி சமேதனாய் ஸ்நானுதி கர்மங்களை முடித்
துக்கொண்டு தேவிசன்னிதானத்திற்குச் சென்று அவ்விடத்தில்
முன் நடத்தவேண்டிய பூஜை அர்ச்சனை ஹோமம் முதலிய
யாவும் விதிமுறையாகவும் அதிகச்சிறப்பாகவும் நடத்திப் பின்னர்
பிராம்மணுள் உண்டு மகிழும் வண்ணம் உச்சிப்பொழுதில் சமாரா
தனை நடத்தி வரும்பொழுது அகஸ்மாத்தாய்ப் பொன் மாரி ஒரு
முகூர்த்தகாலம் பொழிந்தது. அந்த அதிசயத்தைக்கண்ட அர
சன் அதன் காரணம் 'இன்னதென அறியவேண்டி அங்கு வந்தி
ருந்த ஸ்ரீ வத்ஸர் என்கிற முனிவர் முதலானேரைப் பணிந்து
"இது என்ன அதிசயம்" என்று கேட்க அம்முனிவர்கள் அதன்
காரணத்தைச் சொல்லமுடியாமல் மயங்கிக்கொண்டிருக்கும்பொ
ழுது மஞ்சத்தில் பன்னிரண்டுநாள் குழந்தையாகவிருந்த கணேச
மூர்த்தி மஞ்சத்தைவிட்டுக் கீழே தவழ்ந்து போஜனம் செய்து
கொண்டிருக்கும் பிராம்மண ஸ்திரீகளுடைய மத்தியிற்போய்
தன் பிதாவாகிய அரசனுடைய முகத்தைப் பார்த்து "ஓ தந்
தையே, இதன் காரணத்தை யான் சொல்லுகிறேன். பிராம்மண
போஜனத்துக்காக உன்னால் 'பாம' அளவாக வைக்கப்பட்டிருந்த
பயறில் உனது சொத்தாயுள்ள பொன்னில் ஒரு பயறளவு பொன்
கலந்து விட்டது. சமையல்காரர் அதனையறியாமல் பயறுடன் அந்
தப்பொன்னையும் சமைத்து மோதகமாகச் செய்து பிராம்மண பந்
தியில் படைத்தார்கள். உன்னுடைய இஷ்டதெய்வமாகிய ராஜ
ராஜேச்வரி என்னும் காமாக்ஷிதேவியானவள் ஸ்திரீகளுடைய
பந்தியில் தானும் ஒரு ஸ்திரீயைப்போல் உருவங்கொண்டு புஜித்
துவரும்பொழுது அவளுடைய உதரத்தில் பொன்கலந்திருந்தமோ
தகமொன்றுபோயிற்று. அந்தமகிமையினால் உன்னுடையராஜ்யமா
கிய இந்தக் காஞ்சி க்ஷேத்திரத்தில் பொன்மாரிபொழிந்தது. அந்
தத்தேவியும் பந்தியில் போஜனம் செய்துகொண்டிருக்கிறாள்.
நீயும் பார்க்கலாம்" என்றனர். அரசன் அகமகிழ்ந்து ஆனந்த
பரவசனாய்க் குழந்தையுருவாய் இருக்கும் கணேசமூர்த்தியை
அழைத்துக்கொண்டு ஸ்திரீகளுடைய பந்தியிற்போய்த் தேவியி
னுடைய சமீபத்தில் நின்றபொழுது அம்பிகை அரசனைப் பார்த்
தவுடன் மறைந்துவிட்டனள். கணேசமூர்த்தி அம்பிகை உண்ட

குளிய பரிகலத்திலிருந்த சேஷங்களையுண்டு சர்வசாஸ்திர பாரங்கதராயப் பிரகாசிக்க வினைய அந்தணரும் அரசரும் அம்பிகையினுடைய சேஷமேயல்லாமல் கணேசருடைய சேஷமும் கலந்திருந்த அந்தச் சேஷத்தையுண்டு சகலகலாவல்லியினுடைய கிருபைக்குப் பாத்திரராய் சகலகலா வல்லாராயினர்.

அதன் பின்னர் யாவரும் தேவியினுடைய கடாக்ஷம் பெற்றிருக்கிற ஆகாசபூபதியினுடைய குமாரராகிய கணேசரிடத்திற் குருபாவனையுடையவராய் அவருக்குத் "துண்டீரப்பிரபு" என்கிற திவ்யநாமகரணம் செய்து அதன்பின்னர் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்து முடித்து அந்தப்பொழுதே இனி இந்தத் துண்டீரமகாராஜாவுக்கு ராஜ்யபட்டாபிஷேகமும் செய்யவேண்டுமென்றெண்ணிக்காமாக்ஷிவீற்றிருக்கும்சன்னிதானத்தில்(பச்சிமாபிமுக) மேற்கு முகமாகக் கணேச மூர்த்தியாகிய துண்டீரரை எழுந்தருளிவித்து இராஜ்யபட்டாபிஷேகம்செய்து காஞ்சி மண்டலத்தை அவர் வசமாக்கினர்.

இனித் துண்டீரருடைய சன்னிதானத்துக்கு எதிரில் போகும்போது மௌனமாய்ப் போகவேண்டிய வரலாறு:—

காஞ்சிமண்டலாதிபதியாய் அரசாளவந்த கணேசமூர்த்தி [illegible] ஏகோலத்துடன் தேவியினுடைய ஆலயத்தில்இரண்டாவதுஆவரணத்தில் தேவியினுடையதரிசனவிசேஷமாகச் சன்னிதானத்தில் வீற்றிருந்து கிருதயுகத்தில் சாக்ஷாத் கணேசமூர்த்தியாகவேயிருந்தும் திரேதாயுகத்தில் தேவயோனி சம்பந்தமான அம்சத்திற் கலந்தும் 'துவாபரயுகத்தில் மநுக்களுடைய அம்சத்திற் கலந்தும் ராஜ்யபரிபாலனம் செய்து வந்து கலியுகத்தில் சித்திரரூபமாய்ப் பிரதிஷ்டை செய்திருக்கும் தனது பிம்பத்தில் யாவர் கண்ணுக்கும் தோன்றாது தேஜோ ரூபமாகக் கலந்து தேவியைத் தியானித்துக் கொண்டிருக்கிறாராதலால் அந்த இரண்டாவது ஆவரணத்தில் அவருக்கெதிரில் போகும்பொழுது மௌனமாய்ப் பயந்துபோவது போல் மௌனமாய்ப் போதல் வேண்டும். மௌனமாய்ப் போகாமல் வசனித்துக்கொண்டு போவாராயின் காமாக்ஷி தேவியைத் தரிசனம் செய்த பலனை இழந்தவராவர். மௌனமாய்ப் போவாராயின் அந்தத்தரிசன பலத்தையும் அரசாங்கத்தாற் சுகமும் பெறுவர்.

## சோழராஜன்.

பூர்வம் காவேரி தீரத்தில் சோழநாட்டில் அரசாண்டிருந்த விருஷவம்சத்தில் உற்பவித்த சோழன் கல்வியாபிதன் என்கிற சகோதரன் தன்னுடைய ராஜ்யத்தையபகரித்துக் கொள்ளத் துககமடைந்தவனாய் ராஜ்யம் ஆளுவதில் அன்பற்று ஆசாசக்தியை வெறுத்துத் தன் பத்தினியை யழைத்துக்கொண்டு தேசசஞ்சாரியாய் வரும்பொழுது தெய்வகதியாய்க் காமகோட்டம் வந்து சேர்ந்து நந்தனவனங்கள் வைத்து விருத்திசெய்து நாடோறும் தவறாமல் மலர்களைக்கொய்து யானைத்துதிக்கைபோலும் மாலைகளைக்கட்டிக் காமாக்ஷி தேவிக்குச் சமர்ப்பித்துத் தியானித்து வழிபட்டுவந்தனன். தேவியினுடைய கிருபையால் பெண்குழந்தையொன்று பிறந்து நாளொரு மேனியாய் வளர்ந்து அங்கங்களெல்லாம் அழகு நிறையப்பெற்றிருக்கும் நாளில் பாண்டி நாடாளும் குலசேகரபாண்டியன் மகனுக்குரிய பெண் வேண்டும் என்று எல்லாவரசர்கட்கும் தெரிவித்தனன். ஒரு நாள் அவனுடைய கனவில் காமாக்ஷிதேவியானவள் சென்று, "ஓ, அரசனே என்னுடைய காஞ்சி நகரத்தில் விக்கிரமசோழனென்கிற அரசன் தன் ராஜ்ஜியத்தைவிட்டுத் தன் பத்தினியுடன் தேசசஞ்சாரியாயிருந்து பின்னர் காமகோட்டத்தை யடை[illegible] யிக்கவன்புடன் வந்தனை வழிபாடுகள் செய்து வருகின்றனன். அவனுக்கு என்னுடைய கிருபையினால் ஒரு புத்திரியுண்டாயிருக்கிறாள். அவளுடைய ரூபலாவண்ய சுந்தரங்களை நானிப்பொழுது சொல்லவேண்டியதில்லை. நீயே காணப்போகிறாய் ஆகையால் நீ அந்தப்பெண்ணை உன் மகனுக்குக் கலியாணம் செய்து வைப்பாய் அதுவுமின்றி அந்த விக்கிரமசோழனை அவனுடைய ராஜ்யத்துக்கு அழைத்துக்கொண்டு போய்ப் பட்டாபிஷேகம் செய்துவைப்பாய் என்று கட்டளையிட்டுப் போயினள். இந்தக் கனவைக் கண்ட அரசன் மகிழ்ந்தவனாய்த் தனது பரிவாரங்களுடன் காஞ்சி நகரத்துக்கு வந்து விக்கிரம சோழமகாராஜனைக் கண்டு இவன் சாக்ஷாத் தேவியினுடைய அருள் பெற்றிருப்பவனாதலால் இவன் நம்மால் பணியத்தக்கவன் என்று சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து தேவியினுடைய கட்டளையைத் தெரிவித்து அதன் பின் தேவிக்குச் செய்யவேண்டிய பூஜோபசாரங்களை

விசேஷமாகச்செய்து வணங்கிப்போற்றி விடைபெற்று அந்தச் சோழனையழைத்துக்கொண்டு அவனுடையராஜ்யத்துக்குப்போய் அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்து, அதன் பின் அவன் மகளைத்தன் மகனுக்கு விவாகம் செய்து முடித்துத் தன் நகரம் போய்ச் சேர்ந்தனன். விக்கிரம சோழமகாராஜன் குலசேகர பாண்டியன் சென்ற பின்னர் தனது ராஜ்யத்தைத் தன் மகனிடத்து ஒப்புவித்து முன்போல் காஞ்சி நகரத்துக்கு வந்தனன். அப்பொழுது அந்தக் காஞ்சி நகரம் காடாகவிருத்தலைக் கண்டு அக்காட்டையழித்து முன்போல் எங்கும் புஷ்பவனங்களுண்டாக்கித் தேவி ஆலய ஜீர்ணோத்தாரணம்செய்து பசுக்கள், பூமிகள், வேண்டிய தனங்கள், ஆபரணவகைகள், பொன்னுடைகள் முதலிய எல்லாச் செல்வங்களையும் தேவிக்கு அர்ப்பணம் செய்து வைராக்கியசீலனாய் அரிய தவங்களைச் செய்து வந்து யாவராலும் * காந்தாச்சோழனென்று அழைக்கப்பட்டவனுய்த்தேகாந்தத்தில் தேவியினுடைய பதத்தினையடைந்தனன்.

§ குணருத்திரரும், ஆதிசேஷனும் கலியுகத்தில் தேவியை விதிமுறையாகப் பூஜித்து முடிவில் முடிவில்லாத முத்திபதத்தை யடைந்தனர்.

இவ்வண்ணம் யுகங்[illegible]தோறும் தேவர்களேயன்றிச் சோம [illegible]யாகனிகளென்கிற மூன்று வம்சத்தரசர்களும் ஸ்ரீ காமாக்ஷி தேவியை வழிபட்டுப் போகமோக்ஷங்களையடைந்துள்ளார்.

இங்ஙனம் எக்காலத்தும் காஞ்சியில் காமகோடி பீடவாசினியாய் வீற்றிருக்கின்ற சுவர்ணகாமாக்ஷியை ஒருதரம் தரிசிக்கப்பெற்றவர்கள் யாரோ அவர்கள் கோடிகோதான பலனையடைவார்கள்.

## நி[illegible]யன்.

இந்தக் காமாக்ஷி லீலாப்பிரபாவத்தைப் படிப்போரும் கேட்போரும் சுவர்ணகாமாக்ஷியைத் தரிசனம் செய்யும் பலனை யடை

---

* காடுவெட்டிய சோழன்.

§ பிரம விஷ்ணுக்களாகிய இருவரோடு ஒருவராயுள்ள உருத்திர மூர்த்தி.

வார்கள். அன்றியும் இதனைப் பங்குனி மாதம் திருக்கலியாண மஹோத்சவ தினமாகிய உத்திர நக்ஷத்திர தினத்திலும் காமாக்ஷி தேவியினுடைய ஆவிர்ப்பாவ தினமாகிய ஐப்பசி மாதம்பூரநக்ஷத்திரத்திலும், காமாக்ஷி ஸ்வரூபமாய் விளங்கும் வரதராஜ மூர்த்தியினுடைய அவதார தினமாகிய சித்திரை மாதம் ஹஸ்த நக்ஷத்திரத்திலும் ஆசார்ய முகமாய்க் கேட்டு வந்து முடிவு செய்வார்களாயின் அவர்களுடையும் பலனைச் சொல்லி முடியாது. அன்றய தினம் காமாக்ஷிப்பிராபவத்தைச் சொல்லிவந்தவராகிய அவரை சாக்ஷாத் வியாசராக நினைத்து அவருக்கு வஸ்திராபரண சந்தன புஷ்பாக்ஷதை பூமாலை முதலியவை சாத்தி தூபதீபம் காட்டி திவ்யமான ஆகாராதிகளால் திருப்திசெய்வித்துப் பின்னர் தாம்பூலம் மங்களார்த்தி முதலியன நடத்தி வேதபாராயணாதி கோஷங்களுடன் சகலவாத்தியங்களும் கோஷிக்க அவருடைய இருக்கையடைவித்து அவரைச் சிறந்த ஆசனத்தில் இருத்தி நமஸ்காரம் செய்து அவரிடத்தில் ஆசிர்வாத அக்ஷதை பெற்று சிரசில் தரித்து தங்களிடம் போய்ச்சேரக்கடவர் என்று [illegible]மகாராஜாவுக்கு மார்க்கண்டேய முனிவர் சொல்ல அவன் அவரைப் பிரதக்ஷண நமஸ்காரம் செய்து ஸ்துதித்து நிற்க, மார்க்கண்டேய முனிவர் அரசனை ஆலிங்கனம் செய்துகொண்டு ஸ்ரீ காமாக்ஷிதேவியானவர் தமது இளந்தளிர்போன்ற மாணிக்கக்கங்கணமணிந்த சுவர்ணத் திருக்கரமாகிய அகப்பையால் சகலபோக்கியங்களையும் [illegible]ந்துமுகந்துகொடுத்தருளவேண்டும், நீ சத்ருஹீனனும் அகண்ட சாம்ராஜ்யமுடையவனும் தீர்க்கமான ஆயுளையுடையவனும் புத்திர பௌத்திர, விருத்தியுடையவனும் சர்வகாம சமர்த்தியுடையவனும் இம்மையில் வாழ்ந்து அம்மையில் அனந்தகுணகணமணியாய்த் தேஜோமயமாய் விளங்கும் ஸ்ரீ தேவியினுடைய சரணாரவிந்த நிழலில் வாழக்கடவாய் என்று ஆசி புகன்றனர்.

ஸ்ரீ காஞ்சி மகிமை முற்றிற்று.

68193

9B
6·85